வெளியீடு 24-8-1984] [Dated 8-8-1984

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 9, 1984—தொகுதி LX எண் 1

Friday, 9th March 1984—Volume LX No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

V211,31 N84
N84.601 f2
136227
600 008

உள்ளடக்கம்.

9—3—1984

| | பக்கங்கள். |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். .. .. .. .. | vi—vii |
| (ii) Personnel of the Government of Tamil Nadu .. | ix—x |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். .. .. | xi—xii |
| (iv) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல் .. .. .. .. | xiii—xx |
| 1 வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1—33 |
| 2 தகவல் கோரல்— | |
| (அ) மழையினால் பாதிக்கப்பெற்ற தென் மாவட்டங்களில் நடைபெறும் நிவாரணப் பணிகள் .. .. .. .. .. | 34—36 |
| (ஆ) கருநாடகத்தில் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது .. .. .. | 36—38 |
| 3 ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| கல்லூரி மாணவர்களுக்கென கோடம்பாக்கத்திலுள்ள அரசு விடுதி மாணவர்களின் உண்ணாநோன்பு போராட்டம் .. .. | 38—53 |
| 4 அறிவிப்பு— | |
| மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி—சட்ட முன்வடிவுகள் .. .. .. | 53—54 |

| | |
|---|---|
| 5 கவன ஈர்ப்புகள்— | |
| (அ) கோவை மாவட்டம், பாலமலைச் சாலையை செப்பனிடுதல் .. .. | 54—58 |
| (ஆ) அரசு அங்கீகாரமின்றி நடைபெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் .. | 58—61 |
| 6 வரவு-செலவுத் திட்டம் 1984-85 பொது விவாதம்—(தொடர்ச்சி) .. .. | 61—119 |
| திரு. கோ. விஸ்வநாதன் .. .. | 61—71 |
| திரு. சித. சிதம்பரம் | 71—78 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 72—73 |
| திரு. எம். அண்ணாதாசன் .. .. | 78—83 |
| திரு. ரா. கிருஷ்ணன்.. .. .. | 83—90 |
| திரு. ஆர். ரங்கசாமி .. .. .. | 90 —95 |
| திரு. ஏ. டி. கருப்பையா .. .. | 95—103 |
| திரு. பொ. விஜயராகவன் .. .. | 103—109 |
| திரு. பி. துரைராஜ் .. .. | 109—112 |
| திரு. மா. சின்னராசு. .. .. | 112—119 |
| 7 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 119 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் ஆயத்துறை. மற்றும் மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக)

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்ர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், மற்றும் இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)—பால், பால் பெருக்கு திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய், வணிக வரிகள், மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Union, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour) Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board Town Planning and Accommodation Control.

12. HON. DR. H. V. HANDE (Minister for Health)—Health.

13. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and ports.

14. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Handlooms and Co-operation)—Textiles, Handlooms and Co-operation.

15. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Environmental Pollution Control)—Passports and Environmental Pollution Control.

16. HON. THIRU M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. HON. THIRU R. SOUNDARARAJAN (Minister for Nutritious Meals)—Nutritious Meals.

18. HON. THIRU S. R. ERADHA (Minister for Public Works)—Housing, Slum Clearance Board, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

19. HON. THIRU M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

20. HON. THIRUMATHI, GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggers Home, Orphanages, Indian Overseas Refugees and Evacuees and Correctional Administration.



2765

21. HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi)—Khadi.

22. HON. THIRU Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. HON. THIRU R. ARUNACHALAM (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries.

24. HON THIRU K. KALAIMANI (Minister for Fisheries)—Fisheries

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர்) — சட்டம், நீதி மன்றங்கள் சிறைகள், எடைகள்— அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம் பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இயற்றல், கம் சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், இவைகள் பற்றி பெருந் தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம்.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)— நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமி தானம், கிராமத்தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) — தொழிலாளர், புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)— மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், மற்றும் துறைமுகங்கள்

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்) நெசவாலைகள் கைத்தறி மற்றும் கூட்டுறவு.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—பயண இசைவுச் சீட்டு, சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல்.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்)— ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராசன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (பொதுப் பணித் துறை அமைச்சர்) — வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம். மற்றும் பொதுப்பணித்துறை மற்றும் பொதுபணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.



19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்

22. மாண்புமிகு திரு. யா. கை. மு. யூசுப் (நீர்பாசனத் துறை அமைச்சர்) — வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) — கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. க. இராசாராம்

பேரவைத் துணைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

† மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. வே. இரா. ஜெயராமன்.
2. டாக்டர் கே. சமரசம்.
3. டாக்டர் கே. செளரிராஜன்.
4. திரு. சு. பாலன்.
5. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.,

துணைச் செயலாளர்கள்

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.,
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.,
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,

குழு அலுவலர்.

திரு. சா. சீனிவாசன், பி. எஸ்.சி.,

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி. காம்., பி.ஜி.எல்.,
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி. எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.,
திரு. வ. சா. ஜான், பி.ஏ.,

எஸ்டேட் அலுவலர்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி. எல்.,

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.,

தலைமை நிருபர்.

திரு. வி. இராமச்சந்திரன், எம். ஏ., எல்.எல்.பி.,

---

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
†† 15—2—1984 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. அங்குசாமி, திரு. ச. .. | திருவாடணை |
| 2. அண்ணாதாசன், திரு. எம். .. | திருவரம்பூர் |
| 3. அப்துல்ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி |
| 6. அமிர்தராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர் |
| 7. அரங்கநாதன், திரு. எஸ். .. | தர்மபுரி |
| 8. அரங்கநாதன், திரு. மு. .. | குன்னூர் (செ. வ.) |
| 9. அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு) |
| 10. அருணகிரி, திரு. இரா. .. | திருப்பத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 12. அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 13 அன்பழகன், திரு. தி. .. | நாட்ரம்பள்ளி |
| 14. அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 15. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 16. ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 17. ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.) |
| 18. சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2 |
| 19. ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 20. ஆனூர் ஜெகதீசன், திரு. பு.கோ. | செங்கல்பட்டு |
| 21. இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி |
| 22. இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 23. இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 24. இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி |
| 25. இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல்(செ.வ.) |
| 26. இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 27. இராசாராமன், திரு. என். | பாபநாசம் |
| 28. இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் செ.வ. |
| 29. இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 30. இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 32. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 33. இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 34. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 35. இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 36. இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 37. இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 38. இராமலிங்கம், டாக்டர் கே.பி. | இராசிபுரம் |
| 39. இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 40. இராஜசேகரன், திரு. வே. | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 41. இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 42. இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 43. இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 44. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் திரு. | அம்பாசமுத்திரம் |
| 45. உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 46. உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 47. உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 48. உமாநாத், திரு. ரா. | நாகை |
| 49. கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 50. கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 51. கணேசன், திரு. | இடப்பாடி |
| 52. கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 53. கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54. கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 55. கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 56. கருப்பசாமி பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 57. கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 58. கருப்பையா, திரு. ஏ.டி. | வால்பாறை (செ.வ) |
| 59. கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 60. கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 61. கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 62. கலையரசன், திரு. நன்னிலம், அ. | நன்னிலம் (செ.வ.) |
| 63. காளிமுத்து, திரு. டாக்டர். கா. | திருப்பரங்குன்றம் |
| 64. கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 65. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 66. கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 68. கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1. |
| 69. கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 70. குப்புசாமி திரு. என். | மொரப்பூர் |
| 71. குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 72. குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 73. குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 74. குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ. வ.) |
| 75. குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76. குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77. குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78. கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 79. கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 80. கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 140. திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 141. திருமான், திரு. இரா. | ஏற்காடு (ஆ.வா.) |
| 142. திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 143. தீர்த்தராமன், திரு. ப. | பெண்ணாகரம் |
| 144. துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 145. துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 146. துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 147. துரைராஜ், திரு. பி. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 148. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 149. வெற்றிடம் | |
| 150. நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 151. நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 152. நவநீதகிருஷ்ண பாண்டியன் | ஆலங்குளம் |
| 153. நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 154. நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 155. நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 156. நெடுஞ்செழியன், டாக்டர், இரா. | திருநெல்வேலி |
| 157. நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 158. பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 159. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 160. பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 161. பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 162. பலராமன், திரு. இல. | போளூர் |
| 163. பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 164. பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 165. பழனியப்பன் திரு. கு. பா. | விழுப்புரம் |
| 166. பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 167. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 168. பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 169. பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 170. பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 171. பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 172. பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 173. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 174. பாலசுப்பிரமணியன், வேடச்சந்தூர், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 175. பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |
| 176. பானுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 177. பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 178. பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 179. புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 180. பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 181. பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 182. பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 183. பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 184. பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 185. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 186. பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 187. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 188. மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 189. மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 190. மாணிக்கம் திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 191. மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 192. முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 193. முசிறிபுத்தன், திரு. பி. | திருச்சி-1 |
| 194. முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 195. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 196. முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 197. முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 198. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 81. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 82. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 83. கோவைத் தம்பி, திரு. .. | பேரூர் |
| 84. சக்கரபாணி, திரு. ஆர். .. | பொன்னேரி (செ.வ.) |
| 85. சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு) |
| 86. சட்டநாத கரையாளர், திரு.கி. | தென்காசி |
| 87. சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |
| 88 சண்முகம் திரு ஏ.சி. | ஆரணி |
| 89. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி |
| 90. சந்திரசேகரன், திரு. எ. .. | சோழவந்தான் |
| 91. சபாபதி, திரு. சி. .. .. | அரூர் (செ.வ.) |
| 92. சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டிணம் |
| 93. சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர் |
| 94. சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் |
| 95. சித்தன், திரு. என். எஸ். வி... | திருமங்கலம் |
| 96. சிதம்பரம், திரு. சி. த. .. | காரைக்குடி |
| 97. சிவசாமி, திரு. செ. .. .. | இளையான்குடி |
| 98. சிவஞானம், திரு. ந. .. | திருவோணம் |
| 99. சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 100. சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர் |
| 101. சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம் |
| 102. சின்னசாமி, திரு. எம். .. | கரூர் |
| 103. சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர் |
| 104. சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி |
| 105. சின்னராசு, திரு. மா. .. | தொண்டாமுத்தூர் |
| 106. சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம் |
| 107. சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர் |
| 108. சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம் |
| 109. சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முகையூர் |
| 110. சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம் |
| 111. சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர் |
| 112. சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 113. சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 114. சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு |
| 115. சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர் |
| 116. சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 117. சுவாமிநாதன், திரு. வி.வி. .. | புவனகிரி |
| 118. செங்கோட்டையன், திரு. கு.. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 119. செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 120. செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 121. செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம் |
| 122. சென்னிமலை என்கிற கந்தசாமி திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 123. சேதுராமன், திரு. ஏ. எம். .. | ஆற்காடு |
| 124. சொக்கலிங்கம், திரு.கெ. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 125. சோமசுந்தரம், திரு. எஸ்.டி. | பட்டுக்கோட்டை |
| 126. சோமு, திரு. என்.வி.என். .. | பூங்கா நகர் |
| 127. சௌந்திரராஜன் திரு.கே. .. | திருச்சி-2 |
| 128. சௌந்திரராஜன், திரு. திருச்சி, ஆர். | ஸ்ரீரங்கம் |
| 129 சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர் |
| 130. தங்கமணி கவுண்டர், திரு. கே.எம். | திண்டிவனம் |
| 131. தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132. தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 133. தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான் |
| 134. தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ.வ.) |
| 135. தனபால், திரு.ப. .. | சங்கரி (செ.வ.) |
| 136. தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 137. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138. தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம் |
| 139. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |

| தொடர்எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 199. முனிரத்தினம், திரு. இரா.சா. | கும்மிடிப்பூண்டி |
| 200. முனுசாமி, திரு. மு.ப. .. | பாலக்கோடு |
| 201. மூர்த்தி, திரு.ஜி. .. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 202. மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 203. யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 204. ரகுமான்கான், திரு அ. .. | சேப்பாக்கம் |
| 205. ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 206. ரங்கசாமி திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 207. ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 208. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 209. ராஜமாணிக்கம் திரு. எம்.கே. | முசிறி |
| 210. ரெத்தினராஜ், திரு.எஸ். .. | குளச்சல் |
| 211. வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 212. விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | வீரபாண்டி |
| 213. வின்சென்ட் திரு. மி. | நாகர்கோவில் |
| 214. விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 215. விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 216. விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 217. விசுவநாதன், திரு. கோ. | அனைக்கட் |
| 218. வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு |
| 219. வீராணம்பலம், திரு. க.வெ. | மேலூர் |
| 220. வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 221. வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 222. வெங்கடேசன், திரு. பி.எம். | பெரணமல்லூர் |
| 223. வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 224. வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 225. வேலப்பன், திரு. சி.வி. .. | கபிலமலை |
| 226. ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 227. ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 228. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 229. ஹாஜா செரீப், திரு. கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி |
| 230. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு. |
| 231. மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் திருமதி. | நியமன உறுப்பினர். |
| 232. | வெற்றிடம் |
| 233. | வெற்றிடம் |
| 234. | வெற்றிடம் |
| 235. | வெற்றிடம் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் அமைச்சர்
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் —அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே —அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்
5. மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் —அமைச்சர்.
6. மாண்புமிகு திரு. க. கலைமணி —அமைச்சர்.
7. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி – தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984 மார்ச் 9, வெள்ளிக்கிழமை

மாசி 26, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.''

தலைவரைச் சார்ந்தவர்கள், விருப்பத்தோடு அவர் கேட்கக் கூடிய பயனுள்ள செய்திகளை எடுத்து உரைக்க வேண்டும். பய னற்ற செய்திகளைத் தலைவரே ' சொல்லுக ' எனக் கேட்டா லும், சொல்லாது இருப்பதே சிறப்பாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

**செவிலியர் பயிற்சிக்கு மீண்டும் ஆண்களைத் தேர்வு செய்யும் திட்டம்.**

*189 (*வினா 16229)* திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

செவிலியர் பயிற்சிக்கு மீண்டும் ஆண்களைத் தேர்வு செய் யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம்.

திரு. பா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர் பயிற்சி சில காலங்கள் நிறுத்தப்பட்டு இருந்தது. இப்போது எடுக்கப்படுகிற தேர்வில் எவ்வளவு பேர் அனுமதிக்கப்படுவார்கள் ? எந்த எந்த மையங்களில் அவர் களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

[1984 மார்ச் 9

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டுக்கு முன்பு 1 : 6 என்ற முறையில், Male Nurse ஒன்று, Female Nurse 6 என்ற அந்த விகிதாசாரத்தில் அவர்களை நாம் தேர்வுக்காக எடுத்துக்கொண்டிருந்தோம். ஆனால் அதற்குப் பிறகு தேர்வு இல்லை என்று 1958 ஆம் ஆண்டுக்குப் பிறகு தேவையில்லை என்று அன்றைய அரசாங்கம் முடிவு எடுத்தது. இப்போது சில ஆண்டுகளாக குறிப்பிட்ட சில டிபார்ட்மென்டுகளுக்காக, Mental Hospital, Prisons, Sexually transmitted diseases போன்ற இந்தமாதிரியான பகுதிகளுக்கு மேல் நர்ஸ் இருந்தால் நன்றாக இருக்கும், பயனுள்ளதாக இருக்கும் என்ற ஒரு கருத்து தெரிவித்ததின் அடிப்படையில், நாம் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவே மீண்டும் தமிழக சர்க்கார் மேல் நர்ஸ்களைக் கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக, தேவைக்கேற்ப அனுமதி கொடுப்பது என்ற முடிவை எடுத்திருக்கிறது.

**வேலூர் மத்திய சிறைச்சாலையிலுள்ள மகளிர் பிரிவு.**

*190 (*வினா 17633)* **திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் மத்திய சிறைச்சாலை மகளிர் பிரிவில் நீண்ட நாட்களாகப் பெண் மருத்துவர் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** ஆம். காலியாக உள்ள இப் பணியிடம் நிரப்பப்படும் வரை மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வேலூர் மத்திய பெண்கள் சிறையில் பெண் மருத்துவர் நீண்டகாலமாக இல்லை என்பதை அமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது நீண்ட நாட்களாக காலியாக இருக்கிறது. மாற்று ஏற்பாடு செய்யப்பட்டும், சிகிச்சை அளிக்க வாய்ப்பு இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்பது நியாயமான கேள்வி. உடனடியாகப் போட வேண்டும் என்று நான் உத்தரவிட்டு இருக்கிறேன். வெகுவிரைவிலே செயல்படுத்தப்படும். அது மீண்டும் செயல்படுத்தப்படாமல் இருந்தால் எனக்கு அதைப் பற்றித் தெரிவித்தால், உடனடியாக உத்தரவு போடுவதற்குச் சரியாக இருக்கும்.



1984 மார்ச் 9]

**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி மாற்று ஏற்பாடு செய்யப்பட்டும் இன்றைய தினம் வரையில் சிகிச்சை அளிக்காத நிலை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நமக்கு சில நேரங்களில் பற்றாக் குறை ஏற்படுகின்றபோது, சர்வீஸ் கமிஷன் மூலமாக நாம் படிப்படியாக அந்தந்த காலி இடங்களை நிறைவு செய்து கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே ஒரு பெண் மருத்துவருக்கு அங்கே நாம் வாய்ப்புக் கொடுக்கிறோம். எனவே என்ன பிரச்சினை என்றால், சர்வீஸ் கமிஷனைக் கேட்கிறபோது அவர்கள், 900, 901 என்று இப்படி பிரியாரிட்டி பேசிஸில் கொடுக்கிறார்கள். அந்த பிரியாரிட்டி பேசிஸில் வருகிறபோது தான் நாம் நிரப்ப முடியும். மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்தின் அடிப்படையில் பெண் டாக்டர் யாராவது இருந்தால் அவர்களைப் போடுவதற்கு மீண்டும் பரிசீலனை செய்கிறோம்.

**செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பிளாஸ்டிக் சர்ஜரி மற்றும் பீடியாட்ரிக் பிரிவுகள் அமைப்பதற்கான கோரிக்கை.**

*191 (*வினா 20446)* **திரு. சி. கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 'பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட்' மற்றும் 'பீடியாட்ரிக் யூனிட்' அமைக்கக் கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :**

(அ) பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட்டுக்கு கோரிக்கை ஏதும் இல்லை. பீடியாட்ரிக் சர்ஜரி யூனிட் அமைக்க கோரிக்கை வந்துள்ளது.

(ஆ) பீடியாட்ரிக் சர்ஜரி பிரிவு ஆரம்பிக்கும் கருத்துரு 1984–85-ம் பகுதி 2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

[1984 மார்ச் 9

**திரு. சி. கணேசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் என்று அங்கே தனியாக இல்லை என்றாலும், ஒரே ஒரு டாக்டரே, அந்தப் பிரிவில் இருந்து கொண்டு, மற்ற துறைகளில் இருந்து டாக்டர்களை துணைக்கு அழைத்து வைத்துக்கொண்டு, இந்தப் பணிகளை அங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த் நிலைமைகளை கருதி, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அங்கே ஒரு பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட்டை ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்? அத்தோடு, பீடியாட்ரிக் யூனிட்டை பி. ஜி. கோர்ஸ் தகுதிக்கு உயர்த்துவதற்கு் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஏற்கெனவே ஒரு சர்ஜரி டிபார்ட்மெண்ட் இயங்கிகொண்டு வருகிறது. அந்த சர்ஜரி டிபார்ட்மெண்ட்டே பிளாஸ்டிக் சர்ஜரி பணியையும் நடத்திக்கொண்டு வருகிறது. பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் என்று தனியாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை பலமுறை சொல்லியிருக்கிறார்கள். கேள்வியாகவும் கேட்டிருக்கிறார்கள். நானும், அதற்குப் பிறகு, அங்கே செங்கல்பட்டில் உள்ள அந்த மருத்துவ மனைக்குப் போய் பார்த்திருக்கிறேன். எனக்கும் அங்கே ஒரு பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் தேவைதான் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கோரிக்கை நிச்சயமாகக் கவனிக்கப்படும். பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் ஒன்று அங்கே நிச்சயமாக ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆயக்குடி அரசு மருத்துவமனை.

242(*வினா 19839) **திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயக்குடி அரசு மருத்துவமனையில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(ஆ) அங்கு பணிபுரியும் டாக்டர்கள் எத்தனை பேர் ?

(இ) பெண் மருத்துவர் இல்லாதிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஈ) எனவே, பெண் மருத்துவரை நியமிக்க அரசு உத்தரவிடுமா ?



1984 மார்ச் 9]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :**

(அ) 10 படுக்கைகள் உள்ளன.

(ஆ) இருவர்.

(இ) தற்போது பணியிலிருக்கும் பெண் மருத்துவர் 1–9–1983 முதல் பணியாற்றி வருகிறார்.

(ஈ) கேள்வி எழவில்லை.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்குடி அரசு மருத்துவ மனையில் தற்சமயம் பெண் மருத்துவர் வந்து விட்டார். அங்கே 2 டாக்டர்கள் இருக்கிறார்கள். 20 படுக்கைகள் இருக்கின்றன. மாலை 4 மணி 5 மணி ஆகிவிட்டால் இரண்டு டாக்டர்களுமே அங்கே தங்குவது கிடையாது. Quart rs இருக்கிறது. திண்டுக்கல் டி. எம். ஓ. அவர்களிடமும் இது குறித்து நான் சொன்னேன். அவர்கள், டிரான்ஸ்பர் போட்டாலும் ரத்து செய்து விடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அங்கேயே தங்கி, தேவையான சிகிச்சையை அளிப்பதற்கு உரிய வகையில் டாக்டர்களை அங்கே நியமிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் மிகச் சாமர்த்தியமாக என்னை அழைத்துக் கொண்டு போய் அதை விஸ்தரிக்க ஏற்பாடு செய்தார்கள். ஏற்கெனவே மருத்துவப் பிரிவு ஒன்றை அங்கே ஏற்படுத்திக் கொடுத்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மகிழ்ச்சியை தெரிவித்து அன்றைக்கு அவருடைய பேச்சிலே சொல்லியிருக்கிறார்கள். அது பழனி ஆஸ்பத்திரிக்கு 9 மைல் தூரத்தில் இருக்கிறது. நெடுஞ்சாலையில் இருக்கிறது. ஆகவே, படிப்படியாக நிதிநிலைக்கு ஏற்ப அவருடைய கோரிக்கை கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நமது அமைச்சர் மீது குறை எதுவும் சொல்லவில்லை. அங்கே ஏற்கனவே இருக்கக்கூடிய இரண்டு டாக்டர்கள் அங்கேயே இருப்பதற்கு உத்திரவாதம் வேண்டும். அதைத்தான் கேட்கிறேன். மற்ற பிரச்னையைப் பற்றி சொல்லவில்லை. மேற்கொண்டு, அங்கே 2 படுக்கைகள் இருப்பதால், 2 டாக்டர்கள் மட்டுமே இருப்பது போதவில்லை. ஒருவர் லீவில் சென்றால், ஒருவர் தான் இருக்கிறார்கள் ஆகவே, இன்னொரு டாக்டரையும் போடுவதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அது பரிசீலனை செய்யப்படும் என்புதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 மார்ச் 9

**தலைமைச் செயலகப் பணியாளர்களுக்குச் செய்யப்பட்டுள்ள மருத்துவப் பரிசோதனை வசதி.**

243 (*வினா 20824) திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் அரசு அலுவலர்களுக்குப் புதிய மருத்துவப் பரிசோதனைக்கு வசதி செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கென செயலகத்தில் ஒரு மருந்தகம் செயல்படுவதுடன் சென்னை அரசு பொது மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவப் பேராசிரியர்கள் வாரம் ஒருமுறை இம்மருந்தகத்திற்குச் சென்று சில தனி வியாதிகளுக்குப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கிறார்கள்.

**காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டம்.**

231 (வினா 16982) திரு. சி. கோபால்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வது பற்றிய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி மின்வாரியம் ஆராய்ந்து வருகிறது.

(முற்பகல் 9—10)

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதை ஆராய்ந்து வருவதைப் போல் கடல் அலைகளில் இருந்தும் சூரிய ஒளியிலிருந்தும் மின்சார உற்பத்தி செய்வதற்கு ஏதாவது செயல் திட்டம் இருக்கிறதா ? தமிழகத்திலே அப்படி அவைகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.



1984 மார்ச் 9]

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, காற்றின் அலைகள் மூலமாக மின் உற்பத்தி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் செய்கிறபோது மின் உற்பத்தி செய்து பம்புசெட்டுகளை ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அல்லது நேரடியாக பம்புசெட்டுகளை ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இரண்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

**சாத்தனூர் அணையில் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம்.**

232 (*வினா 17628) திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணையில் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சாத்தனூர் அணையில் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் குறித்து தமிழக மின்வாரியம் விரிவான திட்ட மதிப்பீடு தயாரித்து வருகிறது.

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையில் ஒரு சிறு நீர் மின் திட்டம் ஏற்படுத்துவதற்கு அரசு விரிவான திட்டங்களைத் தயார் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்போது செயல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விரிவான திட்ட அறிக்கை 24—12—1983 தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவருடைய ஒப்புதலும் ஒரு வாரத்திலே கிடைத்துவிடும் எனத் தெரியவருகிறது. அதற்குப் பிறகு அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியம் ஏற்படும்.

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு என்ன ? எத்தனை யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்படும் ? எத்தனை பகுதிகள் அதனால் பயன்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தின் உற்பத்தித் திறன் 20 மெகா வாட். 4.2 கோடி யூனிட்டுகள் இதன் மூலம் பெறப்படும். பொதுவாக அந்தப் பகுதியிலே அது பயன்படுத்தப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சாத்தனூர் நீர் மின் திட்டம் விரிவான திட்டம் தயாராகி விரைவிலே ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பழனிக்கு அருகிலே சண்முகா நீர் மின் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று 2, 3 ஆண்டுகளாக இந்த அவையிலே அறிவிக்கப்பட்டு வந்தது. அதனுடைய வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டதா ? அதனுடைய மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**மேட்டூர் அனல் மின் நிலையத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம்.**

*233 (*வினா 18196)*—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேருக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) 10–6–83 முடிய 127 நபர்களுக்கு தமிழ்நாடு மின் வாரியத்தில் தற்காலிகமாக வேலை அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, இப்படி நிலம் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பகுதியிலே உள்ள அந்த மக்களுக்கு தற்காலிகமாக வேலை கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மக்களுக்கு எந்த மாதிரியான வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தகுதிக்கேற்ப வேலைகள் தரப்படுகின்றன. முதலில் தற்காலிகமாகத்தான் தருவார்கள்.



திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, மேட்டூர் அனல் மின் நிலையத்திற்காக எடுக்கப்பட்ட நிலத்தில் பலர், அரசாங்க நிலத்திலே சொந்தப் பட்டா அவர்களுக்கு இல்லாமல் இருந்து வந்ததாகத் தெரிய வருகிறது—அவர்களுக்கும் இந்த வேலைகளில் முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக அரசாங்க நிலத்தில் தண்டத் தீர்வை கட்டி பயிர் செய்து வந்தார்கள். அந்த நிலங்களை கையகப்படுத்துகிறபோது அந்த நிலங்களுக்கு உரிய இழப்புத் தர முடியவில்லை. ஆகவே மனிதாபிமான அடிப்படையில் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுக்கலாம் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இவ்வாறு புதிய தொழிற்சாலைகள் அல்லது பல்வேறு அமைப்புகள் ஏற்படுத்துகிறபோது—ஏற்கெனவே இந்தப் பிரச்சினை நெய்வேலியிலே எழுந்தது, இப்போது இந்த மேட்டூர் பகுதியிலே எழுகிறது, மனிதாபிமான அடிப்படையில் பார்க்காமல் நிலங்களை இழந்த அந்த மக்களுக்கு வாழ்வு அளிக்கக் கூடிய முறையிலே நிலங்களை இழந்துவிட்டவர்களுக்கு மாற்று நிலங்களைக் கொடுக்கவும் அவர்களுடைய குடும்பத்திலே உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவும் எடுத்துக் கொண்ட நிலத்திற்கு நீட்ட ஈடு கொடுப்பதற்கும் முயற்சிகளை எடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இழக்கிற சொத்துக்களுக்கு இழப்பீடு தரப்படுகிறது. ஆக சொத்துக்கள் உள்ளவர்களுக்கு அதில் பாதகம் ஏற்படுவது இல்லை. சொத்துக்கள் இல்லாமல் இருக்கின்ற ஏழை மக்களுக்கு அந்த பாதகம் ஏற்படுகிறது. அவர்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு குடும்பத்தில் ஒருவருக்காவது வேலை தர வேண்டும் என்று நாம் முயற்சித்து வருகிறோம். அதை கொள்கையாக வகுக்க முடியாது. ஏன் என்றால், சில இடங்களில் வெளியேறுகின்ற குடும்பங்களின் அளவு பெரிதாகவும், இருக்கின்ற வேலைகளின் அளவு குறைவாகவும் இருக்கிறபோது சிக்கல் வந்து விடும்.

**அறநிலைய ஆட்சித் துறையில் பணிபுரியும் ஆலய நிர்வாக அதிகாரிகள்.**

*234 (*வினா எண் 17399)*—திரு. க. பாரமலை : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அறநிலைய ஆட்சித் துறையில் துணைக் கமிஷனர்கள், மற்றும் உதவிக் கமிஷனர்கள் அந்தஸ்தில் பணி புரியும் கோவில் நிர்வாக அதிகாரிகள் மொத்தம் எத்தனை பேர் ?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :**

| | | |
|---|---|---|
| (அ) துணை ஆணையர் அந்தஸ்தில் | .. .. | 1 |
| உதவி ஆணையர் அந்தஸ்தில் | .. .. | 10 |
| மொத்தம் | .. | 11 |

(ஆ) துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் ஆலய நிர்வாக அதிகாரிகளாகப் பணிபுரிபவர்களில் தற்சமயம் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அறநிலைய ஆட்சித் துறையில் இது போன்ற பொறுப்புகளில் ஆதி திராவிடர்கள் யாரும் இல்லை என்று சொன்னார்கள். வரக்கூடிய காலத்திலாவது அந்த 18 சதவீதத்தை பூர்த்தி செய்கின்ற அளவுக்கு ஆதி திராவிட மக்களுக்கு இப்படிப்பட்ட பணித் துறையில் வேலை கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அந்தஸ்த்தில் ஆலய நிர்வாக அதிகாரிகளாக பணிபுரிபவர்களில் தற்சமயம் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பதுதான் பதில். அதாவது எக்ஸிகியூட்டீவ் ஆபிஸராக இல்லை. ஆனால் துணை ஆணையர் அந்தஸ்த்தில் ஒரு ஆதி திராவிடர் இருக்கிறார். உதவி ஆணையாளராக ஒரு ஆதி திராவிடர் இருக்கிறார். இப்போது முதல் கிரேடு நிர்வாக அதிகாரிகளும் சர்வீஸ் கமிஷன் மூலமாக எடுக்கப்படுகிற பதவிகளில் அந்த விகிதாச்சார முறையில் எடுக்கப்படுகிறது. நீண்ட காலமாக இந்த துணை ஆணையர் பதவி நேரடி நியமனம் செய்யப்படுவதில்லை. சர்வீஸ் கமிஷன் மூலம் உதவி ஆணையர் நேரடி நியமனம் 40 சதவீதம் எடுக்கப்படுகிறது. இப்போது அந்த முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறையின் மூலம் அந்தக் கோவில்களில் பணி புரியக் கூடிய ஊழியர்களை தேர்ந்தெடுக்கும்போது இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் விகிதாச்சார



அடிப்படையில் கொடுப்பதற்கு சட்டத்தில் இடம் இல்லை என்று சொல்லப்பட்டதே ? அது சரி செய்யப்பட்டதா ? இப்போது அந்த 18 சதவீதம் எல்லா வேலைகளுக்கும் இட ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலய அலுவலர்களில் ஆதி திராவிட மக்களை 18 சதவீதம் எடுக்க வேண்டும் என்பதற்கு சட்ட விதிகள் எதுவும் தடையாக இல்லை. தக்கவர்கள் கிடைப்பார்களானால் 18 சதவீதம் கூட அல்ல அதற்கு மேலேயும் எடுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வேலைக்கு உரியவர்கள் கிடைத்தால் அந்த 18 சதவீதத்தைப் பார்க்காமலே வேலைக்கு சேர்த்துக் கொள்ள இயலும். சில குறிப்பிட்ட வேலைகளுக்கு என்று வருகிறபோது தான் அதில் யார் வருவது என்ற சிக்கல் ஆலயத்திற்குள்ளே இருக்குமே தவிர வேறு சாதாரண பொதுப் பணிகளுக்கு எத்தகைய தடையும் ஆதி திராவிடர்கள் சேருவதில் இல்லை.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அறநிலைய ஆட்சித் துறையில் துணைக் கமிஷனர்கள் மற்றும் உதவிக் கமிஷனர்கள் பதவிகள் நியமனம் அவர்களுடைய படிப்பு வகையில் எந்த அடிப்படையில் எந்தத் தகுதியல் அந்தப் பதவி அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை ஆணையர் நியமனம் எல்லாம் இதற்கு முன்பு இருக்கிற விதிகளின் படி சட்டப் படிப்புத் தேறியவர்கள், நீதித் துறையிலிருந்தும் இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். நிர்வாகத் துறையிலிருந்தும் இதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள் அதே போல் உதவி ஆணையர்களுக்கும் அந்தச் சட்டப் படிப்பு வேண்டும் என்கிற தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே சர்வீஸ் கமிஷன் மூலமாகவும், துறையிலிருந்து பணி மாற்றம் மூலமாகவும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

(முற்பகல் 9–20)

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, இந்த அறநிலையத் துறையின் பணிகளுக்குத் தேர்வு செய்யும்பொழுது, சர்வீஸ் கமிஷனில், இதைப்போன்ற அறநிலையத்துறையிலேயும், லேபர் டிபார்ட்மெண்டிலேயும் இந்த ரிசர்வேஷன் என்பது செல்லாது என்று 76-ஆம் ஆண்டு ரிப்போர்ட்டிலே கூறப்பட்டு இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட குறைபாடு நீக்கப்பட்டுவிட்டதா என்பதுதான் கேட்கப்பட்ட கேள்வி. எக்சிகியூட்டிவ் ஆபீசர்கள் என்பது கோவிலில் செய்யப்படுகின்ற நிர்வாகப் பணி. ஏன் அதில் அடப்படிப்பட்ட நியமனம் இல்லை. எக்சிகியூட்டிவ் ஆபீசர்கள் என்பதில், ஏற்கனவே டெபுடி கமிஷனர்

அல்லது அசிஸ்டன்ட் கமிஷனர் ரேங்கிலே இருப்பவர்கள் இரண்டு பேர்கள்தான் இருக்கிறார்கள்—அதிலே ஒன்று, இதிலே ஒன்று—என்று தெரிகிறது. அதற்குக் கீழே உள்ள ரேங்குகளில் இருக்கக்கூடிய எக்சிகியூட்டிவ் ஆபீசர்கள் இவ்வாறு நியமனம் செய்யப்படுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் ரவர்களே, நிர்வாக அலுவலர்கள்—அதாவது எக்சிகியூட்டிவ் ஆபீசர்கள்—என்பவர்கள் 4-வது நிலையிலிருந்து சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதிலே இந்த விகிதாச்சாரத்தின்படி ஏடுக்கலாப என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்னிடத்தில் இருக்கின்ற குறிப்புகளின்படி பார்த்தால் ஏழெட்டு ஆண்டுகளாகத் தக்கவர்கள் அந்தப் பதவிக்கு மனுப் போடவில்லை என்றுதான் தெரிகிறது. 1971-ஆம் ஆண்டிலே மூன்று பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் ; அதற்குப் பிறகு இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் ; 1975-ஆம் ஆண்டு 3-வதில் 12 பேர், 66 இல் 6 பேர் என்று இப்படிப்பட்ட விவரங்கள்தான் இருக்கின்றனவே தவிர, தகுதியானவர்கள் முன்வராததால் அது நிறைவு செய்யப் படாமல் இருக்கிறது. எனவே, அதிலே எந்தவிதமான தடையும் ஆதி திராவிடர்களை அந்த விகிதாச்சாரப்படி சேர்ப்பதிலே இல்லை..

*Training Courses or Tourist Guides.*

235—(*Q. No. 19517); Thiru. S. RAJARAMAN ; Will the Hon Minister for Information and R ligious Endowments be pleased to state :

(a) whether th Director of Tourism has sponsored any cours for Tourist Guid s in Tamil Nadu ;

(b) if so, th details thereof , and

(c) the total number of tourist guides trained by th dir ctorat of tourism so far year wise for the last thr e y ars ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (a) (b) and (c): விவரமான விடை **அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

---

** 119-ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



வட ஆற்காடு மாவட்டத்தில் தொலைக்காட்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

236 (*வினா எண். 22534)—திரு. என். ஏ. பூங்காவனம் : திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் தொலைக்காட்சி நிலையம் (T.V.) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்த இடத்தில் அமைக்கப்படும் ?

(இ) எப்பொழுது செயல்படத் துவங்கும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) வேலூரை அடுத்த கழிஞ்சூர் கிராமத்தில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் குறைந்த சக்தி கொண்ட ஒளி பரப்பும் நிலையம் அமைக்கப்படும்.

(இ) 1984 இறுதிக்குள் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிஞ்சூர் கிராமத்தில் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். 1984 இறுதிக்குள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதற்காக நிலத்திற்கு அரசாங்கப் ஏதாவது பணம் கொடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் குறைந்த சக்தி கொண்ட ஒளிபரப்பு நிலையத்தைத் தமிழ்நாட்டில் ஆறு இடங்களில் வைப்பதற்கு மத்திய அரசு ஒத்துக்கொண்டு இருக்கிறது. அந்தக் குறைந்த சக்தி கொண்ட ஒளிபரப்பு நிலையத்திற்கான கருவிகளை வைக்கின்ற பொறுப்பு மத்திய அரசைச் சேர்ந்தது. அதற்கான இடத்தை மாநில அரசு தருவதாக ஒப்புக்கொண்டு, ஆறு இடங்களிலேயும் அநேகமாக இடங்களையெல்லாம் ஒதுக்கி அவர்களுக்குத் தந்திருக்கிறோம். அதைப்போலவே இந்தக் கழிஞ்சூர் கிராமத்தில் உள்ள அந்தப் பகுதியிலே இருக்கிற அந்த இடத்தையும், வேறொரு அரசுத் துறையினிடத்தில் இருக்கின்ற அந்த இடத்தையும், அதற்குண்டான கிரயத்தைக் கொடுத்து நமது மாநில அரசின் செலவில் மத்திய அரசுக்கு வழங்கியிருக்கிறோம்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஆறு இடங்கள் என்று சொன்னார்கள். அவை எந்தெந்த இடங்கள் ? கழிஞ்சூர்

கிராமத்தில் உள்ள இடத்தை அரசு பெற்று விட்டதா ? அதற்கான ஆணைகளைப் பிறப்பித்து இப்பொழுது அந்த இடத்தை எடுத்துக் கொண்டார்களா ? மேலும், இது சம்பந்தமாக மத்திய அரசு நிதி உதவி செய்திருக்கிறதா ? இது உறுதியாக எப்பொழுது துவங்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர், அவர்களே, ஆறு இடங்கள், திருச்சிராப்பள்ளி, கும்பகோணம் நெய்வேலி, சேலம், வேலூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களாகும். வேலூரைப் பொறுத்தவரையில், வேலூரை அடுத்த கழிஞ்சூர் கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான 80 சென்ட் நிலம், அதில் உள்ள கட்டிடம், குறைந்த சக்தி கொண்ட ஒளிபரப்பு நிலையம் அமைக்க வானொலி பொறியியல் துறைக்கு வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான ஆணை 22–2–84 இல் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் அது செயல்படத் துவங்கும் என்று தொலைக்காட்சிப் பிரிவினர் தெரிவித்திருக்கிறார்கள். இதற்காகக் கொடுக்க வேண்டிய கிரயத் தொகையை மாநில அரசு தன்னுடைய பொறுப்பிலே ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் கோயம்புத்தூரில் அமைக்கப்படும் நிலையத்திற்குத் திட்ட மதிப்பீடு எவ்வளவு ? கொடைக்கானலிலே ஒரு தொலைக்காட்சி நிலையம் அமைப்பதற்கு ஏற்கனவே முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இந்தக் குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி ஒளி பரப்பு நிலையங்கள் என்பதற்கு எவ்வளவு செலவாகின்றது என்பதைப் பற்றிய விவரக் குறிப்புகள் தற்போது நம்மிடத்திலே இல்லை. காரணம் இது மத்திய அரசு செலவிடுகின்ற தொகை.

அடுத்து கொடைக்கானலில் நிறுவப்படுகின்ற அந்த அமைப்பிற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கின்றது. அது மிகுந்த சக்தி கொண்ட அதாவது 10 கிலோவாட் சக்தி கொண்ட ஒளிபரப்புகின்ற நிலையம். அதற்காக நாம் அதிகமான செலவிலே இடத்தை எல்லாம் அவர்களுக்குத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து விட்டோம். அவர்களும் அந்தக் கோபுரம் கட்டுகின்ற பணியைத் தொடங்கி இருக்கிறார்கள். அது இந்த ஆண்டுக்குள்ளோ அல்லது அடுத்த ஆண்டு இறுதிக்குள்ளோ நிச்சயமாக முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் தற்போது 6 இடங்களிலே வைக்கப்படுகின்ற நிலையங்களைப் பொறுத்தவரையில் அவை 100 வாட் பவர் உள்ள அதாவது குறைந்த சக்தியுள்ள நிலையங்கள். இவற்றால்





சுமார் 15 அல்லது 20 கிலோ மீட்டர் சுற்றளவுக்குத்தான் ஒளிபரப்ப முடியும். மேலும் தொடக்கத்தில் டெல்லியிலிருந்து ஒளிபரப்பப்படுகின்ற அந்தக் காட்சிகளை மாத்திரம் ஒளி பரப்புகின்ற நிலையமாக அமையும். ஆனால் கொடைக்கானலில் அமைகின்ற நிலையம் அப்படி அல்ல. அது 10 கிலோ வாட் சக்தி கொண்ட நிலையம். அதாவது கிட்டத்தட்ட 160-லிருந்து 180 கிலோ மீட்டர் வரை அதன்மூலம் ஒளிபரப்ப முடியும் என்று குறிப்பிடுகிறார்கள். ஆகவே அது கிட்டத்தட்ட 200 கிலோ மீட்டர் அளவுக்கு ஒளிபரப்புகின்ற சக்தி வாய்ந்த நிலையமாக இருக்கும். அது சென்னையிலிருந்து ஒளிபரப்பப்படுகின்ற காட்சிகளையும், டெல்லியிலிருந்து ஒளிபரப்பப்படுகின்ற காட்சிகளையும் எல்லாம் ஒளிபரப்புகின்ற ஒரு அமைப்பாக இருக்கும்.

**திரு. எம். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றபோது 6 இடங்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். கோவையிலே அமைக்கப்படும் என்று சொன்னார்கள். கோவையில் எந்த இடத்தில் தொலைக்காட்சி நிலையம் அமைப்பதற்காக இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, கோயம்புத்தூரிலே தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் அமைப்பதற்காக சிறைச்சாலைக்கு அருகிலே ஒரு நிலத்தை இலவசமாக வழங்குவதற்குரிய ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. தி. அன்பழகன் :** தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்திலே குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் அமைக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருப்பத்தூர் பகுதி அம்மாவட்டத்தின் கடைசிப் பகுதியாக இருப்பதால், கழிஞ்சூரிலே இருந்து ஒளிபரப்பப்படும்போது இப்பகுதிகளுக்கு பயன் இல்லை என்று சொல்லப்படுகின்றது. ஆகவே இந்த குறைந்த சக்தி கொண்ட நிலையத்தை அதிக சக்தி கொண்ட நிலையமாக அமைத்து அம்மாவட்டம் முழுவதும் பயன் பெறுகின்ற அளவுக்கு மாற்றியமைக்க தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே குறைந்த சக்தி கொண்ட ஒளிபரப்பு நிலையம் முதற்கட்டமாக அமைப்பதற்காக 6 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் திருப்பத்தூர் பகுதியைப் பற்றிப் பரிசீலித்தபோது அவர்களுக்கு பெங்களூரில் இருந்து ஒளிபரப்ப இயலும் என்கின்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் அநேகமாக வேலூர் பகுதியில் இருக்கின்ற சக்தி வாய்ந்த

நிறுவனம் எல்லா ஒளிபரட்புகின்ற கருவிகளையும் பயன்படுத்த முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதற்கிடையில் சேலத்திலே அமைப்பதைப் பொறுத்தவரையில் ஏற்காடு மலையினைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சாதாரணமாகக் கணக்குப் போடுவதை விட அதிகமான தொலைவுக்கு ஒளி பரப்பப்படுகின்ற சக்தி வாய்ந்த நிலையமாக அது அமையக்கூடும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் முதற்கட்டமாக இது 6 இடங்களில் அமைக்கப்படுகின்றது. இதனை விரிவுபடுத்துகின்றபோது திருப்பத் தூர் போன்ற இடங்களையும் சேர்த்துக்கொள்கின்ற வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காட்பாடிக்கு அருகிலே ஒரு இடம் பார்த்ததாக மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னதாக நான் பத்திரிகையில் பார்த்தேன். அந்தப் பத்திரிகைச் செய்தி உண்மையா ? ஏலகிரி, ஜவ்வாது மலைப்பகுதியும் கூட ஏற்காடு போன்று கிட்டத்தட்ட மூவாயிரம் அடி உயரமுள்ளதாக இருக்கின்றது. அந்த இடங்களில் போலீஸ் துறையின் வயர்லஸ் போன்ற கருவிகள் எல்லாம் பொருத்தி இருக்கிறார்கள். ஆகவே அந்த இடத்திலே தொலைக்காட்சி நிலையத்தை அமைத்தால் தர்மபுரி, வடாற்காடு போன்ற மாவட்டங்கள் பயன்பெறுமே, எனவே அதைப் பரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30.)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்தக் கருத்து தீவிரமாக பரிசீலிக்கப்பட்டதற்குப் பிறகு தான் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறாாகள். சில இடங்களில், உயர்ந்த இடத்திலே இந்த ஒளிபரப்புகிற கருவிகளை அமைக்கிறபோது வேறு துறைகளைச் சார்ந்த கருவிகள் அங்கே அமைக்கப்பட்டிருக்குமேயானால் அதற்கு இடையூறாக இவை அமையக் கூடும் என்று கருத்து அவர்களுடைய பொறியியல் துறையில் இருக்கிறது. ஆகவேதான் அந்த இடங்களுக்கு இடையூறு விளைவிக்காமல் வேறு தொலைபேசி சாதனங்கள் அல்லது செய்தி பரப்புகிற சாதனங்களை அவர்கள் அமைந்திருக்கிற இடங்களில் கொண்டுபோய் இந்தக் கருவிகளை வைப்பதால் இரண்டுக்கும் இடையூறு ஏற்பட்டு நாம் எந்த நோக்கத்திற்காக அமைக்கிறோமோ அந்த ஒளிபரப்புகிற காரியம் நடைபெறாமல் இடையூறுகள் ஏற்படுகிற வகையில் அமையக் கூடும் என்ற காரணத்தால் அந்தப் பகுதியில் ஏற்கனவே இப்படி வேறு சில துறைகளின் கருவிகள் இருக்கிற இடத்தில் இதைக் கொண்டுபோய் வைக்கக்கூடாது என்ற உணர்வோடு வேறு இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.



திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தத் தொலைக்காட்சி நிலையம் மாநிலத்தில் தென் பகுதிகளில் அமைப்பதற்கான திட்டம் இருக்கிறது என்றும் அதிலும் திருச்சியில் அமைப்பதற்கான திட்டம் இருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். திருச்சி, மாநிலத்தின் மையப்பகுதியில் இருக்கிற காரணத்தால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட நமது தமிழ்நாட்டின் தலை நகரத்தை திருச்சிக்குக் கொண்டுசெல்லலாம் என்ற உத்தேசத்தைக்கூட வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையில் திருச்சியில் அமைக்கக்கூடிய இந்த தொலைக்காட்சி நிலையத்தை எந்த இடத்தில் அமைப்பதற்கான இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ? அங்கே அமைக்கக்கூடிய இந்தத் தொலைக்காட்சி நிலையத்திலே மாநிலத்தின் பல பகுதிகளிலும் இருந்து ஒளியை எடுத்துச் செல்லக்கூடிய முறையில் சக்திவாய்ந்த கருவிகளைப் பொருத்துவதற்கு அல்லது பயன்படுத்துவ்தற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, திருச்சியில் அகில இந்திய வானொலி நிலையத்தினுடைய வளாகத்திற்குள்ளே இந்தக் குறைந்த சக்திகொண்ட இந்தக் கருவி அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அநேகமாக அந்த டவர் (Tower) என்று அழைக்கப்படுகிற கோபுரம் கட்டி முடிவடைகிற நிலைக்கு வந்து விட்டது. இதில் ஒரு தகவலைத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்தக் கருவிகள், வெளியே தயாரித்து ஒளிபரப்புகிற நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகிற கருவிகளே தவிர அங்கேயே ஸ்டேஷன் வைத்து நிகழ்ச்சிகள் தயாரித்து ஒளிபரப்புகிற நிலையங்கள் அல்ல. ஆகவே டெல்லியில் நாஷனல் ப்ரோக்ராமில் அவர்கள் அளிக்கிற நிகழ்ச்சிகளை இதில் முதலிலே ஒளிபரப்ப இருக்கிறது. அதற்குப் பிறகு நம் மாநிலத்தின் (சென்னை) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப இருக்கின்றது. திருச்சியின் பக்கத்தில் கொடைக்கானல் டவர் இருப்பதால் பத்து கிலோவாட்ஸ் சக்தி வாய்ந்த ஒளிபரப்பு அமைப்பு வர இருக்கிறபோது அநேகமாக திருச்சி, தஞ்சை போன்ற பகுதிகள் கூட சென்னை தொலைக்காட்சி நிலையத்திலிருந்து அல்லது டெல்லி தொலைக்காட்சி நிலையத்திலிருந்து, வேறு நிலையங்களிலிருந்து ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதற்கான வாய்ப்புகள் கொடைக்கானலில் அந்தக் கருவி அமைந்தவுடனே ஏற்பட முடியும்.

[1984 மார்ச் 9

**பெரியார் மாவட்டத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைக்கும் திட்டம்.**

*237 (*வினா 10622)*—**திரு. கு. அ. செங்கோட்டையன் :** *மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ...*

*(அ) பெரியார் மாவட்டத்தில் திறந்தவெளி சிறைச் சாலை அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கப்படும் ?*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) இல்லை.
(ஆ) வினாவுக்கு இடமில்லை.

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தில் ஏதாவது ஒரு பகுதியிலாவது அல்லது ஒரு இடத்தி லாவது அமைக்கிற நோக்கம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் முத்துப்பட்டியிலும், நெல்லை மாவட்டத்தில் சிங்கப்பட்டியிலும், தென் ஆற்காடு மாவட்டத் தில் வெள்ளப்பாக்கத்திலும், செங்கை மாவட்டத்தில் வேங்கட மங்களத்திலும் இத்தகைய சிறைச்சாலைகள் அமைக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறது.

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** தலைவர் அவர்களே, அதேபோல் பெரியார் மாவட்டத்திலே அமைத்து அங்கே குற்றம் செய்கிறவர்களுக்கு நல்ல தொழில்களை உருவாக்குவதற்கு அதற்காக நிலங்களை எடுத்து தொழில்களை உருவாக்கி குற்றத்தை மறக்கிற அளவிற்கு அரசு தொழில்களை உரு வாக்க முன்வருமா ?

**மண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகள் இதுபோன்ற திறந்த வெளி சிறைச்சாலைகளில் பயிற்சி பெறுகின்றபோது அல்லது இருக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணு கிறமாதிரி அவர்கள் மனமாற்றம் பெறுகின்ற வாய்ப்பு உண்டு. ஆனால், தமிழகத்திலே துவக்கப்பட்ட மாவட்டங்களில் இறுதி யாக துவக்கப்பட்ட பெரியார் மாவட்டத்திற்கு முன்னுரிமை தந்து, இந்த திறந்தவெளி சிறைச்சாலையை ஆங்கு தற்போது அமைப்போமானால், ஏற்கனவே இருக்கின்ற பெரிய மாவட் டங்கள் எல்லாம் வருத்தப்படும் என்பதால், இதை படிப்படி யாக மேற்கொள்ளுகிறபோது, அந்த காலகட்டத்தில் இதைப் பற்றி அரசு ஆராயும்.



1984 மார்ச் 9]

**திரு. க. இரா. சின்னராசு :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பது பற்றி அமைச் சர் அவர்கள் சொன்னார்கள். நீண்டகாலத்திற்கு முன்னாலே பிரிக்கப்பட்ட தர்மபுரி மாவட்டத்தில் இதற்கான இடங்கள் எல்லாம் பார்த்து, அதை அமைப்பதற்கு வேண்டிய வாய்ப்பு கள் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, தர்மபுரி மாவட்டத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் திறந்தவெளி சிறைச்சாலை அமைக்கக்கூடிய அளவில் இடம் கிடைக்காது என்பதில் அரசுக்கு எவ்வித பயமும் இல்லை; அச்சமும் இல்லை. ஆனால், படிப்படியாக இந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. புதிய முறையில் தற்போது இந்தத் திட்டத்தைக் கொண்டுவருகிறபோது, நிதி ஆதாரங் களுக்கு உட்பட்டு, படிப்படியாக பல்வேறு பகுதிகளுக்கு நீட்டிப் பது குறித்து அரசு ஆய்ந்து முடிவெடுக்கும்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, பெரியார் மாவட் டத்தில் திறந்த வெளி சிறைச்சாலை தற்போது அமைப்பதற்கு அரசிடம் திட்டமில்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித் தார்கள். பெரியார் மாவட்டத்திலே இருக்கக் கூடிய கைதிகள் பெரிய அளவிலே கோவை சிறைச்சாலைக்குக் கொண்டு போகப் படுவதால், அங்கே சமாளிக்க முடியாத நிலையிருக்கிறது. ஒன்று, திறந்தவெளி சிறைச்சாலையைப் பெரியார் மாவட்டத் திலே ஏற்படுத்துங்கள் ; இல்லாவிட்டால், இந்த புதிய மாவட் டத்தில் ஒரு மத்திய சிறைச்சாலையை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் ஒரு நல்ல வினாவை எழுப்பியிருக்கிறார்கள். பெரியார் மாவட்டத்திற்கு தனியாக ஒரு சிறைச்சாலையை அமைப்பது குறித்து அரசு விரைவில் ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திறந்த வெளி சிறைச்சாலையை அமைப்பதில் மாவட்டப் பிரச்சினையாகக் கருதாமல், கைதிகளின் மன உணர்வை மேன்மை படுத்துவதற்கு திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பது சிறந்த தாகும் என்று சொல்லப்படுவதாலும், இந்த திறந்த வெளி சிறைச்சாலை வைப்பதால் செலவும் குறைவாகும் என்பதாலும், திறந்த வெளி சிறைச்சாலை ஆரம்பிப்பதோடு, இதிலே எத்தனை சதமானம் கைதிகளை வைக்க முடியும் என்பதையும், இதை விரிவு படுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 9

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளி சிறைச்சாலையை மாவட்ட ரீதியில் அமைக்க வேண்டுமென்று எண்ணுவது கூடாது தான். அப்படி அரசு எண்ணவில்லை. உறுப்பினர்கள் அத்தகைய கேள்வி கேட்டதால், பதில் சொல்ல வேண்டியது என் கடமையாகப் போய் விட்டது. ஆனால், அரசினுடைய கொள்கையைப் பொறுத்த வரையில், கைதிகள் 3 ஆண்டுகளுக்கு சிறையில் இருக்கிறவர்கள், திருந்த வாய்ப்புப் பெற்றவர்கள் அல்லது திருந்த வேண்டிய சூழ்நிலையில் உள்ளவர்கள், திருந்துவதற்கான வாய்ப்பு உள்ளவர்கள் போன்றவர்களுக்கெல்லாம் இது போன்ற திறந்த வெளி சிறைச்சாலைகளை அமைத்து, அவர்களுக்கு ஆங்கு திருந்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டும். குற்றம் செய்தால் அவர்கள் தண்டனை பெற்று, சிறையில் இருந்து, பின்னர் வெளியே வந்த பிறகு, விடுதலை பெற்ற பிறகு, சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில், He is looked down by the society என்ற காரணத்தினால், அவர்களுக்கு சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டும் என்ற முறையில், தற்போது சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறபோது, திறந்த வெளி சிறைச்சாலைகள் அமைப்பது உகந்தது என்று கருதி, அந்த அடிப்படையில் அதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறோம்.

வேதாரண்யம் உப்பளத்தில் உப்பு உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம்.

238 (*வினா எண் 19566) திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் உப்பளத்தில் உப்பு உற்பத்தியை அதிகரிக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு உப்பு நிறுவனம் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுக்காவிலுள்ள வேதாரண்யம் சதுப்பு நிலப் பகுதியின் மேற்கு கோடியிலுள்ள மரவக்காடு - வடக்காடு கிராமங்களில் 2875 ஏக்கர் நிலப் பரப்பை உப்பு உற்பத்திக்காக மேம்படுத்தி வருகிறது. இந்த உப்புத் தொழிற்சாலை 1982ஆம் ஆண்டு மேம்பாட்டு வேலைகளுடன், உப்பு உற்பத்தியையும் ஆரம்பித்துள்ளது. 1983 ஆம் ஆண்டில் இத் தொழிற்சாலையில் சுமார் 5226 டன்கள் உப்பு உற்பத்தியையும் ஆரம்பித்துள்ளது, உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.



1984 மார்ச் 9]

(முற்பகல் 9.40.)

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் உப்பளப் பகுதியிலே 60,000 ஏக்கர் நிலம் உப்பு உற்பத்திக்குத் தகுதியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் மேற்குக் கோடியில் இருக்கிற 5,000 ஏக்கர் நிலங்கள் தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதுவும் நல்ல உப்பாக இல்லையென்று சொல்கிறார்கள். எனவே, அதை விரிவுபடுத்தி, கிழக்குப் பகுதியிலே உப்பை உற்பத்தி செய்வதற்கு முயற்சி செய்தால் நல்ல உப்பை உற்பத்தி செய்ய முடியும் என்று கருதப்படுவதால், அந்தக் கிழக்குப் பகுதியிலும் உப்பு உற்பத்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆயப்பட்டு ஆய்வின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்தைச் சுற்றியும் தனியார் உப்பு உற்பத்தி செய்து வருகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது வேறு வசதிகள் செய்யப்படுகின்றனவா ? அங்கே சாலை வசதிகள் இல்லாததால் உப்பை எடுத்துச் செல்ல முடியாமல் இருக்கிறது. அதையும் உப்பு வாரியத்தின் மூலம்மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பு வாரியம், தனியார் உப்பளங்களிலே சாலை வசதி செய்து தர முடியாது. ஆனால் ஒட்டு மொத்தமாக உப்பளத் தொழில் மேம்பாட்டுக்கு என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அது குறித்து அரசு ஆராயும்.

ஆலங்குளம் சிமென்ட் ஆலையின் கழிவுப் புகையால் பாதிக்கப்படும் விவசாய நிலங்கள்.

239—*வினா எண். 19599—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் கழிவுப் புகையால் அந்த ஆலையை அடுத்துள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் அதிகமான நஷ்டத்திற்குள்ளாகியுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அந்த முறையில் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) தமிழ்நாடு சிமெண்டு, நிறுவனத்தின் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் மின்னியல் தூசி தடுப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் தூசிகள் தடுக்கப்பட்டு கழிவுப் புகையால் விவசாய நிலங்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் கூட நான் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தேன். அந்தப் புகையின் காரணமாக அங்குள்ள சகல நிலங்களும் எந்த மகசூலும் செய்ய முடியாமல் நிலங்களிலே 2 அங்குலம் அந்தத் தூசி படிந்திருக்கிறது. வீடுகள் பூராவிலும் மேலே கூறைகளில் அந்த நிறமே மாறக் கூடிய அளவுக்கு வெள்ளையாக தூசி படிந்திருக்கிறது. அமைச்சர், அவர்கள் சொல்லும் போது தடுப்பு நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது சரியாக எடுக்கவில்லையே. இனிமேலாவது அந்தத் தூசியை தடுக்க நடவடிக்கை எடுப்பதோடு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது காறும் அங்கு எலெக்டிரோஸ்டாடிக் பிரெசிபிடேட்டர் என்ற முறை நடை முறையில் இருந்த பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் அங்கு உழவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டது. அது அரசினுடைய கவனத்திற்கு வந்து அது நீக்கப்பட வேண்டுமென்ற முறையில்தான் தற்பொழுது அந்தப் பகுதியில் தூசி பரவாமல் தடுக்கும் உயரமான புகை மின்னியல் தூசி தடுப்பான்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அவை பொருத்தப்பட்டு இந்தக் குறைபாடு தற்போது நீக்கப்பட்டிருக்கிறது. நிலத்தினுடைய தன்மை, ஏற்கனவே ஒரு வேளை பாதிக்கப்பட்டிருக்கலாம். Gradually that may get improv.d என நான் கருதுகிறேன். அது குறித்து என்ன செய்ய வேண்டுமென்பதை அரசு மீண்டும் ஆராயும்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே உள்ள நிலங்கள் பாதிக்கப்பட்டதன் காரணமாக, விவசாயிகள் மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாயிருக்கின்றனர். ஆகவே, அந்தஆலையில் புதியவேலைக்கு ஆட்களைஎடுக்கும்போது பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஒரு குடும்பத்துக்கு ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதற்கு முன்னால், அந்த





ஆலையைக் கட்டும்போது நிலத்தை இழந்தவர்கள் குடும்பங்களிலிருந்து வேலைக்கு ஆட்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்களே, அந்த மாதிரி இந்தப் பாதிப்பை ஓரளவு குறைக்கும் வகையில், இந்தக் கோரிக்கையை ஏற்று, புதிதாக வேலைக்கு ஆட்களை எடுக்கும் போது, அந்தக் குடும்பங்களில் ஒவ்வொருவருக்கு வேலை கொடுக்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கழிவுப் புகையினால் தாக்கப்படுகிற பொழுது அத்தகைய தாக்குதல் நிரந்தரமான தாக்குதலாக இருக்கும் என கருதுவதற்கில்லை. தற்போது அந்தக் கழிவுப் புகை தாக்குதலிலிருந்து விடுபெற்றிருக்கிற காரணத்தால், நிலம் ஒரிஜினல் தன்மை பெற்றுவிடும் எனக் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த பிரச்சினை குறித்து அந்தத் துறையோடு கலந்து ஆய்ந்து அந்த அடிப்படையில் முடிவு செய்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சிமென்ட் ஆலை கழிவுப் புகையினாலே விவசாய நிலங்கள் பாதிக்கப்படாதபடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மானாமதுரைக்கு அருகே அதைப் போல் ஒரு புதிய சிமென்ட் ஆலை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதை அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். அதை மீறி உரிமதாரர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்து விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு மைய அரசிற்கு பரிந்துரை செய்தும் பல நேரங்களில் சிமென்ட் ஆலைகளுக்கு ஒன்றிற்கு கூட உரிமம் தருவதில்லை. அப்படி தப்பித்தவறி கிட்டிவிடுகிற போது அதை நாம் வரவேற்க வேண்டும்—தொழில் முன்னேற்றத்தின் அடிப்படையில். ஆனால் அதே நேரத்தில் சிமென்ட் ஆலைகள் அமைக்கப்படுவதால் அந்தப் பகுதிகளில் இருக்கிற உழவர்களுக்கு விவசாயம் பாதிக்கப்படுமானால் அது நாம் கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாத ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கூறிய ஆலோசனையை அரசு ஏற்று, மானாமதுரை மட்டுமல்லாமல் மற்றப் பகுதிகளிலும் இப்படி பாதிக்கப்பட்டிருந்தால் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. செ. சிவசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரையில் சிமென்ட் ஆலை ஆரம்பிப்பது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆலை அமைக்கக்கூடிய நேரத்திலே மின் தூசு துடைப்பான்களை முதலிலே அமைக்க வேண்டுமென்று கண்டிஷன் போர்ட்டு லைசென்ஸ் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 9

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்று சொல்லுகிறபோது ஏற்கெனவே இருக்கிற எலக்ட்ரிக் ஸ்டாட்டிக் பிரிசிபிட்டேட்டர் போன்றவைகள் எல்லாம் சரியானதாக இல்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்னியல் தூசு துடைப்பான்கள் சரியானவை என்று சொன்னார்கள். இதுகுறித்து தக்க நடவடிக்கையை எடுக்க அரசு முன்வரும்.

தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலம் சிமெண்ட் குழாய்கள், கிராதிகள் உற்பத்தி செய்யும் திட்டம்.

240— *வினா எண். 19768) திரு. இரா. தாமரைக்கனி :- மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் வாயிலாக இராமநாதபுரம் மாவட்டத்தில் சிமெண்ட் குழாய்கள், கிராதிகள் உற்பத்திசெய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை. ஆனால், தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் திருச்சி மாவட்டத்தில் மாயனூரில் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் அழுத்தக் குழாய்களைத் தயாரிப்பதற்கான திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இருக்கிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரியில் தயாராகிற சிமெண்ட் நல்ல தரமுள்ள சிமெண்ட் என்று முடிவு வந்திருக்கிறது. இன்றைக்கு நம்முடைய தமிழக அரசாங்கம் கிராமப் பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கவும், கட்டிடங்களைக் கட்டுவதற்கும் மிகவும் முனைந்து தீவிரமாக காரியங்களை செய்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே அந்த சிமெண்ட்டை வைத்து குழாய்களைத் தயாரிக்கவும், கிராதிகளைத் தயாரிக்கவும் ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரியில் வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு குடிநீர் வாரியத்தினுடைய தேவைகளை ஈடேற்றுகிற நோக்கத்துடன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் அழுத்தக் குழாய்களை தயாரிப்பதற்காக திட்டத்தட்ட



1984 மார்ச் 9]

36 ஆயிரம் டன் மதிப்புள்ள அளவிற்கு உற்பத்தி செய்ய 'டான்சம்' என்று சொல்லப்படுகிற தமிழ் நாடு சிமெண்ட் நிறுவனத்தினுடைய பிரிவின் கீழ் திருச்சி மாவட்டத்தில் அதை மேற்கொள்ள அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேற்கொண்டும் அத்தகைய பைப்-லைன்ஸ் தேவையா என்பதை ஆராய்ந்து அந்த அடிப்படையில் அரசு இதுகுறித்து ஆராயும்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் மாயனூரில் சிமெண்ட் குழாய்கள் மற்றும் கிராதிகள் தயாரிக்க பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது ? அந்தத் திட்டம் எப்போது முடிவடையும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக மதிப்பிடப்பட்டிருக்கிற முதலீடு ஏழு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய். 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாத வாக்கில் பணி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூடலூர் தாலுகாவிலுள்ள தங்கச் சுரங்கங்கள்.

241—* வினா. எண். 20559—திரு. சி. கணேசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர் தாலுக்காவில் தங்கச் சுரங்கங்கள் மூடப்பட்டு விட்டது உண்மையா ?

(ஆ) ஆம், எனில் அதை மீண்டும் செயல்படுத்தும் திட்டம் பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இங்கு சுரங்கப் பணிகள் மீண்டும் துவக்கப்பட்டால் இலாபகரமாயிராது என்பதால் அதை மீண்டும் செயல்படுத்தும் திட்டத்திற்கான வாய்ப்பு இல்லை.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தங்கச் சுரங்கம் மூடப்பட்டுவிட்டதாக அறிவிக்கிறார்கள். ஆகவே நான் தெரிந்துகொள்ள விரும்புவது அதைத் துவக்குவதற்கு எவ்வளவு பணம் செலவிடப்பட்டது, அது நமக்கு வெற்றிகரமாக வராததற்கு என்னென்ன காரணங்கள் சாதகமாக இல்லை என்ற விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 9

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தங்கம் இருக்கின்ற இடம் நீலகிரி மாவட்டத்தின் கூடலூர் தாலுக்காதான். ஆரம்பத்தில் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்னாலே கணக்கிடப்பட்ட அந்த அடிப்படையில் லண்டனைச் சேர்ந்த கிட்டத்தட்ட 33 நிறுவனங்கள் அந்த ஆய்வுகளை மேற்கொண்டு அந்தப் பணிகளைத் தொடங்கின. பிறகு 1958-ல் இருந்து 1968 வரையில் மாநில அரசும், மத்திய அரசும் அவற்றின் அமைப்புகள் மூலம் புதிய நவீன முறையின் அடிப்படையில் அங்கே எந்த அளவிற்குத் தங்கம் கிடைக்கும் என்று ஆய்வுகள் நடத்தின. அங்கே அல்போ சுரங்கம், ஹேர்வுட் சுரங்கம், போனிக் சுரங்கம் ஆகிய இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அங்கே கிடைக்கும் தங்கத்தின் அளவு ஒரு டன்னுக்கு 3 கிராமிற்கும் குறைவாக இருக்கும் என்பதால் 'economically such mining will not be viable.' என்ற முடிவிற்கு வந்து அத்திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள். தருமபுரி மாவட்டத்தில் வேப்பணப்பள்ளி பகுதியில் தங்கம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கான ஆய்வுகள் மேற்சொள்ளப்பட்டு இருக்கின்றன. அந்த ஆய்வுகள் முடிந்து, தருமபுரி மாவட்டத்தில் வேப்பணப்பள்ளி பகுதியில் நரளப்பள்ளி மற்றும் மகாராசக்கடை போன்ற இடங்களில் தங்கச் சுரங்கம் இருக்கும் வாய்ப்பு இருக்கிறது.

திரு. சி. கணேசன் : தலைவர் அவர்களே, அந்தத் தங்கச் சுரங்கம் மூடப்பட்ட காலத்தில் தங்கத்தின் விலை குறைவாக இருந்து இருக்கும். இன்றைக்கு அதன் விலை அதிகமாக இருப்பதால், அதை மீண்டும் தொடர்வதற்கு அரசுக்கு சிந்தனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, The cost of production as on date would have gone up in view of the erosion in the value of money. This is for the kind information of the hon. Member.

ஈரோடு நகரில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்ட கையகப் படுத்தப்பட்ட நிலம்.

192 * வினா எண். 19656—திரு. கு. ரமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு பெரியார் நகரில் உள்ள வீட்டு வசதி வாரிய வீடுகளுக்காக எடுக்கப்பட்ட நிலத்துக்கு விலை அதிகம் கேட்டு நிலச் சொந்தக்காரர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் என்ன?



1984 மார்ச் 9]

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வீட்டுவசதித் திட்டத்திற்காக ஈரோடு நகரம் சூரம்பட்டி கிராமத்தில் கையகப்படுத்தப்படும் 156.78 ஏக்கர் நிலத்திற்கு நிலத்தின் விலையை ஒரு சதுர அடிக்கு ரூ. 1.59 வீதம் ஈரோடு கோட்ட வருவாய் அதிகாரி நிர்ணயம் செய்ததில் திருப்தி ஏற்படாததால், நிலச் சொந்தக்காரர்கள் உயரிய ஈட்டுத்தொகை வேண்டுமென்று ஈரோடு துணை நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். ஈரோடு துணை நீதி மன்றம் 31-3-1982-ல் சதுர அடிக்கு ரூ. 6.00 வீதம் ஈட்டுத் தொகை வழங்குமாறு தீர்ப்பளித்துள்ளது. இத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் இவ்வரசு மேல் முறையீடு செய்துள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, புதிதாக அங்கே தலைநகரம் ஏற்பட்டு விட்டதால் அங்கே நிலத்தின் விலை எல்லையற்ற அளவிற்கு உயர்ந்து இருக்கிறது. அதனால்தான் இந்த மாதிரியான நிலைமையேற்படுகிறது. ஆகவே, அரசு அங்கே ஏற்படுகின்ற தேவைக்கு ஏற்ப வீடுகளைக் கட்டுவதற்கு நிலங்களை முன்கூட்டியே கையகப்படுத்தினால் வீடுகள் கட்டும் பணியும் தடைபடாது. ஆகவே, அப்படிப்பட்ட கண்ணோட்டத்தில் அரசு செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே. முன்னேற்றபடாகத்தான் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகின்றன. எங்கெங்கே வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள முடியுமோ அங்கெல்லாம் முன்கூட்டியே நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கிற மாவட்ட தலைநகரங்களில் கூட பல்வேறு இடங்களில் நிலங்களைக் கையகப்படுத்த திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த நிலச் சொந்தக்காரர்களுக்கு பெரிய அளவில் தொகை கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஏனென்றால் 156.78 ஏக்கர் நிலம் அங்கே எடுக்கப்படவிருக்கிறது. அவர்கள் கேட்கிறதொகையை நம்மால் தரமுடியாது என்று நாம் மேல் முறையீடு சென்றுள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டுள்ளதால் அந்தப் பகுதியில் முழுவதும் வீடு கட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. புதிய தலைநகரம் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் அங்கே வீடுகளைக் கட்டுவதற்கு வேறு என்ன ஏற்பாட்டை இந்த அரசு உடனடியாக எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, அவர்கள் கேட்கின்ற விலையை நாம் கொடுக்கமுடியாது. ஆனால் எல்லாச் சொந்தக்காரர்களும் இப்படி கேட்கிறார்கள்

என்று சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட சில பேர் தான் இப்படி போய்க்கொண்டு இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் நாம் தருகிற விலையைப் பெற்றுக்கொண்டு விடுகிறார்கள். இப்படி வழக்குப் போடுவதால் சில பணிகள் தாமதம் ஆகின்றன என்பது உண்மைதான். அதற்சாகத்தான் வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக ஒரே இடத்தில் மட்டும் நிலத்தை எடுக்காமல், இரண்டு இடங்களில் நிலத்தை எடுத்து, மற்றொரு பகுதியில் வீடு கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. ஆகவே வேலைகள் தடைபடவில்லை. ஒரு பகுதியில் வீடு கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புற வீடுகட்டும் திட்டத்தின் கீழ் வீடுகட்ட ஒதுக்கப்பட்ட தொகை.

244—*வினா எண். 17397—திரு. க. பாரமலை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1980-81, 1981-82, 1982-83 ஆம் ஆண்டுகளில் வீடு கட்ட ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் வீடுகள் கட்டுவதற்கு செலவழிக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) மற்றும் (ஆ): கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 1980-81, 1981-82 1982-83 ஆம் ஆண்டுகளில் வீடுகள் கட்டுவதற்காக முறையே ரூ. 929.53 இலட்சம் ரூ. 1,476.90 இலட்சம் ரூ. 1,073.52 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 3,479.95 இலட்சம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அரசு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (Hudco) மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் (Nationalised Banks.) ஒதுக்கீடு செய்தன. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதும் வீடுகள் கட்ட செலவு செய்யப்பட்டு விட்டது.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தில் கீழே இருக்கின்ற சங்கங்களிலிருந்து அபெக்ஸ் சொசைட்டிக்கு வந்திருக்கிற விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? இவ்வாண்டு இன்றைய தேதி வரையில் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கிற மனுக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் 104 வட்ட, கோட்ட அளவிலான கிராமப்புற கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கங்களுக்கு



வருகிற மனுக்களை ஆரம்பத்தில் அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களில் பரிசீலனை செய்து வைக்கிறார்கள். அதன் பின்னால் மாநிலச் சங்கம் பணம் கொடுக்கிற அளவுக்கு ஒவ்வொரு ஆண்டும் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கிறார்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டுக்கு 40,000 வீடுகள் கட்டிக்கொடுப்பது என்ற அடிப்படையில் முடிவு செய்து, அந்த அளவுக்கு விண்ணப்பங்களைப் பெற்றுகொண்டு, வீடுகள் கட்டப்படுகின்றன. இன்னும் மாநிலச் சங்கத்தில் ஏறத்தாழ 6000-க்கும் அதிகமான மனுக்கள் நிலுவையில் இருக்கின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைரவரவர்களே, இந்த கிராமப்புற வீடு கட்டும் திட்டம் ஒரு சிறப்பான திட்டம்; தேவையான திட்டம். ஏனென்றால் இந்த கடன் வசதி இல்லை என்றால் கிராமப் புறத்தில் யாரும் வீடு கட்ட முடியாது. காரணம் அவர்கள் மிகவும் குறைந்த வருமானம் உடையவர்கள். இந்தத் திட்டத்திற்கு 34 கோடி ரூபாய் மூன்று ஆண்டுகளில் செலவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்தத் தொகை ஆர்பன் ஹவுசிங்குக்கும் சேர்த்து என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு). அப்படியானால் சரி. இப்போது பலர் மனு போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு காலாகாலத்தில் பணம் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் எல்.ஐ.சி., வேறு வங்கிகளிலிருந்து கடன் வாங்கி, கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் உரிய காலத்தில் கொடுக்க முடியவில்லை. இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 1800 கோடிக்குப் போடுகின்ற பட்ஜெட்டில், இந்த கிராமப்புற வீடு கட்டும் திட்டத்திற்காக வருடம் 10 கோடி ரூபாயையாவது ஒதுக்க வேண்டும். அதற்கு இப்போது புதிதாக வந்திருக்கிற அமைச்சர் தீவிரமான முயற்சி எடுத்துக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் அழகர்சாமி அவர்களின் ஆசை பாராட்டப்படவேண்டிய ஒன்று. கிராமங்களைப் பொறுத்த வரையில் மக்களிடம் வீடு கட்டும் ஆர்வம் இப்போது அதிகமாக இருக்கிறது. ஆனால் அந்த அளவுக்கு பணம் தரும் வாய்ப்பு வசதி இல்லாத காரணத்தினால் அத்தனை பேர்களுக்கும் உடனடியாகக் கொடுக்க முடியவில்லை. 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டுக்கு 40,000 வீடுகள் கட்டிக்கொடுப்பது என்று முடிவு செய்து அதை செயல்படுத்தி வருகிறோம். இன்னும் அதிகமாக கட்டிக்கொடுக்க வேண்டுமென்றால் மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் கொஞ்சம் முயற்சி எடுத்தால் நன்றாக இருக்கும். திரும்பி வரவேண்டிய பணம் சரியாக வரவில்லை; வசூலாகவில்லை; பாக்கி நிறைய இருக்கிறது. வசூல் செய்ய எல்லோரும் கொஞ்சம் ஒத்துழைத்தால் வசூல் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

[1984 மார்ச் 9

கதர்த் தொழிலை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

193—(*வினா எண். 20588) திரு. சி. கணேசன் : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களிடையே கதர்த் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் 14 வட்டங்களில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 500 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்படுகின்றன. புதியதாக 47 நூற்பு நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன. இக்கிராமிய நூற்புக் கூடங்களின் மூலம் பாமர மக்களுக்கு அவரவர்கள் இருக்கும் இடங்களிலேயே வேலை வாய்ப்பும், நிரந்தர வருவாயும் கிடைக்கிறது.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்களிடையே கதர்த் தொழிலை அரசு அபிவிருத்தி செய்கிறது என்பதைக் கேட்டு சந்தோஷப்படுகிறேன். அதே போல குடிசைப் பகுதிகளில் சும்மா இருக்கிற தாய்மார்களுக்கு ஊக்கம் தருகின்ற வகையில் மூலப் பொருள்களை வாங்கவும், இன்னும் அது சம்பந்தமாக பொருள்களை வாங்கி தொழில் நடத்துவதற்காக மான்யமாக அல்லது கடனாக அளித்து உதவ அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கிராமங்களில் இது போன்ற கிராம நூற்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதன்மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இப்போது பனைப் பயிற்சி தொழில் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதன் மூலம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தும், அதற்கு வேண்டிய கருவிகளை அரசு மான்யம் மூலம் அளித்தும் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 மார்ச் 9]

ராட்டைகளில் நூல் நூற்கும் நிலையங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கான கூலி நிர்ணயம்.

194—(*வினா எண். 20996) திரு. டி. மணி : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்க் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் உள்ள 6 கதிர், மற்றும் 12 கதிர் ராட்டைகளில் நூல் நூற்கும் நிலையங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சிட்டத்திற்கு 21 காசுகள் என்ற கூலியை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) இந்தத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச போனஸ் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) இப்பொழுது நடைமுறையில் உள்ள கூலி விகிதப்படி 6 கதிர் ராட்டையில் நூற்போருக்கு சிட்டம் ஒன்றுக்கு 26 பைசா வீதமும், 12 கதிர் இராட்டையில் நூற்போருக்கு சிட்டம் 1-க்கு 21 பைசா வீதமும் கூலி கொடுக்கப்படுகிறது. இத்துடன் 8 சதவீத ஊக்குவிப்பு கூலியும் 15—8—81 முதல் அளிக்கப்படுகிறது. 1—4—84 முதல் மேலும் கூலியை உயர்த்தும் உத்தேசம் காதி கமிஷன் பரிசீலனையில் உள்ளது. கதர் கிராமத் தொழில் ஆணையம் அமைத்துள்ள மாநில அத்தாட்சிக் குழு அவ்வப்போது கூலி நிர்ணயம் செய்து வருகிறது. கூலியை வாரியம் தன்னிச்சையாக உயர்த்த இயலாது.

(ஆ) கதர் கிராமத் தொழில்கள் இலாப நோக்கத்துடன் தொடங்கப்பட்டவை அல்ல. கதர் கிராமத் தொழில்களுக்கு போனஸ் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, வாரியம் போனஸ் அளிக்க இயலாது.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கதர் கிராம வாரியத்தில் வேலை செய்கின்றவர்கள், பெருவாரியான பெண்கள் வேலை செய்யும்போது அவர்களுக்கு குறைந்த பட்சம் என்ற முறையில் கூலி கொடுக்க வேண்டிய திட்டம் இருக்கிறதா? சிட்டம் ஒன்றுக்கு 21 பைசா என்றிருக்கிறது. ரூ. 2, 3-க்குத்தான் அவர்கள் வேலை செய்ய முடியும். ஆகவே, விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் சம்பளம் நிர்ணயித்து இருக்கின்ற இந்த நேரத்தில், அந்த அளவிற்கு வருமானம் கிடைக்கக் கூடிய அளவில், ஒரு சிட்டத்திற்கு இவ்வளவு காசு என்று சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 9

**திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய கூலி ரூ. 2, 3 என்ற வீதத்தில் கூறினார்கள். ஆனால் அவர் கூறுவது தவறான கருத்து என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான் ஒவ்வொரு பகுதியாக செல்லும்போது, அவர்களிடையே நேரடியாகக் கேட்கும்போது, அவர்கள் எந்த விதத்தில் வேலை செய்கிறார்களோ, எவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்கிறார்களோ, அதற்குந் தகுந்த கூலி கொடுக்கப்பட்டுவருகிறது. இப்போது நூற்பு நிலையங்களில் தினம் ஒன்றுக்கு 16 முதல் 20 சிட்டங்களை 6 கதிர் இராட்டைகளில் நூற்கிறார்கள். 12 கதிர் இராட்டைகளில் தினம் ஒன்றுக்கு 25 முதல் 30 சிட்டங்கள் வரை நூற்க முடிகிறது. நூற்போர்கள் தங்களது திறனுக்கு ஏற்ப நூல் உற்பத்தி செய்து வருகின்றனர்.

**திரு டி. மணி :** சமீபத்தில் முன்னால் பொறுப்பு வகித்திருந்த இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களும், கதர் வாரியத்தினுடைய தலைவர் அவர்களும் குமரி மாவட்டத்தில் முழுக்காடு கதர் நிலையத்திற்கு நேரடியாக வருகை தந்தார்கள். அங்கே 100 அல்லது 50 பெண்கள் வேலை செய்கின்ற அந்தப் பகுதியிலே 5, 6 பேர்தான் சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் வேலை செய்து ரூ. 4, 5 சம்பளம்பெறக் கூடிய வகையிலே இருக்கிறார்கள். பெருவாரியானவர்களுக்கு அந்த அளவு சம்பளம் பெறக்கூடிய வகையில் வருவதில்லை. அதைப் பற்றி நான் அன்றைக்கே அவர்களிடம் கூறினேன். இந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் தங்களுடைய வருவாயைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது பல்வேறு துறைகளிலே குறைந்தபட்ச போனஸ் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. இந்தத் துறையிலேயே லாப நஷ்டக் கணக்கு என்று பார்க்காமல் இந்தத் துறையிலே உள்ள தொழிலாளர்களுக்கும் வருடம் ஒன்றுக்கு இவ்வளவு என்று குறைந்தபட்ச போனஸ் கொள்கையை இந்தத் துறைக்கும் விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என நான் அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல கூலியை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் தற்போது கதர்த் துறை வாரியத்தில் இல்லை. இந்த விஷயம் காதி கமிஷன் பரிசீலனையில் உள்ளது என்று நான் ஏற்கனவே எடுத்துக் கூறியுள்ளேன். நான் இன்று ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு மாவட்டமாகச செல்லும்போது, அந்தந்தப் பகுதிகளில் உள்ள நூற்பு ஆலைகளில் வேலை செய்கின்ற பெண்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமாக, தங்களுடைய திறமைக்கு ஏற்றவாறு வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய திறமைக்கு ஏற்றவாறு அவர்கள் கூலியைப் பெறுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1–4–1984 முதல் காதி கமிஷன்

1984 மார்ச் 9]

பரிசீலனையில் இந்தக் கருத்து இருந்து வருகிறது. அதனுடைய பரிசீலனை முடிந்த பிறகு, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) மழையினால் பாதிக்கப்பெற்ற தென் மாவட்டங்களில் நடைபெறும் நிவாரணப் பணிகள்

* திரு. சே. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்று எழுப்பிய பிரச்சினை பற்றித்தான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு காலையிலே எனக்கு எங்கள் கட்சித் தோழர் சேது என்பவரிடமிருந்து தொலை பேசி மூலமாகத் தகவல் வந்திருக்கிறது. கூமாப்பட்டிப் பகுதியிலே இன்று வரையிலே, அதாவது இன்றைய காலை வரையிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான நிவாரண உதவியும் கிடைக்கவில்லை. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அரிசி, மண்ணெண்ணெய் இன்னும் அன்றாடத் தேவைக்கு வேண்டிய பொருள்கள் இல்லாமல் மிகவும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நிவாரண உதவி கேட்டபோது கலெக்டர் அவர்கள் அங்கே இருக்கும் கூட்டுறவு நிறுவன S.O. வாய் மூலமாக சொன்னதால், எந்தப் பொருளும் தர முடியாது என்று கூறுவதாகவும் சொல்லுகிறார்கள். எனவே அந்த ஊரில் இன்றைக்கு வரையிலும் எந்தவிதமான உதவியும் செய்யப்படவில்லை. அங்கே இந்த வெள்ளத்தால் விவசாயம் முழுவதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. பாதிக்கப்பட்ட இடங்களைப் போய் எந்த அதிகாரியும் பார்க்கவில்லை என்று சொல்கிறார்கள். நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல தகவல்களை இங்கே சொல்லி இருக்கிறார்கள். அதே போல் வத்திராயிருப்பு என்ற அந்தப் பகுதியில் சுமார் 1,500 வீடுகள் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஏறக்குறைய 2,000 மக்கள் அந்த ஊரில் வீடுகள் இன்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே மக்களுக்கு உடனடித் தேவையான அரிசி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்கள் தருவதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட இடங்களில் செய்ய வேண்டிய உதவிகளை உடனடியாகச் செய்ய வேண்டும். நேற்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று இருப்பதாகத் தகவல் இருக்கிறது. எனவே இந்த கூமாப்பட்டி என்ற அந்த ஊரிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரண உதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. பழ. நெடுமாறன் : அவைத் தலைவர் அவர்களே, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் வைகைப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஹெலிகாப்டர் மூலமாகச் சென்று பார்வையிட்டிருக்கிறார்கள். ஆனால் வைகை அணையில் நிரம்பியுள்ள அந்தத் தண்ணீரை முன் அறிவிப்பு இல்லாமல் அதிகாரிகள் திறந்துவிட்டதின் காரணமாகத்தான் இந்த வெள்ளச் சேதங்கள் மதுரை நகரிலே, இராமநாதபுரம் மாவட்டங்களின் பல பகுதிகளிலே ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது என்று அங்கே இருந்து புகார் வந்திருக்கிறது. எனவே அந்தப் புகாரைப் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து அந்த அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சில பல தேவைகள் நிறைவேற்றப்படவில்லை என்ற தகவலைக் குறிப்பிட்டார்கள் இவர்கள் மூலமாகத் தான் இந்தத் தகவல் இப்போது நமக்குத் தெரிகிறது. இருந்தாலும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிற காரணத்தால் தான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், தலைமைச் செயலாளர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், ஹெலிகாப்டர் மூலமாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்றது மட்டுமல்லாமல், ஆங்காங்கு முகாமிட்டு, அந்தப் பகுதியிலுள்ள அதிகாரிகள் மற்றவர்களையும் கலந்து, ஆங்காங்கு இருக்கிற மக்களுக்குத் தேவையான ஏற்பாடுகளையும் செய்து கொண்டு வருகிறார்கள். பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று உடனடியாக நிவாரண உதவிகள் செய்ய வேண்டும் என்ற முயற்சியில் தமிழக முதல்வர் அவர்கள் நேரடியாக ஈடுபட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், முதலாவதாக, தீவாக இருக்கின்ற பகுதிகளிலே, அறவே போக்குவரத்து துண்டிக்கப்பட்ட இடங்களில் ஹெலிகாப்டர் மூலமாக உணவுப் பொட்டலங்களை அனுப்புகின்ற முதல் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-10)

வெள்ளத்தினால் தவிப்பவர்களை அந்த இடத்திலிருந்து பாதுகாப்பாக அகற்றுவதற்கான பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய இன்றியமையாத அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிட எந்தெந்த உதவிகளைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்கின்ற அளவுக்கு ஆங்காங்கு இருக்கின்ற வருவாய்த் துறை அதிகாரிகள், வளர்ச்சித் துறை அதிகாரிகள், வளர்ச்சி மன்றங்கள், உள்ளாட்சித் துறை அதிகாரிகள் மற்றவர்களைக் கொண்டும், காவல் துறையினரின் உதவிகளைக் கொண்டும் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.





மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொல்லியதைப் போல, நேரிடையாகக் கண்டு, பல்வேறு தகவல்களின் அடிப்படையில் வேலைகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான், நாளை வரை அங்கே முகாமிட்டு பணிகளை கவனிக்க இருப்பதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தேவைப்பட்டால், இன்னொரு நாள் இருந்து அந்தப் பணிகளை நடத்துகின்ற அளவுக்கு இருக்கிறார்கள்.

(ஆ) கர்நாடகத்தில் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, கர்நாடகாவிலே இன்னும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப் பற்றி நம்முடைய நாவலர் அவர்கள் சொன்னால் அது பொருத்தமாக இருக்கும். இது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் மூலம் கூட நாம் பேசினோம். ஆனாலும் இது வரையில் நிலைமை சரியாக இல்லை. தமிழர்கள் வாழும் பகுதிகளில் இன்னும் நிலைமை சரியில்லை என்றும், கர்நாடகாவில் ரொம்ப ரொம்ப மோசமாக இருப்பதாகவும் கேள்விப்படுகிறோம். ஆகையினாலே அரசுத் தரப்பிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொல்கிறபோது, சில பிரச்னைகளை எடுத்துச் சொன்னார்கள். நான் ஏற்கனவே, இது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்தை இந்த அவையிலே ஏன் வைக்க வேண்டும் என்ற விவாதம் நடைபெற்ற போது, இந்த அரசின் மூலமாக என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றி எடுத்துச் சொன்னேன். அதில் எந்தெந்த அளவுக்கு தக்கவர்களுடன் தொடர்பு கொண்டு, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமோ, அந்த அளவுக்கு மேற்கொள்வதாக கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

அது மட்டும் அல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில், அமைதியைக் காப்பாற்றவும், கலவரங்கள் ஏற்படாமல் தடுத்து நிறுத்துவதற்குமான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும் சிலபல இடங்களில் சிலர் தங்கள் உணர்ச்சிகளை வெளியிட ஊர்வலங்கள் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தாலும் கூட கலவரங்கள் நடப்பது தடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கர்நாடகத்தில் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நிலைமைகள் பத்திரிகைகளிலே செய்தியாக வந்துக்கொண்டிருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 9

அங்கேயிருக்கிற எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், பொதுமக்களுடைய பிரதிநிதிகளும், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த மற்ற பிரதிநிதிகளும், ஆகிய அத்தனை பேர்களும் சேர்ந்து ஒரு அமைதியான, சுமூகமான பாதுகாப்பு சூழ் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, அங்கேயிருக்கின்ற அமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். கூடுமானவரையில் ஹோசூர் தாண்டிச் செல்கிற பஸ்கள், லாரிகள் மற்றவைகளுக்கெல்லாம், வழியில் சிறுசிறு கிராமங்களில் இருப்பவர்களெல்லாம் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு சேதம் ஏற்படுத்தக்கூடிய நிலை உருவாகும் என்பதற்காக, 2 நாட்களாக அவைகளையெல்லாம் நிறுத்தி வைத்திருந்தோம்.

கர்நாடக மாநிலத்தின் காவல் துறை உத்திரவாதம் அளித்ததின் பேரிலே, தக்க பாதுகாப்புகள் வழி முழுவதும் ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னதின் பேரிலே நேற்று மாலையிலிருந்து, இரவிலிருந்து லாரிகளும், பஸ்களும் கர்நாடகத்தை நோக்கி நகர ஆரம்பித்திருக்கிறன. முழு பாதுகாப்பு தருவதாக அங்கேயிருக்கிற தலைமைப் போலீஸ் அதிகாரிகளும், மற்றவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். நேற்றைய தினத்தைப் பொறுத்தவரையில் ஓரளவிற்கு அடங்கிய நிலை இருப்பதாக செய்தி தெரிகிறது. இரு பக்கங்களிலும் சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக கர்நாடக மாநிலத்திலே ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த அரசும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பொறுத்திருந்து அதற்கான தக்க நடவடிக்கைகளை நாம் எடுக்கலாம்.

மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டிருப்பது சம்பந்தமாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு சென்றிருக்கிறார்கள். அவர் அங்கே பார்வையிடுகிற நேரத்தில், அவர்களோடு உரிய அதிகாரிகளும் மற்றவர்களும் உடன் கலந்து கொண்டிருக்கிறபோது, இங்கே மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொல்லிய கருத்து அங்கே எடுத்துச் சொல்லப்படுமானால்—சொல்லப்படுவதற்கான சூழ் நிலை ஏற்படும் என்று கருதுகிறேன்—அதற்குத் தக்க நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், வேறு பல வகைகளிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுப்பார்கள் என்று கருதுகிறேன். அதுமட்டும் அல்லாமல், அங்கேயுள்ள அதிகாரிகள் அந்தக் கருத்தை எடுத்துச் சொல்ல தவறினாலும், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறனைப் போன்றவர்கள் அங்கே இருப்பார்கள், அவர்கள் அந்தக் கருத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார் என்று கருதுகிறேன். அப்போது, அதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள். அது பற்றிய விவரம் வந்தால் பின்னால் தெரிவிக்கலாம்.



## 3. ஒத்தி வைப்புத் தீர்மானம்

### கல்லூரி மாணவர்களுக்கென கோடம்பாக்கத்திலுள்ள அரசு விடுதி மாணவர்களின் உண்ணா நோன்பு போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன், ஏ. டி. கருப்பையா, செ. சிவசாமி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், டி. மணி, எம். செல்லமுத்து, கே. ஆர். சுந்தரம், ஜே. எஸ். இராசு, எல். இளையபெருமாள், திருமதி டி. யசோதா, திருவாளர்கள் என்.எஸ்.வி. சித்தன், து. புருஷோத்தமன், ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன், ரா. கிருஷ்ணன், சு. பாலன், ஆகியோர், ''சென்னை கோடம்பாக்கத்திலுள்ள கல்லூரி மாணவர்களுக்கான அரசு விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் 250 பேர் தமது பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 28—2—1984 முதல் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்து வருவதால் அம்மாணவர்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதால் அவர் தம் குடும்பத்தார் மத்தியிலும் ஏனைய கல்லூரி மாணவர்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள கடுமையான நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களை மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. து. புருடோத்தமன் : தலைவர் அவர்களே, கோடம்பாக்கத்தில் இருக்கிற சக்தி நகர் பகுதியிலே இருக்கிற மாணவர்வர்கள் விடுதியிலே முழுக்க முழுக்க தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கடந்த 28 ஆம் தேதியிலிருந்து பல்வேறு அடிப்படை கோரிக்கைகளை வைத்து— சாதாரணக் கோரிக்கைகள்,—குடிநீர், குளிக்க நீர் வசதி வேண்டும், மின்சார வசதி வேண்டும், சுற்று சூழ்நிலை படிப்பதற்கு ஏற்ற முறையிலே இருக்க வேண்டும், நாற்காலி வேண்டும் என்றெல்லாம் — பல ஆண்டுகளாகக் கேட்டு, முடியாது என்ற நிலையில் அவர்கள் 4 ஆம் தேதி உண்ணாவிரதம் இருந்தார்கள். அதனால் நோய்வாய்ப்பட்ட மாணவர்கள் நூற்றுக்கணக்கிலே மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு மயங்கிய நிலையிலே இருக்கிறார்கள். ஆனால் 4 ஆம் தேதி திடீரென்று போலீசாரை விட்டு அவர்களை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். திடீரென்று அப்புறப்படுத்திய காரணத்தினால் அவர்கள் கட்டிய துங்கியோடு இன்று வரையிலே இருக்கிறார்கள். அடுத்த மாதம் அவர்களுக்கு பரிட்சை இருக்கிறது. அவர்கள் அரிசன மாணவர்கள், அவர்களை கவனிக்காத நிலைமை இருக்கிறது. அவர்களுடைய புத்தகங்கள் எல்லாம் உள்ளே இருக்கின்றன. ஆகவே படிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்

கிறார்கள். அதற்குப் பின்னாலே சென்னையிலே இருக்கிற 11 விடுதிகளிலே உள்ள ஆதிதிராவிட மாணவர்கள் அதை ஆதரித்து உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். பல முறை அதிகாரிகளிடத்திலேயும் அமைச்சர் அவர்களைச் சந்தித்தும் சொல்லியும் இதுவரையில் பரிகாரம் காணமுடியாத நிலை இருக்கிறது. அது அன்னியில் அவர்களுக்கு ஆதரவாக 3 பிற்பட்ட மாணவர்கள் விடுதியிலே தங்கியிருக்கின்ற மாணவர்கள் அவர்களுக்கு ஆதரவாக ஏறத்தாழ இன்றைக்கு 14 விடுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் சென்னையிலே உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இவைகள் எல்லாம் சாதாரண கோரிக்கைகள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பெற்றுவந்த சலுகைகள் 1982 ஆம் ஆண்டு வரையிலே இந்த ஆட்சியிலும் அவர்கள் பெற்று வந்த சலுகைகள் நிறுத்தப்பட்டதால் அவை வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். விலைவாசிகள் 10 மடங்கு 12 மடங்கு ஏறிக்கொண்டிருக்கின்ற இந்த நிலையிலே 135 ரூபாய் மாதந்தோறும் பெற்று வந்த மாணவர்கள் இன்றையதினம் 119 ரூபாய் வீதமும் 95 ரூபாய் வீதமுமே பெறுகின்ற நிலைக்கு குறைத்துக்கொண்டே வந்துவிட்டார்கள். இந்தக் குறைவான தொகையிலே எப்படி அவர்களுக்கு இந்த வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே வாரத்திற்கு ஒரு முறை கறி, முட்டை வழங்கப்பட்டது. தொடர்ந்து அது நடைபெற்று வந்து அவசரநிலை காலத்திலே 1976 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு அவர்கள் கோரிக்கை எழுப்பி அதைப் பெற்றுவந்தார்கள். 1982 ஆம் ஆண்டிலே நிறுத்திவிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் வாய் திறவா பூச்சியாக இருந்த மக்கள், தாங்கள் யார் என்று உணரத்தக்க அளவுக்கு தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கார் போன்றவர்கள் கருத்துக்களின் அடிப்படையிலே தங்களுடைய கோரிக்கைகளுக்காக வாய்திறக்கிற பருவத்திலே இருக்கிற அந்த மாணவர்களை, இளைஞர்களை மிரட்டக்கூடாது. நேற்றைய தினம் அமைச்சர் அவர்களை அவர்கள் சந்தித்து இருக்கிறார்கள். இரவு 9 மணிக்கு பல்வேறு அதிகாரிகளை வைத்துக் கொண்டு மாணவர்கள் தலைவர்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் மிரட்டியிருக்கிறார்கள். ஒழித்துவிடுவேன், காவல் துறை மூலமாக உங்களை அழித்துவிடுவேன், படிப்பை பாழாக்கி விடுவேன், இறுதிவரையில் விடுதியில் சேர்க்கமாட்டேன் என்றெல்லாம் அந்த மாணவர்களை மிரட்டினால் எங்கே போவார்கள் அந்த மாணவர்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதிதிராவிடர் நலத் துறைக்கு ஆதிதிராவிடர் தான் அமைச்சராக இருக்கிறார். (குறுக்கீடு) அமைச்சர் சொன்னார் என்று சொல்வதைவிட பரிகாரம் காணுவதற்கு மாணவர்கள் திரும்ப ஹாஸ்டலுக்குப் போவதற்கு ஏற்றமுறையிலே கருத்துக்களைச் சொல்லுங்கள். அரசியலாக்க வேண்டாம் [illegible]



திரு. து. புருஷோத்தமன் : என்னுடைய தொகுதியிலே இருக்கிற காரணத்தினாலே அதை அரசியலாக்கக்கூடாது என்று நான் நினைத்தேன். அமைச்சர் அவர்களை நானே சந்தித்து உங்கள் மீது குறைபடவில்லை, இந்த ஆட்சி மீதும் குறைபடவில்லை. என்று சொல்லி அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டேன். நான்கைந்து தினங்களுக்கு முன்னதாக அவர்களிடம் நான் சொன்னபோது என்னுடன் வந்து பார்க்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் வரவில்லை. அந்த மாணவர்களை மிரட்டுவது நியாயமல்ல.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து அவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டது, உங்களுக்குத் தெரியும். பேரறிஞர் அண்ணா அவர்களோடு நீண்ட காலம் இருந்தவர்கள் அதனால் உங்களுக்குத் தெரியும். ஆதி திராவிட மக்களுக்கு சட்டத்திற்கு புறம்பாக அதிகமான சலுகைகள் கொடுத்தாலும் கூட நான் வரவேற்பேன் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் கீழ்வெண்மணியில் தீ விபத்தில் 22 பேர் மாண்ட நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு வார காலம் சாப்பிடாமல் இருந்தது உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட உணர்வு மிக்க அந்தத் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட கலைஞர் அவர்கள் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவோ செய்து இருக்கிறார்கள் என்பது நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். ஆகவே, நேற்றைய முன்தினம் 7 ஆம் தேதி 4 ஆயிரம் பேர் 14 விடுதியில் இருக்கும் மாணவர்கள் ஊர்வலம் வந்தார்கள். முதலமைச்சர் அவர்களைப் பார்க்கவேண்டும் என்று சொன்னார்கள். மாணவர்கள் பட்டாளம் அவர்களுடைய சக்தி என்ன என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எதிர்க்கட்சியில் இருக்கிறபோது மாணவர்களின் முழு சக்தியையும் பயன்படுத்திய நம்முடைய முதலமைச்சர், இன்று இங்கே கோட்டையில் இருந்துகொண்டே அந்த மாணவர்களை சந்திக்க மறுத்து இருக்கிறார்கள். அதற்குப் பின்னால் மாலையில் நம்முடைய அமைச்சர் அவர்களை சந்தித்து இருக்கிறார்கள். அப்போது மாணவர்களை மிரட்டி இருக்கிறார்கள் நேற்று இரவும் மிரட்டி இருக்கிறார்கள்.

*மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் பேசுகிறபோது ஏதோ மாணவர்களை நான் அழைத்து அவர்களை மிரட்டியதாக எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இரவு 9, 9.30 மணி வரை அனைத்து அதிகாரிகளையும் அழைத்து கலந்து பேசி இந்தப் பிரச்சினையை எப்படி தீர்க்கவேண்டும் என்று நான் கோட்டையில் இருந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததை தன்னுடைய வாயிலேயே

எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி அக்கறை வைத்து இருக்கக்கூடிய எங்களைப் பொறுத்தவரையில் மாணவர்களை மிரட்டவேண்டும் என்ற எண்ணம் இம்மி அளவும் எங்களுக்கு இல்லை. அந்த மாணவர்களின் படிப்பில் அக்கறை உள்ள காரணத்தினால் அவர்கள் கல்வி அறிவை பொறுத்தவரையில் அவர்களை முன்னுக்கு கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மாணவர்களாக இருக்கக்கூடிய அவர்கள் வருங்காலத்தில் நல்ல பதவிகள் பெற வாய்ப்புகள் பெற்று இருக்கக்கூடிய நிலையில் உள்ள அவர்கள் அதை முறையாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற அக்கறையின் காரணமாக அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதைத்தான் நானும் எடுத்தேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த கருத்துக்கள் அவையினுடைய குறிப்பில் இருக்குமானால் அது ஏதோ நான் மிரட்டியதாக அர்த்தத்தை கற்பிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு அமைச்சர் விஜயசாரதி அவர்கள் மீது எனக்கு கொஞ்சம் ஐயப்பாடு. அவரைப் பார்த்தால் மிரட்டுகிற மாதிரி தெரியவில்லை.

**திரு. ரா. உமாநாத்** : தலைவர் அவர்களே, சிலரைப் பார்த்தால் அப்பாவியாகத்தான் தெரியும். ஆனால் ரூமுக்குள் தனியாக வைத்து பேசும்போது என்ன என்று தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மிரட்டினார் என்று சொல்வது சரியல்ல. ஒரு காரியம் நடக்கவேண்டும். ஏழை ஆதி திராவிட மாணவர்களுக்கு காரியும் நடக்கவேண்டும். அந்தக் காரியத்தில் கவனத்தோடு இருக்கவேண்டும். சும்மா அமைச்சர் மிரட்டினார் என்று எல்லாம் சொல்வதில் என்ன புண்ணியம்.

**மாண்புமிகு திரு. [illegible]** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் மீது அதிகமான அக்கறைகொண்டு சொல்லியிருப்பார்கள். அதை மிரட்டுவது என்று எடுத்துச் சொல்வது சரியல்ல.

**திரு. ரா. உமாநாத்** : தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் அப்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாணவர்கள் பேச்சு வார்த்தையின்போது திரு. புருஷோத்தமன் அவர்களும் இல்லை.

**திரு. ரா. உமாநாத்** : தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தைக்குப் போன மாணவர்கள் அவர்களுக்கு ஏற்பட்டதை இந்த ரிப்போர்ட்டை எம். எல். ஏ. விடம் சொல்கிறார்கள். அவர்கள் இங்கே வந்து தகவல் சொல்கிறார். அதை அமைச்சர் மறுக்கிறார். முடிந்துவிட்டது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டாம்.





**திரு. து. புருஷோத்தமன்** : தலைவர் அவர்களே, நேற்று இரவு 12 மணி வரை தொகுதியில் இருந்துவிட்டு வீட்டுக்கு வந்தேன். ஏறத்தாழ 200 மாணவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக என்னிடத்தில் வந்து அவர்கள் இந்தச் செய்தியைச் சொன்னார்கள் என்ற அந்த மன வருத்தத்தோடு இங்கே சொல்கிறேன். ஆகவே இன்றையதினம். தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் இன்னல் அடைந்து இருக்கிறார்கள். நம்முடைய ஆட்சியாளர்களுக்கு நான் இன்னும் ஒன்றைச் சொல்வேன். தாழ்த்தப்பட்ட மக்களின் பெருவாரியான வாக்குகளைப் பெற்றுக்கொண்டு அந்த சமுதாயத்தை எந்த அளவுக்கு உயர்த்தவேண்டுமோ அந்த அளவுக்கு உயர்த்துகின்ற நல்ல காரியத்தில் ஈடுபடவேண்டும். நான் முழுமையான ஆதி திராவிடராக இருந்து அமைச்சராக இருந்தால் அவர்களுக்காக எடுக்கவேண்டிய எல்லா காரியத்தையும் நிச்சயமாக எடுப்பேன். ஆனால் துரதிருஷ்டவசமாக இன்றையதினம். . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏன் கொண்டுவர வேண்டுமென்பதற்கான காரணங்களைச் சொன்னால் நல்லது. இதற்குப் பிறகு பொது விவாதம் வருகிறது. அதில் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லட்டும். இதன் மூலம் இந்த அரசுக்கு ஒரு இழுக்கை ஏற்படுத்தி வீழ்த்தி விடலாம் என்று இதிலே கருத வேண்டாம். பொது விவாதத்தில் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம்.

**திரு. து. புருடோத்தமன்** : தலைவரவர்களே, மூடிக்கிடக்கின்ற கோடம்பாக்கம் அரிசன மாணவர்கள் தங்கியிருக்கும் விடுதியை எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் திறக்க வேண்டும். அவர்களுக்கு அறிவுரை கூறுங்கள்; ஆனால் நிபந்தனைகளோடு அதைத் திறக்கக் கூடாது. மாணவர்கள் பரீட்சை எழுத வேண்டும். பல்வேறு பதவிப் பொறுப்புகளிலே அவர்கள் வர வேண்டும். ஆகவே, விட்டுக் கொடுத்து முயற்சிக்க வேண்டும். அவர்கள் பழைய சலுகைகளைத்தான் கேட்கிறார்கள்; அடிப்படை வசதிகளைத்தான் கேட்கிறார்கள். எனவே, இது குறித்து விளக்கமாகவும் விவரமாகவும் பேச வேண்டியிருப்பதால், நாவலர் அவர்கள் சொன்னது மாதிரி பொது விவாதத்தில் வைக்கக்கூடிய அளவிற்கு இதில் பேச வேண்டியிருப்பதால், இந்தத் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் பிரச்சனைகளைப்பற்றி விவாதிப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. சருப்பையா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடம்பாக்கம் சக்தி நகரில் இருக்கின்ற ஆதி திராவிடர் நலத் துறையால் நடத்தப்படும் அரசுக் கல்லூரி மாணவர் இல்லங்களைச் சேர்ந்த மாணவர்கள் 28—2—1984 முதல் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு உள்ளார்கள். அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கைகள் சாதாரணமான கோரிக்கைகள் தான்.

[திரு. இரா. கருப்பையா] [1984 மார்ச் 9

குளிக்கும் அறை வேண்டும். மலம் கழிக்கும் அறை செய்து கொடுக்கப்பட வேண்டும். மூட்டைப்பூச்சி, கொசுக்களை ஒழிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்கனவே வழக்கத்தில் இருந்து வந்த ஆட்டிறைச்சி, முட்டை ஆகியவைகளை வழங்க வேண்டும். வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்த வேண்டும் விடுதியில் சுகாதார வசதியைச் செய்து தர வேண்டும். படிப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தர வேண்டும். உதவித் தொகையை உயர்த்தித் தர வேண்டும். இப்படிப்பட்ட சாதாரண கோரிக்கைகளை வைத்து அவற்றை அரசு நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள்.

ஆறு நாட்கள் உண்ணாவிரதம் தொடர்ந்து நடந்து வந்தும், அந்த மாணவர்களை 4 ஆம் தேதி வரையில் யாரும் சந்திக்கச் செல்லவில்லை. ஆனால் அன்றையதினம் பகல் ஒன்றரை மணிக்கு உண்ணாவிரதம் இருந்த மாணவர்களைப் போலீஸ் உதவிக் கமிஷனரின் துணை கொண்டு, மாவட்ட ஆதிதிராவிட நலத்துறை அதிகாரி ஈவு இரக்கம் இன்றி அந்தயிடத்திலேயிருந்து வெளியேற்றுகிறார். 27 மாணவர்கள் மயக்கமுற்றிருக்கிறார்கள். அவர்களை மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்கிறார்கள். கே. எம். சி. மருத்துவமனையிலேயும் இராயப்பேட்டை மருத்துவமனையிலேயும் கொண்டுபோய் அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இதில் மிகவும் வருந்தத்தக்க, வேதனை தரத்தக்க செய்தி என்னவென்றால், 17 மாணவர்கள் கண் இழந்தவர்கள்— குருடர்கள் என்று சொல்வார்கள். அவர்களை இரக்கமற்ற முறையில் அரக்கத்தனமாக அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் எப்படி வெளியே சென்று தங்களுடைய படிப்பைத் தொடர்ந்து நடத்த முடியும்? எவ்வாறு அவர்கள் உயிர் வாழ முடியும் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இப்படி இரக்கமற்ற முறையில் அங்கிருந்து அவர்களை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். இந்தக் கொடுமையான நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

இதைத் தொடர்ந்து, சென்னையிலே இருக்கின்ற அனைத்துக் கல்லூரி மாணவர்கள் இல்லங்களிலேயும் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்றும், காவல் துறை அதிகாரிகளும், மாவட்ட ஆதிதிராவிட நலத்துறை அதிகாரியும் இரக்கமற்ற முறையில் நடந்து கொண்ட விதத்தை கண்டிக்கும் விதத்திலும் மாணவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு நடந்து வருகிறது.

(முற்பகல் 10.30)

எல்லோரையும் வெளியேற்றி விடுகிறார்கள். கல்லூரி நடக்கிறது, நடக்க வேண்டும். அதுவும் தேர்வு எழுத வேண்டிய காலம் இப்பொழுது மிகவும் நெருங்கி வருகிறது. ஆகவே, எந்த முறையிலே, எவ்வாறு அந்த மாணவர்கள் இந்தத் தேர்வுகளை

எழுதமுடியும் என்பது அடிப்படையான ஒரு பிரச்னையாக இருக்கிறது. ஆகவே இந்த நிலையிலே, அதாவது மாணவர்கள் தங்களுடைய சாதாரணகோரிக்கைகளை வைக்கின்றபோது அவர்களை அமைதியான முறையிலே கூப்பிட்டுப் பேசி அதற்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக அவர்களை அடக்குவது என்ற முறையிலே இம்மாதிரியான கடுமையான நடவடிக்கைகளை, எடுத்திருக்கிறார்கள். இதன் விளைவாக அந்த மாணவர்களின் பெற்றோர்கள் மத்தியில் பதட்டமான நிலைமை உருவாகி இருக்கின்றது. இன்றைய தினம் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்ட, மற்றும் வெளியிலே இருக்கின்ற மாணவர்கள் எல்லாம் எவ்வாறு இருக்கிறார்கள், அவர்கள் எவ்வாறு படிக்கிறார்கள், எவ்வாறு அவர்களால் தேர்வினை எழுத முடியும் என்ற ஒரு பதட்டமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக சென்னை நகரிலே இருக்கின்ற அனைத்து மாணவர்கள் மத்தியிலும் இப்போது ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்குத் தேதி 9 ஆகிவிட்டது. எனவே கடந்த பத்து நாட்களுக்கும் மேலாக இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. இதற்கு இன்றுவரை தீர்வு காணப்படாமல் இருக்கின்றது. ஆகவே, மாணவர்கள் மத்தியில் எழுந்திருக்கின்ற பதட்டமான நிலைமைகள், அதிகாரிகள் செய்து இருக்கின்ற கொடுமையான நடவடிக்கைகள், இதைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமைகள் நீடித்தால் சென்னை நகரத்திலே மட்டுமல்ல, இம்மாநிலத்திலே இருக்கின்ற அனைத்து மாணவர்கள் மத்தியிலும் ஒரு பதட்டமான நிலைமை உருவாகி ஒரு அமைதியற்ற நிலைமை ஏற்பட்டுவிடும் என்று நான் கருதுகிறேன்.

• ஆகவே, இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டியது அவசியம். தீர்வு காண அதிகாரிகள் தவறிவிட்டார்கள். எனவே இப்பிரச்சினை ஏற்படுவதற்குரிய காரணமான நிலைமை என்ன, மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன ஆகிய அனைத்தையும் முழுமையாக விவாதித்துத் தீர்வு காண்பதுதான் சரியாக இருக்கும். எனவே, அது குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்து இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் உள்ள அரசுக் கல்லூரி விடுதிகள் முழுவதிலும் ஏற்பட்டுள்ள ஒரு பதட்ட நிலையின் வெடிப்புதான் இந்தக் கோடம்பாக்கம் மற்றும் சிலஹாஸ்டல்களிலே ஏற்பட்டிருக்கின்ற நிலைமை என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவேதான் இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. Potentiality for bursting is much more. சென்னையிலே இருக்கின்ற 16 ஆண்கள் விடுதி, 3 மாணவிகள் விடுதி ஆக மொத்தம் 19 விடுதிகள் பாதிக்கக்கூடியது சம்பந்தப்பட்ட பிரச்சினை இது. அந்த விடுதிகளிலே உள்ளவர்கள் வாழ்க்கையின் அடிப்படை வசதிகள் கூடக் கிடைக்காமல் குழியிலே இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்

[திரு. ரா. உமாநாத்] [1984 மார்ச் 9

அவர்கள் சொன்னார்கள், நாங்கள் அக்கரையோடு தான் இருக்கிறோம் என்று. அப்படிப்பட்ட ஸ்டேட்மென்ட் கொடுப்பதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் ஃபேக்ட்ஸ் என்று வருகின்றபோது இதிலே அக்கறை காட்டுகிறேன் என்று மட்டும் எப்படி சொல்ல முடியும் என்பது எனக்குப் புரியவில்லை. கழிவறை வசதிகள், குளியல் வசதிகள் செய்து தரவேண்டும் என்று கேட்பது எல்லாம் எலிமென்டரி திங்ஸ்தான். எனவே இவற்றுக்கெல்லாம் டிமான்ட் என்று கேட்கின்ற அளவுக்கு வைக்கக்கூடாது. ஆக அந்த அளவுக்கு அவர்களை வைத்திருப்பது என்றால் இது தான் அக்கறை காட்டுவதா ? ஸ்டேட்மென்டைச் சொன்னால் மட்டும் போதுமா ?

அடுத்து லோ வால்ட்ஸ் பல்ப் ரூமிலே எரிந்தால் எப்படிப் படிக்க முடியும். ஆகவே சீரியஸ்-ஆக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதைக் கட்சிப் பிரச்சினையாக நான் பார்க்கவில்லை. எனவே லோ வால்ட்ஸ் பல்பிலே எப்படிப் படிக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து டைனிங் ஹாலிலே அவர்களுக்கு இருப்பதற்கு இடம் இல்லை. ஃபர்னிச்சர்ஸ் இல்லை. ஒருக்கால் அவர்கள் மீது உள்ள அக்கறை காரணமாக ஏதோ ஃபைவ் ஸ்டார் ஓட்டல்களிலே பஃபே பார்ட்டி ஏற்பாடு செய்வார்களே, அதாவது உட்காராமலே டேபிளிலே போய் எடுத்துக் சாப்பிடுவது என்ற முறையிலே ஏற்பாடு செய்வார்களே, அதுபோன்று பஃபே அரேன்ஜ்மென்ட் ஏதாவது அவர்களுக்காகச் செய்யப்பட்டிருக்கின்றதோ என்னவோ, என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே இப்படிப்பட்ட அடிப்படை வசதிகளைக் கூட அவர்கள் கேட்பது என்ற அளவிற்கு வைத்தது சரியில்லை. இது ஒன்று. அதைப் பற்றி பலரும் சொல்லிவிட்டார்கள்.

அடுத்து உணவு மற்றவைகளுக்கு எல்லாம் சேர்த்து 95 ரூபாய். இது பட்ஜெட் நேரம். எனவே, இயற்கையாகவே அவர்கள் இந்த நேரத்திலே கேட்பது என்பது சரிதான். பட்ஜெட்டிலே ஏதாவது இன்கிரீஸ் பண்ணுவதாக இருந்தால் பண்ணலாம். உணவு, துணி அலவன்ஸ், பஸ் செலவு எல்லாம் சேர்ந்து 95 ரூபாய். இப்படிப்பட்ட நிலைமையில் எரிகிற நெருப்பிலே எண்ணெய் விடுவது மாதிரி வாரம் ஒரு முறை அவர்களுக்குக் கொடுத்துவந்த முட்டையையும், இறைச்சியையும் கொடுக்காமல் நிறுத்தினால் என்ன அர்த்தம் ? அவர்களுக்கு கோபம் வராதா ? ஆகவே இதெல்லாம் எப்படி அவர்கள் மீது அக்கரை காட்டுவதாக இருக்கும் ?

சாதாரணமாக ஒன்று சொல்வார்கள். இது தலைவர் அவர்களுக்கும் தெரியும். பசி வந்தால் பத்தும் பறக்கும் என்று சொல்வார்கள். ஆனால் இன்னும் பத்தும் பறக்கவில்லை. At least you must thank them for that. இவ்வளவு நிலைமை வந்ததற்குப் பிறகும் கூட பத்தும் பறக்க



1984 மார்ச் 9] [திரு. ரா. உமாநாத்]

வில்லை. இப்படிப்பட்ட பிரச்சினைகள் குறித்து அந்த ஹாஸ்டலினுடைய செக்கரட்டரி, சேர்மேன் ஆகிய எல்லோரிடமும் ரெப்ரசன்டேஷன் கொடுத்து, கடைசியில் வேறு வழியில்லை என்கின்றபோதுதான் எல்லோரும் கூடி உண்ணாவிரதம் இருப்பது என்று முடிவெடுத்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். கலெக்டர் போய்ப் பார்த்திருக்கிறார் ; டைரக்டர் போய்ப் பார்த்திருக்கிறார். என்ன சொன்னார்கள் ? எங்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை' என்று சொன்னதாகத்தான் ரிப்போர்ட் வந்திருக்கின்றது. அப்புறம் ஏன் அங்கே போய் பார்க்கிறார்கள் ? crisis is there நீங்கள் சொன்னீர்கள். அவர்களைச் சமாதானப் படுத்தவேண்டும். Correct, I agree with that. ஆனால் போன கலெக்டரும் போன டைரக்டரும் அவர்களைச் சமாதானப் படுத்தினார்களா ? எங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்றால் ஆத்திரம் இன்னும் ஜாஸ்திதான் ஆகும்.

This is not the way of settling things. ஆனால் அந்த முறையில் அங்கே நடந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, சமாதானப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களுக்கு ஏதாவது யோசனைகள் சொல்லி ஏதாவது 'இம்ப்ருவ்மென்ட்' செய்ய வழி செய்கிறோம் என்று சொல்வதற்குப் பதிலாக, இந்த மாதிரி போலிசை உபயோகப் படுத்திதான் இடங்களிலே முன்னாலே நடந்தன, கோடம்பாக்கத்திலே நடந்திருக்கிறது. Beaten to pulp. உண்ணாவிரதம் இருந்த 6-வது நாள், அடித்து அவர்களை வெளியே விரட்டி, அவர்களுடைய பெட்டி, படுக்கைகளைத் தூக்கி வெளியே எறிந்து இருக்கிறார்கள். நியாயமாக, சாப்பிடாமல் இருந்தவர்களை இந்த மாதிரி காட்டுமிராண்டித்தனமாகவா அடிப்பது ? Is this the way of settling ? போலிசை வைத்தா செட்டில் பண்ணுவது ? ஆகவே, இதெல்லாம்தான் நெருக்கடியை அதிகமாக்கியிருக்கிறது.

அடுத்து, கோட்டைக்கு ஊர்வலம் வந்தார்கள். அமைச்சர் சொன்னார், நான் இரவில் மணிக் கணக்காகக் காத்திருந்தேன், என்று. ஊர்வலம் வந்தபோது, போலிஸ் ஒரு தூது கோஷ்டியை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த மாணவர்கள் தூது கோஷ்டியை அமைச்சர் காலையில் பார்க்கவில்லை. அவர்கள் 'பானை டெஃபை' பண்ணவில்லை. அப்படியிருக்கும் போது போலிஸ் அழைத்து வந்தவர்களை அமைச்சர் ஏன் பார்க்கவில்லை. Why should the Hon. Minister refuse ? அது ஆத்திரத்தை இன்னும் அதிகமாக்கியிருக்கிறது. அமைச்சரை அவரது அறையில் பார்க்க வந்திருப்பவர்களை, போலிஸ் கமிஷனர் அறைக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள். பிறகு சாயந்திரம், அவர்களை வெளியே விட்டு, நீங்கள் எங்கே வேண்டுமானாலும் போங்கள், உங்களை ரிலீஸ் பண்ணியாயிற்று என்று சொன்னபோது, அவர்கள் ரெபியூஸ் பண்ணி, நாங்கள் இங்கே தான் உட்காருவோம், அமைச்சரைப் பார்க்க வந்திருக்கிறோம்,

நீங்கள் தடுத்திருக்கிறீர்கள். அவரைப் பார்க்காமல் போக மாட்டோம் என்று சொன்னபொழுது, அப்புறம் அமைச்சர் இரவு அவர்களை கூப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். இரவு பேசியவர் காலையிலேயே அவர்களோடு உட்கார்ந்து பேசியிருக்கலாம். ஆகவே, இதை தயவுசெய்து லேசான விஷயமாகக் கருத முடியாது.

5 ஆம் தேதி, கோவையிலே ஜூட் மில்ஸ் தொழிலாளர்கள் தர்ணா ஒன்றில் நான் உட்கார்ந்திருந்தேன். சென்ட்ரல் போஸ்ட் ஆபீஸ் பக்கத்திலே. அங்கு ஒரு மாணவிகள் ஊர்வலம் போனது. என்ன என்று கேட்டால் எனக்கே ஆச்சரியம். அங்கேயிருக்கிற பெண்கள் கல்லூரியிலே இதே ஹாஸ்டல் பிராபிளம். அவர்களும் ஸ்டிரைக் பண்ணினார்கள்.

So it is a spreading feature. ஆகவே, நான் சொல்வது, இது விவாதிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயம்.

நாங்கள் பட்ஜெட்டிலே இவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம், இவ்வளவு அனுதாபம் காட்டியிருக்கிறோம் என்று சொல்கிறீர்களே, சொன்ன பிறகு இந்த நிலைமை, அவர்கள் கஷ்டமாக இருக்கிற நிலைமை என்றால், நீங்கள் பேசுவதில் என்ன அர்த்தம்? ஆங்கிலத்திலே ஒன்று சொல்வார்கள்.

Talking through the hat என்று. இவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது, அனுதாபம் இவ்வளவு என்றும் சொல்லப்படும்போது, என்ன நிலைமை? ஏன் இவ்வளவு டிமாண்டுகள் வைக்கப்படுகின்றன. ஆகவே, இது முதலைக்கண்ணீர் விடுவது போல் என்று சொன்னால் என்ன தப்பு?

Talking through the hat. என்று சொன்னால் என்ன தப்பு? அதனுடைய தமிழ் வார்த்தைகள் எனக்குத் தெரியாது.

சென்னை நகரத்திலே இது மற்ற விடுதிகளுக்கெல்லாம் பரவி வருகிறது. எல்லா கல்லூரிகளுக்கும் பரவுகிறது. அவர்களுக்கு ஆதரவாக, காலேஜ்களில் ஸ்டிரைக்குகள் செய்வதற்கான ஏற்பாடுகள் நடப்பதாகத் தெரிகிறது. அது நல்லதல்ல, அதைத் தவிர்க்க வேண்டும். அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், W: will hav: to support th: stud:nts' if th y go on strik . பிறகு எங்களைக் குற்றம் சொல்லக்கூடாது. ஆகவே, உடனடியாக ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தை இன்கிரீஸ் பண்ண வேண்டும். பட்ஜெட் விவாதம் நடக்கும்போது செய்யவேண்டும். ஹாஸ்டலைத் திறந்து அவர்களை உள்ளே விடவேண்டும். நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட பதிலில் ஏதாவது சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவர்களை சமாதானப்படுத்தக்கூடிய முறையிலே ஏதாவது சொல்ல வேண்டும். ஆகவே, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கோடம்பாக்கத்திலே இருக்கக்கூடிய ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் பயில்கின்ற கல்லூரி விடுதி மூடப்பட்டிருப்பதைக் குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு தங்களுடைய எண்ணங்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். மாணவர்கள் என்ன, என்ன பிரச்சினைகளுக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்று எல்லாம் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். அரசின் சார்பில், என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, என்ன, என்ன நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோம் என்பதையும் இங்கே அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: தலைவர் அவர்களே, நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மூர்த்தியினுடைய பெயர் இல்லை. (குறுக்கீடு) நேற்று கொடுத்திருந்தால் அது இதனுடன் சேர்ந்திருக்காது ஆகவே, உறுப்பினர் உட்காரலாம்.

(முற்பகல் 10-40.)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு இது குறித்து எடுத்து விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை கோடம்பாக்கத்தில் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களுக்காக நடத்தப்படும் விடுதி மாணவர்கள் 28-2-1984 காலை முதல், 21 கோரிக்கைகளை வைத்து முன் அறிவிப்பு ஏதுமின்றி, உண்ணாவிரதம் இருப்பதாக, 28-2-1984 அன்று பிற்பகல் விடுதிக் காப்பாளர் மூலம், தகவல் கிடைத்ததும், உடனடியான மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் விடுதிக்கு விரைந்து சென்று, மாணவர்களின் குறைகளைக் கேட்டு, அலுவலர்கள் மட்டத்தில் செய்து கொடுக்கக்கூடிய அடிப்படை தேவைக்கான வசதிகளை, உடனடியாக செய்து கொடுப்பதாகவும், அரசு மட்டத்தில் முடிவு எடுக்க வேண்டிய கோரிக்கைகளுக்கு அரசு உத்திரவு வரும் வரையில், பொறுத்திருக்குமாறும், உண்ணாவிரதத்தை கைவிடுமாறும் கேட்டுக் கொண்டார். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், எழுத்து மூலம் 21 கோரிக்கைகளையும் ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் நிறைவேற்றுவதற்கான வாக்குறுதி அளிக்கும் வரையில் உண்ணாவிரதத்தைத் தொடர்வோம் என்றும் மாணவர்கள் மிகவும் பிடிவாதமாக தெரிவித்தனர். இந்த விடுதிக் கட்டடம் 'தாட்கோ' மூலம் புதியதாக கட்டப்பட்ட கட்டடமாகும். தேவையான அடிப்படை வசதிகள் ஏற்கெனவே செய்யப்பட்டிருந்தும், சில மாணவர்கள் அவற்றை வேண்டுமென்றே, இடித்தும், நொறுக்கியும், முக்கியமான மின் இணைப்புகளைத் துண்டித்தும் விட்டிருந்தனர் என்று விடுதிக் காப்பாளர் தெரிவித்தார். இதனால் படிக்கும் பெரும்பாலான மாணவர்களுக்கு சொல்லொணா அவதி ஏற்பட்டுள்ளது என்றும் காப்பாளர் கூறினார்.

[திரு. எம். விஜயசாரதி] [1984 மார்ச் 9

29-2-1984 ஆம் தேதி மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது), இணை இயக்குநர், ஆதி திராவிடர் நலத்துறை இயக்ககம் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், ஆகியோர் விடுதிக்குச் சென்று, மாணவர்களை உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கேட்டுக் கொண்டனர். தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான உத்தரவாதத்தை எழுத்து மூலம் பெறும்வரையில் உண்ணா விரதத்தை தொடர்வோம் என்று மாணவர்கள் பிடிவாதமாகத் தெரிவித்து விட்டனர். 29-2-1984 ஆம் தேதி பிற்பகல் 10 மாணவர்கள் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறப்பட்டு, 4 மாணவர்கள் 29-2-1984 ஆம் தேதி மாலையில் மருத்துவ அபிப்பிராயத்திற்கு மாறாக வெளியேறினர். 6 மாணவர்கள் 1—3—1984 ஆம் தேதி காலையில் சிகிச்சை பெற்ற பின் மருத்துவ மனையிலிருந்து வெளியேறி விடுதிக்குச் சென்றனர்.

மேலும் 1–3–1984 ஆம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் அவர்களும், மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் மற்றும் எழும்பூர்—நுங்கம்பாக்கம் வட்டாட்சியருடன் கோடம்பாக்கம் சக்தி நகரிலுள்ள கல்லூரி மாணவர்கள் விடுதிக்குச் சென்று மாணவர்களின் கோரிக்கைகளை ஒவ்வொன்றாகப் பொறுமையுடன் கேட்டு அறிந்தனர். தலைமைச் செயலகத்தில் சமூக நலத்துறை அதிகாரிகளைச் சந்தித்து இந்த அதிகாரிகளுடன் கலந்தாலோசித்ததின் விளைவாக ஒவ்வொரு கோரிக்கையின் மீதும் எடுத்துள்ள மற்றும் எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கை குறித்து விவரங்கள் பெற்று அவ்விவரத்தை மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், எழும்பூர் நுங்கம்பாக்கம் வட்டாட்சியருடன் 1-3-1984 அன்று மாலை விடுதிக்குச் சென்று மாணவர்களைச் சந்தித்து விளக்கம் தந்து நிலைமையை தெளிவுபடுத்தினர். தேவையான மேஜை, நாற்காலி 10-3-1984 ஆம் தேதிக்குள் வழங்கப்பட வேண்டுமென்றும், விடுதியைச் சுற்றி மதில் சுவர் அமைத்துத் தருவதற்கும் இதர கோரிக்கைகளுக்கும் உத்தரவாதம் எழுத்து மூலம் தர வேண்டுமென்றும், சாகும் வரையில் உண்ணாவிரதம் தொடர்வோம் என்றும், இந்தப் போராட்டத்தில் தீக்குளிப்பு செய்வோம் என்றும், மற்றும் விடுதியின் முன்புறம் சாலையில் பொது மக்களை போகவிடாமல் மறியல் செய்வோம் என்றும் கூறி, பேச்சுவார்த்தை நடத்த வந்த உயர் அதிகாரிகளையும், விடுதிக் காப்பாளரையும் தரக்குறைவாக ஏசினார்கள். விடுதியின் 250 மாணவர்களில் 40-க்கும் குறைவான மாணவர்களின் அராஜகச் செயல்களின் விளைவாக உண்ணா நோன்பு போராட்டத்தில் கலந்துகொள்ள விரும்பாத மாணவர்கள் இவர்களால் விரட்டி அடிக்கப்பட்டார்கள் என்றும், இதன் விளைவாக அம்மாணவர்கள் நகரின் பல்வேறு இடங்களில் தங்கிப் பெரும் அவதிக்குள்ளானார்கள் என்றும், இவர்களின் சொல்லொணா துயரத்திற்கு மூலகாரணம் இந்த உண்ணா நோன்பினை நடத்திய மாணவர்கள்தான் என்றும், விடுதிக்



1984 மார்ச் 9] [திரு. எம். விஜயசாரதி]

காப்பாளர் தெரிவித்தார். விடுதிக் காப்பாளரை விடுதிக்குள் நுழைய விடாமல் விடுதிக் கட்டிட வாயிலை பூட்டிக் கொண்டு விடுதிக்கு வருவோரின் போக்குவரத்தை மாணவர்கள் சிலர் தங்கள் பராமரிப்பிலேயே வைத்துக் கொண்டு தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான உத்தரவாதம் எழுத்து மூலம் தரவேண்டுமென்றும் வற்புறுத்தி இருக்கிறார்கள். வேறுவழியின்றி விடுதிக்காப்பாளர் திரு. பாலையா தன்னுடைய இயல்பான கடமைகளைக் கூட, நிறைவேற்ற முடியாத சூழலில், கோடம்பாக்கம் காவல் நிலையத்திற்குச் சென்று, விடுதியில் நிலவும் நிலை பற்றியும் தன்னுடைய கடமைகளை நிறைவேற்ற இயலாத நிலையை குறித்தும் புகார் மனு ஒன்றினை முன்னெச்சரிக்கையாக தாக்கல் செய்தார். காவல் துறையினால் எந்த மாணவனும் கைது செய்யப்படவில்லை. இம்மாணவர்கள் கொடுத்துள்ள கோரிக்கைகள் மீது எந்த அளவிற்குத் துரிதமாக நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த அளவிற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பல உயர் அதிகாரிகள் எடுத்துக் கூறியும் இதற்கு மாணவர்கள் சற்றும் செவி சாய்க்கவில்லை. எந்தவிதமான கட்டுப்பாட்டிற்கும் இணங்காத வகையில் மிகவும் முரட்டுத்தனமான, அராஜக செயல்களில் தொடர்ந்து சிலர் ஈடுபட்டுக் கொண்டிருந்த காரணத்தால், விடுதிக் காப்பாளரால் விடுதியைத் தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலை உருவானதாலும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் கட்டாயம் ஏற்பட்டதாலும், இந்த விடுதியை 4–3–1984 அன்று மூடப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

மாணவர்கள் எடுத்துக்கூறியுள்ள கோரிக்கைகளின் மீது உகந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுச்சுவர், விடுதிக் கட்டிடத்தில் சுகாதாரம், தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தருவது விடுதியின் சுற்றுப்புறத்தை சீராக்குவது, பழுதாக்கப்பட்ட மின் இணைப்பைச் சரி செய்தல் போன்ற பணிகள் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக்கழகம், மற்றும் பொதுப் பணித்துறை, சென்னை மாநகராட்சி (மெட்ரோ வாட்டர்) ஆகிய துறைகள் மூலம் துவக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் பல கோரிக்கைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக வேண்டிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அரசு மட்டத்தில் நிலுவையில் இருக்கும் கோரிக்கைகள் அனைத்தும் நிதிநிலைமையைப் பொறுத்து ஆராய்ந்து முடிவெடுக்கப்பட வேண்டியிருக்கிறது. அவைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

டி. வி. வசதி, ரேடியோ வசதி போன்ற கோரிக்கைகள் காலட்போக்கில் கவனிக்கப்படவேண்டியவைகளாகும். மொத்த மாணவர்களாகிய 250 பேரில் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து, அராஜகச் செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் மொத்தம் 40 பேருக்கும் குறைவாகவே உள்ளனர். இச்சிறுபான்மையோரால் ஏனைய மாணவர்கள் பெரும் அவதிக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது மாணவர்கள் பிடிவாதத்தின்

அடிப்படையில் கடைப்பிடித்துவரும் போக்கு விரும்பத்தக்கதாக அமையவில்லை. மாணவர்களின் படிப்பு சிறிதளவும் வீணாகக் கூடாது என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டிருப்பதால், அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும், மாணவர்களின் படிப்பு இடையூறில்லாமல் தொடர்வதற்குமான முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருகிறது. நானே மாணவர்களில் பிரதிநிதிகளை மூன்று தடவைகள் கூப்பிட்டு வைத்து, நிலைமைகளை விளக்கி விடுதியை மீண்டும் திறப்பதற்கு ஒத்துழைத்து, சுமுக சூழ்நிலையை உருவாக்குமாறு கேட்டுக் கொண்டேன். நேற்று இரவு கூட மாணவர்களின் பிரதிநிதிகளை வரவழைத்துப் பேசினேன். அரசு தக்க நடவடிக்கைகளை முறைப்படி எடுக்கும் என்பதில் நம்பிக்கை வைத்து, அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த எழுத்து மூலம் உத்தரவாதம் அளிப்பார்களேயானால், விடுதியை மீண்டும் திறப்பதற்கு ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்தேன். மற்றவர்களைக் கலந்துகொண்டு முடிவு தெரிவிப்பதாகக் கூறிச் சென்றுள்ளனர். ஒரு நல்ல முடிவுக்கு மாணவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாணவர்கள் பிரதிநிதிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடல் நடத்த நான் ஆயத்தமாகவே இருக்கிறேன். விரைவில் நல்ல முடிவு ஏற்படும் என்று கருதுகிறேன்.

இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுச் சலுகையைக் குறைத்து விட்டது என்று தவறான கருத்தைச் சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் அவர்களுக்குத் தரப்பட்டு வரும் தொகை ரூ. 95 என்று உயர்த்தப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசும் போது அத்தனை செலவுகளுக்கும் சேர்த்து ரூ. 95 கொடுக்கப்படுவதாக எடுத்துச் சொன்னார்கள். அது சரியான கருத்து அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற செலவுகளுக்கு அவர்களுக்குத் தனியாகக் கொடுக்கப்படுகிறது. இந்த 95 ரூபாய் என்பது உணவுக்காக மட்டுமே அளிக்கப்படுகிறது என்பதை நான் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னதைப் போல 'அக்கறை' என்ற வார்த்தையை வெறும் வார்த்தையாக மட்டும் நாங்கள் பயன்படுத்தவில்லை. அந்த மாணவர்கள் நல்ல முறையில் அங்கே தங்கிப் பயில வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும். அதற்காக இந்தத் துறையின் மூலமாக தேவையான நடவடிக்கைகளை எடுத்து, அந்த மாணவர்கள் நல்ல சுற்றுப்புற சூழ்நிலையில், சுகாதார முறையில் தங்கிப் படிக்க வேண்டும்



136227



என்ற அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள இருக்கிறோம். மாணவர்களுக்குத் தேர்வுகள் நெருங்குகிற காரணத்தால், அந்த மாணவர்கள் நல்ல முறையில் தங்கிப் படிக்க வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்கள் எந்தவிதமான மாறுபட்ட உணர்வுகளையோ அல்லது கருத்து வேறுபாடான உணர்வுகளையோ வைத்திருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த அளவுக்கு இந்த அரசு அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் சொல்லுகிறபோது மாணவர்கள் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினை என்று சொன்னார்கள். மாணவர்கள் பிரச்சினையின் முக்கியத்துவத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. அந்த வகையிலே இந்தத் துறையைப் பொறுத்தவரையில் கல்வியின் தரம் சிறந்து விளங்குவதற்காக இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையில் மூன்றில் இரண்டு பகுதியை இந்தத் துறை சம்பந்தப்பட்ட கல்வி வளர்ச்சிக்குச் செலவிட்டு வருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50)

இந்த மாணவர்களுடைய உணவுக்கான தொகையை உயர்த்த வேண்டுமென்ற பிரச்சினை குறித்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதுகுறித்து பல்வேறு கோரிக்கைகள் அரசுக்கு வந்திருக்கின்றன. அரசு அவற்றைத் தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இது கொள்கை அளவில் முடிவு செய்ய வேண்டிய ஒரு பிரச்சினையாக இருக்கிறது; நிதிநிலையைப் பொறுத்து முடிவெடுக்க வேண்டி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.. இதுபற்றி அரசு தகுந்த நடவடிக்கை எடுப்பதில் ஏற்கெனவே முற்பட்டிருக்கிறது, நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. எனவே, மேலும் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க இவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் அல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 4. அறிவிப்பு

### மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி—சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் கீழ்க்கண்ட சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1984).

2. 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1984).

3. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள், தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1984).

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) கோவை வட்டம், பாலமலைச் சாலையை செப்பனிடுதல்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, ''கோவை வட்டம், பெரிய நாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் உள்ள பாலமலை எனப்படும் ஆதிவாசிகள் குடியிருப்புகளுக்குள்ள பழுதுபட்ட சாலையை அபிவிருத்தி செய்யும் பணியை வனத்துறையினர் தடுத்துள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட பாலமலை கோவில் வரை உள்ள பாதையை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் செப்பனிட்டு அப்பகுதியில் உள்ள ஆதிவாசிகளுக்குப் போக்குவரத்து வசதி செய்வதை வன இலாகாவினர் தடுப்பதாகவும், அதனால் வன இலாகாவுக்கு அவசர உத்தரவு வழங்கும்படியும் திரு. மா. சின்னராசு சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து வேண்டுகோள் வந்தது.





இது குறித்து பரிசீலித்ததில் பெரியநாயக்கன்பாளையம் சரகத்தில் ஆதிவாசி குடியிருப்புகள் பல இருப்பதாகவும், நாயக்கனூர் பிரிவு, நாயக்கன்பாளையம் பாலமலைக்குக் கோவிலூரிலிருந்து அருள்மிகு ரங்கநாதன் கோவிலுக்கும் அங்கிருந்து ஆதிவாசிகள் குடியிருப்புக்கும் எளிதில் சென்றுவர கால் வழித்தடம் நன்றாக உள்ளது எனவும், அந்த நடைபாதையை பக்தர்களும் ஆதிவாசிகளும் பயன்படுத்தி வருவதாகவும் தெரிய வருகிறது. இவ் வனப்பாதைகள் மூலம் பல வனப் பொருட்கள் அடிக்கடி களவாடி எடுத்துச் செல்லப்படுவதால் அவ்வப்போது குற்றவழக்குகள் தொடரப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. தற்போது அங்கு 15 அடி முதல் 20 அடி வரை அகலம் உள்ள பாதை உள்ளது. வளைவுகளில் சுமார் 23 அடிவரை அகலம் உள்ளது. தற்போது உள்ள பாதை ஆதிவாசிகளின் தேவைகளுக்குப் போதுமானது என கருதப்படுகிறது. இப் பாதையை 26 அடி அளவிற்கு அகலப்படுத்தினால் 341 மரங்கள் வெட்டப்பட வேண்டியிருக்கும். மேலும் இதனை அகலப்படுத்த வேண்டுமானால் மைய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டம் (1980)-ன்படி, மைய அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டும். ஆதிவாசிகள் இப்பாதை விரிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தினால், நிதி நிலையைக் கவனத்தில் கொண்டு மைய அரசின் முன் அனுமதி பெற்று இச் சாலையை அகலப்படுத்த நடவடிக்கை எடுப்பதைப் பற்றி அரசு ஆலோசிக்கும்.

*திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, பாலமலை எனப்படும் இந்தப் பகுதி சுமார் 3,000 ஆதிவாசி மக்கள் குடியிருக்கிற பகுதி. இங்கே பழங்குடி நலத் துறையின் மூலம் நடத்தப்படுகிற நடுநிலை உறைவிடப் பள்ளி இருக்கிறது. 2,000 ஏக்கர் நிலத்திற்குமேல் ஆதிவாசிகள் சாகுபடி செய்கிற நிலம் இருக்கிறது. பாலமலையில் அரங்கநாதர் கோயில் ஒன்று இருக்கிறது. ஆண்டுதோறும் இந்தக் கோவிலில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. தேர்த்திருவிழாவுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்து போகிறார்கள். அந்த அளவுக்கு முக்கியமான ஒரு பகுதியாக இந்த பாலமலை பகுதி இருக்கிறது.

அங்கே போக்குவரத்திற்காக 15 அடி முதல் 20 அடி வரை அகலமான பாதை ஏற்கெனவே இருக்கிறது. அது நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்தச் சாலையைப்புதுப்பிப்பதற்காகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் என். ஆர். இ. பி. திட்டத்தின்கீழ் பணத்தை ஒதுக்கி, பணியைத் தொடங்கினார்கள். அங்கே ஏற்கெனவே இருந்தது தான் இந்தச் சாலை. புதிதாகப் போடுவதாகவோ, 26 அடி அளவுக்கு அகலப்படுத்துவதாகவோ அவசியம் ஏற்படவில்லை. ஒரு ஜீப் போய்வரும் அளவுக்கு அந்தச் சாலை அமைக்கப்பட்டால் ஆதிவாசி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

ஆதிவாசி மக்களுக்கு மத்திய அரசு இருபது அம்சத் திட்டத்தின்கீழும் நம்முடைய அரசு ஆதிவாசிகள் நலத் திட்டத்தின் கீழும் பல திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறோம். வங்கி அதிகாரிகளும், மற்ற அதிகாரிகளும் அங்கே போய் வருவதற்கு அந்தச் சாலையைப் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களும் அந்தச் சாலையை சீர் செய்வதற்கான உத்திரவைத் தந்திருக்கிறார்கள். இருந்தும்கூட, அமைச்சர் அவர்களுடைய பதிலிலேயே ஏற்கனவே நடைபாதையாக உபயோகித்து வருகிறார்கள் என்றும், ஒரு இடத்திலே.... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேட்பதற்குப் பதிலாக, அமைச்சர் சொன்ன பதில் பூராவையும் திரும்பப் படித்தால், என்னவாகும்? சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மா. சின்னராசு: தலைவர் அவர்களே, கேள்விக்கு வந்துவிட்டேன். 15 முதல் 20 அடி வரை இருக்கிற சாலையை அகலப்படுத்தாமல், மரங்களை வெட்டாமல், அந்தச் சாலையைப் போடமுடியும். வனத்துறை அதிகாரிகளிடம் ஏற்கெனவே மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்திலே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வலியுறுத்தப்பட்டு, அங்கீகாரம் அளிக்கிறேன் என்று அமைச்சரிடமும் ஒத்துக் கொண்டு, இப்போது இது தேவையில்லை என்ற பதில் அமைச்சர் அவர்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உத்தரவு கொடுத்த மாதிரி, அது அவசியமான சாலை. அந்தச் சாலையை தடுப்பதனால், அங்கே உள்ள ஆதிவாசிகள் வாழ்க்கை பாதிக்கப்பட்டு இருக்கிறது. வனச் சட்டம் ஏற்படுவதற்கு முன்னால், அவர்கள் குடியிருந்து கொண்டு வருகிறார்கள். இருக்கின்ற சாலையை எந்த நிர்பந்தமும் ஏற்படாமல், அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையின் மூலம், உத்தரவை வழங்குவார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அறிக்கையில் தெரிவித்திருக்கிறவாறு, இப்போது 15 அடி முதல் 20 அடி வரையுள்ள அகலப் பாதை அங்கே நடைமுறையில் இருந்து வருகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பாதையை செப்பனிட்டு, சாலையை அமைத்து, பயன்படுத்துவதில் எந்தவிதமான சங்கடமும், குறைபாடுகளும் இருக்க முடியாது. ஆனால் எங்களுக்குக் கொடுத்திருக்கிற தகவலின்படி, அவர்கள் அந்தப் பாதையை 23 அடி, 25 அடிகளுக்கு அகலப்படுத்த வேண்டுமென்று கேட்கிறபோதுதான் அந்தப் பாதையை அகலப்படுத்தும்போது, வனப் பகுதியை வனமற்ற பகுதியாக மாற்றியமைக்கப்படுகிறபோது, 341 மரங்கள் வெட்டப்படலாம். இப்போது உருவாக்கப்பட்டிருக்கின்ற வனப் பாதுகாப்புச் சட்டத்திற்கு உட்பட்டு, அந்தச் சூழ்நிலைக்கு வருகிற நேரத்தில், மத்திய அரசு அனுமதி பெறாமல், இதை அங்கீகரிக்க இயலாது என்று



தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஆறு மாத காலமாக அக்கறை காட்டிக் கொண்டு வருகிறார்கள். இதை நான் வனத்துறை அதிகாரிகளிடம் நேரில் தெரிவித்தேன். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட, வனத் துறை அதிகாரிகளுடனும், இத்துறைச் செயலாளருடனும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதைச் செப்பனிட்டு போக்குவரத்திற்கு வசதியாக அமைப்பதில் எந்தவிதமான இடையூறும் இருக்காது. எந்தவிதமான தடைகளையும் வனத்துறையினர் தெரிவிக்க இயலாது. ஆக அகலப்படுத்தாமல், இந்தப் பாதையை பண்படுத்திப் பயன்படுத்துவதிலே எந்தத் தடையும் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு: தலைவர் அவர்களே, அங்கு வாழ்கின்ற ஆதிவாசிகள் மிக அதிகமாக வலியுறுத்திக் கொண்டிருக்கிற காரணத்தால்தான் நானும் மாண்புமிகு அமைச்சருக்கும், அரசிற்கும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மரம் எதுவும் வெட்டப்படாமல், 3 ஆண்டுகளாகப் பராமரிக்கப்படாமல் இருப்பதனால், அங்கே முட் புதர்கள் அதிகமாக இருக்கின்றன. அவை அகற்றப்பட வேண்டும். மரம் எதுவும் வெட்டாமல், பாதை அமைக்க, அங்கீகாரம் அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்குவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலேயே இருக்கிற பாதை நடைபாதையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற பாதை என்று தெரிவித்தார்கள். இப்போது கொஞ்சம் முட்புதர், அதை அகற்ற வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகிறபோதுதான் மத்திய அரசின் புதிய சட்டம் மாநில அரசை மட்டுமல்ல, மாநில அரசு அதிகாரிகளையும் மிரட்டிக் கொண்டிருக்கிறது.

இந்த நேரத்திலே, நான் ஒரு செய்தியைச் சொன்னால், மாநிலத்திலுள்ள மக்களுக்கும் பயன்படும். மலை வாழ் மக்களுக்கும் பயன்படும். மக்களுடைய வளர்ச்சிக்குப் பயன்படுகிற திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இதுபோன்ற அவசியமான பாதைகளை அமைத்தல், மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு போன்ற காரியங்களுக்கு, வன நிலங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய அரசிற்கு எழுதப்படும் போது, அவர்கள் ஏதேதோ கேள்விக்கு மேல் கேள்விகளைக் கேட்டு, திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. இதைக் கண்டிப்பாகவும், உறுதியாகவும், மத்திய அரசிற்கு எடுத்துத் தெரிவித்து இருக்கிறோம். இந்த அடிப்படையான சாதாரண உரிமைகளை, மக்களுக்கு வசதிகளைச் செய்து தருவதற்குரிய உரிமைகளை மாநில அரசிற்கு ஒதுக்கித் தந்தாக வேண்டுமென்று கேட்கிற நேரத்தில், மத்திய அரசின் வேளாண்மைத்துறை அமைச்சர், சமீபத்தில் நடைபெற்ற வனத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் எல்லோரையும் எச்சரிக்கை விடுகின்ற

வகையில், வனப் பாதுகாப்புச் சட்டத்தை மீறி எந்த அதிகாரிகளாவது நடந்தால், அவர்கள் மீது மத்திய அரசே நடவடிக்கை எடுக்கும் என்று குறிப்பிட்டார்கள்.

உடனடியாக அங்கே நம்முடைய அரசின் சார்பிலே பேசிய நான் அப்படி ஒரு கருத்தை மத்திய அரசு தெரிவிப்பதே தவறு. காரணம் இரண்டு அதிகாரங்கள் செலுத்தப்படுகின்ற நிலையில் அதிகாரிகள் இருக்க முடியாது. மாநில அரசினுடைய அதிகாரிகள், மாநில அரசினுடைய ஆளுகைக்கு உட்பட்டவர்கள். நீங்கள் மிரட்டுகின்ற முறையிலே தெரிவிப்பதிலேயிருந்து ஒரு முறையான நிர்வாகத்தை நீங்கள் குலைக்கிறீர்கள் என்று பொருள்படும். அந்த உணர்வுகளை மத்திய அரசு விட்டுவிட வேண்டும் என்று நான் தெரிவித்து இருக்கிறேன். ஆகவே வனத்துறை அதிகாரிகள் பயப் படுவதற்குள்ள காரணமே மத்திய அரசு, ஆட்சியின் மீது அதி காரம் செலுத்துகின்ற சூழ்நிலையை மீறி அதிகாரிகள் மீது அதிகாரம் செலுத்துகின்ற ஒரு முறையை, இந்த வனப் பாது காப்புச் சட்டத்தின் மூலம் கொண்டு வரவேண்டும் என்று விரும்பு கிறார்கள். அதனாலேதான் இந்தப் பிரச்சினை எழுகிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பதிலேயிருந்து, அந்த முட்புதர் கள் அகற்றப்படவும், அந்த எல்லைக்குள்ளே, இப்போது பழக்கப் பட்ட, பழக்கத்திலே இருந்து வருகிற அந்த 20 அடிக்குள்ளே இருக்குமானால் அதிலே எந்தவிதமான சிக்கலும் வராது. எப்படி யிருந்தாலும் மாநில அரசு இந்தச் சாலையை அமைத்து பழங்குடி மக்களுக்கு பயன்படுகின்ற வகையில் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–00.)

### அரசு அங்கீகாரமின்றி நடைபெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ''தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள கீழ் பென்னாத் தூர், செங்கம், உளுந்தூர்பேட்டை போன்ற இடங்களில் உள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நன்கொடை வசூலித்து நடைபெறு வதால் அப்பள்ளிகளுக்கு அரசு அங்கீகாரம் கிடைக்குமா என்றும் அப்பள்ளிகளில் கல்வி பயின்றவர்களுக்கு அரசாங்கப் பள்ளிகளில் வேலைகிடைக்குமா என்றும் பெற்றோர்கள் மத்தியில் எழுந்துள்ள கவலை குறித்த'', அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன் முறைப்படுத்தும்) சட்டம், 1973-ன் பிரிவு 9-ன் கீழ் சிறுபான்மை யினர்கள் பள்ளிகளைத் திறக்க முன் அனுமதி பெறத் தேவை





யில்லை. இதனைப் பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாட்டின் பல பாகங்களில் வணிக நோக்குடன் இடைநிலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஏராளமான தனியார் ஆசிரியர் பயிற்சி நிறு வனங்கள் அரசின் அங்கீகாரம் இன்றி 1983–84 கல்வியாண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பள்ளிக்கல்வி இயக்குநர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இவ்வாறு முன் அனுமதி இன்றி ஆரம்பிக்கும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மூன்று மாதங்களுக்குள் அங்கீகாரம் பெறுவதற்காக விண்ணப்பிக்க வேண் டும். தமிழ்நாடு சிறுபான்மையினர் பள்ளிகள் (அங்கீகாரம் மற் றும் மான்யம் வழங்கல்) விதிகள், 1977-ல் விதி 4(3)-ன் கீழ் அரசின் முன் அனுமதியில்லாமலேயே தமிழ்நாடு அரசு தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம், 1973, பிரிவு 9-ன் கீழ் திறக்கப் படும் தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் பள்ளிக்கல்வி இணை இயக்குநருக்கு வழங்கப்பட்டு உள்ளது.

ஆனால், பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் இடையே நிலவி வரும் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒவ் வொரு மாவட்டத்திலும் ஆண்களுக்கு ஒன்று, பெண்களுக்கு ஒன்று என்று இரண்டு ஆசிரியர் பயிற்சி நிலையங்களை இருத்திக் கொண்டு, ஏனைய அரசினர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மூடிவிட்டு, ஓர் ஆண்டு விட்டு மறு ஆண்டு பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களை, அதுவும் குறிப்பிட்ட எண்ணிக்கைக்குள் (30—35) சேர்த்து, புதிதாக பயிற்சிப் பள்ளிகளைத் துவக்கக் கூடாது என்ற பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வரும் நேரத் தில் இம்மாதிரி அரசின் அங்கீகாரம் இன்றி நடைபெற்று வரும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைப் பற்றி பொது மக்க ளுக்கு எச்சரிக்கையளிக்க வேண்டும் என்று பள்ளிக்கல்வி இயக்கு நர் அரசைக் கேட்டுக்கொண்டார். இதன்படி அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்வி பட்டயப் பொதுத் தேர்வில் தேர்வு எழுத தகுதி பெற்றவர்கள் அல்ல எனவும், இந்நிறுவனங்கள் வழங்கும் சான்றிதழ்கள் அங்கீ கரிக்கப்பட்டவை அல்ல என்றும், இந்நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள் வேலை வாய்ப்பிற்குத் தகுதியற்றவர்கள் என்றும், இது போன்ற நிறுவனங்களில் மாணவ-மாணவிகளைச் சேர்க்க வேண்டாம் என பொது மக்களைக் கேட்டுக் கொண்டும், அரசு தமிழ், ஆங்கிலச் செய்தித் தாள்களில் ஒரு செய்திக் குறிப்பு அண்மையில் வெளியிட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த விவர அறிக்கையிலேகூட, அவ்வாறு நடைபெறுவது உண்மை என்று அரசே ஒப்புக் கொண்டிருக்கிறது. நான் சொல்ல வருவது, இந்த இடங்களிலே மட்டும் அல்லாமல்—இப்போது கூட பல உறுப்பினர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள்—திருப்பத் தூர், வாணியம்பாடி, பெரம்பலூர், குடியாத்தம் போன்று இப் படித் தமிழ்நாட்டிலே பல்வேறு இடங்களில் எந்த ஆண்டும் இல் லாத வகையிலே இந்த ஆண்டு நர்சரி பள்ளிகளைப்போன்று,

டுட்டோரியல் காலேஜ் என்று சொல்வார்களே, அதைப்போன்று,—சிறுபான்மையோர்களுக்குத் தரப்படுகின்ற அந்தச் சமுதாயத்தினர் பயன்படுத்தினாலும் பரவாயில்லை—இந்த விதியின் கீழ் எல்லோருமே தவறுதலாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் கொடுத்திருக்கின்ற இந்த அறிக்கையிலேகூட, "வணிக நோக்குடன்" என்று சொல்லியிருக்கிறீர்கள். வணிக நோக்குடன் மட்டுமல்ல, ஒரு மோசடித் திட்டமாகவே இவைகளைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதைத் தடுத்து, பாதிக்கப்படுகின்ற இந்தச் சமுதாயத்து மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சிறுபான்மையோர் அரசின் அனுமதியில்லாமல் பள்ளிகள் திறக்கலாம் என்றிருக்கிறது. அந்தச்சலுகையை பல பேர்கள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே அரசு அனுமதி தர மறுக்கிறது என்பது மட்டுமல்ல, அப்படிப்பட்ட பள்ளிகளில் சேர்ந்து பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. அரசு அதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. அதுமட்டுமல்லாமல், அரசுத் தேர்வுகளுக்கு அவர்களை அனுமதிக்கப்போவதும் இல்லை. இதைப்பற்றி எல்லாம் விளக்கமாகப் பத்திரிகையிலே விளம்பரங்கள் செய்திருக்கிறோம். அதைப் பார்த்த பிறகு, சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது மாணவர்கள், இத்தகைய பள்ளிகளில் நடைபெறுகின்ற அந்தப் பயிற்சிகளுக்குப் பலியாகாமல் இருக்க வேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, விளம்பரம் வந்ததாக அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த விளம்பரம் எப்போது தரப்பட்டது என்பதையும் அறிவித்தால் நலமாக இருக்கும். இன்னொன்று, ஏற்கெனவே நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற மக்கள் அல்லாமல் அண்டை மாநிலத்தில் இருக்கின்ற, கர்நாடக மாநிலத்திலே இருக்கின்ற பல பேர்கள் இப்படி ஏராளமான பணத்தைச் செலவழித்து படித்துவிட்டு அவர்கள் வேலை கிடைக்காமல் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படி இருக்கின்றபோது, இன்றைய தினம் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ஏழை எளியவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு இது ஏதோ வரப்பிரசாதம்போல் கருதிக்கொண்டு பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை அவர்களிடத்திலே கொண்டு போய் கொடுக்கிறார்கள். அதேபோல் இந்தப் பள்ளிகளிலே ஆசிரியர்கள் வேலைக்கு வருவதற்காக அவர்கள் இடத்திலே பணம்பெற்றுக்கொள்கிறார்கள். எனவே, இந்தச் சிறுபான்மைச்-சமுதாயத்தினருக்குக் கொடுக்கப்பட்ட இந்தச் சலுகையை பல பேர்கள், சமூக விரோத சக்திகள் பயன்படுத்துகிறார்கள் என்பது நாடறிந்த உண்மை. இதை நாம்



இப்படியே விட்டுவிடுவோமானால் அது ஒரு பெரிய தீங்கையே எதிர்காலத்தில் ஏற்படுத்தும். அதைப் போக்குகின்ற வகையில்—விளம்பரப்படுத்தினால் மட்டும் போதாது—அதைக் கட்டாயமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லை என்றால், படித்துவிட்ட பின்னர் எல்லோரும் ஒன்று சேர்ந்து எங்களுக்கு வேலை தாருங்கள் என்று போராட்டங்கள் நடத்தக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படுவதற்கு வழி ஏற்பட்டுவிடும்.

இன்னொன்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் உறுதி அளிப்பது, அரசாங்கத்தினுடைய அனுமதியை நாங்கள் வாங்கி விடுவோம். அந்தப் பள்ளி நிரந்தரமாக நடைபெறும் என்பதுதான். அந்த உறுதியை வைத்துத்தான் பணம் வாங்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். எனவே, இதற்காக, அமைச்சர் அவர்கள் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது அதற்காக சி.ஐ.டிக்களை கொண்டு விசாரிக்க ஏற்பாடு செய்தோ, அந்தச் சமூக விரோத சக்திகள் மீது தக்க நடவடிக்கைகளை எடுத்து, அந்த ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, சிறுபான்மை இனத்திற்கு உள்ள உரிமை, அரசியல் சட்டப்படி தரப்பட்டிருக்கிற உரிமையாகும். அதைப் பயன்படுத்திக்கொண்டுதான் அவர்கள் செய்கிறார்கள். அதை மறுக்கின்ற உரிமை மாநில அரசுக்குக் கிடையாது. மாநில கல்வித் துறைக்கும் கிடையாது. அதை மறுக்கவும் முடியாது. ஆனால், நாம் நம்முடைய கட்டுத்திட்டங்களை, இப்போதிருக்கிற நிலைமைகளை வைத்து, நம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இது ஒரு சிறிய பிரச்னை என்பது அல்ல; இது இந்தியா முழுவதும் இருக்கின்ற ஒரு மிகப் பெரிய பிரச்னையாகும். மெஜாரிட்டி மக்களை விட அதிகமான உரிமையைச் சிறுபான்மை மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையை இதுபோன்ற சந்தர்ப்பத்தில் நாம் பார்க்கிறோம். அந்த உரிமையை அவர்கள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போலவே அரசும் கருதுகிறது. நம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டு என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ, அதை எடுத்துக் கொண்டிருக்கிறோம். கர்நாடக மாநில மாணவர்களைப் பற்றி தனியாக ஆராய்ந்து முடிவு எடுக்கலாம்.

6. வரவு-செலவுத் திட்டம் 1984-85 பொது விவாதம்—(தொடர்ச்சி).

*திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1984-85க்கான வரவு-செலவுத் திட்டத்தில் பேசுகிறபோது, நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக்கிறது என்று குறை சொல்லி பேசினார்கள். அனைவரும் அறிந்த உண்மை, தமிழகத்தில் கடந்த

[திரு. கோ. விஸ்வநாதன்] [1984 மார்ச் 9

2 ஆண்டுக் காலமாக வறட்சிநிலை இருந்தது என்பது. அதுவும் வறட்சி எந்த அளவுக்கு இருந்தது என்பதை அனைவரும் அறிவோம்.

வறட்சி முடிந்து இப்போது வெள்ளத்தினுடைய சேதங்கள் ஆரம்பித்து அந்த வெள்ளத்திற்காக, அவசர தடுப்புப் பணிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. வறட்சிக்காக நாம் 114 கோடி செலவழித்தோம். மைய அரசு இதுவரையில் 77 கோடிக்குதான் அனுமதி அளித்துள்ளது. வெள்ள நிவாரணத்திற்காக நாம் இன்னும் எவ்வளவு கேட்பது என்றே தெரியவில்லை. ஏற்கெனவே இருந்த வெள்ளம் போக, தற்போது ஒரு வார காலமாக தொடர்ந்து மழை பெய்து, அதிகமான வெள்ளப்பெருக்கத்தால் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக 128 கோடி ரூபாயை கேட்டிருக்கிறோம் மத்திய அரசிடமிருந்து. ஆனால், இதுவரையில் மத்திய அரசு 15 கோடியைத்தான் வழங்கினார்கள். பிறகு 37 கோடிக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். இன்னும் நூற்றுக்கணக்கான கோடி செலவு ஆகுமோ என்று அச்சப்படும் விதத்திலேதான் மாநிலம் இருந்துகொண்டிருக்கிறது. அதன் விளைவுதான் பற்றாக்குறை பட்ஜெட்.

இதுவரையில் நாம் எப்பொழுதுமே ஓவர் டிராப்ட் வாங்கியது கிடையாது. ஆனால் இந்த ஆண்டு, நம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் மிகைப் பற்றை வாங்குகிற அளவுக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதையும், நிச்சயமாக நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். அத்தோடு மத்திய அரசு இப்போதிருக்கிற மிகைப் பற்றையே இந்த மார்ச் மாதத்திற்குள்ளாக சரி செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. நம்முடைய நிதியமைச்சர் அவர்களும் அதை ரூ. 113 கோடியிலிருந்து ரூ. 60 கோடியாகக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்? ஏன் மிகைப் பற்று வருகிறது? பற்றாக்குறை பட்ஜெட் போட வேண்டியிருக்கிறது என்பது முதல் காரணம். இரண்டாவது நமக்கு தேவையான அதிகாரங்கள் இல்லை என்பது.

அதிகாரங்கள் என்று சொல்கிறபோது, அரசியல் அதிகாரத்தைக் கூட குறிப்பிடவில்லை. நிதி ஆதாரங்களைப் போதுமான அளவிற்குத் திரட்டக் கூடிய அளவிற்குக்கூட நம்முடைய மாநிலத்திற்கு அதிகாரம் இல்லை என்பதைத்தான் அன்றுமுதல் இன்று வரையில் சொல்லிக் கொண்டே வருகிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் அதைப்பற்றிச் சொல்லியதைக் கூட நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அரசியல் சட்டத்தில் மைய அரசுக்குத் தேவைக்கு மேலாக, அளவுக்கு மீறி அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மிச்சம் இருக்கும் மிகக் குறைந்த அளவு அதிகாரங்கள் தான் மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குறைந்த



1984 மார்ச் 9] [திரு. கோ. விஸ்வநாதன்]

அதிகாரத்தையும் குறைப்பதற்கு நாள்தோறும் முயற்சி செய்து கொண்டேயிருக்கிறார்கள். என்னென்ன அதிகாரங்கள் நமக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவோ, அவைகளை ஒவ்வொன்றாக எடுப்பதிலே மைய அரசு அக்கறை கொண்டிருக்கிறது. அன்றைக்கு அரசியல் நிர்ணயச் சபையிலே அரசியல் சட்டத்தை உருவாக்கிய போது, மைய மாநில உறவுகளைப் பற்றி ஆராய்வதற்கு அங்கே ஒரு ஸ்டடி டீம் உருவாக்கியிருந்தார்கள். ஒன்றை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-10)

The outstanding feature of the financial relationship between the Centre and the States consequently is that the former is always the giver and the latter the receivers என்று அன்றைக்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனுடைய உண்மையை நாம் இன்றைக்குப் புரிந்துகொண்டிருக்கிறோம். அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருந்த தமிழகத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய திரு. சந்தானம் அவர்கள் மிக வேகமாகவே அன்றைக்குச் சொன்னார்கள். மாநிலங்கள் பிற்காலத்திலே எப்படியிருக்கும் என்பதைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது The Provinces will be beggars at th doors of the Centre என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அதுதான் உண்மை நிலை என்பது விளங்கிக்கொண்டிருக்கிறது. நாள்தோறும் பிச்சை பாத்திரத்தை எடுத்துக் கொண்டு டெல்லிக்குப் போகக்கூடிய நிலையிலேதான் மாநிலங்கள் இருக்கின்றன. இல்லையென்றால் எந்த மாநிலமும் வாழமுடியாது என்ற நிலைதான் இருக்கிறது. மாநிலங்கள் இன்றைய தினம் நிதிக் குழுவைதான் நம்பியிருக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. மாநிலங்கள் நிதிக் குழுவிடமிருந்து பணத்தைப் பெற்றுத்தான் வாழவேண்டுமென்ற சூழ்நிலைதான் இருக்கிறது. ஆனால் நிரந்தரமான நிதிக் குழு தேவை என்று நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். இப்போது போடப்பட்டிருக்கிற சர்க்காரியா கமிஷனாவது அதைக் கவனிக்கும் என்று எதிர்பார்க்கிறேன். இந்த நிதிக் குழுவைப்பற்றி நீண்ட நாள்களுக்கு முன்னதாகவே அரசியல் சட்ட நிபுணர் சர் ஐவர் ஜென்னிங்க்ஸ் அவர்கள் குறிப்பிடுகிறபோது "Commissions propose but Politicians dispose and politicians depend on votes" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்குத்தான் நிதிக் குழுக்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்றன. மாநிலங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? மாநிலங்களுக்கு உள்ளவை 19 வரிகள்தான். அந்த வரிகளையெல்லாம் பார்த்தால் உருப்படியான வரிகளாக இருக்கிறதா என்றால் இல்லை. அந்த வரி நிலவரி, விவசாய வருமான வரி, மரண வரி, தலைவரி, கேபிடேஷன் டாக்ஸ், ஆளை எண்ணி தலைமீது வரிப்போடலாம், இப்படிப்பட்ட வரிகள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றே ஒன்று சேல்ஸ் டாக்ஸ், இன்னொன்று எக்சைஸ் வரி இந்த

இரண்டைத் தவிர 17 வரிகளில் ஒன்றையுமே உருப்படியான வரி என்று நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த மாநிலத்திற்கு உள்ள வரிகள் பற்றி ஏ. ஆர். முதலியார் சொல்கிறபோது அவை யெல்லாம் மலடுதட்டிப் போனவை போலியானவை என்று சொல்லியிருக்கிறார். நமக்கு இருப்பவை எல்லாம் இன்எலாஸ்டிக் டாக்ஸ், ஆனால் மைய அரசின் வரிகள் யாவும் எலாஸ்டிக் டாக்சஸ் நிறைய வருமானம் தரக்கூடியவை, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் எக்சைஸ் டியூட்டி, கஸ்டம்ஸ் டியூட்டி கார்ப்பரேஷன் டாக்ஸ் இப்படிப்பட்ட வரிகளை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே அவர்கள் 1 சதவீதம் உயர்த்தினால் கூட ஆயிரம் கோடி ரூபாய் கிடைக்கும், அந்த அளவுக்கு எலாஸ்டிக் டாக்சஸாக இருக்கிறது. இப்படிப்பட்ட வரிகளை மத்திய அரசு வைத்துக்கொண்டு நமக்கு உருப்படியில்லாத வரிகளைக் கொடுத்து இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் டிவிசிபிள் பூலிலிருந்து மாநிலங்களுக்குப் பங்கு தரவேண்டும். எந்த எந்த வரிகளிலிருந்து நமக்குத் தரவேண்டுமென்று சட்டத்திலே இருக்கிறது. ஆனால் மாநிலங்களுக்குப் பங்கைத் தராத முறையிலே மத்திய அரசு வரிமுறையை மாற்றிக்கொண்டேயிருக்கிறது. 1983-84 ஆம் ஆண்டிலே 3 ஆயிரம் கோடிக்கு மத்திய அரசு வரி போட்டார்கள். நல்ல காலமாக, தேர்தல் ஆண்டாக இருப்பதால் இந்த ஆண்டு அதிகமாக அப்படி வரிபோடவில்லை. அந்த 3 ஆயிரம் கோடி ரூபாய் வருமானத்தில் மாநிலங்களுக்குக் கொடுத்த பங்கு எவ்வளவு என்றால் 101 கோடி ரூபாய்தான். இந்த ஆண்டு 1984-85 ஆம் ஆண்டிலே மாநிலங்களுக்குப் பங்கு தராத முறையிலே கஸ்டம்ஸ் டியூட்டி என்ற வகையிலே 458 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு சல்லிக்காசு கூட மாநிலங்களுக்கு பங்கு வராது. இந்த நிலையில் தான் மத்திய அரசின் வரிக்கொள்கை இருந்து வருகிறது. இப்படி மாநிலங்கள் ஏமாற்றப்படுகின்றன. எஃகு, அலுமினியம், எண்ணெய் போன்ற பொருள்கள் மீது எக்சைஸ் வரி போடாமல் அந்தப் பொருள்களின் விலைகளைக் கூட்டியிருக்கிறார்கள். அப்படிச் செய்வதால் அவர்களுக்குப் பணம் வருகிறது, ஆனால் மாநிலங்களுக்குப் பங்கு கிடைக்காது. இப்படி மத்திய அரசு செய்து கொண்டிருக்கிறது. சாதாரண ஆள் இதையே செய்தால் மோசடி கேஸ் போடலாம், அந்த அளவுக்கு இன்றைக்கு மத்திய அரசு செய்துகொண்டு மாநிலங்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறது.

இன்னும் ஒன்றைச் செய்து இருக்கிறார்கள். ஸ்பெசல் லெவி சர்சார்ஜ் என்ற பெயரால் வரியைப் போட்டு—அதில் மாநிலங்களுக்குப் பங்கு கிடையாது—அதையும் அவர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். டிவிசபல் பூலுக்கு வராமலேயே அந்த வரியைத் தடுத்து மொத்தமாக அவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். வரி போடுகின்ற கொள்கைகளைத் தவிர மத்திய அரசு வரி சலுகைகளை அறிவித்து இருக்கிறது. என்ன வரி சலுகை அறிவித்து இருக்கிறார்கள் தெரியுமா? அவர்கள் பங்கிலிருந்து சலுகை





தருகிறார்களா என்றால் இல்லை. இன்கம் டாக்ஸ்க்கு வரிச் சலுகை, எக்சைஸ் டியூட்டிக்குவரி சலுகை, இவைகள் யாரைப் பாதித்து இருக்கின்றன. ஏறத்தாழ 345 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை இருக்கிறது. அதுவும் மாநிலங்களை பாதித்து இருக்கிறது. நமக்கு எது எது வரவேண்டுமோ அதை அவர்கள் வரிச் சலுகையாக அறிவித்து இருக்கிறார்கள். "கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போல" இப்போது மத்திய அரசு செய்து கொண்டு இருக்கிறது. இன்று மாநிலங்களுடைய நிலைமை அவர்கள் என்ன கொடுக்கிறார்களோ அதை வாங்கிக்கொண்டு செலவிடவேண்டும்.

இன்னும் ஒன்றை மத்திய அரசு செய்து இருக்கிறது. இந்த ஆண்டு மாநில நிதி அமைச்சர்களைக் கூட்டி திட்டச் செலவைக் குறைக்க வேண்டும். நாம் எல்லாம் சிக்கனமாக இருக்க வேண்டும் என்று நமக்கு எல்லாம் உபதேசம் செய்து இருக்கிறார்கள். ஏறத்தாழ வேறு வழி இல்லாத காரணத்தால் எல்லா மாநிலங்களும் அதை ஒப்புக்கொண்டார்கள். திட்டத்திற்கு வெளியே உள்ள நான்-பிளானிங் எக்ஸ்பெண்டிச்சரைக் குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கான நிதி ஆதாரத்தை நீங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் மாநில அரசுகளுக்கு உபதேசம் செய்து இருக்கிறது மத்திய அரசு. அதையும் மாநிலங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. என்ன நடந்து இருக்கிறது? "Centre has not only increased its non-plan expenditure by 14% but has also stepped up central sector outlay by 25% maintaining almost the rate of increase budgeted last year." என்ற செய்தி வந்து இருக்கிறது. ஆக ஊருக்கு உபதேசம் உனக்கு இல்லையடி மகளே என்பதைப் போல நமக்குச் சொல்லி இருக்கிறார்கள். எல்லாவற்றையும் குறைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு எதையும் குறைக்காமல் சென்ற ஆண்டு என்ன செலவு செய்தார்களோ அதே அளவு செலவை இந்த ஆண்டும் செய்து கொண்டு இருக்கிறார்கள். சென்ற ஆண்டு அளவுக்கு இந்த ஆண்டு நமக்கு மத்திய அரசு ஒதுக்கீடு இருந்து இருக்கும். ஆனால் மாநிலங்களுக்கு மொத்தமாகச் சேர்த்து 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு பிளானிங்கில் வந்து இருக்க வேண்டும். ஆனால் குறைத்ததன் விளைவாக 900 ஆயிரம் கோடிதான் வந்து இருக்கிறது. 2 ஆயிரம் கோடி வர வேண்டிய நேரத்தில் 900 ஆயிரம் கோடிதான் கொடுத்தார்கள். இப்படி மத்திய அரசு எல்லா மாநில அரசுகளையும் மொட்டை அடித்து இருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு மாநிலங்களின் பங்கு குறைந்து கொண்டே வருகிறது. இது மிகவும் கவலைத் தரத் தக்கது. ஆண்டுக்கு ஆண்டு பங்கு அளிக்கிறார்கள் அது எப்படி குறைந்து இருக்கிறது என்பதை நான் நிச்சயமாக சொல்ல விரும்புகிறேன். 1979-80ல் மொத்த வரிகளில் மாநிலங்களுக்கு மத்திய அரசு கொடுத்த பங்கு 28.4 சதவீதம். இன்றைக்கு 4 ஆண்டுகள் கழிந்து 1983-84ல் இந்த மொத்த வரிகளில் மாநிலங்களுக்கு அவர்கள் கொடுத்த பங்கு 25.1 சத

[திரு. கோ. விஸ்வநாதன்] [1984 மார்ச் 9

விதமாகக் குறைந்துள்ளது. ஆக நமக்கு வருமானம் குறைந்து கொண்டே போகிறது. அது மட்டும் அல்ல, இதைக் கணக்குப் போட்டுப் பார்த்தால் சென்ற ஆண்டில் மாநிலங்களுக்கு வந்த பங்கு 5,189 கோடி ரூபாய். இதுவே 1979-80ல் கணக்குப் போட்டுப் பார்த்தால் 5,873 கோடியாக இருந்து இருக்கும். ஏறத்தாழ 700 கோடி ரூபாய் இந்த 4 ஆண்டுக் காலத்தில் மாநிலங்கள் வருமானத்தை இழந்து இருக்கின்றன. இவ்வளவு அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் இருக்கிறது. அவர்கள் கனரக தொழில் வேண்டும் என்றும் கோர் செக்டர் வேண்டும் என்றும் சொல்கிறார்கள், எடுத்துக்கொள்ளட்டும், நமக்கு ஆட்சேபனை இல்லை. அவர்கள் லிப்ஸ்டிக்குக்கும், டால்கம் பவுடருக்கும் அதிகாரம் வேண்டும் என்று கேட்கிறார்கள், எடுத்து வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

விவசாயம் நம்மிடத்தில் இருக்கிறது. விவசாய கருவிகள் மத்திய அரசுக்குச் சொந்தமானது. இப்படிப்பட்ட நிலைமை நாட்டுக்கு நல்லது அல்ல. இப்படி நடப்பது இந்திய ஒற்றுமைக்கு நல்லது அல்ல என்று நான் திட்டவட்டமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அண்மையில் சென்னையில் வந்து பேசிய மதிப்பிற்குரிய பால்கிவாலா அவர்கள் குறிப்பிட்டதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்வது சாலச் சிறந்தது என்று கருதுகிறேன்.

"No power has been given to the Centre to take away th powrs which are on the State list. I am afraid that the integrity of the country may be destroy d because of the Centre's overdomination. The unity of the country may b lost because of th misguided zeal of some persons who think they a e giving a strong Gov rnment but in fact an authoritarian Government."
என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மத்திய அரசும் மாநில அரசுகளும் எப்படி நடைபெறுகின்றன என்பதற்காக இதை நான் சொல்கிறேன். நீண்ட காலத்திற்கு முன்னால், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு உதாரணத்தைச் சொன்னார்கள். அவர் சொன்னார், "கார்த்திகேயனும் கலெக்டர், கந்தசாமியும் கலெக்டர்; கார்த்திகேயன் ஜில்லா கலெக்டர், கந்தசாமியோ பில் கலெக்டர்" என்ற முறையில் சொன்னார்கள். நாம் எவ்வளவு காலத்திற்கு கந்தசாமியாகவே இருக்க போகிறோம் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந்த ஆண்டு ரயில்வே வரவு செலவுத் திட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள்? அதில் தமிழ்நாட்டுக்கு என்ன செய்து இருக்கிறார்கள்? என்ன செய்யவில்லை என்பதையும் நாம் பார்த்து ஆக வேண்டும். எப்படி தமிழ்நாடு பாதிக்கப்பட்டு



1984 மார்ச் 9] [திரு. கோ. விஸ்வநாதன்]

இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணததைக் காட்ட விரும்புகிறேன். சென்னையில் பாதாள ரயில்வே திட்டம் Mass Rapid Transit System இதற்கு 57 கோடி ரூபாய் மொத்தமாகத் தேவைப்படும். சென்ற ஆண்டு இந்தத் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அப்போதே அதற்கு நாம் குரல் எழுப்பினோம், 57 கோடி ரூபாய் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் போதுமா என்று. இந்த ஆண்டு மாண்புமிகு மத்திய இரயில்வே துறை அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்திற்கு என்ன செய்து இருக்கிறார்கள் தெரியுமா? அந்த ஒரு கோடியை 75 இலட்சத்திற்குக் குறைத்து விட்டார்கள். 57கோடி ரூபாய் திட்டத்திற்கு வெறும் 75 இலட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-20)

இதைவிடப் பெரிய அநீதியைத் தமிழகத்திற்கு யாரால் இழைக்க முடியும்? கல்கத்தா பாதாள இரயில் பாதைக்கு 75 கோடி ரூபாய் அனுமதி அளித்துள்ளனர். சர்குலர் ரயிலுக்கு இந்த ஆண்டில் 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஒரே ஆண்டில் 80 கோடி. ஆனால் சென்னையைப் பொறுத்தவரைக்கும் ஒன்றுமில்லை. கல்கத்தாவிற்குக் கொடுக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. இரயில்வே பட்ஜெட்டில், வங்காளி கனிகான் சௌத்திரிதான் தெரிகிறாரே தவிர, இந்தியன் கனிகான் சௌத்திரியை நான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

கரூர்-திண்டுக்கல், மதுரை-திருநெல்வேலி, தூத்துக்குடி பிராட்கேஜ் இரயில்பாதை நீண்டகாலமாகக் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அதற்கும் கொஞ்சமாகத் தான் கொடுத்திருக்கிறார்கள். அது எந்த நேரத்தில முடிக்கப்படும் என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை.

ஜோலார்பேட்டை-பெங்களூர் இரயில் பாதையை மின்சாரமயம் ஆக்குவதற்கு மொத்தமாக 24 கோடி ரூபாய் தேவை. ஆனால் இந்த ஆண்டில் ஒரேயொரு இலட்சம் ரூபாய்தான் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோடி அல்ல, ஒரேயொரு இலட்சம்தான் 24 கோடி ரூபாய் தேவைப்படும் அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை அநீதி என்று சொல்வது தவறு, துரோகம் என்றுதான் இதைச் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட இரயில்வே பட்ஜெட்டை இந்த ஆண்டு இரயில்வே அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

இந்தியப் பேரரசின் பொருளாதார நிலையை அடிப்படையாகக் கொண்டுதான் மாநில அரசுகளின் பொருளாதார நிலையும் அமைய முடியும். இந்தியா மிகப் பெரிய செல்வாக்கு பெற்ற பொருளாதார நிலையில் விளங்கினால் நாமும் அப்படி இருக்கலாம். ஆனால், அங்கே இருக்கின்ற நிலைமையை ஒட்டித்தான் இங்கேயும் நாம் இருக்கிறோம். சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்று சொல்வார்கள்.

[திரு. கோ. விஸ்வநாதன்] [1984 மார்ச் 9

மொத்தமாகப் பார்த்தால், இந்தியாவைப் பொறுத்தவரையில் தொழில் துறையில் உலகத்தில் பத்தாவது இடத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஜி. என். பி.-யில். உலகத்தில் 15-வது இடத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் தனி நபர் வருமானத்தைப் பொறுத்தவரையில் 106-வது இடத்தில் இருக்கிறோம்.

இதன் விளைவுதான் இன்றைக்கு நாடு முழுவதும் வறுமை இருக்கிறது. வறுமைக் கோட்டிற்கு கீழே இந்தியாவில் எவ்வளவு பேர் வாழ்கிறார்கள் என்பது எல்லோராலும் விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று.

அண்மையில் மைய அரசின் திட்ட அமைச்சர் பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார், நாங்கள் வறுமையை விரட்டியிருக்கிறோம், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைத்திருக்கிறோம் என்று பேசிய அவர் என்ன சொலகிறார் என்றால் 1980–81-ல், 1981–82-ல் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் சதவீதம் 51.1-லிருந்து 41.5 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். இதுவே விவாதிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். இது உண்மையா இல்லையா என்பது பற்றி பத்திரிகைளிலே விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. பொருளாதார நிபுணர்கள் அதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இது உண்மை என்றே வைத்துக் கொண்டாலும்கூட, அமைச்சரின் கூற்றுப்படியே 100-க்கு 41 பேர் ஒருவேளை சாப்பாடு கூட கிடைக்காமல் நாட்டிலே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவுதான் தமிழ்நாட்டிலும் 100-க்கு 50 பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

அதனால்தான் ஏழைக் குழந்தைகளையாவது நல்ல முறையில் வளர்க்க வேண்டுமென்பதற்காகச் சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. அதுமட்டுமல்லாமல், 10 வயது முதல் 15 வயது வரை உள்ள, பள்ளியிறுதி வகுப்பு வரையில் படிக்கின்ற பிள்ளைகளுக்கும் இதை நீட்டிக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சரவர்கள் எண்ணி இந்த ஆண்டில் அதையும் அறிவித்திருக்கிறார்கள்; அதற்காக 20 கோடி ரூபாயையும் அறிவித்திருக்கிறார்கள், நிச்சயமாக இந்தத் திட்டம் பாராட்டப்பட வேண்டிய திட்டம்தான். இதைப் பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் யாரும் பாராட்டுவதாகத் தெரியவில்லை. ஒருக்கால் அப்படிப் பாராட்டினால், தேர்தலில் எதிர்க்க முடியாது என்பதன் காரணமாகப் பாராட்டிச் சொல்லாமல் விட்டுவிட்டிருந்தாலும், மனத்திலேயாவது பாராட்ட வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.



1984 மார்ச் 9] [திரு. கோ. விஸ்வநாதன்]

இதைப்பற்றிக் குறிப்பிட்டு, "News To-day" என்ற பத்திரிகை எழுதியிருக்கிறது. We can truthfully say that the effect that is being made in the State to provide Education on a full stomach has no parallel anywhere, anytime, in the World, என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சாதனையை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம்.

சத்துணவுத் திட்டத்தைப்பற்றிக் கூறும்போது நான் ஒன்றை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குச் சத்துணவுத் திட்டம், கல்வித் துறை, ஆதிதிராவிட நலத்துறை, வனத் துறை, சமூக நலத்துறை என்று இப்படிப்பட்ட பல துறைகளின் கீழ் வந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவைகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரே இயக்குநரகத்தின் கீழே வரும் வகையில், Directorate of Nutrition Meals Scheme என்று தனியாகத் துவக்க வேண்டுமென்ற யோசனையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய நிதியமைச்சரவர்கள் இந்த ஆண்டு முக்கியமான ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். நுழைவு வரியைக் கைவிட்டு விட்டேன். இனி வராது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய எதிர்க் கட்சிகளின் சார்பில் பேசிய யாரும் இதைப்பற்றிக் குறிப்பிட்டதாகவே தெரியவில்லை. சென்ற ஆண்டு, இந்த மன்றத்தில் இதுகுறித்து எவ்வளவு சப்தம் போட்டார்கள்? எவ்வளவு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்? அதையெல்லாம் அரசு ஏற்றுக்கொண்டு, "மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியதைப் போன்று எதிர்க்கட்சிகள் சொன்னாலும் பரவாயில்லை என்று அதை ஏற்றுக் கொண்டு நம்முடைய அரசு அதைக் கைவிட்டிருக்கிறது. அதுபற்றி ஒரு வார்த்தைகூட பாராட்டுவதற்கு நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மனம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கான இன்ஸ்யூரன்ஸ் திட்டம் ஏழைகளின் துயர் துடைக்கும் திட்டமாகும். எனவே இப்படிப்பட்ட திட்டத்தினை அறிவித்த அரசுக்கும, நம்முடைய முதல்வர் அவர்களுக்கும் நாவலர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் துறையில் மூன்றாவது இடத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது என்பது மன நிறைவு தரக்கூடிய ஒன்றாகும். அதிலும் சிறு தொழில்களைப் பொறுத்த வரையில் 1979-க்குப் பிறகு 83 சதவீதம் வளர்ச்சி அடைந்திருக்கின்றோம் என்பது மிகவும் பாராட்டத்தக்கது. ஆனால் இந்தியாவில் முதல் இடத்தை நாம் பிடிக்க வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசையாகும். எனவே அதற்கு வேண்டிய அனைத்தையும் செய்ய வேண்டும். எலக்ட்ரானிக்ஸ், தோல் தொழில் இயந்திரக் கருவிகள் செய்தல் போன்றவற்றில் இன்னும் அதிகக் கவனம்

[திரு. கோ. விஸ்வநாதன்] [1984 மார்ச்

செலுத்தினால் நிச்சயமாக நாம் தொழில் துறையில் முன்னேற முடியும். ஆகவே தொழில்களைத் துவங்குவதற்கு சில காரியங்களை நாம் செய்தாக வேண்டும். குஜராத்திலே சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

அதாவது ஒன் விண்டோ கிளியரன்ஸ் என்ற முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும். தொழில் துவங்குவோருக்கு உதவும் வகையில் பதிவு செய்தல், மின்சாரம் வாங்குதல், கடன் பெறுதல், மானியம் பெறுதல் போன்ற அனைத்தும் ஒரே இடத்தில், ஒரே அலுவலகத்தில் பெறுகின்ற வகையிலே குஜராத்திலே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப் போல இங்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து தொழில் துறையிலே வளர்ச்சி பெற வேண்டும் என்றால் மின்சாரம் இல்லாமல் எதுவும் நடக்காது. எனவே மிக முக்கியமானது மின்சாரம்.. ஆனால் மின்சாரத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு நாடு முழுவதும் பற்றாக் குறை இருக்கிறது. நாமும் அதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். எனவே மின்சார உற்பத்திக்காக அதிகத் தொகையை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒதுக்கி இருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அது மகிழ்ச்சிக்குரியது என்பதைத் தெரிவித்துக் சொள்கிறேன்' ஆனால் மைய அரசு அதிலே போதுமான கவனம் செலுத்தவில்லை. மைய அரசின் ஆதரவு இல்லாமல் எந்த மாநில அரசும் அதிகமான மின் உற்பத்தியினைச் செய்து விட முடியாது. ஆனால் இன்றைக்கு நாட்டிலே மின்சார உற்பத்தி குறைந்து கொண்டே வருகின்றது. அவர்கள் அதிகரிப்பதாகச் சொல்கிறார்கள். . ஆனால் கணக்கிட்டுப் பார்த்தால் 1981–82-லே 10.2 சதவீதமாக இருந்த மின் உற்பத்தி 1982–83-ல் 7 சதவீதமாகக் குறைந்திருக்கின்றது. இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் நாம் கணக்கிட்டுப் பார்த்தால் இது 5 சதவீதமாகக் குறைந்திருக்கின்றது என்பது தெரியும். அதிலேயும் மின்சார உற்பத்திக்காகச் செலவாகின்ற மின்சாரம், ட்ரான்ஸ்மிஷன் லாஸ் எல்லாவற்றையும் கழித்து விட்டுப் பார்த்தால் 1.9 சதவீதம் தான் மின்சார உற்பத்தி அதிகமாக ஆகி இருக்கின்றது என்று கணக்குச் சொல்கிறார்கள். எனவே இதை வைத்துக் கொண்டு நாடு முன்னேற முடியாது. தொழில் துறையிலே நாம் முன்னேற முடியாது. எனவே நாட்டின் பொருளாதார இழப்பிற்கு இது பெரிதும் உதவுகின்றது.

ஒரு மெகாவாட் மின்சாரம் பற்றாக் குறை ஏற்பட்டாலே ஆண்டு ஒன்றுக்கு 6 கோடி ரூபாய் நஷ்டம். நாட்டில் 10 சதவீதம் மின்வெட்டு வந்தால் ஆண்டுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டம். ஆகவே இந்த மின் உற்பத்தியைப் பற்றிக் கவலைப்படாமல்.மைய அரசு இருப்பதை நாம் ஏற்றுக் கொள்ள இயலாது. ஆகவே மின் உற்பத்தியினைப் பெருக்குவதற்கு எது தடையாக



1984 மார்ச் 9] [திரு. கோ. விஸ்வநாதன்]

இருந்தாலும் அந்தத் தடைகளை உடைத்தெறிய வேண்டும். அந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1956 ஆம் ஆண்டு இண்டஸ்ட்ரியல் பாலிசி அதற்குக் குறுக்கே நிற்கின்றது என்று சொல்கிறார்கள். மத்திய மந்திரி திரு. ஆர். வி. அவர்கள் இங்கே மந்திரியாக இருந்தபோது அவர்கள் ஒரு யோசனை தெரிவித்து இருக்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு. அதாவது தொழில் துறையிலே மின்சாரத்தை உற்பத்தி செய்து அவர்களுக்குக் கொடுக்க மாநில அரசிற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டதற்கு மையஅரசு மறுத்து விட்டது. எனவே இப்போது அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் மின்சாரம் தருகின்ற பணியை மின்சார வாரியம் ஏற்றுக் கொண்டு தொழில் துறைகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு வேண்டிய மின்சாரத்தை வாங்கிக் கொள்வதைப் பொறுத்தவரையில் அவை அவர்களிடமே விட்டு விட வேண்டும். அந்த அளவிற்குத் தமிழக அரசு முன் வர வேண்டும். மத்திய அரசும் அதை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பலரும் அதாவது ஏழை மாணவர்களும், அரசு ஊழியர்களும், உழவர்களும், நிலமற்ற ஏழை விவசாயிகளும் ஆகிய அனைவரும் இந்தத் தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்தால் பலன் அடைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழைகளுக்குப் பலன் தருகின்ற பட்ஜெட்டாக இந்த பட்ஜெட்டை அளித்திருக்கின்ற மாண்புமிகு நிதியமைச்சருக்கும், முதலமைச்சருக்கும் மனதாரப் பாராட்டினைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-30).

* திரு. சித. சிதம்பரம்: மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். நிதி நிலை அறிக்கையிலே வெள்ள நிவாரணத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசாங்கத்திடம் நாம் ரூ. 128 கோடி கேட்டிருக்கிறோம். ஆனால் மத்திய அரசாங்கம் ரூ. 15 கோடி கொடுத்திருக்கிறது. மாநில அரசாங்கம், நாம் ரூ. 37 கோடி செலவழித்திருக்கிறோம். என்று சொல்லியிருக்கிறீர்கள். உங்களுடைய மதிப்பீடே ரூ. 128 கோடி ; ஆனால் செலவழித்திருப்பதோ ரூ. 37 கோடி அப்படியானால் நிவாரணம் சரியாக நடைபெறவில்லை என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை.

திரு. துரைமுருகன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் நாவலரிடத்திலே ஒன்றை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆளுங்கட்சியிலே மிகப் பொறுப்பு வாய்ந்த, அனுபவம் மிக்க சட்ட மன்ற உறுப்பினர் நண்பர்

[திரு. துரைமுருகன்] [1984 மார்ச் 9

விசுவநாதன் அவர்கள், பேசுகின்றபோது, சென்ற ஆண்டு நுழைவு வரியை இந்த அரசு கொண்டு வந்தது. எதிர்க் கட்சிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த நுழைவு வரி கைவிடப்பட்டது. அதைக் கூட எதிர்க் கட்சி உறுப்பினர்கள், நேற்று பேசியவர்கள் பாராட்டவில்லையே என்று குறிப்பிட்டார். நான் அறிந்த வரையில் நுழைவு வரிக்குப் பதிலாக மாற்று யோசனைகளை, மற்றவர்களிடத்திலே பெற்று அதற்குத் தக்கபடிதான் நாங்கள் செய்யப் போகிறோம் என்று அரசு அறிவித்ததாகத்தான் என்னுடைய ஞாபகம், கணக்கு. ஆகவே, திட்டவட்டமாக, பொறுப்புள்ள, மிக்க செல்வாக்கு படைத்த ஒரு ஆளுங் கட்சி உறுப்பினர் நுழைவு வரி கைவிடப்பட்டது, எதிர்க் கட்சிகள் பாராட்டவில்லையே என்று சொன்னதனால் நான் திடுக்கிட்டுப் போயிருக்கிறேன். எனவே, நிதி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன், நுழைவு வரியை இந்த அரசு கைவிட்டு விட்டதா? அப்படி இருந்தால், அதை நாட்டு மக்களுக்கு நிதி அமைச்சரே அறிவித்திருந்தால் அது இன்னும் பெருமையாக இருந்திருக்காதா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். அது பற்றி நிதி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நுழைவு வரியினுடைய நிலைமையைப் பற்றி சொல்ல வேண்டுமானால், சென்ற ஆண்டு வந்தது. அதனால் ஏற்பட்ட விளைவுகள், அதற்காகக் குழுஒன்று அமைக்கப்பட்டது. குழுவினர் சொன்ன யோசனைகள், அந்த யோசனைகளுடைய அடிப்படையிலே என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று நிதி நிலை அறிக்கையிலேயே தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது. நுழைவு வரியைப் பற்றி இந்தச் சட்டமன்றமே ஒரு சட்டம் நிறைவேற்றி, கையெழுத்திற்காக, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. ஆகவே, நுழைவு வரியை நாம் நடைமுறைப்படுத்த வில்லை. இன்னும் கை விடவில்லை. நடைமுறைப்படுத்தவில்லை, ஆனால் கைவிடவில்லை. இந்த அளவுக்காவது நுழைவு வரியைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை என்று அவர் சொன்னதிலே உண்மையிருக்கிறது. ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், அது கைவிடப்பட்டதா, அல்லது அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டதா என்றால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் போன சட்டம் இன்னும் திரும்ப வரவில்லை, அது அப்படியே இருக்கிறது. அதற்கு மாற்றுத் திட்டமாகத்தான ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறோம் என்ற அளவுக்கு, அந்த உணர்வின் அடிப்படையிலேதான் இந்த ஆண்டினுடைய வரவு செலவுத் திட்டத்திலே வகுக்கப் பெற்றிருக்கிறது. லீகல் டெர்ம்ஸ் ஆக மாண்புமிகு உறுப்பினர் கேட்டதன் பேரில் 'டீ ஜூர்' படி எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் வந்தது.

திரு. கு. ரமணி : உறுப்பினர் திரு. விசுவநாதன் நுழைவு வரியைக் கைவிட்டு விட்டதாகவும், அது நீக்கப்பட்டுவிட்டதாகவும் எதிர்க் கட்சிகள் அதைக் கூடப் பாராட்டவில்லையென்றும் சொன்னார்கள்.



1984 மார்ச் 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்குத்தான் தெளிவு படுத்தி விட்டேன். எல்லா உறுப்பினர்களுக்கும் நிதி அமைச்சருக்குத் தெரிந்த முழு விவரங்களும் தெரிந்திருக்கும் என்று சொல்வதற்கில்லை. மாற்றுக் கட்சி உறுப்பினர்களைப் போல ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் சில விவரங்கள் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எல்லோருக்கும் எல்லாம் தெரியும் என்று சொல்வதற்கில்லை. எனக்கே கூட எல்லா துறைகள் பற்றி எல்லா விவரங்களும், நிதித் துறையைப் பற்றி எல்லா விவரங்களும் தெரியும் என்று நானே சொல்வதற்கில்லை. அதற்கு மாற்றுத் திட்டமாக நாம் கொண்டு வந்திருப்பதன் காரணமாக கைவிடப்பட்டது என்ற தகவலை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திட்டவட்டமாக, தெளிவாக விளக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கேட்டுக் கொண்டதன் காரணமாக, நான் லீகல் டெர்ம்ஸிலே சொல்கிறேன். அது கைவிடப்படவில்லை, நிறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. சித. சிதம்பரம் : அரசினுடைய மதிப்பீடே வெள்ள நிவாரணத்திற்குத் தேவைப்படும் பணம் ரூ. 128 கோடி ; ஆனால் செலவழித்திருப்பதோ ரூ. 37 கோடி. ஆகவே, வெள்ள நிவாரணப் பணி சரியாக செய்யப்படவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். வெள்ளத்தாலே வீடிழந்தவர்களுக்கு சரியாக உதவிகள் வழங்கப்பட வில்லை. அதில் பழுது பட்ட சாலைகள் எல்லாம் இன்னும் சரி செய்யப்படவில்லை. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் நிறைய இருக்கின்றன. இந்த வெள்ளம் தொடர்ந்து கொண்டே இருக்கிற காரணத்தால் நிவாரணப் பணிகளுக்கு இன்னும் அதிக நிதி ஒதுக்கி, அவற்றையெல்லாம் சரிசெய்ய வேண்டும்.

அதைப் போல ஜனதா வேட்டி சேலை கொடுப்பதற்காக நாங்கள் ரூ. 10 கோடி செலவழித்திருக்கிறோம் என்று சொன்னீர்கள். ரூ. 10 கோடி செலவழிக்கப்பட்டிருந்தால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் ? பாதிக்கப்பட்டவர்களிலே எத்தனை பேர்களுக்கு இந்த ஜனதா வேட்டி, சேலை கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை நிதி அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இந்த ஜனதா வேட்டி சேலை என்பது வெள்ளத்தால் திண்டாடியவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்படவில்லை, பாகுபாடுபடுத்தி கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அந்தக் கணக்கைத் தெரிவிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

அதைப் போல வெள்ளத்திலே நெசவாளப் பெருமக்கள் நிறைய பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தொழில் செய்யக் கூடிய தறிகள் எல்லாம் பழுதடைந்திருக்

[திரு. சித். சிதம்பரம்] [1984 மார்ச் 9

கின்றன. ஆனால் அதைப்பற்றி இந்த அரசாங்கம் இதுவரையில்
கணக்கெடுத்ததாவும் தெரியவில்லை. அவர்களுக்கு அதற்கான
உதவி வழங்கப்பட்டதாகவும் தெரியவில்லை. ஆகவே, மாண்பு
மிகு நிதி அமைச்சர் அவர்கள் நெசவாளர் பெருமக்களுடைய
பழுதடைந்த தறிகளுக்குப் பதிலாக உதவித் தொகையை
வழங்கி, அவர்கள் தொழில் செம்மையாக நடைபெற உதவி
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல் சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே வீட்டுக்
கொருவருக்கு வேலை கொடுப்பதற்காக ரூ. 15 கோடி
செலவிடப்படும் என்று தெரிவித்து இருந்தார்கள். இந்த
ஆண்டு அறிக்கையில் வீட்டுக்கு ஒருவர் வேலைத் திட்டத்தைப்
பற்றி ஏதும் சொல்லப்படவில்லை. அதற்கு எந்தவிதமான
பணமும் ஒதுக்கப்படவில்லை. அந்தத் திட்டம் என்னவானது?
சென்ற ஆண்டு சொன்ன திட்டத்திலே எத்தனை பேர்களுக்கு
வேலை கொடுத்திருக்கிறீர்கள்? அந்தத் திட்டம் நிதிநிலை
அறிக்கையில் வந்ததோடு சரியா? அல்லது செயல்பாட்டுக்கு
வந்திருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல காவல்துறைக்கு நம்முடைய பட்ஜெட்டிலே
நிதி ஒதுக்கி செலவு செய்கிறோம். இதற்கு முன்னாலே காவல்
பணியாளர்களுக்கு தேர்வு நடைபெற்றது. எஸ்.பி. செய்தது
சரியில்லை, மிலிட்டரி ஆபீசர் செய்யப்போகிறார் என்று
சொல்லி, பிறகு அவர்கள் செய்ததும் சரியில்லை என்பதால்
அதையும் நிறுத்தி வைக்கப்போகிறோம் என்று சொல்லப்பட்டது.
அதில் தேர்வு செய்யப்பட்டவர்களை எல்லாம் நிறுத்தி வைத்தார்
கள். ஆனால் இப்போது தேர்வு நடந்துகொண்டிருக்கிறது.
அப்படியானால் சென்ற முறை நடந்த தேர்வு என்னவானது?
அவர்களுடைய சர்டிபிகேட்டுகளை எல்லாம் வாங்கி வைத்துக்
கொண்டு அவர்கள் எந்த வேலைக்கும் போக முடியாத நிலை
இருக்கிறது. மேலும் அவர்களுக்கு வயதான பிறகு வேறு
எந்த வேலைக்கும் செல்லமுடியாத அளவிற்கு ஆக்கப்படு
கிறார்களே, அதற்கு இந்த அரசாங்கம் என்ன செய்யப்
போகிறது? பழையவர்கள் திரும்ப வேலைக்கு எடுத்துக்
கொள்ளப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல காவல்துறைக்கு நாம் ஏன் நிதி ஒதுக்கு
கிறோம் என்றால் மக்கள் பாதுகாப்பிற்காக என்று சொல்
கிறோம். ஆனால் மக்களுக்கு எப்படி பாதுகாப்பு கொடுக்கப்
படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
என்னுடைய பகுதியில் பாகநேரி என்ற ஊரிலே 2, 3 முறைகள்
தொடர்ந்து திருட்டு நடைபெற்றிருக்கிறது. அதற்கு பிறகு
அது தொத்துநோய் பரவுவதைப் போல் பாகநேரிக்கு பக்கத்
திலே இருக்கிற பட்டமங்கலம், கண்டரமாணிக்கம் போன்ற
இடங்களுக்கும் பரவி, இன்றைக்கு அந்த மூன்று ஊர்களிலும்
மக்கள் இருக்கவே பயந்து கொண்டு, எங்காவது வெளியே



1984 மார்ச் 9] [திரு. சித. சிதம்பரம்]

செல்லலாமா என்ற சூழ்நிலையில் இருந்து வருகிறார்கள்.
காவல்துறைக்கு இவ்வளவு செலவழித்தும் பாதுகாப்பற்ற
சூழ்நிலையில் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பாது
காப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே
போல பாதுகாப்பு அளிக்கிறோம் என்று சொன்னாலும்
எங்கே பார்த்தாலும் சென்னை நகரத்தில் முகமூடிக் கொள்
ளைகள் நடந்துகொண்டிருக்கின்றன. வேலூரில் பஸ்களை நிறுத்தி
திருட்டு நடைபெறுகிறது ஆகவே காவல் துறைக்கு
இப்படி பணம் செலவழித்து என்ன பயன்? ஆக முகமூடிக்
கொள்ளை, பஸ்ஸிலே திருட்டு, ஊரிலே இருக்க முடியவில்லை
என்றால் இந்தத் துறைக்கு செலவழிப்பதிலே என்ன பயன்
என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல நெய்வேலியில் ஒரு கொலை நடைபெற்
றிருக்கிறது. உஷா என்ற பெண், சென்னை தொழில் நுட்பக்
கல்லூரியில் படித்துக் கொண்டு இருப்பவர். அவர் மர்மமான
முறையில் கொல்லப்பட்டிருக்கிறார். அந்தக் கொலைக்கு
நியாயம் வேண்டுமென்று மனு கொடுத்திருக்கிறார்கள். இது
வரையில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று
தெரியவில்லை. ஆனால் அந்த மர்மமான கொலை மறைக்கப்
படுகிறதே, அது அவசியந்தானா? தேவைதானா, நீதி
வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

சாலைப்பணிகளுக்காக் பணம் ஒதுக்குவதாக சொல்லப்
படுகிறது. புதியதாக நாங்கள் சாலைப் போடுகிறோம் என்று
நீங்கள் சொல்லலாம். கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளாக தமிழ
கத்தில் இருக்கக்கூடிய சாலைகளில் எத்தனை சாலைகளை
நீங்கள் பழுதுபார்த்திருக்கிறீர்கள்? எத்தனை ரோடுகள்
போடப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களைத் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன். எந்த ரோடும் போடப்படவில்லை.
எங்கே போனாலும் பயந்து செல்லக்கூடிய சூழ்நிலை இன்
றைக்குச் சாலைகளில் இருக்கிறது. நான் கூட கவனஈர்ப்புத்
தீர்மானம் ஒன்றை தலைவருக்கு கொடுத்தேன். கல்லலிலிருந்து
காளையார்கோவில் வரையில், காளையார்கோவிலிலிருந்து இளை
யான்குடி வரையில் இருக்கிற சாலை மிகவும் மோசமான
நிலையில் இருக்கிறது. ஆபத்தான சூழ்நிலையில் மக்கள்
பயந்து பஸ்ஸிலே அந்தச் சாலையில் செல்கிறார்கள். நான்
கொடுத்த கவனஈர்ப்புத் தீர்மானத்தை தலைவர் அவர்கள்
என்ன காரணத்தாலோ திருப்பி கொடுத்து விட்டார்கள்.
ஆகவே பழைய சாலைகளைப் புதுப்பிக்கிற பணியிலே செல
வழிக்கவேண்டும். புதிய சாலைகளை மட்டும் போட்டால்
போதாது. பழைய சாலைகளையும் பராமரிக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல காரைக்குடியிலே ஒரு பல்கலைக்கழகம்
வரும் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இது மூன்று
ஆண்டுகளாக சொல்லப்பட்டு வருகிறது. இது வருமா?

வராதா? அல்லது இந்த கவர்னர் உரை, நிதிநிலை அறிக்கையில் மட்டும் தான் வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நீங்கள் முன்னால் அறிவித்ததைப் போல திருச்சியிலே புகளூர் காகித ஆலை, திருத்தணி சர்க்கரை ஆலை என்பதைப் போல காரைக்குடியிலே பல்கலைக்கழகம் ஆகுமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய கண்ணதாசன் அவர்கள் மறைந்தபோது மண்டபம் ஒன்று கட்டப்போகிறோம் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது. அதுபற்றிய செய்தியோ, பண ஒதுக்கீடு செய்தது பற்றியோ எதுவும் இல்லை. ஆகவே அறிவிப்பு என்பது இறந்தவுடன் ஆறுதல் சொல்வதற்குத்தானா? அல்லது செயல்படுகிற ஒன்றை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்களா என்பதை இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இங்கே சத்துணவுத் திட்டத்தை எல்லோரும் பாராட்டினார்கள், ஆனால் எதிர்க்கட்சிகள் பாராட்டவில்லை என்று சொன்னார்கள். சத்துணவு என்பதற்கு நீங்கள் அழகாக, தெளிவாக விளக்கம் கொடுத்து இருக்கிறீர்கள். அதாவது அறிக்கையின் 62-வது பக்கத்தில் 124 இனத்தில் ''பட்டினிக் கொடுமையிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பது முதல்வரின் உன்னதமான நோக்கமாகும்'' என்று கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் சத்துணவு என்பதற்கு கொடுத்திருக்கிற விளக்கம் பட்டினிக் கொடுமையிலிருந்து காப்பாற்றுவதற்கு போடப்படுகிற சாப்பாடே தவிர, அதிலே சத்து எதுவும் இல்லை என்று மறைமுகமாகவே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் போடுகிற உணவு பட்டினிக் கொடுமையிலிருந்து காப்பாற்றுவதற்கு போடுகிற உணவே தவிர, சத்துணவு இல்லை என்பதாலே தான் நாங்கள் எல்லாம் பாராட்டவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அது எந்த உணவாக இருந்தாலும் அங்கே போடுகிற உணவிற்கு எங்களுடைய இயக்கத்தின் சார்பாக பாராட்டைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

5 கிலோ அரிசிக்கு ஒரு கிலோ அரிசி இனாமாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஒரு மாதத்திற்கு 20 கிலோ அரிசி கொடுப்போம் என்று சொன்னார்கள். அதைக்கொடுக்கவும் இல்லை. 5 கிலோ அரிசிக்கு ஒரு கிலோ அரிசி இனமாகக் கொடுக்காவிட்டால் கூட பரவாயில்லை. 20 கிலோ அரிசியாவது கொடுங்கள். இது கூட தேர்தல் வாக்குறுதிகளைப் போல் காற்றில் விடப்பட்டு விட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.



பங்கீட்டு முறையில் ஒரு கார்டுக்கு இந்தத் தேதியில் தான் வழங்குவது என்றும், அப்படி அந்தத் தேதியில் வாங்கவில்லையென்றால், வேறு தேதிகளில் அவர்களால் வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஏழை எளிய மக்கள் சில நேரங்களில் பணம் இல்லாத காரணத்தால் அந்தக் குறிப்பிட்ட தேதியில் வாங்க முடியாவிட்டால் அவர்கள் அந்த வாரத்தில் வாங்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, இப்படி விட்டுப்போன கார்டுதாரர்கள் வேறு ஒரு நாளில் வாங்கிக்கொள்ளும் வகையில், எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் பங்கீட்டு முறையை திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசன திட்டங்கள் நிறைய போட்டு இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். புதிதாகப் போட்டு உள்ள திட்டங்களை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இருக்கின்ற பாசன வசதிகளை சீரமைக்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. பெண்ணாறு, வைகை கால்வாய்த் திட்டம் சரிவர செய்யப்படவில்லை. பெண்ணாறு கால்வாய் சிதைந்துப் போய்விட்டது. புதிதாகப் போடுவதற்கும், எந்தெந்த ஊருக்கு, எந்தெந்த பகுதிக்கு அந்த நீர்ப்பாசனம் கிடைக்கிறதோ, அங்கெல்லாம் அவைகளைச் சரிவர சீர்படுத்துவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும். குறிப்பாக பெண்ணாறு, வைகை பாசனத் திட்டத்தை சீரமைக்க திட்டம் போடவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், வீடுகள் தேவைப்படும் அனைவருக்கும் வீடுகள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். வீடுகள் கேட்டு, நிறைய பேர் மனுப்போடுகிறார்கள். தற்போது குலுக்கல் முறையில் வீடுகள் ஒதுக்குவதை விட, மனுச் செய்கிற அனைவருக்கும் வீடுகள் கட்டித் தரும் வகையில் திட்டங்களைத் தீட்டவேண்டும். அரசு ஊழியர்களுக்கு வீட்டுக் கடன் கொடுப்பதற்காக ரூ. 10 கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லப்பட்டுள்ளது. அது போதாது. இதைக் கூடுதலாக்க வேண்டும். இது வெறும் அட்வான்ஸ்தான். ஆகவே, அரசு ஊழியர்கள் அனைவருக்கும் வீடு கட்ட இந்தக் கடன் தொகை கிடைக்கும் வகையில் அந்தத் தொகையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டு வசதி பற்றி இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்காக ரூ. 6,000 கொடுக்கிறார்கள். அந்த 6,000 ரூபாயை ஒரே முறையில் கொடுப்பதில்லை. முதலில் ஒரு பகுதி தரப்படுகிறது. அந்தப் பகுதி வேலை முடிந்தபின் அவர்கள் திரும்பவும் மனு கொடுத்து, அந்த மனு சென்னை வந்து பாஸாகி வருவதற்குள் கட்டிய பகுதி இடிந்து விழுந்து விடுகிறது. ஆகவே முழுத்தொகையை முதலிலேயே கொடுத்து, அந்தப் பணியை அவர்கள் விரைவில் முடிக்க

அரசு வழிவகை செய்து கொடுக்க வேண்டும். அந்த வகையில்
அவர்கள் வீடு கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையில் தலைமை மருத்துவர்கள் பலர் நியமிக்
கப்படாமல் இருக்கிறார்கள். உதவி மருத்துவர்கள் நியமிக்கப்
கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே, உதவி மருத்துவர்களை
யும், தலைமை மருந்துவர்களையும் உடனடியாக நியமித்து, அந்த
மருத்துவத் துறையையும், சுகாதாரத் துறையையும் நல்ல
முறையில் இயங்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அதைப்போலவே கூட்டுறவுத் துறையில் உதவிப் பதிவாளர்
கள் பலர் நியமிக்கப்படாமல் அந்தப் பதவிகள் காலியாக இருக்
கின்றன. கல்வித் துறையில், தொழில் நுட்பக் கல்வித் துறை
யில் பலர் நியமிக்கப்படாததால், சீனியாரிட்டியில் பதவி உயர்வு
கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைக்காமல் இருக்கிறது. இதை
யெல்லாம் கவனித்து எல்லா காலி இடங்களுக்கும் தகுந்த
ஆட்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், விலைவாசி
யைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காத பட்ஜெட், முறை
யான பங்கீட்டு முறையை ஏற்படுத்தாத பட்ஜெட், வேலையில்
லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வழி செய்யாத பட்ஜெட்,
தமிழர்களுக்கும், தமிழ் மொழிக்கும் பாதுகாப்புத் தராத அர
சாங்கத்தின் பட்ஜெட் இது என்பதைச் சொல்லி என் உரையை
முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவையின் மாற்
றுத் தலைவர் அவர்களே, 1984—85-ஆம் ஆண்டு நிதிநிலை
அறிக்கை மீதும் 1983—84-ஆம் ஆண்டு அரசு நிதிநிலை
அறிக்கை மீதும் எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் பேசுவதற்கு
வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றியைத்
தெரிவித்து, இந்த அறிக்கையை இந்த அவையின் முன்
வைத்து, நல்லபல திட்டங்களை அறிவித்தமைக்காக மாண்பு
மிகு நமது நிதியமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் நாட்டிலே ஏற்பட்டிருக்கிற இயற்கைச்
சீற்றங்களை மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம்
நன்றாக அறிவார்கள். அது வறட்சியாக இருந்தாலும் சரி,
வெள்ளமாக இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட இயற்கைச் சீற்
றங்ககளால் பாதிப்பு ஏற்படுகிறபோதும் எந்த அளவுக்கு
பணியாற்றியிருக்கிறது என்பதும் எல்லோருக்கும் தெரியும்.
கடந்த ஆண்டு வறட்சியைப் போக்க எவ்வளவு சிறப்பாக திட்
டங்களைத் தீட்டி, ஆங்காங்கே இருக்கிற தொகுதி மக்களுக்கு





குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து, மக்களுடைய எண்ணங்களை
பூர்த்தி செய்திருக்கிறோம், என்பதையும் நிதிநிலை அறிக்கை
யிலே குறிப்பிட்டிருக்கிற புள்ளி விவரங்களையும் எதிர்முகா
மிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் கண்டிப்பாகப்
படித்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக நேற்றைய தினம் எதிர் வரிசையில் இருக்கிற
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டக்கல்லூரி
யில் தெளிவாகப் பயின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
பேசினார்கள். அவர் சட்டக்கல்லூரியில் படித்தவர், நான்
சட்டக் கல்லூரியில் படிக்காதவன். அவர் சட்டத்தைப்பற்றித்
தெளிவாகத் தெரிந்தவர் என்று நான் எண்ணினேன். ஆனால்
அவர் நிதித்துறையிலே தான் ஒரு மிகப்பெரும் நிபுணர் என்று
தன்னை மிகைப்படுத்தி தன்னுடைய பாணியிலே பேசியதை
நினைக்கும்போது உள்ளபடியே நான் அந்த நண்பர்
அவர்களுக்கு மிக்கப் பணிவோடு சொல்வேன். நீங்கள் 1980-க்
குப் பின்னால் இந்த அரசு கொண்டுவந்திருக்கிற எந்தத் திட்
டத்தைப் பாராட்டியிருக்கிறீர்கள்? எந்தத் திட்டம் நடை
பெற்று முடிந்திருக்கிறது என்று ஏற்றிருக்கிறீர்கள்? அல்லது
மக்களுக்கு இன்னதை நாங்கள் செய்தோம், நீங்கள் செய்ய
வில்லை என்பதை கோடிட்டுக் காண்பித்திருக்கிறீர்கள் என்பதை
தயவு செய்து நீங்கள் உணர்ந்து பார்த்து உங்களுடைய சட்டப்
படிப்பின் மிகப்பெரும் ஆராய்ச்சியை பயன்படுத்தி, பேச
வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக நாவலர் அவர்களை நன்கு தெரிந்தவன்
நான், நன்றாகப் புரிந்தவன் நான். அவர்களுடைய பாசறை
யிலே வளர்ந்து, அவர் என்னுடைய குருநாதன் என்று கூட
சொல்லி, அண்ணா அவர்களே 'தம்பி வா, தலைமை ஏற்க வா'
என்று அழைத்த உயரிய பெருமை வாய்ந்த நாவலரை கேலி
பேசுகின்ற அளவுக்கு அவருடைய பாணியிலே பேசினார்கள்.
இது நீங்கள் அண்ணாவுக்குச் செய்கிற மிகப்பெரும் துரோகம்
என்பதை அண்ணாதாசனாகிய நான் தெரிவித்துக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்தப் பட்ஜெட்டில் ஒன்றுமே இல்லை
என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர், பெரியவர்
வரதராஜன் அவர்கள் பேசினார்கள். அவர்கள் பாராளுமன்ற
ஜனநாயகத்தைப்பற்றி நன்கு தெரிந்தவர்கள்; நல்ல முறையில்
புரிந்துகொண்டிருக்கிறவர்கள். அப்படிப்பட்டவர் இது 'ஊது
காமாலை பட்ஜெட்' என்று சொன்னார். உண்மையிலே திராவிட
முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் அப்படிச் சொல்
கிறார்கள் என்றால் நல்லமுறையிலேயே பாராளுமன்ற
ஜனநாயகத்தைத் தெரிந்தவர், பாராளுமன்ற பட்ஜெட்டைப்
படித்துக் கொண்டிருப்பவர், அவர்களுடைய ஆட்சியிலே போடு
இன்ற பட்ஜெட்டுகளை எல்லாம் தெரிந்து வைத்திருப்பவர்

இதை ஒரு ஊதுகாமாலை பட்ஜெட் என்று சொல்வது உள்ளபடியே மிகவும் வேதனை அளிப்பதாக இருக்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி 1980-க்கு முன்னால் ஒரு பக்கமிருந்தாலும், 1980-க்குப் பின்னால் அவர்கள் கொண்டுவந்திருக்கிற திட்டங்களை இங்கே எதிர்க்கட்சியில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவு ஏளனமாகப் பேசியது என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் நன்றாக அறிவார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள்? சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்த போதும் சரி, தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு போதும் சரி, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்போம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொன்ன போதும் சரி, படித்த இளைஞர்களுக்கு அவர்கள் தொழில் துறையிலே முன்னேறுவதற்கு அரசு நிதி உதவி அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவந்தபோதும் சரி அவர்கள் இது எப்படி நடக்கும், இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கேலி பேசினார்கள். தன்னிறைவுத் திட்டத்தைக் கேலி பேசினார்கள். அதன் முடிவு இன்றைக்கு ஏழை எளிய மக்கள் வாழ்க்கை வசதி பெற்று, கிராமப்புறங்கள் மேம்பாடு அடைந்திருக்கின்றன என்பதை கிராமப்புறங்களிலே இருப்பவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். வருகின்ற பஞ்சாயத்துத் தேர்தலாக இருந்தாலும் சரி, நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, அல்லது சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, எந்தத் தேர்தலாக இருந்தாலும் நாங்கள் செய்திருக்கிற சாதனைகளை அது தெளிவாக்கும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிற திட்டங்கள் இந்த நாட்டு மக்களுக்கு எந்த அளவுக்கு பயன்பட்டிருக்கின்றன என்பதை தேர்தல் களத்திலே நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்; நிச்சயமாக தேர்தல் களத்திலே நாங்கள் சந்திக்க இருக்கின்றோம். நாட்டு மக்கள் தீர்ப்புச் சொல்ல இருக்கிறார்கள் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

அதேபோல் சத்துணவுத் திட்டத்தையும் கேலி பேசினார்கள். இன்றைக்கு 35,000 தாய்மார்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்ததோடு மட்டுமல்ல, எத்தனையோ ஆயிரம் சிறார்களுக்கு உணவு அளிக்கப்பட்டு, அவர்கள் நல்லமுறையில் வாழ்கிறார்கள் என்பதை உணரவேண்டும். அனாதைகள், விதவைகள், அனாதைகளாக துரத்தப்பட்டவர்கள். பெரியவர்கள், முதியவர்கள்; இளம் தாய்மார்களிலிருந்து முதியவர்கள் வரையில் இந்த சத்துணவுத் திட்டத்தின் மூலமாக ஒரு வேளை அந்த உணவை திருப்தியாக உண்டு, பெருமகிழ்ச்சியடைகிறார்கள். பெண்களுக்கு வருடத்திற்கு 2 சேலைகளும், ஆண்களுக்கு வருடத்திற்கு 2 வேட்டிகளும் கொடுக்கப்படுகிறது. அந்தத் தாய்



மார்களும், பெரியவர்களும் சத்துணவு சாப்பிட்டு, அரசு கொடுக்கின்ற ரூ. 35 நிதியுதவியும் பெற்றுக் கொண்டு, அந்தத் தாய்மார்கள், உளமார்ந்த வாழ்த்துக்களை தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் நேரிடையாகப் பார்க்கிறோம். நீங்களும் பார்க்கிறீர்கள். ஆனால் ஒத்துக்கொள்ளமுடியாத நிலையில் நீங்கள் தள்ளப்பட்டிருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் என்ன இருக்கிறது என்று கேலியாகப் பேசினவர்களுக்கு, ஒரு சில கருத்துக்களை நான் உங்களிடத்திலே கூறி முடித்துக் கொள்ளலாம். என்று கருதுகிறேன்.

அடுத்து உழவுத் தொழிலைப் பொறுத்தவரையில், தொழிலாளர் காப்புறுதித் திட்டம் இன்றைக்கு இந்த பட்ஜெட்டிலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தொழிலாளி வர்க்கத்திலே மிகவும் அக்கறை கொண்டவர்கள். அவர்களே இந்தத் திட்டத்தைப் பற்றி நேற்றைய தினம் பேசும்போது பாராட்டுவார்கள் என்று நான் கருதினேன். நிச்சயமாக எதிர்பார்த்தேன். எங்கேயாவது ஒரு மூலையிலாவது அந்தத் தொழிலாளர் வர்க்கத்திற்கு இப்படிப்பட்ட காப்புறுதித் திட்டம் கொண்டு வந்திருப்பதை பாராட்டுகிறோம் என்று சொல்லியிருந்தால், உள்ளபடியே நாங்கள் மகிழ்ச்சியடைந்திருப்போம். ஓரளவு அதையாவது ஒத்துக் கொண்டிருக்கிறார்களே என்று எண்ணியிருப்போம். ஆனால் அதைச் சொல்லவில்லை.

நிலமற்ற உழவுத் தொழிலாளர்களுக்காகவும், சிறு உழவர்கள், சொற்ப நிலமுள்ள உழவர்கள் போன்ற நலிந்த பிரிவினர்களுக்காகவும், தொழிலாளர் நலத்துறையில் ஒரு தனி பிரிவு ஏற்படுத்தி, அதில் ஒவ்வொரு விவசாயத் தொழிலாளரும் சிறு உழவர்களும் முதலில் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப் பார்வையின் கீழ் ஆங்காங்கே உட்பிரிவுகள் அமைத்து, வெள்ளம், வறட்சி போன்றவைகளால் ஏற்படும் இழப்பை உறுப்பினர்களுக்கு ஈடுகட்டிப் பாதுகாப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாமல், தொழில் செய்யும்போது ஏற்படும் உயிர் இழப்பிற்கு குடும்ப நிலைக்கு ஏற்ப குறைந்தது ரூ. 5,000 முதல் ரூ. 10,000 வரை உதவி கொடுக்கப்படும் என்ற அருமையான திட்டத்தை இந்த அரசு இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதுவும் உறுப்பினராக சேரக்கூடியவர்களுக்கு, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில், தமிழக அரசே பதிவு செய்ய ஏற்பாடு செய்து, அதற்குத் தேவையான சந்தாத் தொகையில் ஒரு பங்கை அரசே ஏற்கும் என்று கூறியிருக்கிறது. உழைக்கும் வர்க்கத்தின்பால் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிற கட்சியைச் சார்ந்தவர்களையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களையும் கேட்க விரும்புகிறேன் — இவைகளெல்லாம் திட்டங்கள் இல்லையா? ஏழை எளிய மக்களுக்கு ஏற்ற

திட்டமா, இல்லையா என்பதை தயவு செய்து நீங்கள் உணர
வேண்டுமென்று மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்
படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய எங்கள் கட்சியைச் சார்ந்த
மாண்புமிகு உறுப்பினர் விஸ்வநாதன் மத்திய அரசில் இருக்கிற
நிலைமைகளைப் பற்றியும் மாநிலங்களுக்கு கிடைக்கிற நிதி
யாதாரத்தைப் பற்றியும், எந்த அளவிற்கு விவரமாகப் பேசி
னார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த அடிப்படையிலே
இந்த அரசு, தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய வருவாயை வைத்துக்
கொண்டு, தமிழ்நாட்டு மக்களுக்கு சேரவேண்டுமென்ற அடிப்
படையிலேதான் புரட்சித் தலைவருடைய அரசு இன்றைக்கு
இந்த நிதியாதாரத்தை முன் வைத்து, பட்ஜெட்டாக சமர்ப்பித்து
இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதைப்
பற்றி நான் ஒரு சில கருத்துக்களை விரிவாக விளக்க ஆசைப்
படுகிறேன்.

அடுத்து தமிழ்க் கலையும், பண்பாடும் என்று குறிப்பிட்
டிருப்பதை நீங்கள் படித்து இருப்பீர்கள். ஆனால் கம்யூனிஸ்டு
தோழர்களுக்கு அது தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால்
இன்றைக்கு தமிழர்களின் புகழ்வாய்ந்த பாரம்பரியத்தையும்,
அவர்களது பண்பாட்டையும் ஒளிபெறச் செய்வதை, அரசு அறி
வார்ந்த கொள்கையாகக் கொண்டிருக்கிறது. அந்த சீரிய
நோக்கத்தோடு, புது டில்லியில் முக்கியமானதோர் இடத்தில்
மகாகவிசுப்பிரமணிய பாரதியாரின் சிலையை வைப்பது என்று
தமிழ்நாடு அரசு முடிவெடுத்திருக்கிறது.

அதோடு மட்டுமல்ல. வைக்கம் வீரர், வெண்தாடி வேந்தர்
இன்றைக்கு தமிழகத்திலே விழிப்புணர்ச்சியை உருவாக்கிவிட்டு
மறைந்த தந்தை பெரியார் அவர்களுக்கு, அவருடைய வாழ்க்கை
வரலாற்றை வல்லுநர் 'குழு ஒன்று ஆராய்ந்து வருகிறது.
என்று ஒரு குழு அமைத்து தீண்டாமைக் கொடுமைகளை அதற்கு
எதிர்த்து நடத்திய போராட்டத்தை நினைவு கூறும் வகையில், அவர்
கேரளாவிலே வைக்கத்தில் சிலை ஒன்றை அமைக்கவும், இந்த
அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதெல்லாம் தேவை
யில்லாத திட்டமா? பெரியார் அவர்கள் வைக்கத்திலே நடத்திய
போராட்டம் பெரிய முக்கியத்துவம் வாய்ந்த போராட்டம்
என்பதற்கு இந்த அரசு அதை நினைவு கூர்ந்திருக்கிறது என்பதை
நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து பால் பண்ணை, இன்றைக்கு தமிழகத்திலே உள்ள
சிற்றூர்களிலே பல பால் பண்ணைகள் அறிவிக்கப்பட்டு,
அதனாலே ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், கூலி
வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிற விவசாயிகள், அந்தக்
கறவை மாட்டைப் பெற்றவர்கள் இதனால் அவனுக்கும் இதிலே
வேலை இருக்கிறது, தாய்மார்களுக்கும் பெண்களுக்கும் வேலை
கிடைக்கிறது. மாட்டிற்குத் தேவையான புல் சேகரிப்பதிலே
யிருந்து அவர்களுக்கு வேலை கிடைக்கிறது. இன்னொருவருக்கு
அடிமையாகாமல் தங்களுடைய சுயவேலை வாய்ப்பினால், அதிக
மான அளவிற்கு தங்களுடைய வருங்கால சந்ததிகளுக்குத் தேவை





யானவற்றைச் செய்து கொடுக்கக்கூடிய அளவிலே ஒரு ஒப்பற்ற
முறையிலே இது அமைந்திருக்கிறது. பால் பண்ணையாக இருந்
தாலும் சரி, பால் உற்பத்தியாக இருந்தாலும் சரி, அவைகளை
இந்த அரசு செவ்வனே செய்துகொண்டு வருகிறது. அந்த
வகையிலே இந்த அரசு அதிகமாக மாவட்டங்களுக்குச் செய்
வதற்கு இன்னும் பல திட்டங்களைத் தந்திருக்கிறது. அதே
போன்று சமூகநலமாக இருந்தாலும் சரி, குடிநீர்ப் பிரச்சனை
யாக இருந்தாலும், சரி, கைத்தறித்துறையாக இருந்தாலும்
சரி, நெசவாளர்கள் துயரங்களாக இருந்தாலும் சரி, அவர்கள்
குழந்தைகள் நல்வாழ்வுத் திட்டமாக இருந்தாலும் சரி, அத்த
னைக்கும் நல்ல திட்டங்களை அளிக்கின்ற நல்ல பட்ஜெட்
டாக இதைத் தந்திருக்கிறார்கள். இத்தனையையும் படித்து
விட்டு. அவர்கள் ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்று
சொல்வது உண்மையிலே வேதனையான செய்தியாகும் என்பதை
நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நகர்புறங்களுக்கு இன்றைக்கு எத்தனையோ முன்
னேற்றத் திட்டங்கள் தரப்பட்டு இருக்கின்றன. அந்தத்
திட்டங்களின் அடிப்படையிலே திருச்சியை மாநகராட்சியாக வரு
கின்ற செப்டம்பர் மாதம் முதல் நாம் அறிவிக்க இருக்கிறோம்.
என்று கவர்னர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. அதற்கு
நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
திருச்சிக்குப் பக்கத்திலே உள்ள பொன்மலை என்ற அந்தப்
பகுதியையும் இந்த மாநகராட்சியில் சேர்த்து இருப்பதால்,
குடிசை மாற்று வாரியம் — சேலம், மதுரை, கோயம்புத்தூர்
போன்ற இடங்களில் நீட்டித்து விரிவாக்கப்பட்டு இருப்பது
போல் — திருச்சி நகரத்திற்கும் குடிசை மாற்று வாரியத்தை
இப்போதே உடனடியாக, அதையும் சேர்த்து வருங்காலத்தின்
நன்மையைக் கருதி, அந்தப் பகுதியில் உள்ள குடிசை வாழ்
மக்களுக்கு மேம்பாடு செய்வதற்காக இந்தத் திட்டத்தை அரசு
எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு கொடுத்
தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இங்கே வைக்கப்பட்டு இருக்கக்கூடிய நிதி
நிலை அறிக்கையைப் பற்றி ஆளும் கட்சி உறுப்பினர்கள்
பேசுகின்றபோது முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள்ளே மறைப்
பதற்கு முயற்சிக்கிறார்கள்; ஆனால் அது வெளியிலே அப்பட்ட
மாகத் தெரிகிறது. இதற்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு
உறுப்பினர் விஸ்வநாதன் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்
பிட்டார்கள். ஒரு மாநிலத்திற்கு இருக்கக்கூடிய அதிகாரங்கள்
எவ்வளவு? மத்திய அரசிற்கு எந்த அளவிற்கு அதிகாரங்கள்
இருக்கின்றன என்பதைப் பற்றிப் பேசும்போது, அவர்கள் துரோ
கம் என்ற வார்த்தையை இங்கே பயன்படுத்தினார்கள். இதற்கு
மேலே வார்த்தையில்லை. நாம் 2,000 கோடி எதிர்பார்க்கி
றோம். 900 கோடி இங்கே அனுமதிக்கப்படுகிறது. 57 கோடி
ரூபாய் உள்ள ரயில்வேத் திட்டத்திற்கு வெறும் 75 லட்சம்

தான் வழங்கப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு துரோகத்
தன்மையை இன்றைக்கு மத்திய அரசாங்கம் செய்துகொண்டிருக்
கிறது என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்ட அவர், கடைசியிலே,
முடிவுரையிலே பேசுகிறபோது. இந்தச் சமுதாயத்தில் உள்ள
எல்லாத் தரப்பினரும் பாராட்டக்கூடிய அளவிற்கு இந்த பட்ஜெட்
அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எப்படி முடியும்?
இது ஏதோ ஒரு கனவுலகத்தில் சஞ்சரிப்பது போல் இருக்கிறது.
மாநிலத்திற்கு இருக்கக்கூடிய அதிகாரமோ மிகமிகக் குறைவு.
இருக்கக்கூடிய அதிகாரத்தையும், வரி வசூல் செய்யக்கூடிய
அதிகாரத்தையும் பறித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்
பட்ட ஒரு சூழ்நிலையில், தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளை
யெல்லாம் ஏற்றுக் கொண்டு, அவர்கள் மனதார வரவேற்கக்கூடிய
அளவுக்கு, பாராட்டக்கூடிய அளவுக்கு பட்ஜெட் போட்டிருக்
கிறீர்கள், அல்லது பட்ஜெட் அமைந்திருக்கிறது என்று சொல்
வது உண்மையிலேயே வேடிக்கையான கதை போன்று இருக்
கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

நாம் பார்க்கிறோம், கடந்த ஆண்டு வறட்சியால் கடுமை
யான பாதிப்பு. குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத சூழ்நிலை
யில், தமிழ்நாட்டு மக்கள் அவதிப்பட்ட நேரத்தில் கூட, மத்திய
அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்த பணம் இங்கே அனுப்பப்பட
வில்லை. நாலில் ஒரு பாகம் கூட அங்கே அனுமதிக்கப்பட
வில்லை. அதில் மானியத்தை எடுத்துக் கொண்டால், மிக மிக
குறைவு. ஆக, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் வாடி வதங்கிக்
கொண்டிருந்த தமிழ் நாட்டு மக்கள், இன்றைக்கு பெருமழை
காரணமாக மேலும் பயங்கரமான ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்
பட்டிருக்கிறார்கள். வெள்ளத்தின் கோரப் பிடியிலிருந்து மீளச்
முடியாமல், தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்ட மக்கள்
தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். தமிழகத்து தென்
மாவட்டங்களின் நிலைமை மிக மிக பயங்கரமாக இருக்கிறது.

இப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம் கூட, மத்திய அரசாங்
கம் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர, ஏதாவது
அதற்கு நடவடிக்கை எடுத்தார்களா? அதைப்பற்றி ஏதாவது
சொல்லியிருக்கிறார்களா? தமிழ்நாட்டு மக்களுக்கு உதவி
செய்திட வேண்டும் என்ற முறையிலே அவர்கள் தங்களின்
விவாதத்திலோ, அல்லது அந்த உணர்வையோ, அல்லது அதற்
கான குரலையோ அவர்கள் எழுப்பியிருக்கிறார்களா? இல்லை.
இப்படி எந்த அரசாங்கத்தினாலும் காப்பாற்றப்பட முடியாமல்,
தமிழக மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.
ஆனால், இங்கே பிரமாதமான பட்ஜெட்டைப் போட்டு விட்
டோம் என்று பேசுவது உண்மைக்கு மாறாக இருக்கிறது என்பதை
மட்டும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





அதே நேரத்திலே, நம்முடைய மாநிலத்தில் கடந்த ஆண்டு
வறட்சி ஏற்பட்டது. விவசாயமே இல்லை. இந்த ஆண்டு
வெள்ளம் வந்து, அறுவடையே செய்ய முடியவில்லை. பயிர்
களைப் பாதுகாக்கவே முடியவில்லை, அழிந்துவிட்டது. இப்படிப்
பட்ட சூழ்நிலையில் நாம் அரிசி வேண்டும் என்று கேட்கிறோம்.
நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அதற்காக
ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்கள் (குறுக்கீடு). 7 மணி
நேரம் இருந்தார்கள். ஆனால் என்ன முடிவு? ஒன்றும் இல்லை.
கிடைக்கும் என்று இன்னமும் நம்புகிறீர்களே, இன்றைக்கும்
சொல்கிறீர்கள் நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று. மத்திய
அரசாங்கத்தைப் பாராட்டுகிறீர்கள்.

மத்திய அரசாங்கத்தைப் பாராட்டுங்கள், தவறு இல்லை.
அதைப்பற்றி கவலை இல்லை. இவையெல்லாம் உங்கள் அரசியல்
உறவினுடைய விளைவாக இருக்கலாம். ஆனால் உண்மை
நிலையை நீங்கள் தமிழ் நாட்டு மக்களுக்கு தெரிவிக்க வேண்
டாமா? இன்றைக்கு நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு அரிசி
கிடைக்கவில்லை. ஒரு லட்சம் டன் எதிர் பார்க்கிறோம்.
ஆனால் அவர்கள் 40 ஆயிரம் டன் கூட கொடுப்பதற்கு தயா
ராக இல்லை. கேட்டால், கோதுமை சாப்பிடுங்கள் என்று
இங்கே வருகை தருகிற அமைச்சர் ஒருவர் சொல்கிறார். கலாச்
சாரத்தைப் பற்றி பேசுகிறீர்கள், பண்பாட்டை பற்றி பேசு
கிறீர்கள். ஆனால் இதைத்தான் சாப்பிட வேண்டும் என்று
அவர் நமக்கு கட்டளையிடுகிறார். தேவையான அரிசியைக்
கொடுங்கள் என்று கேட்டால், கோதுமை சாப்பிடப் பழகிக்
கொள்ளுங்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை
மாறுகிறது.

ஆனால் கோதுமையை பொறுத்தவரையில் இன்றைக்கு மத்
திய அரசாங்கம் ஒரு டன்னுக்கு ரூ. 150 கொடுத்து கொள்முதல்
செய்கிறார்கள். அது அனுமதிக்கப்படுகிறது. ஆனால் அதே
நேரத்தில் நெல்லை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிக்கு, அந்த
அளவுக்கு கொடுக்க முடியாது என்று வலுக்கட்டாயமாக தெரி
வித்துக் கொண்டிருக்கிறார்கள். அக்ரிகல்ச்சர் பிரைஸ் கமி
ஷன் கூட அதனுடைய குறிப்பில் விவசாய செலவைப் பொறுத்த
வரையில், கோதுமையை காட்டிலும், நெல்லினுடைய உற்பத்திச்
செலவு அதிகமாக இருக்கிறது என்று ஒத்துக் கொள்கிறார்கள்.
அப்படி இருந்தாலும் நாங்கள் நெல்லுக்கு நியாயமான விலை
கொடுக்க முடியாது. கோதுமையை காட்டிலும் 15, 20 ரூபாய்
குறைவாகத்தான் கொடுப்போம் என்று சொல்வார்களேயானால்,
தமிழகத்தினுடைய விவசாயிகளின் வயிற்றிலே அடிக்கிறார்
கள் மத்திய சர்க்கார் என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்றைக்கு பார்க்கிறோம் நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு
110 ரூபாய் கொடுக்கப்படுகிறது—சாதாரணமாக நெல்லை
மாவட்டத்தில் இருக்கக்கூடிய நிலை இது—ஆனால் அதே

[திரு. ரா. கிருஷ்ணன்] [1984 மார்ச் 9

நேரத்தில் மார்க்கெட்டுகளில் ஒரு குவிண்டால் அரிசி 400 ரூபாய்க்கு சாதாரணமாக விற்கப்படுகிறது. எவ்வளவு வித்தியாசம்? நெல்லை அரிசியாக்கக்கூடிய செலவு குறைவாகதான் இருக்கும். 25 ரூபாய் அல்லது 30 ரூபாய் என்றே வைத்துக்கொண்டாலும் கூட, இந்த அளவுக்கு அதிகமான வித்தியாசம் இருக்கிறதே. 3 மடங்கிற்கு மேல் வித்தியாசம் இருக்கிறதே, அதைக்கேட்பதற்கு அரசாங்கம், குறிப்பாக தமிழக சர்க்கார் தவறியிருக்கிறது. விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்க மத்திய சர்க்கார் தயாராக இல்லை. நியாய விலைக் கொடுக்க தயாராக இல்லை. கொடுக்க மறுக்கிறது. அப்படிக் கொடுப்பதற்கு மறுக்கிறபோது, அதை வலுக்கட்டாயமாக வாங்குகிற அளவுக்கு நீங்கள் தயாராக இல்லை, அதுதான் உண்மை. ஆனால் இப்படி ஒரு பக்கம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் விவசாய மக்கள், தாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக உற்பத்தி செய்த நெல்லைக் கூட நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியாத அவல நிலையில் இருக்கிறார்கள். ஆனால், எல்லா தரப்பினரும் இந்த பட்ஜெட்டை பாராட்டுகிறார்கள். இந்த ஆட்சியிலே எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே இன்றைக்கு இருக்கக்கூடிய பயங்கரமான நெருக்கடியின் காரணமாக எல்லாத் தரப்பினர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இன்றைக்கு அரிசி வெளி மார்க்கெட்டிலே கிலோ 4 ரூபாய்க்கு விற்கிறது. அதன் காரணமாக நியாய விலைக் கடைகளிலே வழங்குகிறோம் என்று சொல்கிறீர்கள். 20 கிலோ கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுக்கிறீர்கள். ஆனால் 2 கிலோ கூட கொடுக்கத் தயாராக இல்லை, ஆனால் நாங்கள் வழங்குகிறோம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். உண்மை என்ன? கிராமப்புறங்களிலே என்ன நிகழ்ச்சி நடைபெறுகிறது என்றால் ஒரு நாளைக்கு மூட்டை இறக்கப்படுகிறது, முதல் நாள் வந்தால்தான் 2 கிலோ அரிசி கொடுக்கப்படும் என்ற நிலை இருக்கிறது. மறுநாள் அரிசி இல்லை என்று சொல்லப்படுகிறது. அதுதான் உண்மை. கணக்கைப்பார்த்தால் சரியாக இருக்கிறது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள் என்றால், கணக்கைப் பார்த்தால் சரியாகத்தான் இருக்கும். கணக்கு எழுதத் தெரியாதா? வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே இதைப்பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. கணக்கைப் பார்த்துவிட்டு விநியோகம் செய்யப்பட்டது என்று சொல்லவேண்டாம். திடீரென்று அனைத்துக் கார்டுகளையும் சேகரித்து எத்தனை கார்டுகளுக்கு வழங்கப்படவில்லை என்று பார்த்தால் உண்மை புரிந்துவிடும். கணக்கை அதற்குப் பிறகு பார்த்தால் நிச்சயம் இதற்கும் அதற்கும் ஒத்துவராது. அந்த அடிப்படையில் தூத்துக்குடியில் சில கார்டுகளை வாங்கி சரிபார்க்கிற நேரத்திலே மோசடி கணக்கு என்று துலக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒரு இடத்திலே எடுத்தாலும் எல்லா இடங்களிலேயும் அப்படி நடவடிக்கை எடுக்க



1984 மார்ச் 9] [திரு. ரா. கிருஷ்ணன்]

வேண்டுமென்று விரும்பினோம், வேண்டினோம். ஆனால் நடவடிக்கை கிடையாது. கிராமப்புறங்களிலே உள்ள நியாய விலைக் கடைகளிலே முறையான விநியோகம் இல்லை. பயங்கரமான ஊழல் நடக்கிறதுதான் உண்மை. 2 கிலோ அரிசியாவது கிடைக்கவேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதுவும் கிடைக்கவில்லை. விலைவாசிகள் ஏறிக்கொண்டிருப்பதால் நியாயவிலைக் கடைகளிலே கொடுக்கப்படுவதற்கும் வெளிமார்க்கெட்டிலே கொடுக்கப்படுவதற்கும் இடையிலே விலைவாசி இரண்டு மடங்கு ஆகியிருக்கிறது. அந்தக் குறைபாட்டைத் தவிர்ப்பதற்கு நியாய விலைக் கடைகள் மூலமாக அரிசி வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 20 கிலோ வேண்டுமென்பது நியாயமான கோரிக்கை. நீங்களும் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள். அந்த அடிப்படையில் வழங்குவதற்கு மத்திய அரசிடம் கேட்டு வாங்குகிற முறையிலே வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிவில் சப்ளைஸ் நடைமுறைகளைப் கண்காணிப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. ஒரு நாள்தான் கூடினார்கள். அவ்வளவுதான். இதைப்பற்றி வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலேயும் தொடர்ந்து சொல்கிறோம். கூட்டப்படவில்லை. கணக்கைப் போய் சரிபார்க்கக்கூடாது. காரணம் அதற்கு அதிகாரம் இல்லை. எதற்கு கூடுகிறோம், உட்கார்ந்து பேசுவதற்கு, செக்கப் பண்ண முடியாது, குறைபாடுகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. குறைபாடுகளை நீக்குகின்ற முறையிலே குழு முறையாகக் கூடவில்லை.

சர்க்கரையினுடைய எடை, பொதுவாக அரிசி, மற்றப் பொருட்களின் எடை குறைகிறது. பல இடங்களிலே அப்படி இருக்கிறது. அரிசியைப் பொறுத்தவரையில் சில இடங்களில் குறை இருக்கிறது. சர்க்கரையை பொறுத்தவரையில் பல இடங்களில் குறைபாடு இருக்கிறது. ஒரு கிலோ சர்க்கரை வாங்கினால் 900 கிராம் தான் இருக்கிறது அல்லது 850 கிராம் தான் இருக்கிறது. பல இடங்களிலே குறைபாடு இருக்கிறது. இந்தக் குறைபாட்டை நீக்க ஒரு வழிசெய்யலாம். ஏற்கனவே பால் பாலித்தீன் பாக்கெட்டிலே வழங்கப்படுகிறது. அதைப் போலே சர்க்கரையை பாலித்தின் பாக்கெட்டிலே போட்டு அடைத்து வழங்க வேண்டும். அதற்காக 5 பைசா கூடுதலாக செலவு வந்தாலும்கூட கன்ஸ்யூமர்ஸ் அதைக் கொடுக்கத் தயாராக இருப்பார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு வழிசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கிராமத்திற்கு ஒரு கடை இருக்கிறது. கிராமத்தைச் சுற்றி பல குக்கிராமங்கள் இருக்கின்றன. சில குக்கிராமங்கள் 5 கிலோ மீட்டர் தூரத்தில் கூட இருக்கின்ற நிலையிருக்கிறது. அங்கே இருக்கின்ற சாதாரண விவசாயத் தொழிலாளர்கள் எந்த நேரம் அங்கே அரிசி போடுவார்கள் என்று தெரியாத

[திரு. ரா. கிருஷ்ணன்] [1984 மார்ச் 9

நிலையில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது, மிகுந்த சிரமப்படுகிறார்கள். உதாரணமாக தென்காசிக்குப் பக்கத்திலே பண்பொழில் கிராமம் இருக்கிறது, அருகிலே 5 கிலோ மீட்டர் தொலைவிலே மேக்கரை என்ற குக்கிராமம் இருக்கிறது, அங்கிருந்து விவசாயத் தொழிலாளர்கள் வந்து வாங்குவது கஷ்டம். ஆகவே இதைப்பற்றி சிவில் சப்ளைஸ் அதிகாரிகளுக்கு எழுதிக்கொடுத்தும் அது கமிஷனருக்கு வந்து இருக்கிறது. என்று சொல்கிறார்கள். இவர்கள் ஒப்புதல் கொடுத்தபிறகு தான் மாற்றம் செய்யப்படும் என்று சொல்கிறார்கள். இங்கே அது கிடப்பிலே கிடக்கிறது. ஆகவே விரைவிலே நடவடிக்கை எடுத்து மாற்றம் செய்து மக்களுக்கு பயன் அளிக்கின்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10.)

அடுத்து என். ஆர். ஈ. பி. திட்டம். கிராமப்புற தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் என்பது வேலைக்கு உணவு வழங்குகிற திட்டம். இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு குறிப்பாக வேலை கொடுக்க வேண்டும், கிராமப்புறங்களில் உள்ள நிலச்சுவான்தார்கள் பிடியிலிருந்து அவர்களை தளர்த்த வேண்டும், அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி கிடைப்பதற்கு ஒரு வழிவகை நிச்சயமாக உண்டா என்றால் இல்லை. இந்தத் திட்டத்தை முறையாக அமுல் நடத்தினார்களா என்றால் இல்லை. இன்றைக்கு காண்டிராக்ட் மூலமாகத்தான் இந்த வேலைகளை விட்டு செய்கிறார்கள் என்பது தான் உண்மை. இது சம்பந்தமாக நான் புகார் செய்கின்றபோது கூட சொன்னார்கள். இல்லை, இல்லை இதை கிராம சேவக் மூலமாகத்தான் நாங்கள் செய்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி நிச்சயமாக செய்வது கிடையாது. ஒரு குறிப்பிட்ட வேலை முடிந்தவுடனே அன்றைக்கே அரிசி விநியோகம் செய்யப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை. ஒரு குறிப்பிட்ட வேலை முடிந்து பல நாட்களுக்கு பிறகுதான் அரிசி விநியோகம் செய்யப்பட்டு இருக்கிறது, அந்த தாலுக்கா ஆபிஸிலிருந்து. இதிலிருந்தே நாம் புரிந்துகொள்ள முடியும். இந்தத் திட்டத்தின் உண்மையான நோக்கம் என்ன என்றால் என்றைக்கு வேலை செய்தார்களோ அன்றைக்கே அரிசி கொடுக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு வாரம், 10 நாள் கழித்து தான் அரிசி விநியோகம் செய்யப்பட்டு இருக்கிறது இந்த வேலை காண்டிராக்ட் மூலம் நடக்கிறது என்பது தான் உண்மை. ஆனால் உண்மையில் இந்தத் திட்டத்தினுடைய நிலைமையை புரிந்துகொள்ளாமல் இதை முறையாக செயல்படுத்தவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் ஐ. ஆர். டி. பி. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் இதற்கு மானியம் வழங்கப்படுகிறது. மானியத்திற்கு சான்றிதழ்கள் வழங்கக்கூடிய அதிகாரிகள் உரிமையோடு



1984 மார்ச் 9] [திரு. ரா. கிருஷ்ணன்]

லஞ்சம் வாங்குகிறார்கள். இந்தச் சூழ்நிலையை மாற்றி அமைக்கப்பட வேண்டும். எல்லா அதிகாரிகளையும் அதாவது ரெவின்யூ அதிகாரிகள், டெவலப்மெண்டு அதிகாரிகள், பாங்கு அதிகாரிகள், கால்நடைத்துறை அதிகாரிகள் எல்லோரையும் ஒரு நாள் ஒரு இடத்தில் 5 கிராமங்களை ஒட்டுமொத்தமாக சேர்த்து முன் கூட்டியே நோட்டீஸ் கொடுத்து ஒரு கேம்ப் போட்டு அன்றைக்கே மனு வாங்க வேண்டியது சான்றிதழ் வழங்க வேண்டியது, லோன் வழங்க வேண்டியது இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டால் இந்த ஊழலை தடுப்பதற்கு நிச்சயமாக முடியும் என்பதை அரசு உணர்ந்து இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் இன்றைக்கு தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் குளங்கள் குட்டைகள் வேலைகளைஎவ்வளவு சிறப்பாக செய்து இருக்கிறார்கள் என்பதற்கு ராமநாதபுரம் மாவட்டத்தில் இன்றைக்கு 35 குளங்கள் உடைந்து போய் விட்டன என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்குனேரி தாலூகாவில் 12 குளங்கள் உடைந்து போய் இருக்கிறது. அதனால் தாங்க முடியவில்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்திற்கும் குளங்கள் உடைந்ததற்கும் காரணம் கண்டு பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். உண்மையிலேயே பெய்யாத மழை இன்று பொழிவதால் திருநெல்வேலி மாவட்டத்தில் அதன் காரணமாக அணைகளே கூட உடைந்து இருக்கின்றன, அதிகமாக தண்ணீர் வந்ததன் காரணமாக. ஆகவே தயவு செய்து குளங்கள் உடைந்ததற்கும் தன்னிறைவுத் திட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாய தொழிலாளர்களுக்கு பயிர் பாதுகாப்புத் திட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டது. இதற்காக அம்பாசமுத்திரம் ஆழ்வார் குறிச்சி என்ற கிராமத்தில் ஒரு ஏக்கருக்கு 35 ரூபாய் வீதம் 74 பேரிடம் வசூல் செய்யப்பட்டது 1982 ஆம் வருடத்தில். ஆனால் தீ விபத்து ஏற்பட்டது. அதற்கு அந்த உதவி வழங்கப்படவில்லை. இது தான் நாம் நடத்தக் கூடிய அந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டம். அறிவித்து நடை முறைப்படுத்துகின்ற பயிர் பாதுகாப்புத் திட்டம் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதே போல் ஆதி திராவிடர் நலன் பொறுத்தவரையில் பல்வேறு குறிப்பில் அதிகமாக எழுதியிருக்கிறார்கள். இங்கே ஆனால் சமீபத்தில் உச்ச நீதி மன்றத்தில் ஒரு தீர்ப்பு. அதாவது கொண்டாரெட்டி என்றும் சொல்லி இருந்தவர்கள் மோசடியாக

[திரு. ரா. கிருஷ்ணன்] [1984 மார்ச் 9

சான்றிதழ்கள் பெற்றார்கள் என்றும் அது செல்லாது என்றும்
எல்லாம் நாம் பார்த்தோம். சுப்ரீம் கோர்ட்டினுடைய
டைரக்ஷன் என்ன என்றால் இங்கு இருக்கக் கூடிய சீப் செக
ரட்டரி தலைமையில் குழு போட்டு அதை ஆய்வு செய்து இந்த
குறைபாட்டை தவிர்க்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.
அதை இந்த அரசில் என்ன செய்தார்கள் என்பதை நான் கேட்க
விரும்புகிறேன்.

அடுத்து என் தொகுதியைப் பொறுத்தவரையில் மருத்துவ
மனை இல்லை. அது பற்றி பல முறை இந்த மன்றத்தில் பேசி
ஆயிற்று. புளியங்குடி நகராட்சியில் அங்கே மருந்தகம் இருக்
கிறது. மருத்துவமனை இல்லை. சிவகிரி தாலுக்கா
சென்டர் ; அங்கே மருந்தகம் தான் இருக்கிறது ; மருத்துவ
மனை இல்லை.

வாசுதேவநல்லூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைப்
பொறுத்த வரையில் பத்து வருடங்கள் ஆகிவிட்டன, தரை மட்ட
மாக இருக்கிறது. அதைக் கட்டுவதற்கு வழி இல்லை. தொகுதி
யிலே இப்படிப்பட்ட ஒரு மருத்துவமனை இருக்கிறது. தாலுக்கா
சென்டரில், முனிசிபாலிட்டியில் மருத்துவமனை இல்லாமல் இருப்
பது வேதனையாக இருக்கிறது. தொடர்ந்து இதைப் பற்றிச்
சொல்லிக் கொண்டே வருகிறேன். இந்தக் குறைபாட்டை
நீக்குவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

சிவகிரிக்குப் பக்கத்தில், செண்பகவல்லி அணை சம்பந்தமாக
எடுத்துக் கொண்டால், அது கேரள அரசாங்கத்தினால் கட்டப்
பட வேண்டியது என்றாலும் நம்முடைய அரசாங்கம் பணம்
ஒதுக்க வேண்டும். அதையும் கட்டுவதற்கு நடவடிக்கைகளை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்
கிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு மாற்றுந் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவ
லர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 1984—85 ஆம் ஆண்டு
நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத்
தெரிவிக்க விருப்புகிறேன்.

''துன்பம் உறவரினும் செய்க துணிவு ஆற்றி
இன்பம் பயக்குப் வினை''

என்ற வள்ளுவரின் திருக்குறளைச் சொல்லி, கடுமையான வறட்சி
ஏற்பட்டாலும், இயற்கைச் சீற்றத்தால் கடும் சேதம் ஏற்பட்டா
லும், அவற்றையெல்லாம் தாங்கி மாண்புமிகு இதய தெய்வம்
தமிழக முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் உடனுக்குடன்



1984 மார்ச் 9] [திரு. ஆர். ரங்கசாமி]

அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று, பொது மக்களுக்குத் தேவை
யான காரியங்களை ஆற்றுகின்ற நல்லதொரு நிதி நிலை
அறிக்கை இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் சொல்
வார்கள், இன்பம் ஒன்றினைப் போல் தனியாக வரும் ; துன்பம்
படையோடு பல வழிகளில் வரும் என்று சொல்வார்கள். அதைப்
போல, இந்த அரசின் மீது, புரட்சித் தலைவர் மீது, அனைத்து
எதிர் கட்சிகளும் ஒன்றாகப் பல வழிகளில் பல போராட்டங்
களைச் செயற்கையாக ஏற்படுத்தினாலும், துணிவுடன் மக்கள்
துணை கொண்டு சிறப்பாகச் செயலாற்றி வருகிறது இந்த அரசு.
அதற்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் இந்த நிதி நிலை
அறிக்கை அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் பொறுப்
போடு கருத்துக்களைச் சொல்வதை விட்டு விட்டு, நையாண்டி
பேசியும், கேலி பேசியும் விமர்சனம் செய்வதைப் பார்த்தோம்.
மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் பேச வேண்டிய
தெல்லாம் பேசி, ஆட வேண்டிய ஆட்டமெல்லாம் ஆடி, முடிவில்
இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க டாக்டர் நாவலர்
தேவையில்லை, ஒரு முதலாண்டு பி. காம். மாணவன் போது
மென்று சொல்லி, இது ஒரு சினிமா நோட்டீசைப் போல் உள்ளது
என்று சொல்லி முடித்தார்கள். ஆனால் என்னுடைய கருத்தாக
நான் தெரிவிக்க விரும்புகிறேன், மாண்புமிகு உறுப்பினர் துரை
முருகன் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையின் மீது சொல்லிய
கருத்துக்களைச் சொல்ல எம்.ஏ., பி.எல்., படித்த மாண்புமிகு
உறுப்பினர் துரைமுருகன் தேவையில்லை.

* * * *

போதும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு மாற்றுத் தல்லவர் : (திரு. வே. இரா. ஜெயராமன் :)

* * * *

என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது (குறுக்கீடு).

திரு. ஆர். ரங்கசாமி : இருள் மண்டிக் கிடந்த தமிழ்ச்
சமுதாயத்தை ஒளி பெறச் செய்தவர் புரட்சித் தலைவர்
தமிழுக்கு, தமிழ் மொழிக்குப் புகழ் சேர்த்தவர் புரட்சித்
தலைவர்.

---

*மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.

[திரு. ஆர். ரங்கசாமி] [1984 மார்ச் 9

மொழி உணர்வு, நாட்டுப் பற்று, தொழில் வளம், தமிழர் பண்பாடு இவைகளைக் காக்க, மேலும் வளர்க்க, ஆணிவேர் கல்வித் துறை ஆகும். அதை உணர்ந்து இந்த நிதி நிலை அறிக்கையில் கல்வித் துறைக்கு 404.76 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும், வேறு எந்த முதல்வரும் செய்யாத சாதனையை இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் ஐந்து பல்கலைக் கழகங்களைத் துவக்கியுள்ளது. அறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், தமிழ்ப்பல்கலைக் கழகம் என்றும், அண்மையில் கொடைக்கானலில் துவக்கிய அன்னை தெரசா பெண்கள் பல்கலைக்கழகம், இந்தியாவிலேயே பம்பாயில் தான் பெண்கள் பல்கலைக் கழகம் உள்ளது ; தற்பொழுது தமிழகத்தில் துவக்கப்பட்டுள்ளது. பெண் அடிமையைப் போக்க வேண்டும், பெண் குலத்தின் பெருமையை உயர்த்த வேண்டும், புதுமைப் பெண்களைப் புரட்சிப் பெண்களைக் காண வேண்டுமென்றான் புரட்சிக் கவி பாரதி. அவர் எண்ணத்தைத் தாய்க்குலத்தின் தலைமகன் புரட்சித் தலைவர் அவர்கள் செயலாற்றி இருக்கிறார்கள். பட்டப்படிப்பு படித்து விட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 10 ஆண்டுகள் ஆகியும் வேலை கிடைக்காமல் மாணவர்கள் அவதிப்படும் நிலைமையை மாற்ற தமிழகத்தில் தொழில் கல்வியை அரசு கொண்டு வந்திருக்கிறது. பல் தொழில் கல்வியை அதாவது பாலிடெக்னிக்குகளை அதிக அளவில் அனுமதித்து மாணவர்கள் அதிகமான அளவிலே தொழில் கல்வியினைப் பெறக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(பிற்பகல் 12—20)

அந்த அடிப்படையில் இந்த ஆண்டு வரலாறு காணாத அளவுக்கு பல்தொழில் பள்ளிகளையும், பாலிடெக்னிக்குகளையும் அனுமதித்து இருப்பதை நான் பாராட்டுகிறேன். நகர்ப்புறங்களில் கல்லூரிகளில் இருந்த மேல்நிலைக் கல்வியை கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளுக்குக் கொண்டுவந்து ஏழைகளின் குழந்தைகள் மேல்நிலைக் கல்வி பெறச் செய்தவர் புரட்சித் தலைவர். மேல்நிலைக் கல்வித் திட்டம் கொண்டு வந்ததற்குப் பிறகுதான் நமது கல்வியின் தரம் மேலை நாடுகளில் உள்ள அளவுக்கு உயர்ந்துள்ளது என்று அங்கிருந்து வந்தவர்களே பாராட்டுகிறார்கள்.

அடுத்து விவசாயத் தொழிலாளர்களுக்காக இந்த அரசு பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்றது. தன்னிறைவுத் திட்டம், வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம், சத்துணவுத் திட்டம் போன்ற திட்டங்கள்



1984 மார்ச் 9] [திரு. ஆர். ரங்கசாமி]

வேறு எந்த மாநில அரசும் கொண்டு வராத திட்டங்களாகும். அப்படி இந்தியத் துணைக்கண்டத்திலே எங்குமே கொண்டு வராத திட்டங்களைத் தமிழகத்தில் புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்த அடிப்படையில் இன்றைய தினம் விவசாயத் தொழிலாளர்களுக்காகப் பாதுகாப்புத் திட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கின்றது. இதற்கு முன்னால் இருந்த எந்த அரசும் இதுபோன்றத் திட்டங்களை கொண்டுவரவில்லை. அவர்கள் விவசாயத் தொழிலாளர்களை நினைத்துக்கூடப் பார்த்தது கிடையாது. அதிகமான மழை பெய்தாலும் இவர்களுக்கு வேலையில்லை ; வறட்சி ஏற்பட்டாலும் வேலை இல்லை. ஆண்டுக்குப் பாதி நாட்கள் வேலை இல்லை. இப்படி பாதுகாப்பே இல்லாமல் சுமார் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் நமது நாட்டிலே இருக்கிறார்கள் ; சொற்ப நில விவசாயிகள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கென்று வாதாடுவதற்காக தொழிற்சங்கங்கள் இல்லை. காரணம் சந்தா செலுத்தும் நிலையில் இவர்கள் இல்லை. அப்படிப்பட்ட ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்க மக்கள் அங்காடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முதியோர் உணவுத்தொகை கொடுக்கப்பட்டுள்ளது சத்துணவுத் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு உணவு அளிக்கப்படுகின்றது. ஆண்டுக்கு ஒருமுறை அவர்களுக்கு வேஷ்டியும், சேலையும் வழங்கப்படுகின்றது. ரூபாய் 10 கோடியை இந்த அரசு செலவு செய்து விவசாயத் தொழிலாளர்கள் அனைவருக்கும் இலவசமாக வேஷ்டி சேலைகள் வழங்கியது. புரட்சித் தலைவரின் அரசு இதுபோன்ற பல உதவிகளை விவசாயிகளுக்குச் செய்து வருகின்றது. எனவே இதுபோன்ற திட்டங்களை விவசாயத் தொழிலாளர்களுக்காகச் செய்து வரும் அரசு இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயத் தொழிலாளர்களுக்காகப் பாதுகாப்புத் திட்டத்தை அறிவித்துள்ளது. இங்கே பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ''செப்டம்பர் 15 முதல் அதாவது அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளிலிருந்து இந்தத் திட்டம் செயலுக்கு வரும் என்று சொன்னீர்களே, அதற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கியுள்ளீர்களா ? அண்ணாவை ஏன் ஏமாற்றுகிறீர்கள்'' என்று கேட்டார்கள். ஆனால் யார் யாரை ஏமாற்றுகிறார்கள் என்பதைத் தமிழக மக்கள் கவனமாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். முதலமைச்சர் நிதியிலிருந்து 5 கோடி ரூபாயை ஒதுக்கி அந்தத் திட்டத்தைத் துவக்கி இருக்கிறார்கள்.

அதேபோல் வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்புத் திட்டம் கொண்டு வந்து 15 கோடி ரூபாயை ஒதுக்கியபோது ''15 கோடி ரூபாயில் அனைவருக்கும் வேலைவாய்ப்பு கொடுத்து விட முடியுமா ? இது ஏமாற்று வித்தை'' என்று சொன்னார்கள். இப்போது விவசாயத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் திட்டம் கொண்டுவந்தால், இதுவும் ஏமாற்று வேலை என்

[திரு. ஆர். ரங்கசாமி] [1984 மார்ச் 9

கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைக் குறிப்பிட விரும்பு
கிறேன். ஒரு திட்டம் கொண்டுவருகின்றபோது இந்த நாட்
டிலே இரண்டு கோடி விவசாயிகள் இருக்கிறார்கள் என்று
சொன்னால் உடனடியாக இந்த ஆண்டு அதற்காக நிதி ஒதுக்கித்
திட்டங்களைச் செயல்படுத்த முடியுமா என்று கேட்கிறேன்.
ஆகவே இதைக் கூட உணராமல் பேசுவது சரியாக இருக்குமா
என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு எத்தனையோ இன்னல்களைத் தாங்கிக்
கொண்டு, பற்றாக்குறை நிதியை வைத்துக்கொண்டு இப்படிப்
பட்ட புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டுவந்திருக்
கிறார்கள் என்று பாராட்டாவிட்டால் கூட பரவாயில்லை.
பாராட்ட மாட்டார்கள் என்பது தெரியும். வேப்ப மரத்தில்
மாங்கனியா கிடைக்கும்? நிச்சயமாக இல்லை. ஆகவே 16
கட்சிக் கூட்டணியின் பரிந்துரையை இதய தெய்வம் புரட்சித்
தலைவர் அவர்கள் எதிர்பார்க்கவும் இல்லை. லட்சோப லட்சம்
மக்களின் நம்பிக்கை நட்சத்திரத்தை, புரட்சித்தலைவரை
அந்த உழைக்கும் கரங்கள் பாராட்டிக் கொண்டிருக்கின்றன
கோடிக்கணக்கான ஏழை நெஞ்சங்கள் அவரை வாழ்த்திக்
கொண்டிருக்கின்றன.

தொழிலாளர் நலத்துறையில் தனிப் பிரிவு ஏற்படுத்தி
அனைவரையும் பதிவு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்களின் நேரடிப் பார்வையில் உள்பிரிவு ஏற்படுத்தி,
வெள்ளம், வறட்சி போன்ற காலங்களில் விரைவாக உதவிகள்
செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது பாராட்டுக்குரிய விஷய
மாகும். நம் நாட்டில் விவசாயத் தொழில் செய்பவர்களின்
புள்ளி விவரமும் நமக்குக் கிடைக்கும். பணி செய்யும்போது
உயிரிழக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு 5,000 முதல்
10 ஆயிரம் வரை அரசு உதவி செய்யும் என்ற திட்டம் பாராட்
டுக்குரியதாகும். ஆயுள் இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் சேர்த்து
அதற்கான தொகையில் ஒரு பகுதியை அரசு செலுத்தும்
திட்டம் மக்களால் வாயார வாழ்த்தப்படுகின்ற திட்டமாகும்.
ஆனால் மீதி உள்ள தொகையை விவசாயத் தொழிலாளர்கள்
செலுத்துவது மிகவும் கடினமாகும். ஆனாலும் வைத்துள்ள
விவசாயிகளிடம் அதைப் பெற்று— நிலவரியுடன் அதை வசூல்
செய்து—முழுமையாக அரசே செலுத்த வேண்டுமென்ற என்
னுடைய பணிவான வேண்டுகோளை இந்த நேரத்திலே
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது ஆதி திராவிட விவசாயத் தொழிலாளர்களுக்கு
வீட்டு மனை அல்லது நிலத்தை விலைக்கு வாங்கி, 3 சென்ட்
நிலத்தை அரசு இலவசமாகக் கொடுக்கிறது. அதுவும் புரட்சித்
தலைவர் ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட திட்டமதான்.
அந்தத் திட்டத்தை அனைத்து விவசாயத் தொழிலாளர்
களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 9] [திரு. ஆர். ரங்கசாமி]

கிராம வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் ஆதி
திராவிடர்களுக்கு வீடு கட்டக் கடன் கொடுத்து அதில் ரூ. 1,000-
-ஐ மானியமாக வழங்கி, மீதியை வட்டியில்லாமல் 15 ஆண்டு
களில் சுலப தவணைகளில் வசூல் செய்யும் திட்டத்தைப்
புரட்சித் தலைவர் அரசு கொண்டு வந்தது. அந்தத் திட்டத்தை
அனைத்துத் தொழிலாளர்களுக்கும் விரிவு படுத்த வேண்டு
மென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு கொண்டு வந்துள்ள திட்டம் நாடு முழுவதும்
பெருவாரியான கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக்
கீழே வாழ்கின்ற ஏழைகளுக்கு போய் சேருகின்றது என்பதைத்
நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சிகர
மான இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு
புரட்சித் தலைவர் அரசுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்
கொள்வதோடு நீண்ட நெடுங்காலமாக என்னுடைய தொகுதி
யிலே இருந்துவந்த பெரு வெள்ளம் திட்டத்திற்குச் சென்ற
ஆண்டு ரூ. 3.81 கோடி புரட்சித் தலைவர் அரசு அனுமதி
அளித்து, இந்த நிதி நிலை அறிக்கையிலே அதைச் சேர்த்து
தேவையான பணங்கள் வழங்கப்படும் என்று சொல்லியிருக்
கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுகளைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே சத்தியமங்கலத்தில் ஆங்கிலேயர்
காலத்திலேயிருந்து இரண்டே படுக்கைகள் கொண்ட
சிறிய மருத்துவ மனை தான் இருந்து வந்தது. தி.மு.க. ஆட்சிக்
காலத்திலே கூட அப்பொழுதிருந்த சட்டமன்ற உறுப்பினர்
ஒரு கமிட்டியை போட்டு, நிதி வசூல் செய்தார்கள். ஆனால்,
அப்பொழுதெல்லாம் எதுவும் செய்யப்படாத அந்த மருத்துவ
மனைக்கு புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் ரூ. 44 இலட்சம்,
ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே
இப்படிப்பட்ட நல்ல திட்டங்களைக் கிராமப்புறங்களுக்கு
அளித்திருக்கின்ற புரட்சித் தலைவர் அரசை வாழ்த்தி, இந்த
நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமர்கிறேன், நன்றி.
வணக்கம்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த
அவையிலே சமர்ப்பித்திருக்கின்ற பட்ஜெட் மீது இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் பேச விரும்புகிறேன்.
இந்த பட்ஜெட்டானது தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு மயக்க
மாத்திரை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
அதாவது, தமிழ்நாட்டு மக்களுக்கு தூக்க—மயக்க மாத்திரை.
தமிழ் நாட்டிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய தொல்லை
களை, துன்பங்களை, வறுமைகளை, வெள்ளத்தினால்,
வறட்சியினால், புயலினால், ஏற்பட்டிருக்கக்கூடிய தாங்
கொணா கொடுமையில் இருக்கக்கூடிய தமிழக மக்களை,

[திரு. ஏ. டி. கருப்பையா] [1984 மார்ச் 9

மயக்கத்தில் ஆழ்த்தக்கூடிய ஒரு மயக்க மாத்திரையாகத்தான் இருக்கிறது என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30).

அதே நேரத்தில் இந்த மயக்க மாத்திரையான பட்ஜெட் 1 மணி நேரம் அல்லது 1½ மணி நேரம்தான் அவர்களை மயக்கத்தில் ஆழ்த்த முடியும். அவ்வளவுதான் அதற்குச் சக்தி இருக்கிறது. மயக்கம் போனால், மறுபடியும் அவர்கள் எப்படி முன்னால் கொடுமைகளை, துன்பங்களை, கஷ்டங்களை, துயரங்களை, அனுபவித்தார்களோ, அப்படிப்பட்ட முறையில் துன்பங்களை, துயரங்களை அனுபவிக்கிற நிலையில் இந்த பட்ஜெட் இருக்கிறது என்பதைச் சொல்லிச் சொள்ள விரும்புகிறேன்.
கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற கடுமையான வறட்சி; அதற்கு பின்னாலே பெய்த கடுமையான மழை காரணமாக ஏற்பட்ட சேதங்களை தீர்ப்பதற்கு எந்தவிதமான உருப்படியான திட்டமும் இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை என்பதை இந்த நேரத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். விலைவாசி உயர்வாலும், . வேலையில்லாத கொடுமையாலும் பசி பட்டினி என்று நிர்க்கதியாக இருக்கிறதமிழ் நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு எந்தத் திட்டமும் இந்த அறிக்கையிலே கிடையாது. கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்டிருக்கிற இயற்கையின் சீற்றத்தால் மக்கள் படும் துன்பங்களை, துயர்களைத் துடைப்பதற்கு, ஏழை மக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையிலே எந்தத் திட்டமும் இந்த அறிக்கையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் வெள்ளக் கொடுமையால் ஏற்பட்டிருக்கிற பாதிப்புகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை ஒன்றும் இதில் கிடையாது. அதோடு மட்டுமல்லாமல் தன்னிறைவுத் திட்டம் என்று சொல்லி ஏற்கனவே அதில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்தத் தன்னிறைவுத் திட்டத்திலே கொண்டு வந்த நடவடிக்கைகளைப் பார்த்தால், குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துவதாகச் சொல்லி தூர் வாரிவிட்டு கணக்கு எழுதிவிட்டார்கள். ஊரணி, குளங்கள் போன்றவற்றில் இருக்கிற மண்ணை சுரண்டியெடுத்து மேலே போட்டு விட்டு அறிக்கை கொடுத்து விட்டார்கள். ஆகவே இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் தமிழ்நாட்டில் இருக்கிற பல மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டத்தால் எந்தவிதமான. நன்மையும் விளையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் குறிப்பாக பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்திலே—நான்



1984 மார்ச் 9] [திரு. ஏ. டி. கருப்பையா]

ஏற்கெனவே மாவட்ட வளர்ச்சி மன்றக்கூட்டத்திலே பல முறை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஆளியாறிலே இன்றைக்கு நீர்வற்றி போயிருக்கிறது. ஆகவே அந்த அணையில் தண்ணீர் இல்லாத இந்த நேரத்தில் அதற்குப் பின்னாலே இருக்கிற கால்வாய்களை, ஓடைகளை தூர் எடுத்துவிடுவார்களானால், மழை காலத்திலே ஆளியாறு அணையில் தண்ணீர் நிரம்புகிறபோது விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். நீர் இல்லாத பற்றாக்குறை அதிகமாக இருக்காது என்று சொன்னேன். அதை முறையாக செய்யவில்லை. அந்தப்பணிக்ளை எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல் சத்துணவுத் திட்டம் சம்பந்தப்பட்ட வரையில் சில விஷயங்களைச் சொல்ல வேண்டும். இந்தத் திட்டம் முறையாக நடக்கிறதா என்பதை அரசு கண்காணிக்க வேண்டும். இதில் ஏற்படுகிற தவறுகளைக் களைவதற்கு முயல வேண்டும். இடையிலே இருக்கிற தரகர்கள் சத்துணவு ஒழுங்காக குழந்தைகளுக்கு போய்ச் சேராமல் தடுத்து தங்களுடைய வீடுகளுக்குக்கொண்டு போகிறார்கள். அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சத்துணவுத் திட்டத்திலே வேலை செய்யக் கூடிய பணியாளர்களுக்கு, ஆயாக்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அது மிகவும் குறைவான தொகையாகும். அவர்கள் பத்து மைல், பதினைந்து மைல் தூரத்திலிருந்து சத்துணவு மையங்களுக்கு வரவேண்டியிருக்கிறது. ஒரு நாளைக்கு போக வர 4 ரூபாய் பஸ்ஸிற்காக அவர்களுக்கு தேவைப்படுகிறது. இதனால் அவர்கள் கடனாளிகளாக ஆகி இருக்கிறார்கள். ஆகவே பலபேர்கள் சத்துணவு மையங்களுக்கு வருவதே இல்லை. ஒன்றிரண்டு பேர்கள் தான் சத்துணவு மையங்களில் வேலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு இன்னும் இரண்டு, மூன்று ரூபாய் சம்பளம் கூடுதலாக கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு சம்பளம் போதாமல் இருப்பதால் அவர்கள் அங்கே ஊழல்களை, தவறுகளை செய்கிறார்கள். ஆகவே இந்த நிலையை மாற்றி ஊழல்கள், தவறுகள் நடைபெறாமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ஏழை, எளிய மக்களுக்கு வேஷ்டிகள், சேலைகள் வழங்குவது என்பது வரவேற்கத் தக்கது. ஆனால் அதை முறையாகச் செய்ய வில்லை. அதிலே கட்சி கண்ணோட்டத்தோடு வேஷ்டிகள், சேலைகள் வழங்கப்பட்டன என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கோட்டூர் மலையாண்டிபுரம் என்ற இடத்தில் இன்னொரு தொகுதியிலிருந்து எம்.எல்.ஏ. வந்து இராத்திரியிலே 11 மணிக்கு சினிமா கொட்டகையிலிருந்து சினிமா பார்த்துவிட்டு வெளியே வந்தவர்களுக்கு வேஷ்டி சேலைகளை கொடுத்து விட்டு போய் விட்டார்கள் இது நியாயம்தானா? அதனால் அந்தப் பகுதியில் ஒரு பெரிய பரபரப்பு ஏற்பட்டது.

[திரு. ஏ. டி. கருப்பையா] [1984 மார்ச் 9

சினிமாக் கொட்டகையில் பல ஊர்களில் இருந்து மக்கள் வரு
கிறார்கள். அங்கேபோய், அதிலிருந்து வெளியே வருகின்றவர்
களுக்குக் கொடுத்தால், அது நியாயம்தானா, அது அந்த
ஊரில் இருக்கும் மக்களுக்குப் பயன் தரக்கூடியதா என்று அந்த
மக்கள் மத்தியில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. ஆகவே, நான்
தெரிவித்துக்கொள்கிறேன், சர்க்கார் கொண்டு வரும் நல்ல
திட்டங்களை அமல்படுத்துவதில் இப்படி சில தவறுகள்,
ஊழல்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது முதியோர்களுக்கு பென்ஷன் ரூ. 35 கொடுக்கப்
படுகிறது. ஒரு நாளைக்கு ½ கிலோ அரிசி கொடுக்கப்படு
கிறது, இது நியாயமா? இது போதுமானதா? ஒரு நாளைக்கு
கொடுக்கப்படுகிற அரிசியை மூன்று வேளைக்குப் பிரித்து
வைத்து, எண்ணிப் பார்த்தேன். 125 அரிசிதான் இருந்தது.
இது எந்த அளவிற்குப் போதும்? ஆகவே இதை உயர்த்திக்
கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன் தர விரும்புகிறேன்
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரிசியை எண்ணிப்பார்த்த
தாகச் சொன்னார்கள். இந்த அரசு வந்தபின்னாலே தான்
அவர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்த ரூ 25-ஐ
ரூ 35 என்று உயர்த்தியிருக்கிறோம். ஆண்டுக்கு இருமுறை
சேலை, வேஷ்டி தருகிறோம். அது மட்டுமல்ல, வாரத்தில்
7 லிட்டர் அரிசி கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தவறான தகவலைத்
தந்து கொண்டிருக்கிறார்கள். ½ கிலோ அரிசியை எண்ணிப்
பார்த்ததாகச் சொன்னார்கள். இருக்கின்ற நிதிநிலையைப்
பொறுத்து, அவர்களுக்கு அரசு இந்த உதவிகளைச் செய்து
வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. டி. கருப்பையா : 35 ரூபாயும், வாரத்திற்கு ½
கிலோ அரிசியும்தான் இப்போது கொடுக்கப்படுகிறது என்பதை
யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலை
வர் அவர்களே, தினந்தோறும் அவர்களுக்கு மதிய உணவு சத்
துணவுத் திட்டமையங்களில் கொடுக்கப்படுவதால், வாரத்திற்கு
½ கிலோ அரிசி என்ற வீதத்தில் கொடுக்கப்படுகிறது.

திரு. ஏ. டி. கருப்பையா : தினந்தோறும் அவர்களுக்கு
மூன்று வேளை சோறு அந்த மையங்களில் போடுவதில்லை. ஒரு
நாளைக்கு ஒரு வேளை தான் கொடுக்கப்படுகிறது.



1984 மார்ச் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, மதிய உணவு சத்துணவுத் திட்ட மையங்களில் போடுவதற்கு முன்னால் வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி என்ற வகையில் மாதத்திற்கு 4 கிலோ அரிசி கொடுக்கப்பட்டு வந்தது. முதன் முதலில் அவர்களுக்கு ரூ. 20 இருந்தது. பின்னர் அது ரூ. 25 ஆக்கப்பட்டது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அது ரூ. 35 என்று உயர்த்தப்பட்டது. மதிய உணவு இப்போது கொடுக்கப்படுவதால், வாரத்திற்கு 1 கிலோ அரிசி என்பதை, வாரத்திற்கு ½ கிலோ அரிசி என்று மாற்றியிருக்கிறோம். மதிய உணவு கொடுக்கப்படாத இடங்களில் 1 கிலோ அரிசி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். தவசி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபோது ½ கிலோ அரிசியை எண்ணிப் பார்த்ததாகச் சொன்னார்கள். அதை 3 வேளைக்கு என்று பகிர்ந்து வைத்து எண்ணிப் பார்த்ததில் ஒரு வேளைக்கு 125 அரிசிதான் இருந்தது என்று சொன்னார்கள். இது உண்மைக்குப்புறம்பான கருத்து. அவருடைய கருத்து பூராவுமே உண்மைக்கு மாறான கருத்தாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–40)

திரு. ஏ. டி. கருப்பையா : சின்கோனா சம்பந்தப்பட்ட வரையில், சில பிரச்சினைகளுக்காக 2, 3 மாதங்களுக்கு முன்னாலிருந்தே தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். சம்பளம் போதாது, போனஸ் வழங்கப்படவில்லை; அவற்றை எல்லாம் உரிய முறையிலே வழங்க வேண்டுமென்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் போராடும் தொழிலாளர்களுக்கு இந்தப் பட்ஜெட்டில் நிவாரணம் அளிக்க ஏதாவது வழிவகை இருக்கும் என்று எதிர்பார்த்தோம்; ஒன்றும் இல்லை. அவர்களுடைய போராட்டத்தை நிறுத்துகின்ற அளவுக்கு அவர்களுக்கு சம்பள உயர்வு, போனஸ் எல்லாம் கொடுத்து, அவர்களை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல இன்னொரு முக்கியமான விஷயத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே கடந்த 29-ந்தேதி நாங்கள் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தும்போது வேறு

* * * *

ஒருவர் வேண்டுமென்றே திட்டமிட்டு நாங்கள் எங்கள் கட்சியின் சார்பாக நடத்திக் கொண்டிருந்த கூட்டத்திற்கு 100 பேர்களுக்குமேல் திரட்டிக்கொண்டுவந்து கலகத்தை விளைவித்து,

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஏ.டி. கருப்பையா] [1984 மார்ச் 9

போலீசை தடுத்து நிறுத்தி, தாக்குதல் நடத்தினார்கள். அதனால் அந்தப் பகுதி முழுவதும் ஒரு பதட்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. தான் செய்த தவறை மறைப்பதற்காக எங்களுடைய கட்சியின் முக்கியமான ஊழியர்கள் மீது பொய்யான முறையிலே 307-வது செக்ஷன் உட்பட வழக்குகளை சோடித்து, பொய் வழக்கு போட்டிருக்கிறார்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசும்போது * * *

* * * *

என்று சொன்னார்கள். அதற்கு ஏதாவது ஆதாரம் வைத்துக் கொண்டு பேசுகிறாரா அல்லது வேண்டுமென்றே சொல்கிறாரா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : உறுப்பினர் * *

* * * * *

நோட்டீஸ் கொடுத்துவிட்டுதான் பேச வேண்டுமென்று நாம் முடிவு செய்திருக்கிறோம் (குறுக்கீடு).
என்று பொதுவாகச் சொல்லக் கூடாது. * *

* * * * *

யார் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். சொல்வதற்கு முன்னால் அவைத் தலைவர் அல்லது அந்த பொறுப்பிலே இருப்பவரிடம் எழுத்து மூலமாக, பேசுவதற்கு முன்னாலேயே தெரிவித்து,

* * * * *

அவரது அனுமதி பெற்ற பின்னாலேதான் அவையில் குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் (குறுக்கீடுகள்). அப்படி நோட்டீஸ் கொடுக்காத காரணத்தால் உறுப்பினர் பற்றிச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு முழுவதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1984 மார்ச் 9]

திரு. கு. ரமணி : அவர் யார் பெயரையும் சொல்லவில்லை பொதுவாகச் சம்பவத்தைப்பற்றி மட்டும் சொன்னார்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : சம்பவத்தைச் சொல்லும்போது * * *

அதுபற்றிய ஆதாரங்களை முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் கொடுத்துவிட்டு அனுமதி பெற்று பேசவேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே,

* * *

என்று சொன்னால் அவர் பதில் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். பொதுவாகச் சொல்லும்போது, இப்படிப்பட்ட விவகாரங்கள் எழுகின்றன. சண்டைகளுக்குத் தீர்வு காணுகின்ற இடம் இதுவல்ல.

* * * *

என்று சொல்ல வேண்டும். அதையும் தலைவரிடம் முன்னாலேயே தெரிவித்துவிட்டு, சொல்ல வேண்டும். சம்பந்தப்பட்டவர் அதை மறுப்பதற்கோ, பதில் சொல்வதற்கோ வாய்ப்பு இல்லாத வகையில் பொதுவாகச் சொல்வது இந்த அவைக்கும் மரபுக்கும் நல்லதல்ல.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முன்னறிவிப்புக் கொடுக்காமல் சொல்லியிருக்கக் கூடாது. சொல்வதற்கு முறை இருக்கிறது. ஆதாரம் காட்டாமல், முன்கூட்டி விவரம் தராமல் பேசக்கூடாது. வரையறை இல்லாமல், நினைத்த நேரத்தில் பேசுவது சரியல்ல. (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : போலீஸில் புகார் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு *பேரவை துணைத் தலைவர் : தயதுசெய்து உட்கார வேண்டும்; நான் சொல்லிவிடுகிறேன். இதுபோன்ற தகவல்களை நோட்டீஸ் கொடுக்காமல் சொல்ல முடியாது. ஆதாரம் இருந்தால் அதை என்னிடம் முன் கூட்டியே காண்பித்துவிட்டு பேசி இருக்க வேண்டும்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1984 மார்ச் 9

திரு. சோ. அழகர்சாமி : பாதிக்கப்பட்ட உறுப்பினர் எடுத்துக் கூறுகிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கு ஒரு முறை வேண்டாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் குறிப்பிடுவது எல்லாம் ** ** ** என்றோ சொல்ல வேண்டாம் என்பது தான். ஒருவர் தாக்கினார் என்று பொதுவாகச் சொல்லலாம். பிறகு அதைப் பற்றி பரிசீலிக்கலாம். போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்துள்ளோம். விசாரிக்கப்படவில்லை என்றெல்லாம் சொல்லலாம். உறுப்பினர் அந்தச் சம்பவத்தைப் பற்றியே சொல்லக் கூடாது என்பது அல்ல. சொல்லும்போது 'ஒருவர்' என்று பொதுவாகச் சொன்னால் பிரச்சினை இல்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுபற்றி ஏற்கனவே நாம் கமிட்டியில் முடிவு எடுத்திருக்கிறோம். ஆதாரம் காட்டாமல் பேசக் கூடாது. (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்டமன்றத்தில் பேசுகிறபோது இங்கே ஒரு சட்டத்திற்குட்பட்டு, சில மரபுகளுக்கு உட்பட்டு, எப்படிச் சொல்ல வேண்டுமோ அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்லவேண்டும். ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டு, அதிலே உள்ள குறைபாடுகளைச் சொல்வதற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு உரிமையுண்டு. இன்னார் என்று சொல்லும்போது தான் பிரச்சினை எழுகிறது. குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி எதுவுமே சொல்லக் கூடாது என்பதில்லை. பொதுவாகச் சொல்லுங்கள். சொல்லும்போது பொதுவாக 'ஒருவர் தாக்கினார்' என்றால், அந்த ஒருவர் யாராவது இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே பேசியது எல்லாம் நீக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-50)

திரு. ஏ. டி. கருப்பையா : நான் இந்த அவையிலே சொ
வதற்கு நானும் ஒரு சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில்
எனக்கு ஏற்பட்ட அந்த நெருக்கடியை, ஆபத்தை நான் சொல்

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1984 மார்ச் 9] [திரு. ஏ. டி. கருப்பையா]

இருக்கிறது என்ற முறையில் நான் சொல்ல
வதற்கு உரிமை இருக்கிறது என்ற முறையில் நான் சொல்ல
விரும்புகிறேன். 27-ந் தேதி கோட்டூர் மலையாண்டிப்பட்டினத்
தில் என்னுடைய தொகுதியில் எங்களுடைய கட்சியைச் சார்ந்த
ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் நடைபெற்றுக்
கொண்டிருக்கிறபோதே, 100 பேருக்கு மேலே தடி, கம்பு,
சைக்கிள் செயின் போன்றவைகளோடு கூட்டத்திற்குள்ளே வந்து,
கூட்டத்தை நிறுத்து, பேசாதே—பேசாதே என்று அவர்கள்
சொல்லிக் கொண்டு வருவது—அவர்கள் எம். எல். ஏ. பெயரைச்
சொல்லி, வாழ்க என்று அவர்கள் சொல்லிக் கொண்டு வருகி
றார்கள். இதுபற்றி முன்னாடியே போலிசுக்குத் தெரியுமா என்று
எனக்குத் தெரியாது. ஆனால் அங்கே ஆர். டி. ஓ. இருக்கிறார்கள்
தாசில்தார் இருக்கிறார்கள், எஸ். பி. இருக்கிறார்கள், சர்க்கிள்
இன்ஸ்பெக்டர் இருக்கிறார்கள், எல்லோரும் அங்கே இருந்து
அவர்களை அமைதிப்படுத்துவதற்கு முயற்சி செய்தும் கூட, அதை
மீறி கூட்டத்திலே நுழைந்து, பெரிய தகராறை உண்டாக்கி
விட்டார்கள். கொலை செய்ய முயற்சி நடந்தது. அதற்கான
சூழ்நிலைகள் அங்கே உருவாகியது. இதிலே ஒளிவு மறைவு
கிடையாது. ஆனாலும், போலீசாருடைய கடுமையான முயற்சி
யினால் அது தடுத்து நிறுத்தப்பட்டது, என்பதை நான் இந்த
நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். போலீஸ்
எச்சரிக்கையாக அங்கே வந்து கேம்ப் செய்யவில்லை என்றால்,
எச்சரிக்கையான நடவடிக்கை எடுக்கவில்லை என்று
சொன்னால் ஏதோ ஒரு அசந்தர்ப்பமான அதாவது ஒரு ஆபத்
தான சூழ்நிலை எனக்கு ஏற்பட்டு இருக்கும் என்று நான் இந்த
நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல. நாங்கள் எந்தத் தகராறும் செய்ய
வில்லை. அதற்குப் பின்னால் வேண்டும் என்றே, ஒரு பொய்
வழக்கு ஜோடிக்கப்பட்டு மலையாண்டிப்பட்டனத்தில் உள்ள
போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்கப்படுகிறது. எங்களுடைய
முக்கியமான ஊழியர்களும், கோட்டூர் மலையாண்டிப் பட்டனத்
தில் இருக்கக்கூடிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஊராட்சி
ஒன்றியச் செயலாளர் கண்ணப்பன் மீதும் மற்றும் 5 பேர்கள் மீது
பொய் வழக்கு ஜோடிக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொய் வழக்கு
போடப்பட்டிருக்கின்றது என்று சொல்கிறீர்கள். பொய்யான
வழக்கு என்றால், தீர்ப்பு வந்தபிறகுதான் எது உண்மை, எது
பொய் என்று தெரியும்.

திரு. ஏ. டி. கருப்பையா : எங்கள் மீது, அப்பாவிகள் மீது
பொய் வழக்கு ஜோடிக்கப்பட்டு இருக்கிறதே தவிர, எங்
களைத் தாக்க வந்த எந்த நபர்கள் மீதும் இதுவரையில்,
போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை. என்பதை இந்த
நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
நான் இரவு நேரத்தில் அன்றைக்கு இரவே 2 மணிக்கு

அதே போலீஸ் ஸ்டேஷனில் என்னுடைய புகாரைக் கொடுத்து இருக்கிறேன். அந்தப் புகாரைப் பெற்றுக் கொண்ட போலீசார் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையில் எடுத்ததாகத் தெரியவில்லை. 27 ஆம் தேதி கொடுத்தும் இதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் அவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற ஜனதா பேரியக்கத்தின் சார்பிலே ஒருசில கருத்துக்களைக் கூற விழைகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலே ஏதோ ஒரு சடங்காக, அதாவது அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் நமக்கு இருக்கக்கூடிய அரசாங்கம் நிச்சயமாக சட்டமன்றத்தைக் கூட்டி, இந்த நிதி நிலை அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும் என்று இருக்கின்ற அந்தச் சடங்கை நடத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையைப் போல்தான் இது தோன்றுகிறதே தவிர, உண்மையிலே, இந்த நாட்டு மக்களுடைய பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுகின்ற வகையில் ஒரு முன்னோடித் திட்டமாக, ஒரு நல்ல நிதி நிலை அறிக்கையாக, இது இல்லை என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பேசுகின்றபோது ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் விஸ்வநாதன் அவர்கள் மத்திய அரசு எந்த அளவிற்கு பாரபட்சத்தோடு நடந்து கொண்டிருக்கிறது, மாநிலங்களைப் பொறுத்தவரையில், என்று கருத்தைக் கூறினார்கள். அப்படிக் கூறிய அந்தக் கருத்துக்களை ஆளும் கட்சியில் இருக்கின்ற ஒரு சட்டமன்ற உறுப்பினரின் கருத்தாக எடுத்துக் கொள்வதா ? இல்லை இந்த அரசாங்கத்தினுடைய கருத்தாக எடுத்துக் கொள்வதா என்று. எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், உறுப்பினர் திரு. விஸ்வநாதன் அவர்கள் கூறிய கருத்துக்களை ஒத்துக் கொள்வாரா, ஏற்றுக் கொள்வாரா என்று கேட்க விரும்புகிறேன். இங்கே அவர் எடுத்துச் சொல்கிறபோது,

State's major share-centre cheat the States என்கிற அளவில், மாநிலங்களை ஏமாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். எங்களுடைய ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, அன்றைக்கு எடுத்த நல்ல முடிவுகளை—இந்த அரசாங்கம்—மத்தியிலே இருக்கக்கூடிய இந்திரா காங்கிரஸ் அரசாங்கம், மாற்றிக் கொண்டே வருகிறது. அப்படி மாற்றிக் கொண்டே வருகிறபோது, மாநிலங்களை ஏமாற்றுகிற வகையில் அவர்கள் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள் அதை கண்டித்துக் கேட்பதற்கு, தட்டிக் கேட்பதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.





மத்திய அரசால் மாநிலத்திற்கு வரவேண்டிய பல நல்ல காரியங்கள் வரவில்லை. குறிப்பாக. கரூர்—திண்டுக்கல் ரயில் பாதை திட்டம். இந்தத் திட்டத்திற்காக ஒரு பைசா கூட ரயில்வே பட்ஜெட்டில் ஒதுக்கப்படவில்லை. சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய ரயில் பாதை திட்டத்திற்கு ஒரு நயா பைசா கூட, ரயில்வே பட்ஜெட்டில் ஒதுக்கப்படவில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதேபோன்று இந்த மாநிலத்திற்கு நியாயமாக கிடைக்க வேண்டிய, பல ஆண்டுகாலமாக கோரி வந்திருக்கிற, ஏற்கனவே நடைமுறைக்கு, வரும் என்று உறுதி அளிக்கப்பட்ட திட்டங்களுக்கு மத்திய அரசு ஒரு பைசாவைக்கூட ஒதுக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், நாகர்கோவிலில் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய வானொலி நிலையம், திருவனந்தபுரத்தில் உள்ள வானொலி நிலையத்தின் கீழ் நிர்வாக வசதிக்காக இணைக்கப்படுகிறது என்ற அறிவிப்பு வந்திருக்கின்றது. ஆனால், அதற்கு இந்த சர்க்கார் சார்பில் ஒரு சிறிய எதிர்ப்பைக் கூட, ஒரு சிறு முணுமுணுப்பான கண்டனத்தைக் கூட காட்டப்பட்டதாக தெரியவில்லை. இதைக் கண்டித்து ஒரு வார்த்தைக் கூடச் சொல்லப்படவில்லை என்பதைப் பார்க்கிறபோது, மத்திய சர்க்காருடைய கொத்தடிமையாகத்தான், இந்த சர்க்கார் இருந்துக் கொண்டு இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. மத்திய சர்க்காரின் கீழே அமைந்திருக்கக் கூடிய இந்த மாநில சர்க்கார், அவர்களுடைய தயவை எதிர் பார்த்து, அவர்களுக்கு ஜால்ரா தட்டுகிற சர்க்காராகத்தான் இருக்கிறது என்கிற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மாநில பட்ஜெட்டைப் பார்த்தால், இதிலே முக்கியமாக, சொல்லப்பட்டிருப்பது சத்துணவு திட்டத்தை நீட்டித்தல், இந்த ஒரே ஒரு திட்டத்தை தவிர இதிலே வேறு ஒன்றையும் காணோம். இந்த சர்க்காரைப் பொறுத்தவரையில் சர்வரோக நிவாரணியாக இருப்பது சத்துணவு திட்டம் ஒன்றுதான். அதை விட்டால் வேறு ஒன்றையும் இந்த சர்க்காரால் கொண்டு வர முடியாது. இந்த மாநில மக்களின் பிரச்னைகளை தீர்க்கின்ற அளவுக்கு, ஏழை எளிய மக்களுடைய பிரச்னைகளை தீர்க்கின்ற அளவுக்கு, வறுமை கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களுடைய நிலைமையை உயர்த்திக் தருகின்ற அளவுக்கு, திட்டங்கள் எதையும் இந்த பட்ஜெட்டிலே காணவில்லை.

அரிசி பிரச்சனையை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு குடும்பக் கார்டுக்கு 20 கிலோ அரிசி என்று நீங்களே கொடுத்து வந்த அரிசியை குறைத்திருக்கிறீர்கள். கிராமப் பகுதியில் வாழக் கூடிய மக்கள் தாங்கள் பெற்று வந்த வசதிகளை, சலுகைகளை இழந்துக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள் :

[திரு. பொ. விஜயராகவன்] [1984 மார்ச் 9

ஆனால், சத்துணவு திட்டத்தை நீங்கள் விஸ்தரித்துக் கொண்டே போகிறீர்கள். நீங்கள் சத்துணவு போடுவதை குறை சொல்ல வில்லை. சத்துணவு போடுங்கள். அதே நேரத்தில் குடும்பக் கார்டுக்கு கொடுக்கக் கூடிய அரிசியை குறைக்காதீர்கள். ஒரு கார்டுக்கு மாதம் ஒன்றுக்கு 30 கிலோ அரிசியை போடுவதற்கு வகை செய்யாமல் நீங்கள் ஒரு பக்கத்திலேயிருந்து பிடுங்கி இன்னொரு பக்கத்திற்கு போட்டுக் கொண்டிருக்கிறீர்களே, இது நியாயமா என்று கேட்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

பல்வேறு இயக்கங்கள் நடத்திக் கேட்டுக் கொண்ட போதிலும் பல்வேறு கட்சிகளும், பல்வேறு நிலைகளில் இதை எடுத்துச் சொன்னபோதிலும், இந்த சர்க்கார் அதைப்பற்றி வாய் திறக்காமல் மௌனம் சாதிக்கின்ற சூழ்நிலையைத்தான் பார்க்கிறோம். இன்று நாம் மத்திய சர்க்காரிடம், மாநிலங்களுக்கு இடையே மாநில சுய ஆட்சி கேட்கிறோம். அதேப்போன்ற சூழ்நிலையில் இன்றைக்கு மாவட்ட சுயாட்சி கேட்கிற அளவுக்கு இந்த சர்க்கார் நடந்து கொண்டிருக்கின்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தைப்பொறுத்தவரையில் தொடர்ச்சியாக இந்த சர்க்கார் அந்த மாவட்டத்தை புறக்கணித்துக் கொண்டு வருகிறது என்கிற குற்றச்சாட்டை என்னால் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய கிராமங்களில்—கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் அல்ல—தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய கிராமங்களில், விளக்குகளே கிடையாது. அது மின்சாரம் இல்லாத கோளாறா, அல்லது மின்சார விளக்குகள் இல்லாத கோளாறா என்று தெரியவில்லை. கிராமங்கள் இருண்டு போயிருக்கின்றன. அங்கேயிருக்கக்கூடிய டிவிஷனல் என்ஜினீயரிடம் இதுபற்றி கேட்டால், எங்களுக்கு, தேவையான தளவாடங்கள் இல்லை, மின்சார கம்பங்கள் இல்லை. விளக்குகள் இல்லை. பல்புகள் இல்லை, அவைகளை வாங்குவதற்கு வேண்டிய பணமும் இல்லை. மின்சார இலாகா திவாலாகிக் கொண்டிருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கிராமங்கள் இருண்டு போயிருக்கின்றன.

இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுத் துறையின் சார்பில் ஒரு கல்லூரி கூட கிடையாது. விவசாயக் கல்லூரி வேண்டும் என்று கேட்டால், அது மற்றொரு மாவட்டத்திற்கு போகிறது என்று சொல்கிறீர்கள். பொறியியல் கல்லூரி கேட்கிறோம். அதைத் தருவதற்கு இந்த சர்க்கார் தயாராக இல்லை. சட்டக் கல்லூரி கேட்டோம். தருவதாக வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் இங்கே அதற்காக நிதி ஒதுக்கீடு இருக்கிறதா என்று கேட்டால், கிடையவே கிடையாது.

1984 மார்ச் 9] [திரு. பொ. விஜயராகவன்]

(பிற்பகல் 1-00)

அதைப்போல் தியாகிகளுக்கு உதவிப் பணம், கன்னியாகுமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு இணைப்பதற்காக போராடித் தங்கள் இன்னுயிரை இழந்தவர்கள், தங்களுடைய உடமைகளை இழந்தவர்கள், தங்களுடைய சக்தியை இழந்தவர்களுக்கு எல்லாம்—இன்றைக்கு அவர்கள் வாடிக் கொண்டிருக்கிறார்கள்.—தியாகிகள் பென்ஷன் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக எழுப்பப்பட்டும் அதை நிறைவேற்றுவதாக இந்த அரசு வாக்குறுதி அளித்தும்கூட இதுவரையில் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

அதைப் போலவே ஏறத்தாழ 50-க்கும் மேற்பட்ட பீனை ஏறுகின்ற தொழிலாளர்கள் மரணமடைந்த குடும்பங்களுக்கு அரசால் வழங்கப்படும் 5,000 ரூபாய் உதவிப் பணத்தை இந்த சர்க்கார் அவர்களுக்கு அளிக்க தயாராக இல்லை.

எத்தனையோ கடன்களை ரத்து செய்கிற இந்த சர்க்கார் 1961, 1962-ஆம் ஆண்டுகளில் குமரி மாவட்டத்திலே மீனவர்களுக்கு வழங்கப்பட்ட நீண்ட காலக் கடன் ரத்து செய்யப்பட வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருந்தும் இன்னும் அது ரத்து செய்யப்படவில்லை.

அதைப்போலவே கர்நாடக மாநிலத்திலே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்—அவர்கள் பல போராட்டங்களிலே கலந்து கொண்டு அந்த மாவட்டத்திலே வாதாடியவர்கள்—அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டுமென்ற கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை. பற்றாக்குறை என்று சொல்லப்படுகிற இந்த நேரத்திலே குமரி மாவட்டத்திலே பரளியாறு மின் திட்டம்—35 மேகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய திட்டம்—அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று பல ஆண்டுகளாக கேட்டுக்கூட இன்னும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள ரப்பர் தோட்டங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு, தனியார் துறையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கப்படுகிறது, அரசுத் துறையிலே உள்ள ரப்பர் தோட்டங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்க வேண்டுமென்று—அதுவும் அது ஒரு வியாபார ஸ்தாபனமாக நடத்தப்படுகிற ஸ்தாபனம். அந்த அடிப்படையிலே போனஸ் அவர்களுக்கு வழங்கவேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிறது. இன்னும் அதை அமல்படுத்துவதற்கான நிலைமையை இந்த அரசு ஏற்படுத்தவில்லை.

[திரு. பொ. விஜயராகவன்] [1984 மார்ச் 9

கன்னியாகுமரி மாவட்டத்திலே வள்ளியாறு பாசனத் திட்டம், மாம்பழத்துறை பாசனத் திட்டம், சிற்றாறு பட்டணங் கால்வாய்த் திட்டத்தின் கீழ் வாழைத் தோட்டம், கப்பியறை போன்ற இடங்களுக்குப் பாசன வசதியளிக்கும் திட் டங்கள் நிறைவேற்றப்படவேண்டுமென்று பல ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வந்தும்கூட இன்னும் நிறைவேற்றப்பட வில்லை.

அதைப்போலவே பல பாலங்கள் கன்னியாகுமரி மாவட் டத்திலே உள்ள மக்கள் பிரதிநிதிகள் கட்சி சார்பற்ற முறையிலே எல்லோரும இந்த சர்க்காரைக் கேட்டுக்கொண்டது. கணபதி யான்கடவு பாலம், மணக்குடி பாலம், குளச்சல் பாலம், தேங் காய் பட்டணம் பாலம் இவைகள் கட்டப்படவேண்டுமென்று எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், சட்டமன்றத்திலேயும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும கோரிக்கையை வற்புறுத்தி வந்தாலும் இந்தச் சர்க்காருடைய காதுகளுக்கு எட் டாதது மட்டுமல்ல, இந்த சர்க்கார் ஏற்றுச் செய்யவும் தயா ராக இல்லை.

அதைப்போலவே கன்னியாகுமரியிலிருந்து கொல்லங்கோடு வரை மேற்கு கடற்கரை சாலை உருவாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அந்தப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் தாங்கள் பிடித்து வந்த மீன்களை உள்நாட்டிற்கும் மற்ற இடங்களுக்கும் கொண்டு போக அவர்கள் அதன் மூலம் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவேண்டுமென்ற முறையிலே கொடுத்த கோரிக்கை, பல ஆண்டுகளாக இருந்து வருகிற அந்தக் கோரிக்கை, கிடப்பிலே போடப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேங்காய்பட்டணத்திலே ஒரு அரசு மருத்துவமனை இருக் கிறது. அது பாழடைந்த கட்டடத்திலே இருக்கிறது. அதற்காக ஒரு கட்டடத்தைக் கட்டி நல்ல மருத்துவ மனையாக உயர்த்தித் தரவேண்டுமென்ற கோரிக்கை இந்த அரசாங்கத்திற்கு கொடுக் கப்பட்டும் அதை ஏற்றுக்கொள்வதற்கு, செவிமடுத்து ஏற்றுக் கொள்வதற்கு இந்த அரசு தயாராக இல்லை.

இப்படி கன்னியாகுமரி மாவட்ட மக்கள் விடுக்கின்ற பல கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் கட்சி சார்பற்ற முறை யில் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லுகின்ற கோரிக்கைகளை இந்த அரசு செவி சாய்க்காமல் உரிய பங்கு கூட கொடுக்காமல் இருக்கிறது. ஒரு வேளை கணக்குப்போட்டுப் பார்த்தால், அந்த கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உரிய பங்கு வழங்கப்பட்டு இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இருக் காது. ஒட்டுமொத்தமாக இந்த மாநில வருவாயை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 'காட்கில் பார்மூலா' மாதிரி ஒவ்வொரு



1984 மார்ச் 9] [திரு. பொ. விஜயராகவன்]

மாவட்டத்திற்கும் ஒரு பார்மூலா கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னால் அதுமிகையாகாது. அந்தளவுக்கு இந்த கன்னியாகும்ரி மாவட்டம் இந்த அரசால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இந்த அரசு ஏற் படுத்துகின்ற பெரிய திட்டங்கள் இந்த அரசால் கொடுக்கக் கூடிய பெரிய திட்டங்கள் அந்த கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கிடையாது. அந்த மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் அதிக மான அளவுக்கு ஐ.ஐ.டி.க்கு விண்ணப்பம் கொடுத்தாலும் அங்கு இருக்கக்கூடிய ஐ.ஐடியில் போதுமான அளவுக்கு அங்கே படிப் பதற்கு வசதி இல்லை. இன்னும் ஒரு ஐ.ஐ.டியைதிறக்க வேண்டும் என்று சொன்னால் அரசாங்க சார்பில் பதில் கிடையாது. அந்த மாவட்டத்தில் ஏழை எளிய மாணவர்கள், பெண்கள் அதிகமான அளவில் படிக்கிறார்கள். தமிழ்நாட்டிலேயே கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்கள் கல்வியில் முதலிடம் வகிக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் பெண்களுக்கு ஒரு பாலிடெக்னிக்வேண்டும். தனியாக அரசு சார்பில் நீங்கள் கட்டித் தாருங்கள் என்று கேட் டால் அதற்கும் இந்த அரசு பல ஆண்டுகளாக கோரிக்கைகள் வைத்தும் அவைகளை எற்றுக்கொள்ள இந்த அரசு தயாராக இல்லை.

அதோடு லட்சுமிபுரம் கலைக்கல்லூரியில் நிர்வாகத்தில் ஏற் பட்டு இருக்கக்கூடிய பிரச்சினைகள் காரணமாக அந்த நிர்வாகத் தின் இடையே ஏற்பட்டு இருக்கக்கூடிய சண்டையின் காரண மாக அந்த கல்லூரி அரசு சார்பில் நடத்தப்பட்டு வருகிறது. அதை உடனடியாக அரசு ஏற்று அதை அரசு கலைக்கல்லூரி யாக நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை பல ஆண்டுகளாக இந்த மாமன்றத்தில் வைத்தும், இவைகளை எல்லாம்பார்த்தும் இந்த அரசு மௌனமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆக இந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்கள், இந்த மாநிலத்தை சார்ந்த ஏழை எளிய மக்களுக்கு, குடும்ப கார்டுகளுக்கு அரிசி கொடுக்க முடியாத அரசு, அதிலும் குறிப்பாக கன்னியாகுமரி மாவட் டத்தில் பல்வேறு கோரிக்கைகள் வைத்து பல ஆண்டுகளாக இந்த அரசை வற்புறுத்தியும் 5வது பட்ஜெட் சமர்ப்பித்து இருக்கக்கூடிய இந்த அரசு, பொறுப்பு ஏற்று கடைசியாக வைக்கக்கூடிய பட் ஜெட் என்று சொல்லக்கூடிய அளவுக்கு கடைசி பட்ஜெட்டில் கூட, இந்த அரசு அந்த மாவட்டத்தை புறக்கணிக்கிறது என் பதை சுட்டிக்காட்டி என்னுடைய எதிர்ப்பை தெரிவிக்கும் வகை யிலும் ஜனதா கட்சியின் சார்பில் எதிர்ப்பை தெரிவிக்கும் வகை யிலும் நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. பொ. விஜயராகவன் வெளிநடப்புச்செய்தார்)

திரு. மி. வின்சென்ட் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு ஜனதாகட்சியின் உறுப்பினர் தன் னுடைய பேச்சின் ஆரம்பத்தில் நாகர்கோயிலில் ஒரு வானொலி நிலையம் அமைய இருப்பதாகவும், அந்த வானொலி நிலை

[திரு. மி. வின்சென்ட் [1984 மார்ச் 9

யத்தை திருவனந்தபுரத்தோடு இணைக்க இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டு அதை ஏன் இந்த அரசு கண்டிக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் ஆளுநர் உரையின் மீது பேசுகின்ற நேரத்தில் இந்த வானொலி நிலையத்தை கட்டாயமாக திருவனந்தபுரத்தோடு இணைக்கக் கூடாது என்பதை நான் இங்கே வலியுறுத்தி மத்திய அரசை கண்டித்துப் பேசி இருக்கிறேன். ஆகவே கன்னியாகுமரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் ஒற்றுமையாக இருக்கின்ற நேரத்தில் இதில் அவர் வேற்றுண்மயை காணக்கூடாது. உனதா, எனதா என்பதில் ஜனதா போட்டிப்போடுகின்ற நிலையில் தான் இன்றைக்கு பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.....

* திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இங்கே சமர்ப்பித்து உள்ள 1984–85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது ஆளும் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை கூற விழைக்கிறேன். இந்த அறிக்கையின் மீது என்னுடைய கருத்தை கூறுவதற்கு முன்னால் இன்றைய தினம் கடந்த ஒரு வார காலமாக நெல்லை மாவட்டத்திலும், மற்ற மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள பெரு மழையின் காரணமாக ஏழை எளிய மக்களை காண நேரில் சென்று அவர்களுடைய துயரங்களை உடனுக்குடன் தீர்ப்பதற்கு இன்றைக்கு நம்முடைய தமிழக முதலமைச்சர் அந்த காரியத்தில் ஈடுபட்டு இருப்பது குறித்து உள்ளபடியே நான் நெல்லை மாவட்ட மக்கள் சார்பாகவும், என்னுடைய இதயம் கனிந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஏழை எளிய மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம், என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய அரசை கண்டிப்பதற்கும், பிரச்சினைகள் பற்றி மத்திய அரசை வற்புறுத்துவதற்கும் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அஞ்சுகிறார்கள் என்று இங்கேயும் வெளியிலும் பேசுவது உண்மைக்கு மாறானது. அதற்கு உதாரணமாக இந்த அறிக்கையில் மத்திய மாநில அரசு உறவு குறித்தும், மத்தியில் குவித்து வைக்கப்பட்டுள்ள அதிகாரம் பரவலாக மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து எந்த அளவுக்கு கண்டிப்பாகவும், தெளிவாகவும் அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்பதை நாம் இங்கே எண்ணிப்பார்க்கும் போது அவர்கள் கூற்றுகள் உண்மைக்கு புறம்பானது என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியும். கடந்த ஆண்டில் தமிழகத்தில் நிலவிய கடுமையான வறட்சி காலத்திலும், பிறகு ஏற்பட்ட கடுமையான வெள்ளக் காலத்திலும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவுக்கு உடனுக்குடன் மக்களின் குறைகளை தீர்ப்பதற்கு முயற்சி செய்து காரியங்களை ஆற்றினார்கள் என்பதை நாட்டில் உள்ள நல்லவர்கள் அறிவார்கள்.



1984 மார்ச் 9] [திரு. பி. துரைராஜ்]

(பிற்பகல் 1-10)

1982–83, 1983–84 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்ட கோர வறட்சியின் பிடியிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக மத்திய அரசு நாம் கோரிய நிதியை அளிக்காவிட்டாலும்கூட, ஏறக்குறைய 114.28 கோடி ரூபாய் அளவிற்கு இந்த மாநில அரசின் நிதியிலிருந்து செலவு செய்து வறட்சிப் பணிகளையும், துயர் துடைப்புப் பணிகளையும் செய்து ஏழை எளிய மக்களின் மேம்பாட்டிற்காகச் சிறப்பாகச் செய்து முடித்தோம் என்பதை நாம் அறிவோம்.

ஏழை எளிய நிலமற்ற விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு கடந்த ஆண்டிலே ஏறக்குறைய பத்து கோடி ரூபாய் அளவிற்குக் கைத்தறித் துணிகளை வாங்கி இலவசமாகக் கொடுத்திருப்பதை நாம் அறிவோம்.

ரூபாய் நூறு கோடி இழப்பில் அதிக விலைக்கு அரிசி வாங்கி மலிவான விலைக்கு ஏழை எளிய மக்களுக்கு நியாய விலைக் கடைகளின் மூலம் அரிசி மற்றும் உணவுப் பொருட்களை வழங்கிய காட்சியையும் நாம் நன்றாக அறிவோம்.

தொழில் வளர்ச்சிக்கு இந்தத் திட்டத்தில் எதுவுமே இல்லை என்பவர்கள் கவனிக்க வேண்டுகிறேன். டிட்கோவின் மூலம் பொதுத் துறையின் மூன்று திட்டங்களும், கூட்டுறவுத் துறையின் கீழ் ஏழு திட்டங்களும், நடப்பாண்டில் பொதுத் துறையில் ஏழு திட்டங்களையும், கூட்டுறவுத் துறையில் 17 திட்டங்களையும் உருவாக்க இந்நிறுவனம் திட்டமிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

கதர்-கிராமத் தொழில் வாரியம் மூலம் நடப்பாண்டில் கூடுதலாக 32,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்பதும், 41,476 கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளிக்க விருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

மேலும், கனிம வளர்ச்சிப் பணி நிர்வாகத்தின் கீழ் ரூபாய் எண்பதுகோடி செலவில் வெப்பந்தாங்கிக் கற்கள் தயாரிக்கும் திட்டம் ஒன்றை மேற்கொண்டிருப்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

நடப்பாண்டில் நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 15 அமைக்கத் திட்டமிட்டிருப்பதையும், இதில் எட்டை ஆதிதிராவிடர்களுக்கென ஏற்படுத்த விருப்பதையும் வாழ்த்தி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, சமூக நலத்துறையின் மூலமாக நடப்பாண்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 26 உணவு இல்லங்களைத் தொடங்க இருப்பது குறித்து இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்,

குறிப்பாக, இன்றைக்குக் கல்வி எந்த அளவிற்கு தமிழ்நாட்டில் மக்களுக்கு முக்கியம் என்பதை அறிந்து, அதற்காக ஏறக்குறைய 400 கோடி ரூபாய்க்கும் மேலாக நிதி ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்க வேண்டியதாகும்.

இந்த ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் முதல், பத்து வயது முதல் 15 வயது வரையில் உள்ள பிள்ளைகளுக்கும் சத்துணவு கொடுப்பதற்கு இந்த நிதி நிலை அறிக்கையில் வழி செய்யப்பட்டிருப்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக எனது தொகுதியில் கீழ்க்கண்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சங்கரன் கோவில், சிவகிரி வட்டங்கள் செழிப்படைய, உள்ளார் நீர்த் தேக்கத்தை விரைவிலேயே அனுமதி அளித்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது தற்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருக்கிறது.

சங்கரன்கோவில் நகரத்திற்குக் கூடுதல் குடிநீர் வழங்கும் திட்டமாகத் தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டத்தைப் பற்றிப் பல ஆண்டுக் காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்தக் குடி தண்ணீர்த் திட்டத்தையும் இந்த ஆண்டிலேயே எடுத்து அந்த நகர மக்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சங்கரன்கோவில் நகரில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சங்கரன் கோவில் நகரில் கே. டி. சி. போக்குவரத்துத் துறை பணிமனை ஒன்றை நிறுவ வேண்டுகிறேன்.

சங்கரன் கோவில் வட்டம் ஆலம நாயக்கர்பட்டி கிராமத்தில் ஒரு புதிய குளம் வெட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை வெட்டிக் கொடுத்து விவசாயிகளின் நிலங்களைக் காக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சங்கரன் கோவில் வட்டம், சுப்பலாபுரம், சத்திரப்பட்டி, மலையடிப்பட்டி, குவளைக்கண்ணி, கரிவலம்வந்தநல்லூர் முதலிய கிராமங்களில் பாதுக்காக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை வெகுவிரைவிலே—இந்த ஆண்டிலேயே முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





சங்கரன்கோவில் நகரில் சிட்கோ மூலமாக ஒரு தொழிற்பேட்டை நிறுவ வேண்டுமென்று கடந்த நான்காண்டுக் காலமாகக் கேட்டுக் கொண்டு வருகிறேன். ஆகவே, அதை விரைவில் நிறுவ வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிப்சம் என்ற உரத்திற்கு பலமுனை வரி விதித்திருப்பதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த வரியை ரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சரவர்களை விவசாயிகளின் சார்பிலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் நல்லபல திட்டங்களை இந்த நாட்டு மக்களுக்கு இனி வரக்கூடிய காலங்களிலும் செய்வதற்கு புரட்சித்தலைவர் அவர்கள் செயலாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு நல்ல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி இருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற 1984-85ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று எனது கருத்துக்கள் சிலவற்றை இங்கே நான் முன்வைக்கிறேன்.

மத்திய அரசு நாம் கேட்கிற நேரத்தில் நிதி உதவிகளை அளிக்காமல் கேட்டதற்குப் பிறகு ஒரு குழுவினை அமைத்து அதற்குப் பின்னால் தான் வழங்கி வருகிறார்கள் என்ற இந்தப் போக்கை மாண்புமிகு முதல்வர் அவர்களும், நமது அரசும் உரிய நேரங்களில் கண்டிப்பதோடு தேவையான நேரங்களில் நமக்கு நிதியுதவி செய்யவேண்டும் என்று கேட்டதை இங்கு எதிர்க்கட்சியில் இருந்து பேசியவர்கள் எல்லாம் மறந்திருக்க மாட்டார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் திட்ட மதிப்பீட்டிற்காக மத்திய அரசு உதவி 20 சதவீதம்தான் அளிக்கப்படுகின்றது என்ற நிலையில் 80 சதவீதம் நமது ஆதாரத்தைக் கொண்டு தான் செலவினங்களைச் சரிக்கட்ட வேண்டி இருக்கின்றது என்பது நிதிநிலை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது.

அண்ணா அவர்களின் பெயரால் அண்ணா அவர்களின் கொள்கையைத் தாங்கி நடைபெற்று வருகின்ற இந்த புரட்சித் தலைவர் அவர்களின் அரசு எந்த நேரத்திலும், மத்திய அரசிடம் இருக்கின்ற அதிகாரக் குவியல் பரவலாக்கப்பட்டு மாநில அரசுகளுக்கு தேவையான அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்றும் நல்ல சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற அளவுக்கு நிதி ஆதாரங்கள் வேண்டும் என்றும் வலியுறுத்துவதற்கு

[திரு. மா. சின்னராசு] [1984 மார்ச் 9

தவறவில்லை. எனவே, இதையே கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற நாம் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் அதை மட்டும்தான் சொல்லிக் கொண்டிருக்கவேண்டும் என்றால் மற்ற விஷயங்களைப் பற்றி இங்கே பேசுவதற்கு இடமே இருக்காது. மத்திய அரசு போதிய நிதியாதாரங்களைத் தரவில்லை; மாநில அரசுக்கு உரிய அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை; ஆகவே, எதையும் செய்ய இயலவில்லை என்று கூறி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பொறுப்பை இந்தக் காரணங்களைக் காட்டி முந்தைய அரசு எப்படி தட்டிக் கழித்ததோ அப்படி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற மக்கள் பணியை தட்டிக் கழிப்பதற்காக இந்த நிதிநிலை அறிக்கையைப் பயன்படுத்தவில்லை.

ஆனால் இங்கே பேசியவர்களில் சிலர் இது சினிமா நோட்டீஸ் போன்று கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றும், ஏற்கெனவே நடந்து வந்த திட்டங்கள் எதையும் நிறைவேற்றவில்லை என்றும் சொன்னார்கள். ஆனால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலோ, அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலோ நடந்து வந்த திட்டங்கள் எவையும் குறைவுப்படவில்லை. அது கல்வியானாலும், சரி, விவசாயமானாலும், சரி; எதுவாக இருந்தாலும் ஆண்டுக்காண்டு அந்தந்தத் துறைகளுக்குக் கொடுக்க வேண்டியது கொடுக்கப்படுவதோடு அந்த நிதிகளைத் தொடர்ந்து அதிகப்படுத்திக் கொண்டும் வருகிறோம். ஆகவே, புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகு உள்ள இந்த 6 ஆண்டுக்காலத்திலே எந்தத் துறைக்கும் ஒதுக்கப்படுகிற நிதியிலே குறைவு ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல முடியாது.

ஆகவே எத்தனை வறட்சி ஏற்பட்டாலும், வெள்ளம் ஏற்பட்டாலும் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு எந்த வகையிலும் குறைவு இல்லாமல் நிதி ஆதாரங்களை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அவற்றுக்கெல்லாம் நிதி ஆதாரங்களை ஒதுக்கியதற்குப் பிறகு கொண்டுவரப்பட்ட திட்டம் தான் சத்துணவுத் திட்டம். அதேமாதிரி மற்றவற்றிற்கெல்லாம் நிதியினை ஒதுக்கியதற்குப் பிறகு கொண்டுவரப்பட்ட திட்டம்தான் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம். இப்படி ஏற்கெனவே நடந்து வந்த திட்டங்களுக்கு நிதியினை ஒதுக்கியதற்குப் பிறகுதான் புதிய திட்டங்களை ஏற்படுத்தி நிதி ஒதுக்குகிறார்கள்.

விவசாய இன்ஷூரன்ஸ் திட்டம் என்ற வகையில் அதாவது க்ராப் இன்ஷூரன்ஸ் திட்டம் என்பது மட்டுமல்லாமல், இடர்ப்பாடுகளில் சிறு உடைமைகளை, நிலங்களை இழக்கின்ற சிறு விவசாயிகளுக்கும் பாதுகாப்பு கொடுக்கின்ற திட்டம் தான் விவசாயப் பாதுகாப்புத் திட்டம். சத்துணவுத் திட்டத்தைப் போல் இதுவும் எதிர்காலத்திலே ஒரு பெரிய பாராட்டையும், வாழ்த்தையும் பெறக்கூடிய திட்டமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 மார்ச் 9] [திரு. மா. சின்னராசு]

அடுத்து மாநில அரசுக்கு இடர்பாடுகள் ஏற்படுகின்றபோது மத்திய அரசு கொடுக்க வேண்டிய நிதியினைக் கொடுக்கவேண்டும் என்று கண்டிக்கவேண்டிய இடத்தில் கண்டித்திருக்கிறோம், கேட்கவேண்டிய இடத்திலே கேட்கிறோம். ஆனால் மத்திய அரசிக்கும், மாநில அரசிக்கும் இடையே ஒரு உறவு இருக்ககூடாது என்கிற வகையில் சிலர் எதிர்பார்க்கிறார்கள்.

356-வது ஆர்ட்டிக்கிளைப் பற்றி இன்று ஜனதா கட்சியில் இருப்பவர்களும், திராவிட முன்னேற்றக்கழகத்தில் இருப்பவர்களும் காஷ்மீரத்திலும் கல்கத்தாவிலும் பேசியதை நாம் பார்த்தோம். ஜனதா ஆட்சிக்கு வந்தவுடன் ஏற்பட்ட நிலைமைகளைப் பார்த்தோம், மக்கள் மறந்துவிட்டார்கள் என்றுநினைக்கிறார்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 356-வது ஆர்ட்டிகிளைப் பயன்படுத்தித்தான் கலைத்தார்கள், 6 மாநில அரசுகளை. அதாவது ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவ்வாறு செய்தார்கள். மக்கள் ஆட்சி, ஜனநாயகம் என்ற தத்துவங்களை எல்லாம் மறந்துவிட்டு ஆர்டிக்கிள் 356-ஐப் பயன்படுத்தி கலைத்தார்கள். 1980-ல் இந்த ஆட்சி கலைக்கப்பட்டபோது கலைஞர் அவர்கள் டெல்லி சென்றதும், அவர்கள் வெற்றியோடு வந்ததும், இங்கு வந்து அவர்கள் பேசியதும் ஆகிய இவை எல்லாவற்றையும் பார்க்கிறபோது ஒரு ஐயப்பாடு ஏற்படுகின்றது. அதாவது காஷ்மீரத்திலும், கல்கத்தாவிலும் பேசப்பட்ட கருத்துக்கள் உண்மையிலேயே ஜனநாயகத்தில் நம்பிக்கையோடு பேசப்பட்டதுதானா, நீங்கள் எல்லாம் அண்ணாவின் கொள்கையைக் கொண்டவர்கள்தானா என்று மக்கள் மத்தியில் ஒரு ஐயப்பாட்டை இவை எல்லாம் ஏற்படுத்தத் தவறவில்லை.

ஆகவே, நேரத்திற்கு ஒரு நிலையை எடுத்துக் கொண்டிருக்கிற உங்களுக்கு நாம் மாநில அரசாங்கத்தினுடைய உரிமைகளைக் கேட்கிறபோது, ஏதோ அச்சத்தோடு கேட்கிறோம், பயத்தோடு கேட்கிறோம் என்ற உணர்வு தோன்றுகிறது. ஆனால் புரட்சித் தலைவரைப் பொறுத்த அளவில் மக்கள் சக்தியைத் தன் வயம் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள், மக்கள் அவர்கள் மீது கொண்டிருக்கிற அந்தப் பாசம், அன்பு, மக்கள் அவர்கள் மீது கொண்டிருக்கிற நம்பிக்கையில் அவர்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள். ஆகவே, அரசியல் கட்சிகளுடைய போக்கைப் பொறுத்தோ அல்லது அரசியல் கட்சிகள் விமர்சிக்கிறார்கள், ஆகவே நாம் நமது நிலையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்கிற அந்த நிர்ப்பந்தத்திற்கோ அவர்கள் உள்ளாகி அரசியல் நடத்தக் கூடியவர்கள் அல்ல. ஆக, மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற காரணத்தால் தான் மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் பெற வேண்டிய உதவிகளைப் பெறுகிற முறையில் பெறுவோம்.

[திரு. மா. சின்னராசு] [1984 மார்ச் 9

[பிற்பகல் 1-20].

சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்னால் இங்கே கலைவாணர் அரங்கத்திலே ஒரு கருத்தரங்கு செமினார் நடந்தது. அதில் திரு. பல்கிவாலா போன்ற பெரிய அரசியல் நிபுணர்களை, இந்த அரசு ஏற்படுத்திய நிறுவனத்தின் மூலம் வரவழைத்தது; மிக நல்ல கருத்துக்களை அவர்கள் பேசினார்கள். அந்த நல்ல கருத்துக்களைக் கேட்பதற்கு, அந்த நல்ல கருத்துக்களை அங்கே பகிர்ந்துகொள் வதற்கு, இங்கே அரசியல் சாசனங்களைப் பற்றி, மாநில அதி காரங்களைப் பற்றி பேசுகிற அரசியல் கட்சித் தலைவர்களை நாம் பார்க்க முடியவில்லை. பயனுள்ள அந்த செமினார், பல் கிவாலா சொல்கிறபொழுது அரசியல் சட்டத்திலே அமென்ட் மென்ட் செய்ததன் மூலம், நாம் இருக்கிற உரிமைகளை இழந்து விட்டிருக்கிறோம். பார்லிமென்ட் தன்னுடைய அதிகாரத்தை, மக்களுக்குத் தெரியாமலேயே, பல இடங்களில், ஷெடுயூலில், கன்கரன்ட் லிஸ்டில், சென்ட்ரல் லிஸ்டில், இருக்கிற வரி ஆதாரங் களை வளர்த்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாக குறிப்பிட்டார்கள். ஆக, இந்தப் போக்கை எல்லாம் வைத்துத் தான் இந்த சர்க்காரியா கமிஷனுக்கு, மாநில அரசாங்கத்திற்குரிய உரிமைகளைப் பெறுவதற்காக, அரசினுடைய அறிக்கையை தருவதற்கென்று ஒரு நிபுணர் குழுவை அமைத்தது, நமது புரட்சித் தலைவருடைய அரசு. அந்தக் கொள்கைக்காக, தொடர்ந்து வாதாடி வருகிறது அரசு என்பதை நீங்கள் தயவு செய்து மறக்கக் கூடாது என்பதை நான் தெளிவுபட தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல்தான் இன்று கூட்டாட்சித் தத்துவமும், ஆஸ்தி ரேலியா, கனடா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் இன்று ஏற்றுக் கொண்ட கூட்டாட்சி தத்துவதத்தின் காரணமாக அதனுடைய வலிவையோ, ஜனநாயக அமைப்பையோ இழந்து விடவில்லை. இன்னும் சொல்லப் போனால், ரஷ்யாவில் கூட மாநில மொழிகளுக்கு முழு உரிமைகளும் சுதந்திரமும் தரப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்கு போய் வந்தவர்கள் சொல்கிற நேரத்திலும் அதைப் பற்றி படிக்கிற நேரத்திலும் நாம் பார்த்திருக்கிறோம். ஆக எந்த ஒரு நாடும் ஒரு தேசிய இனம் என்ற ஒரு இனத்தை, இன அடிப்படையில் கொண்டுவந்து விட முடியாது. மொழியால், கலாசாரத்தால் பிளவு பட்டிருக் கிறவர்கள், ஒவ்வொரு மொழியையும் கலாசாரத்தையும் விட்டு விட்டு ஒருமைப்பாட்டின் காரணமாக, ஒரு மொழியின் கீழ் அல்லது ஒரு கலாசாரத்தின் கீழ் வருவோம் என்பதே ஒரு ஜன நாயக விரோதப் போக்கு என்பதையே பேரறிஞர் அண்ணா அவர்கள் காலம் பூராவும் சுட்டிக் காட்டி வந்திருக்கிறார்கள். ஆக, இப்படி இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டிருக்கிற நாம் இந்திய ஒருமைப்பாடு இருக்க வேண்டுமென்கிற நாம், இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிறோம் என்று சொல்கிறபொழுது



1984 மார்ச் 9] [திரு. மா. சின்னராசு]

இந்தி என்பது ஒரு மொழியினுடைய கலாசாரத்தை, ஒரு இனத் தினுடைய உணர்வுகளை பங்கப்படுத்துவதாக, மாசு படுத்துவ தாக அமைகிறது என்ற வகையில்தான் இந்தி ஆதிக்கம் கூடாது என்று சொல்கிறோம். தொடர்ந்து மத்திய அரசாங்கம் ஒருமைப்பாடு என்ற பெயரில், மொழி சுதந்திரத்தை, மாநில உரிமையை, இன உணர்வை பாதிக்கிற எந்த நடவடிக்கையை எடுத்தாலும் அதை நாம் கண்டிக்கத் தவறவில்லை என்பதை நான் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மட்டும் இந்த நிலை இல்லை. இன உணர்வுகள், மொழி உணர்வுகள் எங்கெல்லாம் பாதிக்கப்படுகின்றனவோ, அங்கெல்லாம் இன்று பேரறிஞர் அண்ணாவினுடைய கொள்கை உதயமாவதை நாம் பார்க்கின்றோம். அவர்கள் அண்ணாவைப் பேசாமல் இருக்கலாம், அண்ணாவினுடைய கொள்கைகளைப் படிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் தெலுங்கு தேசத்தினுடைய வரலாறு, தெலுங்கு தேசத்தினுடைய இன்றைய இந்த வளர்ச்சிக்குக் காரணம், அங்கு மொழி உணர்வையும் இன உணர்வையும் மத்திய அரசாங்கம் மதிக்காமல் இருப்பதுதான். அதைப் போல் இன்று பல்வேறுபட்ட இடங் களில் மாநில கட்சிகள், பிரதேசக் கட்சிகள் என்று சொல்லப்படக் கூடிய கட்சிகளைத் தேசியத் தலைவர்கள் ஆரம்பிக்கத் துவங்கி இருக்கிறார்கள். ஆக, இப்படி இன்று நாட்டிலே ஒரு மாறுபட்ட நிலை ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் மாநில சுயாட்சி, மாநில அதிகாரங்கள் வேண்டுமென்று பல மாநிலங் களில் கேட்பதற்குக் காரணம், இன்று நாம் தொலைதூர நோக் கோடு, பேரறிஞர் அண்ணாவின் ''மாநிலத்தினுடைய சுய அதிகாரத்தில், மாநிலத்தினுடைய அதிகப்படியான உரிமையில் தான் மத்திய அரசாங்கத்தினுடைய வலு இருக்கிறது'' என்கிற அந்தக் கோட்பாட்டை இந்த நிதிநிலை அறிக்கை சுட்டிக்காட்டி இருக்கிறது. ஆக, அதற்குமேல் என்ன விளக்கம் மத்திய மாநில உறவைப்பற்றி எதிர்பார்க்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வில்லை. ஆக, அந்த வகையில் நடைபெறுகிற புரட்சித் தலைவர் அரசில் கொள்கை மாறாமல் அவர் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கை வழியில், இடர்படுகிற இடையூறுகளைத் தவிர்த்து, அவைகளையும் வென்று அதற்கு மேல் நிதி ஆதாரங்களை நாம் வகுத்து, இந்தத் திட்டங்களுக்காகத் தந்திருக்கிறோம் என்கிற அந்தப் பெருந்தன்மையோடு, பெரு நோக்கோடு, மாற்றுக் கட்சி கருத்துடையவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை பார்க்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே இன்றைக்கு கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கை யிலே உணவு உற்பத்திக்காக நாம் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் நல்ல பணிகளை செய்து வந்திருக்கிறோம். உணவு உற்பத்தி செய்கிற விவசாயிகள் நல்ல நிலையில் இருந்தால் தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற அடிப்படை கொள்கையை ஏற்றுக் கொண்டு தான் பயிர் பாதுகாப்புத் திட்டமும்,

உழவர் காப்புறுத்தி திட்டமும் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே வர இருக்கிற இரண்டு திட்டங்களில் உணவு உற்பத்தி செய்கிற விவசாயிகளின் நலன் கவனிக்கப்படும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல இடங்களில் தெரிவித்து, விவசாய சங்கங்களின் தலைவர்களிடம் நல்ல அரிய ஆலோசனைகளைச் சொல்வதற்கு அரசிற்கு உறு துணையாக இருந்து உங்களுடைய குறைகளை போக்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். அவர்களை அரசியலில் மாறுபட்டு நிற்கிறார்கள் என்பதற்காக அந்த விவசாயிகளின் பிரதிநிதிகளை பகைவர்களாக நினைத்ததில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

விவசாயிகள் என்று கூறுகிற போது மத்திய அரசினுடைய பெரிய கடமையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நதி நீர் பங்கீடு, கிருஷ்ணா, கோதாவரி, காவேரி இணைப்புத் திட்டம் என்பதும் நீண்டநாட்களாகப் பேசப்பட்டு வருகிறது. இதற்காக ஒரு முனைப்பான முயற்சியை மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. கேரளாவிலே மேற்கு நோக்கிப் பாயக்கூடிய வீணாகிற நதி நீரை கிழக்கே திருப்பி விடுவதன் மூலம் பாண்டியாறு, புன்னம்புழா நதி நீர் வளத்தை பயன்படுத்திக்கொள்வதன் மூலம், கோவை, இராமநாதபுரம், மதுரை போன்ற பல்வேறு மாவட்டங்களில் உணவு உற்பத்திக்கு இது வாய்ப்பாக இருக்கும்.

20 அம்சத் திட்டத்திலே முக்கியமான திட்டமாக புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக ஆக்குவது, பாசன பூமியாக மாற்றுவது என்று கொள்கையாக சொல்லி வருகிற மத்திய அரசு, நதி நீர் வளத்தை தேவையான இடங்களில், பல்வேறு பாதிக்கப்பட்ட இடங்களில் திருப்பி விடுவதில் நாம் எதிர்பார்க்கிற அந்த முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவில்லை; இன்றைக்கு கேரளாவிலே காங்கிரஸ் அரசாங்கம்தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நல்ல நேரத்திலே குறைந்த பட்சம் கோவைக்காவது, அங்கே இருக்கிற வறண்ட பகுதிகளுக்கு பயன்படுகிற அளவிற்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க அவர்களை வற்புறுத்தி பெறுவதற்கு நாம் அனைத்துக் கட்சிக்காரர்களும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு அடுத்து மின்சாரத்திற்குத் தான் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே எவ்வளவு முடியுமோ அவ்வளவு நிதி ஒதுக்கி வருகிறோம். ஆனால், மின் உற்பத்திக்கு அனல் மின் நிலையங்களுடைய தேவைக்கு வேண்டிய நிலக்கரியைப் பெறுவதில் நமக்கு ஏற்படுகிற சிரமம் அதிகமாக இருக்கிறது. அந்த சிரமத்தைப் போக்குவதற்காக முயற்சியை மேற்கொண்டிருக்கிறபோது எதிர்க்கட்சிக்காரர்கள் நமக்கு எவ்வளவு தூரம் ஒத்துழைத்தார்கள் என்பதை நான் நினைவு கூற கடமைப்பட்



டிருக்கிறேன். அண்மைக் காலத்தில் நிலக்கரி விலையை 20 சதவீதம், யாரையும் கேட்க வேண்டிய அவசியம் இல்லாத மத்திய அரசு ஏற்றியபோது அனைத்து மின்நிலையங்களுடைய உற்பத்திச் செலவு அதிகமாகிறது. அதேபோல இரும்பும், போக்குவரத்துச் செலவும் அதிகமாகிறது. ஆகவே பல இனங்களில் மத்திய அரசு விலை உயர்வதற்கான வகையிலே, நடவடிக்கைகளை எடுக்கிறபோது மாநில அரசாங்கம் ஏற்கெனவே நிதி நெருக்கடியிலே இருக்கிறபோது, மேலும் அதிகமாக நெருக்கடிக்கு ஆளாக்கப்படுகிறது. அண்மையில் நிலக்கரி விலையேற்றத்தைப் பார்க்கிறோம். ஆகவே இப்படி தொடர்ந்து பல இனங்களில் மத்திய அரசினுடைய கொள்கையானது, அவர்களுடைய நடவடிக்கையானது, நம்முடைய நிதியாதாரங்களை பாதித்து இருந்தாலும் கூட நாம், தொடர்ந்து பல நல்ல நல்ல சமூக நலப் பணிகளை, மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளை ஆற்றி வருகிறோம், என்பதை பறை சாட்டுகிற விதத்திலே இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது. இதிலே எல்லா விவரங்களும் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு மானியக் கோரிக்கை இருக்கிறது. எல்லா விவரங்களையும் நிதிநிலை அறிக்கையிலே நாம் எப்போதும் தருவது கிடையாது. ஆனால் தேவையான விளக்கங்களை நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் முறையாக சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து தொழில் வளத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் ஒவ்வொரு முறையும் இங்கு வந்துவிட்டு கோவைக்குச் செல்கிறபோது பத்து நாள், பதினைந்து நாட்களில் புதியதாக ஒரு இண்டஸ்ட்ரி வந்திருக்கும். மதிப்பிற்குரிய ஆறுமுகம் அவர்களுக்கும் இது தெரியும், ஆகவே வளர்ந்து வருகிற தனியார் தொழில்களுக்கு நாம் எவ்வளவு தூரம் முன்னேற்றி வருகிறோம் என்பதை கோவை நகரத்திலே நாம் பார்க்கிறோம். தனியார் தொழில்கள் பெருகி வருவதற்குக் காரணம் அரசினுடைய நல்ல முனைப்பான திட்டங்கள் தான். இன்றைக்கு 'டிட்கோவிலும்' 'டிக்கிலும்' பெற்றிருக்கிற கடன், அரசு நிறுவனங்களிலிருந்து தனியார் பெற்றிருக்கிற கடன் 1289 கோடி ரூபாய் என்று பட்ஜெட்டிலே இருப்பதை ஏன் பார்க்க மறுக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு தூரம் நிதியுதவி பெற்றிருக்கிற அவர்கள் நிச்சயமாக தங்கள் தொழிலுக்குப் பயன்படுத்தி முறையாக திரும்ப கடனைக் கட்டவிருக்கிறார்கள். இதிலே டிபால்ட் கடனைப் பொறுத்த வரையில் ரொம்பவும் குறைவு.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விரைவில் முடித்துக் கொள்கிறேன். இங்கே தொழில் வளம் சிறப்புற இருப்பதற்குக் காரணம், புரட்சித்

தலைவர் ஆட்சியின் தொழில் கொள்கை என்பதையும், மேற்கு வங்கத்திலும், கேரளாவிலும், தொழில் வளம் குறைவதற்குக் காரணம் அங்கேயுள்ள ஆட்சிகளின் தொழில் கொள்கை என்பதையும் சுட்டிக்காட்டி என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 10—3—1984 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 7. பேரவை முன்வைக்கப் பெற்ற ஏடுகள்

—எதுவுமில்லை—



## இணைப்பு IV

*(12ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 235 க்கான விடையைக் காண்க.)*

(அ) ஆம்.

(ஆ) சுற்றுலா வழிக்காட்டிகளுக்கான பயிற்சித் திட்டம் நடப்பு ஆண்டு மார்ச்சு—ஏப்ரல் திங்கள்களில் (1983) நடத்தப் பட்டது. சுற்றுலாத் துறை இந்தப் பயிற்சி திட்டத்திற்கு இதுவரை செலவழித்த தொகை ரூ 28,000 ஆகும். இப் பயிற்சிக்கான காலம் ஆறுவாரங்களாகும். பயிற்சிக்கு தமிழ் நாடு முழுவதிலும் ஆர்வமுள்ள பட்டதாரி இளைஞர்கள் மனு செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் நேரடித் தேர்வு மூலம் முப்பது நபர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டனர். இப் பயிற்சி மதுரை மாநகரில் நடைபெற்றது. பயிற்சியில் சேர்ந்த ஒவ்வொருவருக்குப் பயிற்சி காலத்தில் ரூ. 300 உதவித் தொகை வழங்கப்பட்டது இப் பயிற்சி திட்டத்தின் கீழ் சுற்றுலா தொழில் சம்பந்தப்பட்ட பொருள் உரைகள் நிகழ்த்த பல்வேறு துறையைச் சார்ந்த அலுவலர்களும் கல்லூரி விரிவுரையாளர்களும் அழைக்கப் பட்டனர். இத்துறையின் அழைப்பேற்று உரை நிகழ்த்தியவர் களுக்கு ரூ. 100 வீதம் அன்பளிப்புத் தொகை வழங்கப்பட்டது. மத்திய அரசின் சுற்றுலாத் துறை இப்பயிற்சிக்கு ரூ. 5,000 மானியம் அளித்து பயிற்சி திட்டத்திற்கும் ஒத்துழைப்பு அளித்தது. பயிற்சியின் இறுதியில் கலந்து கொண்ட நபர்களுக்கு தேர்வு வைக்கப்பட்டது. அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அடையாள அட்டை வழங்கி சுற்றுலா வழிக் காட்டிப் பணியில் செயல்படுவர்.

(இ) கடந்த மூன்றாண்டு காலத்தில் 1983-ல் பட்டுமே இப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப் பயிற்சிக்கு முப்பது பேர்கள் நேரடித் தேர்வு மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டனர். அவர் களில் இறுதியில் நடைபெற்ற தேர்வில் தேறியவர்கள் 2 பெண் கள் உள்பட 24 பேர்கள். இவர்கள் தென் மாவட்டங்களில் பணியாற்றுவார்கள்.

**LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.**

***In Madras City.***

1. Account Test Institute, Egmore Madras-600 008.
2. The City Book Company, Madras-600 004.
3. Higginbothams (Private) Ltd., Madras-2.
4. P. Varadachary & Co., Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-600 005.
6. The Universal Book House, Moore Market, Madras-600 003.
7. C. Sitaraman and Company, Madras-600 014.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-600 005.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C Pycrofts Road Madras-600 005.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madars-600 001.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-600 001
12. New Century Book House (Private) Limited, Madras-600 002.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-600 008.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1. A. Venkatasubban and Company, Vellore (North Arcot District)-632 001
2. Bharathamatha Book Depot, Thanjavur.
3. S. V. Nathan and Company, Kumbakonam (Thanjavur District).
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8. B. Aruldass, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Book Sellers, No. 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. Mercury Book Company, No. 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jaganathan Book House, P.B. No. 327, No. 35, Nandhi Koil Street, Tiruchirappalli-2.
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin Book Sellers, Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar and Sons, Salem-636 001.
15. Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem-636 001.
16. Meenakshi Pathippagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari District.
19. Baby Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21. Kumaran Book Depot, Book Sellers, Erode-1.
22. Vela Book Company, No. 4, Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, No. 6-A, Raja Street, Coimbatore-1.
24. Ajantha Book Centre, Salem-1.
25. Sri Vidhya Book Shop, No. 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26. Sri Rama Vilas Book Shop, No. 90, Amman Sannathi, Madurai-1.
27. Sarvothaya Ilakkiya Pannai, No. 32/1, West Velli Street, Madurai-1.
28. Vijaya Book House No. 93, Cherry Road, Salem-636 001.

IN OTHER STATES.

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghalayam, Pondicherry.
6. Prabhu Book Service, Gurgaon, Haryana.
7. K. P. Bagchi and Company, No. 286 B.B. Ganguli Street, Calcutta-12.

[Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
6 MAR 1
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூலகம்

2161

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பதிவுத்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை, மார்ச் 10, 1984—தொகுதி LX எண் 2

Saturday, 10th March 1984—Volume LX No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600 009**

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

## உள்ளடக்கம்

**10-3-1984**


| | பக்கங்கள். |
| --- | --- |
| **1.** வினாக்கள்— விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் — .. .. | 131— **141** |
| **2.** அறிவிப்பு— | |
| மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி— சட்ட முன்வடிவுகள். .. .. .. | **142** |
| **3.** அரசினர் சட்ட முன்வடிவு— | |
| மருந்துப் பொருட்கள், ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத் திருத்தல்) சட்ட முன்வடிவு, 1984 .. | **142** |
| **4.** வரவு-செலவுத் திட்டம் 1984-85 பொது—விவாதம் (தொடர்ச்சி)— .. .. .. | **143—243** |
| திரு. மு. அரங்கநாதன் .. .. .. | **143—147** |
| திரு. ஆ. வெள்ளைச்சாமி .. .. .. | **148—152** |
| திரு. இரா. சண்முகம் .. .. . | **152—159** |
| திரு. என். பழனிவேல் .. .. .. | **159—169** |
| திரு. கே. சௌந்திரராசன் .. .. .. | **169—179** |
| திரு. தி. கா. நல்லப்பன் .. .. .. | **180—186** |
| திரு. ஆர். டி. கோபாலன் .. .. .. | **186—190** |
| திரு. ஏ. சாகுல் ஹமீது .. .. .. | **190—197** |
| திரு. ஜி. மூர்த்தி .. .. .. .. | **197—205** |
| திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் .. .. | **205—213** |
| திரு. செ. இராமலிங்கம் .. .. .. | **213—200** |
| திரு. எம். சின்னசாமி .. .. .. | **220—225** |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. .. | **205—232** |
| திரு. பெ. திருமாறன் .. .. .. | **232—235** |
| திரு. மு. அப்பாதுரை .. .. .. | **236—242** |
| திரு. இரா. சா. முனிரத்தினம் | **243** |
| **5.** **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** .. | **243** |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

1984 மார்ச் 10, சனிக்கிழமை

மாசி 27, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

*'' கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்*
*மாறாநீர் வையக்கு அணி.''*

ஒருவர் உள்ளத்தில் கருதியதை அவர் ஒன்றும் கூறாமல், அவர் முகத்தைப் பார்த்து அறியக் கூடியவன் இந்த உலகிற்கு அணிகலன் போன்றவன் ஆவான்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**சேலம் அருகில் அமைக்கப்பட்டுள்ள பால் பவுடர் தொழிற்சாலை.**

245—(*வினா எண். 17209)—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அருகில் பால்பவுடர் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் உற்பத்தித் திறன் வருடத்திற்கு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) சேலம் அருகில் தளவாய்ப்பட்டியில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கப்பட்டு, தற்சமயம் அது சோதனை ஓட்டத்தில் உள்ளது.

(ஆ) இத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 10 டன் பால் பவுடர் உற்பத்தித்திறன் கொண்டது.

[1984 மார்ச் 10

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, இத்தசைபால் பவுடர் தொழிற்சாலை ஒன்று ஏற்கெனவே வடாற்காடு மாவட்டத்தில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதே, அதை எப்போது ஆரம்பிப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அப்படி அறிவித்ததாக எனக்கு நினைவு இல்லை.

**தஞ்சையில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம் மற்றும் உள் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம்.**

246—(*வினா எண். 16639)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் நவீன வசதிகளுடன் கூடிய திறந்தவெளி விளையாட்டு அரங்கம் மற்றும் மேல் கூரையுடன் கூடிய கட்டிடம் ( Indoor Stadium ) கட்ட அரசு ஏதேனும் ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) திறந்தவெளி விளையாட்டு அரங்கம் ரூ.4.50 இலட்சம் மதிப்பீடு, உள் விளையாட்டு அரங்கம ரூ. 14.22 இலட்சம் மதிப்பீடு, நிர்வாகக் கட்டிடம் ரூ. 6.50 இலட்சம் மதிப்பீடு.

(இ) முதல் கட்ட வேலையாக மேற்கூரையுடன் கூடிய திறந்தவெளி விளையாட்டு அரங்கம கட்ட ரூ. 11.30 இலட்சத்திற்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

**வீரமங்கலம் உயர் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் திட்டம்.**

247—(*வினா எண். 18289)—திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டுத் தொகுதியில் வீரமங்கலம் உயர்தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசின் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?



1984 மார்ச் 10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இக் கோரிக்கையை அரசு ஆராய்ந்து 1983-84 ஆம் கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அனுமதி வழங்கப்படவில்லை.

**மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு ஆண்டுதோறும் அரசால் வழங்கப்படும் மானியத்தொகை.**

248—(*வினா எண். 19855)—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—காமராசர் பல்கலைக் கழகத்திற்கு அரசு ஆண்டுதோறும் வழங்கும் மொத்த மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், மதுரைப் பல்கலைக் கழகத்திற்கும் வழங்கப்படும் மொத்த மானிய நிதி உதவிகளில் ஏதேனும் வேறுபாடு உள்ளதா ?

(இ) ஆம எனில், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்படும் மானியத் தொகை அளவு வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ)—மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்திற்கு 1980-81ம் ஆண்டு வரை மொத்த மானியமாக ரூ. 18.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. மொத்த மானியம் ஆண்டு ஒன்றுக்கு இது ரூ. 27.00 இலட்சமாக 1981-82-லிருந்து உயர்த்தப்பட்டது. இதுதவிர, 1981-82ல் ரூ. 3,91,320, 1982-83ல் ரூ. 17,46,724ம் தனித்தனி திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம்.

(இ) அந்தந்த பல்கலைக் கழகத்தின் தேவை மற்றும் நிதி வசதிக்கேற்ப மானியம் வழங்கப்படுவதால் ஒன்றுக்கொன்று ஒப்பிடுதல் முடியாது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்த மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் வளர்ச்சியிலே முன்னேறிக் கொண்டிருப்பதால் இப்போது கொடுத்து வரும் உதவித் தொகை போதுமானது அல்ல என்று சொல்கிறார்கள் அதனுடைய வளர்ச்சிக்குத் தக்கவாறு உதவி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 10

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே வளர்ச்சிக்கு ஏற்பத் திட்டங்கள் போடுகிறார்கள். தனித் தனியாக திட்டங்களுக்கு ஏற்ப நாமும் பணம் தருகிறோம்; நாம் மட்டுமல்லாமல் பல்கலைக் கழக மானியக் குழுவும் பணம் தருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 249 முதல் 253 வரை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

### தஞ்சை மாவட்டத்தில் 1981–82 துவக்கப்பட்ட புதிய பேருந்து வழித்தடங்கள்.

254—(*வினா எண். 17364)—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1981-82 ஆம் ஆண்டில் புதிதாகத் துவக்கப்பட்ட புதிய பேருந்து வழித் தடங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளுள் போக்குவரத்துக் கழகம் மூலம் எத்தனை பேருந்துகள் விடப்பட்டன ?

(இ) தனியார் மூலம் எத்தனை பேருந்துகள் விடப்பட்டன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) தஞ்சை மாவட்டத்தில் 1981-82 ஆம் ஆண்டில் புதிதாக பதினெட்டு வழித் தடங்கள் துவக்கப்பட்டன.

(ஆ) அவற்றுள் 12 வழித்தடங்களில் 12 பேருந்துகளும், பலமுனை உரிமம் வழங்கும் திட்டத்தின் கீழ் (அதாவது ஒரே பேருந்து இரண்டு வழித்தடங்களில் செல்ல அனுமதிக்கப்படல்) 6 வழித்தடங்களில் 3 பேருந்துகளும் ஆக 18 வழித்தடங்களில் 15 பேருந்துகள் கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகத்தினரால் விடப்பட்டுள்ளது.

(இ) தனியார் மூலம் பேருந்து எதுவும் விடப்படவில்லை.



1984 மார்ச் 10]

### சேலம்–பெங்களூர் இடையே தினசரி ஓடும் நவீன வசதிகள் கொண்ட தனியார் பேருந்துகள்.

255—(*வினா எண். 18556)—திரு. சி. வெப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலிருந்து பெங்களூருக்கு நவீன வசதிகள் உள்ள தனியார் பேருந்துகள் Daily Sight-Seeing என்று போட்டு ஓட்டுவதால் அரசு போக்குவரத்துத் துறைக்கு நஷ்டம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆகவே, அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் நவீன வசதியுடன் விரைவாகச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) "ஆல் இந்தியா பர்மிட்" பெற்ற சில தனியார் பேருந்துகள் சேலத்திலிருந்து பெங்களூருக்கு Daily Sight Seeing என்று போட்டு ஓட்டுவதால் அரசு போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் பாதிக்கப்படுகிறது.

(ஆ) நவீன வசதிகளுடன் கூடிய பேருந்துகளைவிட அண்ணா போக்குவரத்துக் கழகம் பரிசீலனை செய்து வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இம்மாதிரியான போக்குவரத்து விட்டுக் கொண்டிருக்கும்போது அரசு போக்குவரத்துக்கு முன்னும், அரசு போக்குவரத்துக்குப் பின்னும், சில தனியார் பஸ்கள் விடுகின்ற காரணத்தால், குறைந்தபட்சம் ½ மணி, ஒரு மணி நேர வித்தியாசத்தில் பஸ்களை விட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே இது ஆல் இந்தியா பர்மிட் என்ற காரணத்தால் அதில் நாம் தலையிட முடியவில்லை. இருந்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன், சேலம், தருமபுரி மாவட்டங்களில் இப்போது நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நேரத்தைக் குறைத்து ஓட்டுவதற்கு அவசியமில்லை என்றுதான் அவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இருந்தாலும் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

[1984 மார்ச் 10

திரு. தி. அன்பழகன் : இரவு நேரங்களிலே அதிகமாக போக்குவரத்து வசதி வேண்டியிருக்கின்ற காரணத்தால், பயணம் செய்கின்ற பயணிகள் அதிகமாக காத்திருக்கின்ற காரணத்தால், திருவள்ளுவர் பேருந்தில் நவீன வசதிகள் இருப்பது போல், எல்லா பேருந்துகளிலும் நவீன வசதிகளைச் செய்வதற்கு ஆவன செய்வாரா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : அவைகள் குறுகிய தூரத்தில் ஓடுவதற்காக அந்தக் கழகத்தில் இருக்கிறது. நீண்ட தூரம் ஓடுவதற்காக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இருக்கிறது. இருந்தாலும் சில இடங்களில் முழுமையாக நவீன வசதிகள் இல்லை என்றாலும், ஓரளவிற்கு வசதிகளையுடைய பேருந்துகளை அந்தந்த போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. அது நடைமுறையில் இருந்து கொண்டிருக்கின்றன.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஆல் இந்தியா பர்மிட் என்று வாங்கிக் கொண்டு பலர் நேரத்தைப் போட்டுக்கொண்டு பேருந்துகளை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனால், அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் பெருத்த நஷ்டம் ஏற்படுவதால் பொதுமக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது. ஆகவே நேரத்தைப் போட்டு ஓட்டாமல், டெய்லி சைட் சீயிங் டிக்கட்டுகளை ஏற்றிச் செல்வதற்கு மட்டும் அனுமதி அளித்து, அதை மாற்றி அமைப்பதற்கு ஏற்பாடு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : ஆல் இந்தியா பர்மிட் பொறுத்தவரையில், ஸ்டேஜ் கேரேஜ் ஆக அவர்கள் ஓட்டக் கூடாது. இருந்தாலும் அவர்கள் ஓட்டுகிறார்கள். நடவடிக்கை எடுக்கிறபோது, நாம் அவைகளை நிரூபிக்க முடியாத அளவிற்கு வாய்ப்பு வசதிகள் இல்லாமல் போகின்ற காரணத்தால், அந்த தவறு நடக்கிறது. எனவே அதற்கு வேறு மாற்று வழி கண்டு பிடிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே சேலம், தருமபுரி மாவட்டங்களில் அதைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாட்டை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. சிவப்பிரகாசம் : தனியார் பேருந்துகள் பல நவீன வசதிகளுடன் இருப்பதால், அந்தப் பேருந்துகளுக்குக் கூட்டம் செல்கிறது. அண்ணா போக்குவரத்தில் 50, 60 பேருந்துகள் ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகளில் நவீன வசதிகள் இல்லாத காரணத்தால் சில நேரங்களில் கூட்டம் இல்லாமல் இருக்கின்றன. அந்தப் பேருந்துகளை நவீன வசதிகளுடன் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 10]

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : நான் ஏற்கனவே சொன்னேன். அதற்கான பரிசீலனையில் இப்போது அண்ணா போக்குவரத்துக் கழகம் இருக்கிறது என்று. அந்தப் பேருந்துகள் சிறப்பாக செயல்பட வேண்டுமென்ற காரணத்தால், ஆண்டுக்கு ஒரு முறை புதிய பேருந்துகளாக மாற்றிக் கொண்டிருக்கிறோம், எனவே இப்படிப்பட்ட வசதிகளைச் செய்கின்றபோதுகூட, தனியார்கள் இன்னும் அதிகமாகச் செய்கின்ற காரணத்தால், சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதையும் ஈடுகட்டுகின்ற வகையிலே அண்ணா போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், பெங்களூர் போகும் வண்டிகளிலே தனியார்கள் வீடியோக்களை எல்லாம் வைத்திருக்கிறார்கள். எனவே அண்ணாப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளிலும் இந்த மாதிரியான வீடியோக்களை வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதற்கான ஒரு சட்டம் வந்திருக்கிறது. எனவே அந்தச் சட்டத்தின் மூலமாக அது கட்டுப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார்கள் பொருத்தும் திட்டம்.

256—(*வினா எண் 18842—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள எல்லா சைக்கிள் ரிக்ஷாக்களிலும் மோட்டார்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : ஆம். இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் அதற்கான குறிப்பு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்போது ஏற்கனவே பல ரிக்ஷாக்களில் மோட்டார்கள் பொருத்தப்பட்டு அவைகள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அப்படி ஓடுகின்றபோது அதிலே இரண்டு பேர்கள் உட்கார்ந்து வேகமாகப் போகும்

போது, அதனால் வண்டி ஆட்டம் கொடுத்துக் கொண்டு போகிறது. எனவே அதிலே 3 பேர்கள் உட்கார்ந்து போனால், ஆட்டம் கொடுக்காமல், நல்லமுறையில் போக முடியும் என்று ஓட்டுநர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே அந்த முறையிலே அரசு அவர்கள் 3 பேர்களை ஏற்றிச் செல்ல அனுமதி அளிக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 3 பேர்களை அனுமதித்தால், வண்டியின் ஆட்டம் கட்டுப்படுத்தப்படும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நிபுணர்கள் 3 பேர்களை அனுமதித்தால் ஆபத்து என்று சொல்கிறார்கள். ஆகவே எதை எடுத்துக்கொள்வது என்று உறுப்பினரே முடிவு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்துவதற்காக, அவர்கள் வங்கிகளிலே சென்று கடன் கேட்டால், கடன் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் குறிப்பிட்ட வங்கிகளுக்கு, இந்தமாதிரியான சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்துவதற்குக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே. இதிலே ஒரு முடிவு எடுத்து, கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு வண்டிக்கு ஆயிரம் ரூபாய் என்று நாம் 109 வண்டிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். யார் சங்கம் அமைக்கிறார்களோ, அந்தச் சங்கங்களுக்கு வண்டி ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்று முடிவு செய்கிறார்கள். இதிலே சங்கம் அமைக்க யாராவது முன்வந்து, 50 உறுப்பினர்களுக்குக் குறையாமல் 100 உறுப்பினர்களுக்கு மேற்படாமல் இருந்தால் உதவி செய்கிறார்கள். எனவே இதற்கு அவர்கள் தயாராக வருவார்களானால், ஒத்துழைப்புக் கொடுப்பார்களானால், நாம் வேகமாக நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கம் அமைத்தால், அதற்குரிய நடவடிக்கை எடுத்து நிதி உதவி வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். திருச்சியிலே 2 ஆண்டுக்கு முன்பாக ஒரு சங்கம் அமைக்கப்பட்டு, நிதி உதவி கேட்டுப் பார்த்து, இன்னும் கிடைக்காமல் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அதைப்பற்றி ஆராய்ந்து தற்போது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிந்தது போல் எனக்கும் தெரியும். ஆனால் சூழ்நிலையின் காரணமாக அதிலே தீவிரமான நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆனால் தற்போது சென்னை மற்றும் பல இடங்களிலேயும் அதை விரிவாக்க வேண்டும் என்ற ஏற்பாட்டை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

### 1983 ஜூலை முடிய அனைத்து மாவட்டங்களிலும் ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள்.

357—(*வினா எண். 20902)—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்டங்களிலும் அரசுத் துறையிலும், தனியார்த் துறையிலும் ஓடுகின்ற மொத்த பஸ்கள் எவ்வளவு? (1983 ஜூலை முடிய).

(ஆ) இந்த வருடம் இரு துறைகளிலும் கொடுக்கப்பட்ட மொத்த உரிமங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) 1983 ஆம் ஆண்டு ஜூலை முடிய அனைத்து மாவட்டங்களிலும் அரசுத் துறையில் 7,417 வழித்தடப் பேருந்துகளும், 738 மாற்றுப் பேருந்துகளும், தனியார் துறையில் 4,641 வழித்தடப் பேருந்துகளும் 451 மாற்றுப் பேருந்துகளும் ஓடிக்கொண்டிருந்தன.

(ஆ) 1983 ஆம் ஆண்டு ஜூலை முடிய அரசுத் துறையில் 406 பேருந்துகளுக்கும், தனியார் துறையில் 26 பேருந்துகளுக்கும் உரிமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை நீண்ட காலத்திற்கு முன்னாலேயே எழுப்பினேன். நான் அமைச்சரிடத்திலேயிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், இப்போது மூன்றில் 2 பங்கு அரசுத் துறைக்கும், அதேபோல் மூன்றில் 1 பங்கு தனியார் துறைகளுக்கும் பஸ்கள் ஓட்டுவது போல் உரிமங்கள் கொடுக்கும் முறையினை அரசு மேற்கொள்ளுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதிலே உள்ள கணக்கைப் பார்த்தால், தனியார் துறைக்கு 26 உரிமங்களும், அரசுத்துறைக்கு 406 உரிமங்களும் கொடுத்

திருப்பது தெரியும். எனவே விகிதாசார அடிப்படையில் பார்த்தாலும், இதே நிலை தொடர்ந்து இருக்கவேண்டும் என்றுதான் அரசு கொள்கை வைத்திருக்கிறது. தனியார் துறைக்கு அதிகமாகப் போய்விடக்கூடாது என்பதிலே அரசு அக்கறையாக இருக்கிறது.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு பூராவும் 'ஆம்னி' பஸ்கள் ஓடிக்கொண்டு நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அதிகமான அளவில் நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே நம்முடைய போக்குவரத்துக் கழகங்களின் நஷ்டத்தைக் குறைக்கும் வகையில் அவைகளைக் கட்டுப்படுத்தி நம்முடைய போக்குவரத்து கழக பஸ்களை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், இந்த ஆம்னி பஸ்களைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் நல்ல பெருந்துகளை, ஆங்காங்கே அவர்கள் எங்கே போட்டியாக வருகிறார்களோ, அங்கெல்லாம் நல்ல பெருந்துகளை விட வேண்டும் என்று திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகம் தனி முயற்சிகளை எடுத்து அதில் கவனம் செலுத்தி வருகிறது. அதிலேயும் ஏதாவது இடர்ப்பாடுகள் இருக்குமானால் வேறு விதமான நடவடிக்கை எடுத்து அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் நிச்சயமாக எடுக்கும்.

திரு. மூ. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி புதிய வழித்தடங்களில் அனுமதி கொடுக்கிறபோது, ஏற்கனவே ஓடிக் கொண்டிருந்த அரசு போக்குவரத்துக் கழகங்களின் பஸ்களை நிறுத்திவிட்டு, தனியார் பஸ்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதே. குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் ஆத்தூர்—திருநெல்வேலி ரூட்டில் கே.டி.சி. ஓடிக் கொண்டிருந்தது. அதை நிறுத்திவிட்டு தனியார்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை மாற்றி அரசு வழித்தடங்களில் தனியார் பஸ்களுக்கு கொடுக்கக் கூடிய உரிமங்களை ரத்து செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, எங்கேயும் அரசாங்கத்திற்குச் சொந்தமாக ஓடிக்கொண்டிருக்கிற பெருந்துகளை நிறுத்தி தனியார்களுக்குக் கொடுத்ததாக நிச்சயமாகச் சொல்லமுடியாது. அப்படி இருக்குமானால், அது நீதிமன்றத்தின் மூலமாக ஏதாவது உத்திரவு வந்து, அந்த முறையிலே ஏதாவது நடவடிக்கை எடுத்திருப்பார்கள். சில இடங்களில் அரசுக்கு சொந்தமான பெருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றனவே,



குறைக்கப்பட்டிருக்கின்றனவே என்று சொன்னால், அந்தப் பகுதியிலே அந்தப் பெருந்து தேவையில்லை என்ற நிலைமை வந்திருந்தால் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்திருப்பார்கள். நிச்சயமாக நம்முடைய பெருந்துகளை நிறுத்திவிட்டு, தனியார்களுக்குக் கொடுக்கிற நிலைமை எங்கேயும் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து உத்தரவு வந்திருந்தால், சில இடங்களில் அப்படிப்பட்ட நிலைமை வந்திருக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, அரசாங்க பெருந்து பஸ்கள் ஓடக்கூடிய இடங்களில் அவை நிறுத்தப்பட்டு, தனியார் பஸ்கள் எங்கேயும் விடப்படுவது இல்லை என்று சொன்னார்கள். விருதுநகரில் இருந்து கோவில்பட்டிக்கு ஒரு பி.ஆர்.சி. பஸ் ஓடிக் கொண்டிருந்தது. அதை நிறுத்திவிட்டார்கள். ஆகவே, அதை தொடரவேண்டும் என்கிற கோரிக்கையையும் அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதே போன்று ராஜபாளையத்திலிருந்து, விளாத்திகுளம் ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸை நிறுத்திவிட்டு, அங்கேயும் தனியார் பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இது மாதிரி நடக்காமல், மாண்புமிகு உறுப்பினர் அப்பாதுரை சொன்னது மாதிரி, அரசு போக்குவரத்து பெருந்துகள் ஓடிக் கொண்டிருக்கிற இடத்தில், அந்த வழித்தடங்களில், அரசு பஸ்களே தொடர்ந்து ஓட ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசாங்க பஸ்கள் ஓடியதை நிறுத்திவிட்டு, குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதை கவனிக்கலாம். ஆனால் நிறுத்தப்பட்ட இடத்திலே தனியார்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது நிச்சயமாக இல்லை என்று சொல்ல முடியும். காரணம், தனியார்களுக்கு பெர்மிட் கொடுப்பதே கிடையாது. தற்காலிகமாக கொடுக்கப்படும் உரிமமும் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, அதை நிறுத்திவிட்டு, இதை ஓடவிட்டார்கள் என்பது தவறானது, அப்படி சொல்கிறபோது, அது மாறுபட்ட கருத்துக்களை உருவாக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஓடிக் கொண்டிருந்த பஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கிறதே அதற்கு என்ன காரணம் என்று கேட்டால் நடவடிக்கை எடுக்கலாம். சில இடங்களில் அப்படிப்பட்ட தவறுகள் நடந்திருந்தால், என்ன காரணம், என்பதைப் பார்த்து, அதை சரி செய்யலாம், நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற மாதிரி அரசாங்கப் பெருந்துகளை நிறுத்திவிட்டு, எங்கோ நின்று கொண்டிருக்கும் தனியார் பெருந்துகளை ஓடவிடுவதாக சொல்வது சரியல்ல. அப்படிப்பட்ட நிலைமை நிச்சயமாக இல்லை.

[1984 மார்ச் 10

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஜூலை முடிய எல்லா இடங்களிலும் ஓடிக் கொண்டிருக்கக்கூடிய பேருந்துகளின் கணக்குகளை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது, இந்த அரசு வந்ததற்குப் பின்னால் எத்தனை பேருந்துகளை எத்தனை வழித் தடங்களுக்கு ஓட அனுமதி வழங்கியது? அதாவது பஸ் ரூட்டுகளே போகாத கிராமங்களுக்குப் புதியதாக வழங்கப்பட்ட வழித்தடங்கள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் அறி விப்பாரா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இப்போது அந்த கணக்கு கள் என்னிடத்தில் இல்லை. தோராயமாக சொல்ல வேண்டும் என்றால், இந்த அரசாங்கமே 1977-லே, ஆட்சி பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்னால், ஏறத்தாழ 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்ற நிலையை உருவாக்கியிருக் கிறது. வழித் தடங்கள் என்ற கணக்கில் இன்னும் அதிகமாக கூட இருக்கலாம். விவரமாக வேண்டும் என்றால், தனியாக கேட்டால், அதற்கு தகுந்த பதிலை தரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் தனியார் பேருந்துகளுக்குக் கேட்டார் என்று நினைக்கிறேன்.

திரு. என். பழனிவேல் : இல்லை, நான் தனியார்களைக் கேட்கவில்லை. அரசு சார்பாகத்தான் கேட்டேன்.

### ஏலகிரி மலையில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்.

258—(*வினா எண். 19083)—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1984 மார்ச் 10]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மலைவாழ் மக்கள், பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்காக வேண்டி பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படுவதாகச் சொல்லப்படுகிற இந்த நேரத்தில், அந்த மக்கள் தொழிற்பயிற்சி பெறக்கூடிய வகையில், விரைவாக உடனடியாக இந்தப் பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு மற்றும் தொழில் பயிற்சி இயக்குநர், அரசுக்கு அனுப்பியிருக்கக்கூடிய அறிக்கையில், குறிப் பாக வட ஆற்காடு மாவட்டம் ஏலகிரி மலையில் வாழக்கூடிய பழங்குடி மக்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று சுட்டிக் காட்டி, அங்கே பழங்குடியினருக்கு என தனியாக ஏலகிரி மலையிலேயே தொழிற் பயிற்சி நிலையத்தை ஆரம்பிக் கலாம் என கருத்துரு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அதற்கான பரிந்துரைகள் அரசுக்கு அனுப்பப் பட்டு இருக்கின்றன. நம்முடைய பழங்குடி மக்களுடைய நலனுக் காக இந்த அரசு மத்திய அரசோடு இணைந்து பழங்குடியினர் துணை மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. அதி லிருந்து அதற்கான நிதியைக் கொடுத்து தொழிற் பயிற்சி நிலை யத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற முடிவோடு ஆதிதிராவிடர், பழங்குடியினர் துறை இயக்குநர் அதற்கான பரிந்துரைகளை அனுப்பியிருக்கிறார்கள். அதன்மீது அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே விரைவாக அந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தை அங்கே அமைக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளும்.

(முற்பகல் 9.20)

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, வட ஆற் காடு மாவட்டத்திலே ஏலகிரி மலையிலே புதிய தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் கூறினார் கள். அந்த நிலையத்தில் என்ன என்ன தொழில்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு அந்த நிலையத்திற்கு மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என் பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, அங்கே அமைய இருக்கின்ற தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ஆகக் கூடிய மொத்தச் செலவு 41.51 இலட்சம் ரூபாய் ஆகும். அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தில் பிட்டர், எலக்ட்ரிஷியன், டர்னர், மோட்டார் வாகன பழுது பார்ப்பவர், பவர் வயரிங் டிரேட்களில் பயிற்சியை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக் கிறோம்.

1984 மார்ச் 10]

சட்டமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சேலம் மாவட்டத்திலே கொல்லி மலையிலே ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதற்கான செயற்குறிப்பை அனுப்பும்படி வேலை வாய்ப்புத்துறை இயக்குநரை நாம் கேட்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 259, 260, மற்றும் 261 ஆகியவை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கத் தள்ளி வைக்கப்படுகின்றன.

### மணலியில் சலவை சோப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

262—(*வினா எண். 19789)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்துள்ள மணலியில் சலவை சோப்புத் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

### செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பட்டுநூல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

263—(*வினா எண். 20361)—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் தற்போது எத்தனை பட்டுநூல் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன?

(ஆ) எத்தனைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன?

(இ) புதியதாகச் சங்கம் துவங்க அனுமதிகேட்டு விண்ணப்பம் வந்துள்ளதா?

**திரு. தி. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தொழிற் பயிற்சி நிலையம் ஏலகிரி மலையிலே ஆரம்பிக்கப்படுவதைப் போல் ஜவ்வாது மலைப் பகுதியிலே அதிகமாக இருக்கின்ற மலைவாழ் மக்களுக்காக—அங்கே அதிகமாக மலைவாழ் மக்கள் வாழ்கின்ற காரணத்தினால்—அங்கே உள்ளவர்களுக்கும் தொழிற் பயிற்சி நிலையம் இருக்கக்கூடிய முறையிலே இரண்டு பகுதிகளுக்கும் இடையிலே இருக்கிற திருப்பத்தூர் பகுதியிலே அந்தத் தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, பழங்குடி மக்கள் எண்ணிக்கையைப் பொறுத்து அதற்கான பரிந்துறைகள் இயக்குநரால் அரசுக்கு அனுப்பப்படுகின்றன. அதன் அடிப்படையில் குறிப்பாக ஏலகிரி மலைப் பகுதியிலே ஒரு தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கவேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். ஜவ்வாது மலைக்குத் தொழிற் பயிற்சி நிலையம் தேவையென்று சொன்னால் பரிசீலனை செய்து அதற்காக நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. சு. பாலன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், ஏலகிரி மலைப் பகுதியிலே தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதிலே எந்த எந்த விதமான டிரேடுகளில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படுகின்றன ? அங்கே சேர்க்கப்படுகிறவர்கள் ஐ.டி.ஐ.-யில் படித்தவர்கள் சேர்க்கப்படுவார்களா அல்லது 8ஆம் வகுப்பு படித்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, எந்த எந்த டிரேடுக்கு என்ன என்ன கல்வித் தகுதிகள் என்று விதிமுறைகள் செய்யப்பட்டிருக்கின்றனவோ, எந்த எந்த டிரேடுக்கு எந்த எந்த தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு ஏற்ப சேர்க்கப்படுவார்கள்.

**திரு. டி. ரமணி:** தலைவர் அவர்களே, ஏலகிரி மலையில் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு ஒரு தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது போன்று மலைவாழ் மக்களுக்கு, பழங்குடியினருக்கு, வேறு எந்த மாவட்டங்களிலே தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, ஏலகிரி மலைப் பகுதியைத் தவிர அதைப் போலவே சேலம் மாவட்டத்திலே கல்ராயன் மலைப் பகுதியிலே ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கலாம் என்று வேலைவாய்ப்புத் துறை இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். நம்முடைய

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரம் மல்பரி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம் என்ற ஒரு சங்கம் உள்ளது,

(ஆ) அச்சங்கம் செயற்படாமல் உள்ளது.

(இ) இல்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மல்பரி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம் பல லட்சக்கணக்கான ரூபாயில் முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் ஆரம்பித்தார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கம் எதனால் இன்று செயல்படவில்லை? அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு என்ன ஆனாது? அது செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மல்பெரி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் 3-1-1974 அன்று பதிவு செய்யப்பட்டது. 1-4-1974 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சங்கத்தினுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 55. பங்குத் தொகை ஒன்பது ஆயிரத்து எழுநூற்று முப்பது. இந்தச் சங்கத்தினுடைய உதவியை நாடாமலேயே அவர்கள் பட்டு நூல் உற்பத்தி செய்து வருவதால் அது ஒழுங்காக செயல்படவில்லை. அரசு நிதி எதுவும் அதற்கு கொடுக்கவில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மல்பெரி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கத்திற்கு லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அந்தத் தொகைகள் என்ன ஆனது என்பது பற்றியும் அதில் யார் யார் எடுத்துச் சென்றார்கள், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பது பற்றியும் அறிய விரும்புகிறேன். அதோடு மட்டும் அல்லாமல் என்னுடைய மூலக் கேள்வி பட்டுக்கோரா டுவிஸ்டிங் அண்டு ரீலிங் என்று ஒரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்படுமா என்பது தான்? அந்த பட்டுக்கோரா டுவிஸ்டிங் அண்டு ரீலிங் சங்கம் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அதோடு மட்டும் அல்லாமல் அந்தக் கூட்டுறவு இணையத்தின் மூலம் டுவிஸ்ட்டிங் செய்பவர்களுக்கு தான் அந்தப் பட்டை வினியோகிக்க வேண்டும். ஆனால் டுவிஸ்ட்டிங் பேக்டரி இல்லாதவர்களுக்கு எல்லாம் அந்த பெடரேஷன் மூலம் வழங்கப்படுகிறது. அது அரசுக்குத் தெரியுமா? இது போன்ற முறை கேடுகளை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வினாக்களுக்கு எந்தவிதமான குறிப்பும் தற்போது என்னிடத்தில் இல்லை.



**1982-83—ல் சிறுதொழில்கள் துவங்க வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை.**

264—(*வினா எண். 20792)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிறு தொழில்கள் துவங்கும் தனியார்கட்குத் தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகள் எவ்வளவு கடனாக, 1982–83 ல் கொடுத்திருக்கின்றன?

(ஆ) அதில் எந்த மாவட்டம் அதிகப் பலன் பெற்றுள்ளது?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) தமிழகத்தில் 1982–83-ல் மாவட்ட தொழில் மையங்கள் மூலம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து சுமார் 3,761 சிறு தொழில்களுக்கு ரூ. 604.50 இலட்சம் கடனாக ஒப்பளிப்பு பெறப்பட்டது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் 2,108 தொழில்களுக்கு ரூ. 67·72 இலட்சமும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 365 தொழில்களுக்கு ரூ. 222·34 இலட்சமும் கடனுதவியாக கிடைக்கப்பெற்றுள்ளன. பயன் பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கையைக் கொண்டு பார்த்தால் சேலம் மாவட்டமும், கடனாக வழங்கப்பட்ட தொகையை கொண்டு பார்த்தால் கோயம்புத்தூர் மாவட்டமும் அதிகப் பயன் பெற்றுள்ளன.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பொருளாதாரத்தில் பின்தங்கிய தாலுக்காக்கள் என்று சொல்லி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி பின்தங்கிய தாலுக்காக்கள் என்று அறிவிக்கப்பட்ட அந்த தாலுக்காக்களிலிருந்து அனுமதிக்கப்பட்ட மனுதாரர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா? அதுவும் அல்லாமல் இந்தத் துறையின் மூலம் அந்த பின்தங்கிய மனுதாரர்களுச்கு பரவலான கணிசமான பணத்தை ஒதுக்கி உதவிட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பொதுவாக மாவட்ட தொழில் மையப் மூலமாக தொழில் முனைவோர்களுக்கு உண்மையாக தொழில் செய்ய ஆர்வம் இருந்தால் அவர்கள் முன்வருவார்களானால் அவர்களுக்கு உதவிட மாவட்ட தொழில் மையம் தயாராக இருக்கிறது. எனவே குறிப்பாக இதனுடைய திட்டம் தொழில் முனைவோர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதுதான்.

பிற்பட்ட வட்டங்கள் மற்ற பகுதிகள் என்று எல்லாம் பார்க்காமல் தொழில் முனைவோர்களுக்கு மட்டும் முதலிடம் கொடுக்கப் படுகிறது.

(முற்பகல் 9-30)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது புதிதாக சிறு தொழில்கள் துவங்குபவர்களுக்கு கடன் கொடுப்பதில் இரண்டு மாவட்டங்கள் அதிகப்படியான பணம் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னார் கள். இப்படிப்பட்ட சிறு தொழில்கள் ஆரம்பிப்பவர்களுக்கு என்னென்ன நிபந்தனைகளின் பேரில் இந்தக் கடன் கொடுக்கப் படுகிறது? அந்த நிபந்தனைகள் கடுமையாக இருப்பதன் காரண மாக சிறு தொழில் ஆரம்பிப்பவர்கள் அந்தத் தொழிலை ஆரம் பித்து நடத்தி உற்பத்தி செய்வதற்குள்ளேயே அந்தப் பணம் எல்லாம் தீர்ந்து போய் பல தொழில்கள் நின்று போயிருக்கின்றன. அப்படிப்பட்டவைகளுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? மேலும் அவர்களுக்குப் பணம் கடன் கொடுக்க முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் தற்போது என்னிடமில்லை.

திரு. மி. வின்செண்ட் : தலைவர் அவர்களே, கடந்த ஏழு ஆண்டுக் காலத்தில் இந்தியாவிலேயே அதிகமான அளவிற்கு சிறு தொழில்களைத் துவக்கிய மாநிலம் தமிழகம் என்று சொல்லப் படுவது உண்மையா? மொத்தம் எவ்வளவு சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன? அவற்றின் மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பில் மாவட்ட வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படிப்பது என்றால் நீண்ட நேரமாகும். தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) அறிக்கையாகப் பின்னால் வைக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்தச் சிறு தொழில்களைத் துவங்குவதற்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் பணம் கடன் கொடுப்பதாக பெரிய விளம்பரங்கள் செய்கிறார்கள். ஆனால் போதுமான அளவிற்கு உதவி கிடைக் காமல் சிறு தொழில் அதிபர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மாநில அரசு சிபார்சு செய்கிறது. நாம் உரிமம் வழங்கி விடு கிறோம். ஆனால் அவர்கள் வங்கிக்குச் சென்று பல ஆண்டுகள் அலையக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே நான் கேட்க விரும்பு வது என்னவென்றால், நாம் அனுமதிப்பதோடு நம்முடைய நிர் வாகத்துறையில் ஒரு அமைப்பு ஏற்படுத்தி வங்கியிலிருந்து கடன் பெற்று அவர்கள் கையில் கொடுக்கிற ஒரு ஏற்பாடு இருந்தால்



தான் திட்டம் அமலாகும். இல்லையென்றால் பேப்பரில்தான் நிவாரணம் இருக்கும். எனவே சிறு தொழில் முனைவர்களுக்கு வங்கிகளிலிருந்து உரிய காலத்தில் கடன் கிடைப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தற்போது மாவட்ட தொழில் மையங்கள் மூலம் வங்கிகளிடமிருந்து பணம் பெறப் பட்டு சிறு தொழில் முனைவர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படிக் கொடுக்கிற நேரத்தில் மாவட்ட தொழில் மையங்களி னால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் வங்கிகளுக்குச் செல்கிற நேரத்தில் பல வங்கிகளில் காலதாமதம் செய்வதாகத் தகவல் வந்தது. அந்த அடிப்படையில் தற்போது—செய்தித் தாள்களில் பார்த்திருப்பீர்கள், ஒரு வங்கி பொது மேலாளர் நீக்கப்பட்டிருக் கிறார். எந்தவித வினாக்களும் எழாத விதத்தில், வங்கிகள் உடனடியாகக் கடன் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து பார்க்கிறபோது ஒரு சில மாவட்டங்களில் அதிகமாக இந்த உதவியைப் பெற்றிருக் கிறார்கள் எனத் தெரிகிறது. மதுரை போன்ற பிற்பட்ட மாவட் டங்களில், அங்கிருக்கிற ஏழை எளிய விவசாயிகளுக்கு தொழில் அறிவு இல்லாததால் அவர்கள் கடன் பெறுகிற வசதி பற்றி அறியாதவர்களாக இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு கடன் பெறுகிற வழிகளை அறிவிக்கிற விதத்தில் கிராமம் கிராமமாகச் சென்று அந்தந்தப் பகுதிகளில் என்னென்ன தொழில்களை ஆரம் பிக்கலாம், எந்த விதத்தில் கடன் பெறலாம் என்பன பற்றி வகுப்பு எடுத்து அவர்களை முன்னேற்றுவதற்கு வழிவகை செய் வார்களா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையத்திலிருந்து—மற்றவர்களை அணுகு வதை விட—தொழில் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் ஆலோசனை கேட்டால் அதற்குரிய ஆலோசனை கிடைக்கும்.

திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வங்கிகள் மூலம் கடன்கள் வழங்குவது பற்றிச் சொன்னார்கள். சிறு தொழில்கள் துவங்குபவர்களுக்கு வங்கிகள் கடன் வழங்குவது ஒருபுறமிருந்தாலும், தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளுக்கு அந்தக் கடன் வழங்குவதில் முன் உரிமை வழங்கப்படுகிறது. பின்தங்கிய பகுதிகளாக இல்லாத இடங்களில் வங்கிகள் கடன் கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா? ஏற்கெனவே தொழில் துறையில் பின்தங்கிய பகுதி களாக இல்லாத இடங்களைத் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள் ளதா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய தகவல் இல்லை. என்றாலும்கூட, நீங்கள் ஏதாவது உதாரணம் காட்டி, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் இதுபோன்று எத்தனை நபர்களுக்கு சிறு தொழில்கள் துவங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது ? காஞ்சீபுரம் தாலுகாவில், காஞ்சீபுரம் பகுதியை பின் தங்கியதாக அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் 1982-83 ஆம் ஆண்டு 197 நிறுவனங்களுக்கு ரூ. 88.38 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது 1983-84 இல் 30-9-1983 முடிய 79 நிறுவனங்களுக்கு ரூ. 18.33 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி சிறு தொழில்கள் துவங்குவதற்கு தனியார்களுக்கு வழங்கப்படக்கூடிய கடன், அந்த நபர்கள் அந்தத் தொழில்களுக்கான எந்திரங்கள், தொழிற் கருவிகள் வாங்குவதற்கு வழங்கப்படுகிறது. அந்தத் தொழிற் கருவிகள் கொடுப்பவர்களிடத்திலே கொடேஷன் பெற்று, அவர்களுக்கு காசோலை வழங்கப்படுகின்றது. அந்தக் காசோலையைப் பெற்றுக் கொண்டு, பலர் அந்தத் தொழிற் கருவிகளை அந்தக் கடன் தரக் கூடிய நபர்களுக்கு வழங்காமல், அதிலே கையாடல் செய்யப்படுவதால், அந்த முறையில் அவர்களுக்கு இழப்பீடு ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்கு, அந்தத் தொழில்களைத் துவங்குவதற்கான கருவிகளைக் கொடுக்காதவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், கடன் வாங்கியவர்களை பாதுகாப்பதற்கும் என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் அரசுக்கு எதுவும் இல்லை. என்றாலும், நீங்கள் குறிப்பாக இந்தத் தவறு நடந்திருக்கும் இடத்தைச் சொல்வீர்களானால், அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.





திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளிக்கும் போது 3,761 சிறு தொழில்களுக்கு கடன் வழங்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதிலே சேலம் மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் 2,600 தொழில்களுக்கும், மீதி 1,000 தொழில்கள் மற்ற மாவட்டங்களுக்கும் அளித்திருப்பதாக தகவல் சொல்லியிருக்கிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, திருச்சி மாவட்டத்திலே இருந்து எவ்வளவு மனுக்கள் வந்தன ? அதிலே எவ்வளவு மனுக்கள் மீது முடிவெடுக்கப்பட்டிருக்கிறது ? அங்கிருக்கிற அதிகாரிகள் • மெத்தனமாக இருந்ததாகவும், அதனால் அதிகமான மனுக்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறதே, அந்த அதிகாரிகள் மீது அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன என்பதைப் பற்றிய தகவல் இல்லை. ஆனால், 1982-83 ஆம் ஆண்டில் 74 நிறுவனங்களுக்கு ரூ. 9.04 இலட்சமும், 1983-84 ஆம் ஆண்டில் 30-9-1983 வரை 39 நிறுவனங்களுக்கு ரூ. 10.40 இலட்சமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புகாருக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய அளவுக்கு பெரிய தொழில்கள் இல்லாத ஒரு மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டமாகும். அந்த மாவட்டத்திலே சிறு தொழில்கள் துவங்குவதற்கு மனு போடப்பட்டு நிறைய ஆட்களுக்கு பணம் வழங்குவதற்கு டிஸ்டிரிக்ட் இண்டஸ்டிரியல் சென்டர் சிபார்சு செய்யவில்லை. ஆகவே, பின்தங்கிய பகுதி என்ற நிலையில் இந்த மாவட்டத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அதிகமான பணம் ஒதுக்கி, வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 9-40)

## 2. அறிவிப்பு.

### மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி—சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. 1984 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1983).

2. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1984.)

மேலும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/1984) ஆய்வு செய்யப் பெற்று, பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றதாகவும் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

## 3. அரசினர் சட்ட முன்வடிவு.

### மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு, அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.





## 4. வரவு–செலவுத் திட்டம், 1984-85—பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது என்னைப் பேச அழைத்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது மக்கள் நலனுக்காகவும், பொருளாதார வளர்ச்சிக்காகவும் பல்வேறு துறைகளில் தமிழக அரசு முயற்சி செய்து வருவதாக இந்த நிதி நிலை அறிக்கையில் பெருமையாகக் கூறியுள்ளீர்கள். நீங்கள் கூறியுள்ளது உண்மையாக இருக்குமானால், குறிப்பாக உழைத்து உழைத்து உருக் குலையும் விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள் இன்று நிம்மதியாக இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் உணவுப் பொருள் வாங்கவே வசதியற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதை யார்தான் மறுக்க முடியும்? அதனால்தான், மற்ற மாநிலங்களைக் காட்டிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை தமிழகத்தில் அதிகமாகி இருக்கிறது.

படித்து, வேலையற்றோரின் எண்ணிக்கையும் இங்கு அதிகமாக இருக்கிறது. எனவே, வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறைக்க இந்த அரசு தீவிரமாக நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

கல்விக்காக 400 கோடி ரூபாய் செலவு செய்யப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் பல பள்ளிகளில் ஆசிரியர்களும், மாணவர்களும் உட்காருவதற்கு வேண்டிய மேசை, நாற்காலிகள் கூட பரவலாக எங்கும் இருப்பதில்லை. இப்படி அவர்கள் உட்காருவதற்கு மேஜை, நாற்காலிகள்கூட இல்லாத நிலை தமிழ்நாட்டில் பல இடங்களில் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. இதைப் போலவே, நீலகிரி மாவட்டத்திலேயும், மழைக் காலத்திலும், பனிக் காலத்திலும் மாணவர்கள் உட்கார்ந்து எழுதுவதற்குக் கூட, பெஞ்சு, நாற்காலிகள் போன்றவை இல்லை. கூடலூர் பகுதியிலும் சரி, அல்லது குன்னூர் பகுதியிலேயும் சரி, அங்குள்ள பள்ளிகளிலே ஆசிரியர்களும், மாணவர்களும் உட்காருவதற்குப் போதுமான நாற்காலிகளும், மேசைகளும் இல்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் போன்ற தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற அளவு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. பலயிடங்களில் ஆசிரியர்களே இல்லாத நிலையும் இருக்கிறது. நூறு பேர்களுக்கு ஒரு ஆசிரியர், 200 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையில்

பல பகுதிகளில் இருக்கிறார்கள். இந்த அளவிற்கு ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த அளவில் இருந்தால் கல்வி எப்படி வளரும்? கல்வியின் தரம் எப்படி வளரும் என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

சத்துணவுத் திட்டத்தால் அதிகமான மாணவர்கள், அதாவது 3.82 இலட்சம் மாணவர்கள் அதிகமாகப் பள்ளிகளில் சேர்ந்து இருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் இவ்வளவு மாண வர்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருந்தும் கூட அந்த அளவிற்கு ஆசிரியர்களையும் அதிகமாக நியமிக்கவில்லையே, ஏன் அவ்வாறு நியமிக்கவில்லை? அதிகமான ஆசிரியர்களை நியமிக்காமல் அதிக மாணவர்களை மட்டும் சேர்த்தால் அவர்கள் எப்படிக் கல்வி பயிலுவார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். மாணவர்களை அதிகமாகச் சேர்க்கும்பொழுது அதற்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் ஆசிரியர்களை நியமிக்கவில்லையே, ஏன்? பள்ளிக்கு மாணவர் கள் வருவது ஒரு வேளை சோற்றுக்குத்தானா அல்லது படிப்பதற் காகவா என்ற சந்தேகம் பொதுமக்களுக்கு ஏற்படுகிறது.

நிதிநிலை அறிக்கையில், பெட்ரோலுக்கு விற்பனை வரியை அதிகமாக்கியிருக்கிறீர்கள். இதன் காரணமாக உணவுப் பொருட் களின் விலைதான் உயரும். ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு உணவுப் பொருட்கள் செல்லும்போது வண்டிகளுக்கு வாடகை அதிகமாகும். அதனால் உணவுப் பொருட்களும், மற்றப் பொருட்களும் விலையேறும் நிலைமை இருக்காதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்து, விலைவாசியைக் குறைப்போம் என்று சொல்லி இருக் கிறீர்கள். ஆனால் நீங்கள் பெட்ரோலியத்தின் மீது போட்டுள்ள வரி விலைவாசி உயர்வுக்கு வழி வகுக்காதா என்று நான் கேட் கிறேன். அதன் காரணத்தால் ஆட்டோ ரிக்ஷா, பேருந்துக் கட்டணம் ஆகியவை உயரும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றன.

அடுத்து, பருத்திக்கு வரி அதிகமாக்கப்பட்டிருக்கின்றது. பருத்தித் துணியை ஏழை, எளிய மக்களும் பாட்டாளி மக்களும் தான் வாங்குகிறார்கள். ஆகவே பருத்தித் துணியின் விலை அதிகமாக ஆகின்ற நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். அதைத் தவிர்க்க வேண்டாமா?

அடுத்து, குதிரைப் பந்தயத்தை ஒழிப்பேன் என்றும், குதிரை பந்தயத்தை அரசே ஏற்று நடத்தும் என்றும் நம்முடைய முதல் அமைச்சர் முழங்கினார். ஆனால் தற்போது குதிரைப் பந்தயம், ஒழிக்கப்படாத நிலைமை மட்டுமல்ல, வருடத்திற்கு ஒரு முறை என்ற அளவிலே நடந்து கொண்டிருந்த குதிரைப் பந்தயம்



இப்போது தினசரி அதே வேலையாக மக்கள் அலைகின்ற வகை யில் வருடம் முழுவதும் நடக்கின்ற அளவுக்கு நிலைமைகள் ஏற் பட்டு, அங்கே மக்கள் கூடிக் கொண்டிருக்கின்ற நிலைமைதான் இருக்கின்றது.

ஊட்டி குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்காக 1974 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு சட்டம் கொண்டு வந்தது. கிட்டத்தட்ட 7, 8 ஆண்டுகள் ஆகியும் உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்கு முடியவில்லை. அதற்கிடையில் 1981 ஆம் ஆண்டிலிருந்து பெங்களூர், ஹைதராபாத், மைசூர், சென்னை போன்ற இடங்களில் நடக்கும் குதிரைப் பந்தயத்திற்கு இண்டர்வென்யூ பெட்டிங் என்ற வகையில் பணம் கட்டுகின்ற நிலைமை இருக்கின்றது. உதகை ஒரு சிறிய இடம். அங்கே இந்த குதிரைப் பந்தயத்திற்காகச் செல்கின்ற மக்கள் விவசாயப் பெருங்குடி மக்களும், அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், வியா பாரிகளும், தொழிலாளர்களும்தான். தினசரி காலையில் ஒரு முக்கியமான கடமையாகக் கருதி இந்த ரேஸ் கோர்ஸுக்குப் போகிறார்கள். ஆகவே அந்த மக்கள் எல்லாம் குதிரைப் பந்தயத்தால் அழிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் காப் பாற்ற வேண்டியது அரசினுடைய கடமை இல்லையா? இந்த நீலகிரி மாவட்டம் மட்டும் என்ன பாவத்தைச் செய்தது? அங்கு மட்டும் ஏன் இந்த குதிரைப் பந்தயம் இருக்க வேண்டும்? வேண்டுமானால் இதை வேறு மாவட்டங்களுக்கு மாற்றலாமே. பெரிய பெரிய சீமான்கள் எல்லாம் வாழ்கின்ற இடத்திற்கு அதனை மாற்றினால் என்ன? ஆகவே, அடுத்த மாதம் உதகையில் குதி ரைப்பந்தயம் ஆரம்பிக்க இருக்கின்றது. உதகை நகர் இதயம் போன்ற பகுதியாக இருக்கின்றது. அங்கே போக்குவரத்து மற் றும் சந்தை ஆகியவை நிறைந்துள்ள பகுதிகளில் ரேஸ் காலங் களில் குதிரைகளைக் கட்டுகிறார்கள். அந்த குதிரை லாயங் களினால் பெருத்த சுகாதாரக் கேடான நிலைமைகள் ஏற்படு கின்றன. பொதுச் சுகாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட் டிருக்கின்றது. ஆகவே, மக்களின் பொதுச் சுகாதாரத்தைக் கருதி, மேலும் அந்தக் குதிரை லாயம் அந்த நகரின் அழகைக் கெடுக்காத அளவில் நகரின் எல்லைக்கு அப்பால் உள்ள பகுதியில் கட்டுகின்ற அளவுக்கு வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தின் பல பகுதிகளில் வெள்ளத்தினால், பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கின்றது. நீலகிரி மாவட்டத்தின் மிகப் பெரும்பாலான பகுதிகளில் முக்கியமான பல ரோடுகள் எல்லாம் சேதம் அடைந்து மூடிக்கிடக்கின்றன. குன்னூர் பகுதி யில் மட்டும் 10 ஆம் தேதி வரையில் சுமார் 450 மில்லிமீட்டர் மழை பெய்திருக்கின்றது. அதன் காரணமாக பல ரோடுகள் அடைக்கப்பட்ட நிலைமையில் கிடக்கின்றன. மேட்டுப்பாளை

[திரு. மு. அரங்கநாதன்] [1984 மார்ச் 10

யம்-குன்னூர் ரோட்டிலே நான்காம் தேதியிலிருந்து 7 ஆம் தேதி வரையில் மண் சரிவு காரணமாக போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கின்றது. 6 ஆம் தேதி காலையிலிருந்து நானே அங்கே இருந்து பல காரியங்களைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. காரணம் அந்த அளவுக்கு பல இடங்களில் ரோடுகள் உடைக்சப்பட்டுள்ளன. கோத்தகிரி—மேட்டுப்பாளையம் ரோடு அடைக்கப்பட்டிருக்கின்றது. அதே போன்று கோத்தகிரி-குன்னூர் சாலைகள் எல்லாம் பெரும்பாலும் அடித்துச் செல்லப்டிருக்கின்றது. அந்த சாலைகள் எல்லாம் எப்போது சீராகுமோ என்ற கவலை அங்குள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. ஏனென்றால் அந்தச்சாலைகள் வழியாகத்தான் உணவுப்பொருள்களை எல்லாம் கீழே இருந்து எடுத்து வரவேண்டி இருக்கின்றது. ஆகவே, விரைவாக அந்தச்சாலைகளை எல்லாம் செப்பனிடுகின்ற பணியினைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கோலூர் மட்டம், கர்கி போன்ற ஊர்களுக்குச் செல்லும் பாதையில் கிட்டத்தட்ட 7 மைல் தூரத்திற்கு பெருத்த நில்ச்சரிவு ஏற்பட்டிருக்கின்றது. அதன் காரணத்தால் அங்கு வாழும் ஆதிவாசிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு மிக மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அந்த ஆதிவாசிகளின் குடிசைகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அவர்களுக்கெல்லாம் உணவுப் பொருள் போன்றவற்றை எடுத்துவரக்கூட வழி இல்லாத அளவில் பல பகுதிகளிலும் பல ரோடுகள் பாதிக்கப்பட்டு கிடக்கின்றன. ஆகவே, அந்த நிலைமைகளை எல்லாம் சரி செய்கின்ற வகையில் நடவடிக்கைகளையும், சாலை செப்பனிடும் பணியையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும். ஏனென்றால் நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டி இருக்கின்றது.

(முற்பகல் 9-50)

திரு. மு. அரங்கநாதன் : அப்படி கிட்டத்தட்ட 7 மைல் சுற்றளவுக்கு மக்கள் நடமாட்டம் இல்லாத அளவுக்கு குடிசைகளும், சாலைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கின்றது. அந்தக் குடிசைகளை எல்லாம் கட்டி, அந்த ஆதிவாசி மக்களுக்கு இலவசமாகக் கொடுக்கின்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூர் நகரில் காந்திபுரம், முத்தாளம்மன் பேட்டை ஆகிய பகுதிகளில் நிறைய குடிசைகள் நாசமாக்கப்பட்டிருக்கின்றன, அழிக்கப்பட்டிருக்கின்றன. அங்கு வெள்ள நிவாரணப் பணிகள் செம்மையாக செய்யப்படவில்லையென்று சொல்லிக்கொள்ள



1984 மார்ச் 10] [திரு. மு. அரங்கநாதன்]

விரும்புகிறேன். முதலில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ. 10 இலட்சம் நீலகிரிக்கு ஒதுக்கப்பட்டதாக அறிகிறேன். என்ன காரணத்தாலோ அத்தொகை வேறு ஒரு மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டது என்பதை அறிந்து வேதனைப்படுகிறேன். அங்குள்ள மக்கள் ஏன் நீலகிரி மாவட்டமென்றால் இந்த ஓர வஞ்சனை என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நீலகிரி என்றால் அது என்ன புறக்கணிக்கப்பட்ட மாவட்டமா? எதிர்க்கட்சி மாவட்டம் என்று காரணம் காட்டி அங்குள்ள மக்கள் உணர்வை மதிக்கத் தவறிவிட்டீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திற்கு ஓரவஞ்சனை காட்டி நடப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நான் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவன்தான். நீலகிரி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுக்காலமாக எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டு ரோடுகள், பாலங்கள் போடப்பட்டு, அந்த நீலகிரி எந்த அளவுக்குச் சிறப்பான முறையிலே வைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபொழுது கோவை மாவட்டத்தை விட அதிகமான அளவுக்குப்பணம் அங்கே செலவு செய்யப்பட்டு இருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்தாகும். இன்னும் உயர்ந்த நல்ல நிலைக்கு அதைக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கேயே அறிவித்தார்கள். ஆகவே, நீலகிரி மாவட்டத்தின் வளர்ச்சியில் ஒரு குறிப்பான சிறப்பான ஆர்வம் அரசுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : நம்முடைய மாண்புமிகு அமைச்சர் விளக்கத்திற்கு நன்றி. நாளைக்கு மறுநாள் நமது அமைச்சர் ஊதகைக்கு வர இருக்கிறார் என்று நினைக்கிறேன். அங்கே போகும்பொழுது பாழாக்கப்பட்ட சாலையைப் பார்ப்பார்; அங்கே உள்ள மக்கள் குறைகளை எடுத்துச் சொல்வார்; அடித்துச் செல்லப்பட்ட குடிசைகளை அவர் பார்ப்பார். அங்கு போகும்போது அடித்துச் செல்லப்பட்ட குடிசைகள் எண்ணிக்கை அவருக்குத் தெரியும். பாதிக்கப்பட்ட மக்களுடைய குரலைக் கேட்கலாம்.

அதே பேர்ல், குடிநீர் திட்டத்திற்காக, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, எவ்வளவோ கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கிச் செலவழித்திருக்கிறோம். ஆனால், மக்களுக்கு இன்னும் தண்ணீர் கிடைக்க வில்லை. நேரம் இல்லாததால் முழு விவரங்களையும் சொல்ல முடியவில்லை, ஒன்றிரண்டு மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

[1984 மார்ச் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Person Valley திட்டம் போட்டாயிற்று. தண்ணீர் வரவில்லையென்றால் வரும், கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும்.

திரு. மு. அரங்கநாதன் : ஆதி திராவிடர்களுக்குக் குன்னூர் நகரிலே 1972 ஆம் ஆண்டு 8 ஏக்கர் 9 சென்ட் நிலம் 622 என்ற சர்வே எண்ணிலே வாங்கப்பட்டது. அவர்களுக்கு வீடு கட்டித் தருவதற்காக அது வாங்கப்பட்டது. 10 ஆண்டுகளாகிவிட்டது. ஆனால், ஆதி திராவிடர்களுக்காக வாங்கப்பட்ட பூமி மனை அப்படியே இருக்கிறது. இன்னும் வீடு கட்டித் தரப்படவில்லை. போட்டோ எடுக்கப்பட்டது, அடையாள அட்டை கொடுக்கப்பட்டது. அதனால் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பேசுகின்ற நல்ல வாய்ப்பளித்தமைக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் பொன்னூட்டும் பைந்தமிழில் புகழ் பரப்பும் புரட்சித் தலைவர் ஆட்சியிலே கண்தொட்டு விளையாடும் தமிழகத்திலே கண்ணூற்று விட்டு விடும் நிதி நிலை அறிக்கை இது. இந்த அறிக்கையிலே பல்வேறு நல்ல அம்சங்களைக் காண முடிகிறது. அதைக் கண்டும் மாற்றார்கள் இன்றைக்கு வசைபாடுகின்ற நிலையிருப்பதைக் காணுகின்றபோது, வேதனை ஏற்படுகிறது.

முதலாவதாக சத்துணவுத் திட்டத்தைப் பல்வேறு மன்ற உறுப்பினர்கள் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். குடிக்கக் கூழற்ற கோடிக்கணக்கான ஏழைக் குழந்தைகள் வயிற்றுப் பசி போக்கி அவர்களை வளர்க்கும் திட்டம்தான் சத்துணவுத் திட்டம். உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர் என்று நம்முடைய மூதாதையர் சொல்லிச் சென்றார்கள். அப்படிப்பட்ட தமிழ் காப்பிய நாயகனாக வீற்று,. தமிழகத்திலே இருக்கிற 65 இலட்சம் மக்களுக்கு உண்டி கொடுக்கின்ற அறப்பணியைச் செய்கின்றவர் புரட்சித் தலைவர். இந்தத் திட்டங்களை எல்லாம் பாராட்டுவதை விட்டுவிட்டு இன்றையதினம் அதிலே குறை கூறுகின்ற நிலை எப்படி ஏற்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்கின்றபொழுது துயரப்படுகின்றோம். இன்றையதினம் தமிழகத்திலே வரலாறு காணாத அளவுக்கு வறட்சியைச் சந்தித்தோம். அதேபோல் வரலாறு காணாத அளவுக்கு இன்றைக்கு வெள்ளத்தையும் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது இந்த அரசு போர்க்கால நடவடிக்கையைப் போல காரியங்களை ஆற்றியதை உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



1984 மார்ச் 10] [திரு. ஆ. வெள்ளைச்சாமி]

இதற்கு முந்தைய ஆட்சிக் காலத்தில் வறட்சி ஏற்பட்டபோது தாய்மார்கள் குடங்களை தூக்கிக்கொண்டு நான்கு மைல், ஐந்து மைல் என்று தண்ணீருக்காக அலைந்தார்கள் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். இன்றையதினம் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாதவாறு இந்த அரசு எந்த அளவிற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். எத்தனை ஆயிரம் அடி குழாய்களையும், எத்தனை ஆயிரம் குழாய் கிணறுகளையும் இந்த அரசு அமைத்துக் கொடுத்திருக்கிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். இன்றையதினம் கூட தமிழகத்தில் கடுமையான மழையின் காரணமாக வெள்ளம் ஏற்பட்டு பல்வேறு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் அப்படிப்பட்ட மாவட்டங்களுக்கு நேராகச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களைப் போக்குவதற்கு, குறைபாடுகளை அகற்றுவதற்கு நிவாரண வேலைகளை முடுக்கி விடுகிற எண்ணத்திலே அங்கேயெல்லாம் சென்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தளவிற்கு இன்றையதினம் திறம்பட காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அதைப் பாராட்டுவதற்கு மனம்வர வேண்டாமா ? அதைவிட்டு குறைபாடுகளைக் காண்பது நல்லதுதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அதேபோல அரசு ஊழியர்கள் 58 வயதிலே பணியிலிருந்து ஓய்வு பெறுகிறபோது, வயதான காலத்தில் வாழ்க்கையினை, எப்படி அமைத்துக் கொள்வோம் என்று தவிக்கின்ற சூழ்நிலை மாறவேண்டும் என்பதற்காக இந்த அரசு அவர்களுக்கு ஓய்வு பெறுகிறபோது 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அரசு ஊழியர்கள் இதற்காக செலுத்துகிற தொகை சுமார் 3,000 ரூபாய்தான். ஆனால், அவர்கள் பெறப் போவது 10,000 ரூபாய். ஒருவர் 30 ஆண்டுகள் பணியிலிருந்தால் அத்தொகை ரூபாய் 30,000க்கும் மேற்படலாம் என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல விடிந்தால் இழிபசியின் வேதனையை எண்ணி நடுங்கி மறுநாள் இரவைக் காண நாள்தோறும் ஏங்குகின்ற ஏழை, எளிய கிராம மக்களுடைய துயரங்களைப் போக்குவதற்கும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 45.60 கோடியும், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 54.50 கோடியும் செலவு செய்ய இந்த அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. இதைப் பாராட்ட வேண்டாமா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆ. வெள்ளைச்சாமி] [1984 மார்ச் 10

இதற்கு மேலாக முத்தாய்ப்பு வைப்பதைப் போல இன்றைய தினம் தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு சீரிய கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். மத்தியிலே கூட்டாட்சியும், மாநிலத்தில் தன்னாட்சியும் அமைய சீரிய திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையும் அதுதான். மைய அரசும் மாநில அரசுகளும் தங்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்டவைகளில், கூட்டாகவும்—ஆனால் சுதந்திரமாகவும் இயங்கும் வகையில் அதிகாரங்களைப் பிரித்துக் கொள்ளும் முறைதான், கூட்டாட்சி முறைத் தத்துவமாகும். மத்திய அரசும், மாநில அரசுகளும் இந்திய அரசியல் சட்டத்தில் தங்களுக்கு வரையறுக்கப்பட்ட ஆட்சி எல்லைக்குள் அமைந்திருக்கின்றன. எனவே மாநில அரசுகளும், மைய அரசும் தங்கள் தங்கள் அதிகாரங்களைப் பொறுத்துச் சுதந்திரமானவை; ஒன்றுக்கு ஒன்று கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய அளவிற்கு அரசியல் சட்டம் இயற்றப்படவில்லை. எனவே மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்தில் தன்னாட்சி என்பதுதான் இந்த அரசியல் சட்டத்தின் நிலையாகும். அதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, யாருக்கும் கட்டுண்டு வாழோம்; பிரிவினை நாடோம்; சமநிலையில் இணைவோம்; என்பதாகும். இந்தக் கொள்கையைத்தான் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள். இங்கே இன்றைய தினம் எந்த அளவிற்கு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சுதந்திரமாக செயல்படுகின்றார்கள்; இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த அளவிற்குச் சுதந்திரமாக செயல்படுகிறார்கள்; இன்றைக்குப் பல்வேறு நேரங்களில் இங்கே பிரச்னை எழுகிறபோதும், கோஷங்கள் எழுகிறபோதும், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள், அமைதியாக இருங்கள் என்றுதான் சொல்கிறார்களே தவிர அவர்கள் வேறு எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் வேறு சில சட்டமன்றங்களைப் பார்க்கிற பொழுது சட்டமன்றத்திற்குள்ளாகவே காவலர்களைக் கொண்டு உறுப்பினர்களைத் தடியால் தாக்குகிற சூழ்நிலைகள் இன்றைக்கு இருக்கின்றன. ஆனால் அதுபோன்ற நிலைமை தமிழ்நாட்டில் இல்லை. இதைச் சொல்கிறபோது நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்கள் கோபப்படலாம். ஏனென்றால் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற மாநிலத்திலேதான் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதை தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற வளாகத்திற்கு உள்ளே சட்டமன்ற உறுப்பினர்களை லத்தியால் தாக்குவது என்பது எந்த முறையில் ஜனநாயக மரபுக்கு உட்பட்டது என்பதை நான் கம்யூனிஸ்ட் நண்பர்களைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன்.



1984 மார்ச் 10] [திரு. ஆ. வெள்ளைச்சாமி]

(முற்பகல் 10-00)

நெசவாளர்கள் பிரச்னையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலேயே விவசாயத் தொழிலாளர்களுக்கு அடுத்தபடியாக இருக்கின்ற பெரும்பான்மையான மக்கள் நெசவுத் தொழிலாளர்கள்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் நெசவாளர்களுக்குப் பல்வேறு நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டு, பெரும்பான்மையான நெசவாளர்களுக்கு உதவி அளிக்கும் வகையில், அவர்களை எல்லாம் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள். புதிதாக நெசவாளர்களுக்குப் பணிக் கொட்டகைகள் அமைக்கும் திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். பெரும்பான்மையான நெசவாளர்கள் தறிகூட இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு நிரந்தரமான முறையில் தறிகள் அமைத்துக் கொள்வதற்கு வகை செய்யும் முறையில் இந்தப் பணிக்கொடைகள் அமைப்பதை நான் வரவேற்கிறேன். இந்த ஆண்டில் 15 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பதையும் நான் வரவேற்கிறேன். அதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஓரிரு பிரச்னைகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சோத்தான்நாய்க்கம்கோம்பைத் திட்டம் வடிவுபெற்று இன்றைக்கு நிறைவேற்றப்படவிருக்கிறது. நீண்டகாலமாக கோரப்பட்டு வந்த இந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட இருப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே, மருதாநதி நீர்த்தேக்கத் திட்டம் கட்டப்பட்டபோது, பல்வேறு அரசியல் சூழ்நிலை காரணமாக, போடப்பட்ட திட்டம் குறைத்து கட்டப்பட்டது. இன்னும் அந்த அணையைப் பத்து அடி உயர்த்திக் கட்டினால், அங்கே வாழ்கிற மக்களுக்கு நல்ல வகையில் நீர்ப்பாசன வசதி அளிக்க முடியும். அங்கே உபரியாக தற்போது கிடைக்கும் நீர் கடலில் சென்று வீணாகக் கலப்பதைத் தடுக்க முடியும். இன்றைக்கு அந்தப் பகுதியில் கிடைக்கும் நீரில் 60 சதவீதம் வீணாகச் சென்று கொண்டு இருக்கிறது. ஆகவே, 10 அடி அந்த அணையை உயர்த்திக் கட்ட இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதன் காரணமாக விவசாயிகள் நல்ல பலன் பெறமுடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

போடியமனூர் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி நான் இங்கே பல்வேறு நேரங்களில் வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். இன்னும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு கொள்கை

ரீதியில் முடிவு எடுக்கப்படவில்லை. நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தர முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இந்த ஆட்சிக்கு இதுதான் கடைசி பட்ஜெட் என்று சொன்னார். திரு. துரைமுருகனை பொறுத்த வரையில் இந்த மன்றத்தில் அவர் பட்ஜெட்மீது ஆற்றும் உரை இதுதான் கடைசி என்பதை அவருக்குத் தெரிவித்து, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ள 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விழை கிறேன். நம்முடைய நாட்டின் தட்ப வெப்ப நிலைமைகள் சரியாக அமையாத காரணத்தால், நம் நாட்டில் பெய்ய வேண்டிய மழை 3 ஆண்டுக் காலமாகப் பெய்யாமல் விட்டுவிட்ட காரணத் தால், நாம் கடுமையான வறட்சியைச் சந்திக்க வேண்டி வந்த காரணத்தால், துர்ப்பாக்கியவசமாக அதற்குப் பின்னால் மழை பெய்த காரணத்தால், மக்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப் பட்டார்கள் என்பதை எல்லாம் எனக்கு முன்னாலே பேசிய அத்தனை உறுப்பினர்களும் இங்கே எடுத்து வைத்தார்கள். அதற்கு ஒப்ப நம்முடைய நிதிநிலை அறிக்கையை இங்கே மாண்பு மிகு நிதியமைச்சர் வைத்த பின்னாலே, நம்முடைய மன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும், அதிலே உள்ள கருத்துக்களை வரவேற்று. வறட்சியின் காரணமாக, வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை நாம் சமாளித்து வெற்றி பெற்றிருக் கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வெள்ளப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு அவர்களுக்கு ஆறுதல்களைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அதைப்போலவே வறட்சிக் காலத்தில் அந்த வறட்சியின் கொடுமை மக்களுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக வறட்சிக் காலத்தில் பலகோடி ரூபாய்களை செலவு செய்து தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு, கிராமப்பகுதியில் வாழும் மக்களுக்கு நிவாரணப் பணிகளைச் செய்து கொடுத்துள்ளார்கள். அதைப் போலவே நியாயவிலைக் கடைகள் 9,000 என்று இருந்ததை 18,000 என்ற அளவிற்கு அதிகரித்து, அத்தியாவசியப் பொருள்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் கிடைக்க வழிவகை செய்ததோடு மட்டு மல்லாமல், வெளி மாநிலங்களில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் அதிகமான விலைகொடுத்து அத்தியாவசியப் பொருள்



களை வாங்கிவந்து நம்முடைய நாட்டில் பொருளாதாரத்தின் அடித்தட்டில் வாழும் மக்களுக்கு சகாயமான முறையில் கிடைக் கும் வகையில் செய்துகொடுத்து, அந்த வறட்சியைச் சந்தித் தார்கள்.

நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள் சிலஇல்லை என்று சொன்னாலும் எல்லா மக்களும் இந்த மூன்றாண்டுக் காலத்தில் எந்தவிதமான சலசலப்பும் இல்லாமல் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அதன் பிறகு அந்த வறட்சிப் பகுதிகளிலே உள்ள மக்களின் வாங்கும் சக்தியை உயர்த்த வேலை வாய்ப்புகளை நம்முடைய அரசு உருவாக்கியது. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 46 கோடி ரூபாய் செலவு செய்து 2,12,726 குழாய்க் கிணறுகளை அமைத்துத் தந்தார்கள். 3.7 கோடி ரூபாய் செலவில் இருக்கிற கிணறு களை ஆழப்படுத்தித் தந்திருக்கிறார்கள். பாசன வசதிகளை அதிகப்படுத்துவதற்காக ரூ. 17.31கோடி செலவு செய்தது மட்டு மல்லாமல் மேலும் 5 கோடி ரூபாய் செலவு செய்து ஊருணிகளை யும் குளங்களையும் ஆழப்படுத்தியிருக்கிறார்கள். இப்படி இத்தனை கோடி ரூபாய் செலவு செய்ததன் காரணமாக, கிணறு கள், ஊருணிகள், குளங்களை ஆழப்படுத்தியது மட்டுமல்லாமல் அந்தப் பகுதி மக்களுக்கு அன்றாடம் வேலைகள் தருவதன் மூலம் அவர்கள் பெறுகின்ற பணத்தைக் கொண்டு அன்றாடம் தேவைப்படும் பொருள்களை வாங்கி தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு வறட்சியை நாம் சமாளித்தோம்.

இன்றைக்கு எதிர்பாராத வகையில் பெய்த மழையின் காரண மாக தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் பெருத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நேரடியாகச் சென்று, மக்களைச் சந்தித்து, துயர்தணிப்புப் பணிகளை போர்க்கால நட வடிக்கைபோல் செய்த காரணத்தால் இலட்சக் கணக்கான மக்கள் சற்றும் வருத்தம் இல்லாமல்—ஓரளவுக்கு வருத்தம் இருந் தாலும் சமாளித்துக்கொண்டு — இருக்கக்கூடிய. அளவுக்கு தேவையான பொருள்களை வழங்கி, அதிகாரிகளை உடன் அழைத்துச் சென்று, சம்பந்தப்பட்ட அமைச்சர் பெருமக்களையும் அழைத்துச் சென்று துயர்தணிப்புப் பணிகளை வெகுவேகமாக, துரிதமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப் புதிதாக வரிகளும் போடாமல், இருக்கிற வரிகளைக் குறைத்தும் மக்களுக்குத் தேவையான அன்றாடப் பொருள்களை சரளமாகக் கொடுத்து வருவது மட்டுமல்லாமல் படித்து வேலை யில்லாமல் இருக்கின்ற பட்டதாரிகளுக்கு வேலையை உருவாக்கித் தருவதற்கு சிறு தொழில்கள், பெரிய தொழில்கள் அமைக்கும் திட்டங்களை எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கை

[திரு. இரா. சண்முகம்] [1984 மார்ச் 10

யிலே விரிவாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் என்ன சொல்கிறார்கள்? அகில இந்திய அண்ணா தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு புதிதாக என்ன திட்டங்களை உருவாக்கிவிட்டார்கள் என்று கேட்கிறார்கள், குற்றஞ்சாட்டுகிறார்கள்.

பல துறைகள் முன்னாலே இருந்தாலும் அந்தத் துறைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற பணம் பெருமளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை அவர்கள் மறுக்கமாட்டார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், வேளாண்மைத் துறையை எடுத்துக் கொண்டால் ஒரே ஒரு பிரிவாக இருந்தது. இன்றைக்கு மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, தனித்தனியாக மூன்று ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அவைகளுக்கு இயக்குநர்களாக இருக்கிறார்கள். அதைப்போன்று பலதுறைகளை விரிவுபடுத்தி இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று, நீண்டகாலமாக இருந்துகொண்டிருந்த அரசு ஊழியர்களின் கோரிக்கையான — அவர்கள் ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இன்றைய தினம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் வழங்கப்படும் என்ற நல்ல அறிவிப்பை இந்த அரசு கொடுத்திருக்கிறது. அதை நாங்கள் பாராட்டுகிறோம்.

அது மட்டுமல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால் முக்காலத்தவரும் பாராட்டக்கூடிய அளவுக்குச் சில நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறார்கள். அதற்கு ஒரு முன்னோடியாக தமிழகத்தில் பெரிய மாவட்டங்களாக இருந்த சில மாவட்டங்களைப் பிரித்து பல புதிய மாவட்டங்களை உருவாக்கினார்கள். அந்தப் புதிய மாவட்டங்களுக்கு பெயர் வைக்கும்போது அகில இந்தியாவுக்கும் வழிகாட்டியாக அந்த மாவட்டங்களுக்குப் பெயர்களைச் சூட்டியிருக்கிறார்கள். இதற்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது கண்டுபிடிக்கப்பட்ட புதிய நெல்லுக்கும், கண்டுபிடிக்கப்பட்ட பயிர் வகைகளுக்கும் தன்னுடைய பெயரையும், தன்னுடைய குடும்பத்தினர்களுடைய பெயர்களையும் அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் வைத்தார்கள். இப்போது எங்களுடைய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. மாவட்டங்களைப் பிரித்தார்கள்; புதிய மாவட்டங்களை உருவாக்கினார்கள். இந்திய நாட்டுக்கே உதாரணமாக, முன்னோடியாக விளங்குகின்ற வகையில் மக்களுடைய உணர்வுகளை சிறப்பிக்கின்ற வகையில்,



1984 மார்ச் 10] [திரு. இரா. சண்முகம்]

அந்த மாவட்டங்களுக்குத் தில்லையாடி வள்ளியம்மை பெயரையும் வ.உ.சி. பெயரையும், பெருந்தலைவர் காமராஜர் பெயரையும் மற்ற பெயர்களையும் வைத்திருக்கிறார்கள். இப்படி வைத்ததினாலே இந்தியாவிற்கே முன் உதாரணமாக் தமிழ் நாடு விளங்குகிறது. ஒரு அரசு எந்த அளவிற்கு தேசீய உணர்வுகளை மதித்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டும் அளவிற்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பெருந்தன்மையோடு இவர்களுடைய பெயர்களைச் சூட்டி எல்லோரும் தமிழ்நாட்டைப் பார்த்து, மற்றவர்கள் நடந்து கொள்ளும் அளவிற்கு செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-10)

அதுமட்டுமல்ல, நாம் திட்டங்களைத் தீட்டும்போது, எதைச் செய்தாலும் நமக்கு அதிகமாகப் பணம் இருந்தால், அதைக்கொண்டு மக்களுடைய சுயதேவைகளைப் பூர்த்திசெய்ய வாய்ப்பிருக்கும் என்பதை மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அப்படியிருந்தும், மத்திய அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய, நியாயமாகக் கிடைக்கக்கூடிய, வரிப் பணங்கள் மூலம் கிடைக்கக்கூடிய தொகை ஆண்டுக்காண்டு குறைந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக அழகாகச் சுட்டிக்காட்டினார்கள். நமக்கு நியாமாகக் கிடைக்கவேண்டியது கிடைக்காத காணத்தால், கிடைத்ததை வைத்துக்கொண்டு சிறப்பாக, படிப்படியாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த நிதிநிலை அறிக்கையிலே வேளாண்மைத்துறை விதை பதப்படுத்தும் பிரிவிற்காக ரூ. 8 இலட்சம் ஒதுக்கி இருப்பதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, விதைப் பண்ணைகளில் பாசன வசதிகளை விரிவு படுத்துவதற்காக ரூ. 18 இலட்சம் ஒதுக்கியிருப்பதை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

26 புதிய கால்நடை மருந்தகங்கள் துவங்க இருப்பதை நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மழை பெய்து பல கோடிக்கணக்கான ரூபாய்களை நஷ்டப்படுத்தியிருப்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். செங்கை மாவட்டத்தில் மிதமாகப் பெய்யவேண்டுமென்று எதிர்பார்த்த மழை, காலம் தவறி பெய்ததால், நிலக்கடலையையும், ஐ.ஆர். 50 நெல்லையும் சாகுபடி செய்த விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். செங்கை மாவட்டத்தில்

காலம் தவறி அதிகமான மழை பெய்திருந்தும், அங்கு எந்த விதச் சலுகையும் கொடுக்கப்படவில்லை. என்று அங்குள்ள மக்கள் கூக்குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள் பெய்ய வேண்டிய காலத்திற்கு மாறாக மழை பெய்ததால், நிலக்கடலையைப் பயிரிட்டவர்கள், நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, ஐ. ஆர். 50-ஐப் பயிரிட்டவர்கள் எல்லாம், 40 மூட்டைகள் அறுவடை செய்த காரணத்தினால், இந்த முறையும் அதையே நடவேண்டுமென்று நட்டு, 80 சதவீதப் பயிர்களில், இலட்சக்கணக்கான ரூபாய்களை அதன்மூலம்இழந்திருக்கிறார்கள்.

மற்ற மாவட்டங்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகளைப் போல் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அளிக்கப்படவில்லையென்றாலும் கூட, அடிப்படை தீர்வை, விதை, உரம், சப்சிடி போன்றவைகளை முறையாக அளிப்பதற்கு ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், விவசாயிகள் எல்லோரும் சட்டமன்ற உறுப்பினர் சொல்லவில்லை என்று எண்ணுகிறார்கள். நானும் ஒரு விவசாயி என்ற முறையில் என்னுடைய கருத்துக்களை இந்த அவையின் முன்னே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1984-85 ஆம் ஆண்டில் 500 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களைத் துவங்குவதாக இங்கே அறிவிப்புகளைக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தச் சங்கங்களைத் தொடங்குவது கிராமப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு உதவியாக இருப்பதற்கு வாய்ப்பாக அமையும். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பலர் சுயவேலை வாய்ப்பு பெறுவதற்குக் கடன் கொடுப்பதன் மூலமாக புரட்சித் தலைவரின் அரசு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை படிப்படியாக உயர்த்திப் பல இலட்சம் குடும்பங்களின் பொருளாதாரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய ரூ.200 கோடிக்கு வசதிகளைச்செய்து தந்திருக்கிறார்கள். இதன்மூலம் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை நிரந்தரமாக சேமித்து வைத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லவேண்டும். இங்கே இரண்டு நாட்களுக்கு முன்பாக பேசிய திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே சத்துணவு மையங்கள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் உண்மையிலே சத்துணவு மையங்களிலே முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுக்கூடம் என்று எழுதியிருக்கிறது என்று சொன்னார்கள். முதல் அமைச்சர் சத்துணவுக்கூடம் என்ற அறிவிப்பு இருந்தாலும், ஒவ்வொரு இடத்திலேயும் அதுபோல் இருப்பதால் எந்தவிதமான தவறும் இல்லை. முதல் அமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று சொன்னால்





புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். சத்துணவுத் திட்டம் என்று பொருள் அல்ல. யார் முதலமைச்சராக இருந்தாலும் அது பொருந்தும். ஏன் அவர்கள் முதல் அமைச்சர் என்று சொன்னால் புரட்சித்தலைவர் மட்டும்தான் இருக்கிறார்கள் என்ற உணர்வைப் பெற்றுத்தான் அவருக்கு மட்டும்தான் இது பொருந்தும் என்று சொல்வார்களானால் நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் போட்டிருக்கிற சாலைகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டன என்று நையாண்டித்தனமாக பேசினார்கள். நான் ஒன்றை சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இதற்கு முன்பாக 7½ ஆண்டுக் காலம் தமிழகத்தில் ஆட்சியில் இருந்தீர்களே, அப்போது நீங்கள் போட்ட சாலைகள் இப்போது எவ்வளவு இருக்கின்றன என்பது தெரியுமா? உங்களால் கட்டப்பட்ட பள்ளிக்கூடங்கள் எவ்வளவு? உங்களால் நிறைவேற்றப்பட்ட பாதுகாக்கப்பட்ட குழாய்த் த்ண்ணீர் திட்டங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எவ்வளவு என்பது உங்களுக்குத் தெரியுமா? எனவேபுரட்சித் தலைவர் ஆட்சிக்காலத்தில் நிறை வேற்றிய திட்டங்களின் எண்ணிக்கையையும் நீங்கள்கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். கிராமப்புறங்களும் நகர்ப்புறத்தில் உள்ள பட்டணங்களைப்போல் வசதி வாய்ப்பு உள்ளவைகளாக இருக்கவேண்டும் என்று தன்னுடைய உள்ளத்தில் ஏற்பட்ட ஒரு தணியாத கொள்கையை அவர்கள் உருவாக்குகிற நேரத்தில்தான் தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டுவந்து அதன் மூலமாக இன்றைக்கு தமிழகத்தில் உள்ள கிராமப்பகுதி மக்களுக்கு நிறைய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். எனவேதான் கிராமப்புறத்தில் உள்ள இலட்சக்கணக்கான மக்கள் புரட்சித் தலைவரை தங்களுடைய இதயங்களிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

நாங்கள் 1977 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்காக வாக்குகளைக் கேட்கிற நேரத்தில் அவர்கள் தங்களுக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றன என்பதைப் பற்றித் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் தேவைகளைப் படிப்படியாக நிறைவேற்றும் வகையிலே 6 ஆண்டுக்காலத்தில் படிப்படியாக, தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றும் வகையிலே நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். ஆகவே அப்படி நிறைவேற்றப்பட்டு வருகின்ற திட்டங்களிலே இந்தத் தன்னிறைவுத் திட்டமும் ஒன்றாகும். இன்றைக்கு இயற்கையின் சீற்றத்தால் வெள்ளம் போன்றவைகள் ஏற்படும்போது, பல கட்டிடங்கள் இடிந்து விழுகின்ற நிலைகள் எல்லாம் ஏற்படுகின்றன. ஆறறிவு படைத்த மக்களே வெள்ளத்திலே சிக்கி இறந்துபோகிறார்கள். இப்படிப்பட்ட செய்திகளை எல்லாம் நாம் செய்தித்தாள்களிலே பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் போட்ட சாலைகள் அடித்துச் செல்லப்பட்டன

[திரு. இரா. சண்முகம்] [1984 மார்ச் 10

என்பதை நையாண்டித்தனமாக அவர்கள் சொல்கிறார்கள் என்பதைஎண்ணிப்பார்க்கும்போது எனக்கு வருத்தமாக இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் நல்லமுறையில் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கே இழப்பு ஏற்படுகின்றபோது, சாலைகள் அடித்துக்கொண்டு போவது என்பதை சாதாரண நிகழ்ச்சியாகத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் அரசு வெள்ளம் மற்றும் வறட்சி போன்றவைகளால் ஏற்படும் இழப்பைப் போக்கும் வகையில் விவசாயத் தொழில் செய்து கொண்டிருக்கிற பாமர மக்களுக்கு, சிறு விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுக் கழகத்தை உருவாக்கி அதிலே அவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து, அதன் மூலமாக அவர்களுக்கு அபாயம் ஏற்படுகிற நேரத்தில் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை நிதி உதவி கொடுப்பதற்கு இன்றைக்கு வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஏழை எளியவர்களுக்கு வறட்சிப் பகுதியில் உள்ள மக்களுக்கு ஏறக்குறைய 10 கோடி ரூபாய் செலவு செய்து அந்த மக்கள் திருப்தி அடைகிற வகையில், புடவைகள், வேட்டிகள் இவைகளைக் கொடுக்கின்ற வகையில் அதை நிறைவேற்றியிருக்கிறார்கள், அதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்த முதல் அமைச்சர் அவர்கள், 10 வயது முதல் 15 வயது வரை உள்ள பிள்ளைகளுக்கும் இதை அமுல்படுத்துவோம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். கிராமப் பகுதியில் உள்ள மக்களின் 10 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்துகின்ற வகையில்— இன்று உயர்நிலைப் பள்ளியிலே 10 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் இந்தத் திட்டத்தால் நன்மை கிடைக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்களும், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களும் இந்த திட்டத்தை வாயார மனதார பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து இந்தச் சத்துணவுத் திட்டம் என்பதை முன்னாலே காமராஜர் அவர்கள் கொண்டு வந்த திட்டத்தின் அடிப்படையிலேதான் கொண்டு வந்திருக்கிறீர்கள், அதைப் போலவே தான் இதுவும் இருக்கிறது, இதிலே என்ன மாற்றம் இருக்கிறது என்று கேட்டார்கள். அத்தோடு நீங்கள் இந்த திட்டம் கொண்டு



1984 மார்ச் 10] [திரு. இரா. சண்முகம்]

வரும்போது வருடம் முழுவதும் இந்தச் சத்துணவு போடுவோம் என்று சொல்லி, இப்போது பள்ளி நாட்களில் மட்டும்தான் போடுகிறீர்களே என்று கேட்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். தற்போது கிராமப் புறங்களில் உள்ள மக்கள் பள்ளிக்கூட நாட்களிலே மட்டும் போடுகின்ற அளவிலே இது இருந்தால் போதும் என்று அவர்களே உணர்ந்து இருக்கிறார்கள். ஆகவே, இப்படி 10லிருந் 15 வயது வரை உள்ள மாணவர்களுக்கும் சத்துணவு நீட்டித்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே திட்டம் தரப்பட்டிருப்பதற்காக, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-20)

கடைசியாக, என்னுடைய தொகுதியிலே கூட்டுறவு சர்க்கரை ஆலையைத் தொடங்கி அது செயல்பட நடவடிக்கை எடுத்ததற்காக நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டவும், நன்றி சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது நம்முடைய மாநிலத்தில் பல மாவட்டங்களைப் பிற்பட்ட மாவட்டங்களாக அறிவித்திருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள திருத்தணி தாலுகாவை பிற்பட்ட மாவட்டமாக அறிவிக்க வேண்டும என்று கேட்டுக் கொள்கிறேன். உள்ளபடியே அங்கே வசித்து வரும் மக்கள் எந்தவிதமான வசதியும் இல்லாமல் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட மக்களுக்கு, இந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஓரளவு நிவாரணம் அளித்தது. சென்ற ஆண்டு ஏற்பட்ட வறட்சியில் அது ஒரு வரப்பிரசாதமாகவே அவர்களுக்கு இருந்தது. அந்த வறட்சி காலத்தில் அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஏழைகள் எல்லாம் போய் வேலை செய்து, பிழைத்து வந்தார்கள். அது இல்லை என்றால், வறட்சியின் கொடுமை இன்னும் அதிகமாக இருந்திருக்கும். அப்படிப்பட்ட மக்களை இன்னும் முன்னேற்றம் அடையச் செய்ய, திருத்தணி தாலுகாவை பிற்பட்ட தாலுகாவாக அறிவிக்க வேண்டும். என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, எனக்குப்பேச வாய்ப்பு நல்கிய மாண்புமிகு மாற்றுத் தலைவருக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நமது நிதியமைச்சர் அவர்கள், 130 தலைப்புகளின் கீழே இந்த அவையின் முன்னால் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் பேசி முடித்து, கடைசியாக முடிக்கின்ற போது, சில கருத்துக்

[திரு. என். பழனிவேல்] [1984 மார்ச் 10

களை உறுப்பினர்களுக்கு கூறியிருக்கிறார்கள். ஆன்ற அறிவோடும், ஆழ்ந்த சிந்தனையோடும், பரந்த நோக்கத்தோடும், தூய எண்ணத்தோடும், பாங்கான பண்போடும் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நானும் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இந்த 1984-85 ஆம் ஆண்டு அறிக்கையிலே நமக்கெல்லாம் பரிசாக வழங்கப்பட்டிருப்பது என்னவென்றால், 57 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளை விதித்திருப்பது தான். இது போக பற்றாக்குறை வேறு 168 கோடி ரூபாயாக இருக்கிறது. அதை ஈடு கட்டுவதற்காக சில வரிகளை விதித்திருக்கிறார்கள். பெட்ரோல், டீசல் மீது வரி போட்டிருக்கிறார்கள். இதனால் என்ன ஆகும்? அதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெட்ரோல் மீது போட்டிருக்கக்கூடிய வரி போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தும் என்பதில் சந்தேகமே இல்லை. அதே போன்று டீசல்மீது போட்டிருக்கக்கூடிய வரி, தமிழகத்தில் இன்றைக்கு மோட்டார் பம்பு செட்டு வைத்து உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்களே, பல கோடிக் கணக்கான விவசாய தொழிலாளர்கள், உழவர்கள், அவர்கள் வேலையை தாக்கு பாதிக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல பருத்தி நூல் மீது போட்டிருக்கக்கூடிய வரி, ஏற்கனவே இன்றைக்கு நஷ்டத்திலும் கஷ்டத்திலும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய கைத்தறி தொழிலாளர்களை, நெசவாளர்களை நிச்சயமாக இன்னும் பாதிப்புக்கு உள்ளாக்கக்கூடிய சூழ்நிலைக்குத்தான் கொண்டு செல்லும்.

அடுத்து, இன்றைக்கு தமிழகத்தில் பெரியவையும், சிறியவையுமாக கிட்டத்தட்ட 150 தொழிற்சாலைகள், கோவை, சென்னை சேலம் போன்ற மாவட்டங்களில் மூடிக் கிடக்கின்றன. அதனால் இன்றைக்கு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், வேலையிழந்து பசி பட்டினியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் உடனடியாகக் கவனித்து, அந்தத் தொழிற்சாலைகளை திறந்து வைத்து, அவர்களுடைய வாழ்க்கையிலே மறுமலர்ச்சியினை உண்டாக்குவதற்கு அரசாங்கத்துக்கு வக்கு கிடையாது. இதனால் 200 கோடி ரூபாய் உற்பத்தி நஷ்டம் 35 கோடி ரூபாய் அரசுக்கு வரவேண்டிய வருமானம் வராமல் நிலுவையில் இருந்துக் கொண்டிருக்கிறது. தொழிலாளர்களின கூலியும் 3 கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள், நமது மாநிலத்தில் புதிய தொழில்



1984 மார்ச் 10] [திரு. என். பழனிவேல்]

வளர்ச்சி பற்றி பேசுவதற்காக இன்றைக்கு அந்தத் தொழில் முதலாளிகளோடு பேச்சு வார்த்தை நடத்தப் போவதாகச் சொல்கிறார்கள்.

இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், ''கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் பார்க்கப் போவது போல்''தான் இருக்கிறது. ஆகவே, இந்த பட்ஜெட்டிலே இருக்கக்கூடிய குறைகளை பொறுப்பு மிக்க எதிர்க்கட்சி ஆகிய நாங்கள் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். உதாரணமாக சொல்வதாக இருந்தால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே பலதலைப்புகளில் பல விவரங்களை தந்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொன்னதைப் போல 130 தலைப்புகளில் சொல்லியிருக்கிறார்கள். இந்த 130 தலைப்புகளில் குறிப்பாக கல்விக்காக ஏறக்குறைய 402 கோடி என்று சொல்லியிருக்கிறார்கள். இது ஏதோ புதியதாக இந்த ஆண்டு மட்டுமே ஒதுக்கியது அல்ல. சென்ற ஆண்டே இதற்கு 360 பிளஸ் 40 கோடி என்று ஒதுக்கியிருக்கிறீர்கள். இன்றைக்கு 402 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்களே அதன் மூலமாக தமிழகத்திலே எத்தனை புதிய பள்ளிகள் திறப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள்? இந்த நிதிநிலை அறிக்கையிலே அதைப்பற்றி ஒரு வார்த்தை கிடையாது.

வேளாண்மைக் துறைக்கு 91 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். சென்ற ஆண்டு 138 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தீர்கள். இந்த ஆண்டு கூட்டுறவுக்கு என்று தனியாக 11 கோடி ரூபாயும் வேளாண்மைக்கு 91 கோடி ரூபாயும் மொத்தம் 102 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்தத் துறையில் நிதிஒதுக்கீடு குறைவாக இருக்கிறது. வேளாண்மைத் துறையில் சம்பந்தப்பட்ட விவசாயிகள் கடன் நிவாரணம் கோரி கடந்த ஐந்தாண்டு காலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கட்டுப்படியான விலை வேண்டுமென்று நீண்ட நாட்களாகப் போராடி கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் என்ன பரிகாரம் என்பதைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒரு வரி கூடக் கிடையாது.

அடுத்து சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பிலே 77 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். சாலைகளுக்கும் பாலங்களுக்கும் என்று இப்படிஒதுக்குவது வழக்கம தான். தமிழகத்திலே இத்தனை சாலைகள், இத்தனை பாலங்கள் போட வேண்டுமென்று நாங்கள் காலங்காலமாக இந்தச் சட்டமன்றத்திலே சொல்லிக் கொண்டு வருகிறோம். என்னுடைய தொகுதியிலே தாமரைக்குளம் மானூர் அருகிலே இரண்டு பாலங்கள் கட்டித்தர

வேண்டுமென்று கடந்த 5 ஆண்டுக் காலமாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதைக் கட்டிக் கொடுக்கிற பேச்சே கிடையாது என்ற முறையிலே தான் நிலைமைகள் இருக்கின்றன.

அடுத்து ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலனுக்காக என்று 121 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். சென்ற ஆண்டு 119 பிளஸ் 56 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த 121 கோடி ரூபாயை நீங்கள் ஒதுக்கியதால் ஆதி திராவிடர்கள் பழங்குடியினர் நலனில் அவர்களுடைய வாழ்க்கையில் பெரிய மாறுதலை. பெரிய புதுமையை ஏற்படுத்தப் போகிறீர்கள் என்று நம்ப முடியாது.

அடுத்து பாசனத் துறைக்கு சென்ற ஆண்டு 61.76 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த ஆண்டு 52.27 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். நான் கேட்கிறேன். 7 ஆண்டுகளுக்கு முன்னாலே மதுரை மாவட்டத்திலே உடைந்த குடகனாறு அணை என்ன ஆயிற்று? இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் காணோம். ஆனால் ஆளுங்கட்சி நண்பர்கள் வெளியே இதோ அணை வருகிறது, இந்த ஆண்டு கட்டுகிறோம், 3 கோடி ரூபாய், 9 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம் என்று மேடைகளிலே பேசுகிறார்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையிலே குடகனாறு அணை என்ன ஆயிற்று என்ற பேச்சே கிடையாது.

என்னுடைய தொகுதியிலே பச்சையாறு திட்டம் இன்வெஸ்டிகேஷன் முடிந்துதலைமைப் பொறியாளரிடம் இருக்கிறது. இன்று வரை அந்தத் திட்டம் பற்றி நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் சொல்லப்படவில்லை.

இப்படி இவைகளை பற்றியெல்லாம் நிதிநிலை அறிக்கையிலே எதுவுமே சொல்லாமல் வரவு-செலவுக் கணக்கு என்ற முறையிலே தான் இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறதே தவிர புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக எந்தவிதமான ஒதுக்கீடுகளும் இல்லை அதைப் போலவே பால் வளம் பால் வளம் என்று ஊரெல்லாம் நீங்கள் தமுக்கு அடிக்கிறீர்கள். ஆனால் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு நகர்ப்புறங்களிலே கிராமப்புறங்களிலே, உள்ள மக்களுக்கு எல்லாம் மலிவான விலையில் பால் கொடுக்க முடியுமா உங்களால்? கோழிப் பண்ணை என்று சொல்கிறீர்கள். ஆனால் மலிவான விலையிலே ஏழை எளியவர்களுக்கு முட்டை கொடுக்க முடியுமா உங்களால்? அதைப் போலவே வேளாண்மை உற்பத்தி உயர்வு என்று சொல்கிறீர்கள். ஆனால் கார்டுக்கு 20 கிலோ அரிசி கொடுக்க முடியுமா உங்களால்? போக்குவரத்தை தேசியமயமாக்க வேண்டுமென்று சொன்னால் கிராமப்புறங்களுக்கு பஸ்களை விடுவதுதான் எங்கள் முதல் வேலை பிறகுதான் தேசியமயம் என்று சொல்கிறீர்கள்.



(முற்பகல் 10-30)

இன்றைக்கு என்னுடைய மாவட்டத்தில் 2 ஆயிரம் ஊர்களுக்கு பஸ் போவதில்லை. என்னுடைய தொகுதியில் மட்டும் எடுத்துக் கொண்டால் 50 ஊர்களுக்கு பஸ் போகவில்லை. ஒரு மைலிலிருந்து 3 மைல் வரை நடந்து வந்து தான் அவர்கள் பஸ் ஏறவேண்டும். ஆனால் நீங்கள், நாங்கள் எல்லா கிராமங்களுக்கும் பஸ் விட்டு விட்டோம், யாரும் நடந்து செல்ல வேண்டும் என்ற பேச்சே கிடையாது என்று இங்கே சொல்கிறீர்கள். நான் நேற்று கூட போக்குவரத்துத் துறை அமைச்சர் அருமை நண்பர் திரு. முத்துசாமி அவர்களிடம் 30 ஊர்களுக்கு பஸ் வேண்டும் என்று எழுதி கொடுத்து இருக்கிறேன். அதில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எனக்கு முன்னால் பேசிய ஆத்தூர் வெள்ளைச்சாமி அவர்களுடைய பிறந்த ஊரும் அதில் அடங்கியிருக்கிறது. அந்த ஊருக்கும் பஸ் கிடையாது. ஆக நீங்கள் பஸ் வசதி எல்லா ஊர்களுக்கும் கொடுத்து விட்டோம் என்று சொல்வது சரியல்ல. இப்படி இருக்கும்போது நாங்கள் எப்படி புகழ முடியும். புகழவில்லையே என்று எதிர் கட்சிகளைப் பார்த்து மிகவும் வேதனைப்படுகிறீர்கள். வருத்தப்படுகிறீர்கள். நாங்கள் எப்படி புகழ முடியும் சொல்லுங்கள். ஒவ்வொரு குடும்ப கார்டுக்கும் 2 ரூபாய் வீதம் வசூல் செய்து $1\frac{1}{2}$ கோடி குடும்ப அட்டைகளைக் கொடுத்தீர்கள். ஒரு அட்டைக்கு 2 கிலோ அரிசிக்கு மேல் கொடுக்கிறீர்களா? இந்த ஆண்டு அபரிமிதமான விளைச்சல் என்று மத்திய அரசு சொல்லிக் கொண்டு இருக்கிறது. அவர்களிடம் போராடி தேவையான உணவுப் பொருட்களை வாங்கி குடும்ப அட்டைகளுக்கு கார்டு ஒன்றுக்கு 20 கிலோ இதோ எடுத்துக் கொள்ளுங்கள் என்று இந்த ஆண்டு கொடுத்து விட்டு தான் எங்கள் புரட்சித் தலைவர் மற்ற வேலைகளைப் பார்ப்பார் என்று சொல்ல முடியுமா? சொல்லவில்லை? சொல்ல முடியாது. உங்களால் கொடுக்க முடியாது.

அதேபோல் இன்றைக்கு முதியோர் உதவி என்று இலவச சேலை, வேஷ்டி எல்லாம் கொடுக்கிறீர்கள். இதை நாங்கள் இல்லை என்று சொல்லவில்லை. மக்கள் வரிப் பணத்தை 10 கோடி ரூபாய் எடுத்துக் கொடுக்கிறீர்கள். அதற்குக் கணக்கு வழக்கு கிடையாது. ஏற்கெனவே பல நண்பர்கள் அது பற்றிச் சொன்னார்கள். எங்கோ சினிமாக் கொட்டகைக்கு வந்து கொடுத்தார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். இதை எல்லாம் நினைத்துப் பார்த்தால் மிகவும் வேதனையாக இருக்கிறது. ஏழை எளிய மக்களின் வறுமையை விரட்ட இன்றைக்கு நீங்கள் விலை பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். எத்தனை நாளுக்கு இந்த வண்டி ஓடும் என்பது காலப் போக்கில் தெரிய வரும்.

[திரு. என். பழனிவேல்] [1984 மார்ச் 10

ஏழைகளுக்கு உதவி செய்வது என்பது வேறு. ஆனால் நியாயமாக அவர்களுடைய அடிப்படை பிரச்சினைகளைதீர்க்கக் கூடிய முறையில் நீங்கள் சட்டத்தைக் கொண்டு வந்துகாரியங்களை ஆற்றினால் நாங்கள் நிச்சயமாக பாராட்டுவோம். நீங்கள் எதற்கு எடுத்தாலும் ஆஸ்பத்திரிக்குப் போனால் என்ன நோய் சொன்னாலும் இரண்டு மாத்திரையை கொடுப்பார்கள். அந்த மாதிரி —இந்த சட்டமன்றத்தில் இருக்கக் கூடிய அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் சத்துணவு, சத்துணவு என்று சொல்கிறீர்கள். நான் கேட்கிறேன், அணைக்கட்டு இல்லை அணைக்கட்டு வேண்டும் என்று சொன்னால் சத்துணவு ; ஆஸ்பத்திரி இல்லை என்று சொன்னால் சத்துணவு பள்ளிக்கூடம் வேண்டும் என்று சொன்னால் சத்துணவு ; வேலை இல்லை வேலை கொடுங்கள் என்று சொன்னால் சத்துணவு ; இது என்ன அநியாயமாக இருக்கிறது. நீங்கள் சத்துணவு போடுகிறோம் என்று சொல்லி எத்தனை திட்டங்களை நிறுத்தியிருக்கிறீர்கள்? இதைப்பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லக் கூடாது சொன்னால் எதிர்க் கட்சிக்காரர்கள் சேராத இடத்தில் சேர்ந்து பேசுகிறார்கள் பாருங்கள் என்று சொல்கிறீர்கள். தி.மு.க. வோடு கூட்டுச் சேர்ந்ததால் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி இந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியை விமர்சனம் செய்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். அப்படி எல்லாம் ஒன்றும் கிடையாது. உண்மையில் நாட்டில் இருக்கக் கூடிய பிரச்சினைகளை நாங்கள் முன்வைக்கிறோம். அதை நீங்கள் புறக்கணித்தால் நிச்சயமாகநாங்கள் விமர்சனம் செய்வோம். அதுதானே தவிர வேறு அல்ல. சட்டம் மூலம் பினாமி நிலங்களை ஒழித்து 20 லட்சம் ஏக்கர் நிலங்களை எடுத்து ஏழை எளியவர்களுக்கு கொடுப்போம் என்று முன்பு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு டமாரம் அடித்தார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் அந்தப் பேச்சே கிடையாது. அது என்ன சமாசாரம் என்று தெரியவில்லை. ஏன் அதைச் சொல்லவில்லை. விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கொடுப்போம் என்று மேடைகளில் பிரச்சாரமாக சொல்கிறீர்கள். இங்கே ஒன்றும் அங்கே ஒன்றும் பேசுகிறோம் என்று எங்களைப் பற்றி சொல்கிறீர்கள். ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள். உள்ளே ஒன்றைச் சொல்கிறீர்கள், வெளியே ஒன்றைச் சொல்கிறீர்கள். இங்கே எடுக்கப்பட்டது என்று சொல்கிறீர்கள். அங்கே நடந்ததாகச் சொல்கிறீர்கள். எங்களை நீங்கள் குழப்புகிறீர்கள். ஆகவே இரட்டை நிலை எங்களுக்கு இல்லை உங்களுக்குத்தான் இரட்டை நிலை.

குத்தகை நிலங்களை விவசாயிகளுக்கே சொந்தமாக்குவோம் என்று நீங்கள் பேசினீர்கள். இல்லை என்று சொல்லுங்கள். போன ஆண்டு சொன்னீர்கள், அதற்கு முன் ஆண்டும் சொன்னீர்கள். குத்தகை விவசாயிகளுக்கு அந்த நிலங்களுக்கான ஒரு



1984 மார்ச் 10] [திரு. என், பழனிவேல்]

கிரயத்தை வழங்கி அந்த நிலங்களை எல்லாம் அவர்களுக்கே சொந்தமாக்குவோம் என்று சொன்னீர்கள். இன்றைக்கு அதைப் பற்றி இந்த அறிக்கையில் எதுவும் இல்லை.

ஊராட்சி மன்றங்களுக்கு இன்றைக்கு தமிழகத்தில் 10 பைசா கூட வருமானம் கிடையாது. லைட் எரியவில்லை, இன்றைக்கு கேட்பாரற்று இருக்கின்றன. அவைகளை கேட்பதற்கு ஆள் கிடையாது. அங்கே நிதி கிடையாது. இந்த நிலையில் அரிசனங்கள் செத்தால், செத்தவர்கள் குடும்பத்திற்கு 50 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் இறந்து போனால் 50 ரூபாய் கொடுப்பதற்கு இப்போது எந்த பஞ்சாயத்திடம் நிதி இருக்கிறது. நான் கேட்கிறேன் சொல்லுங்கள் பார்க்கலாம். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் நூற்றுக் கணக்கான மனுக்கள் இன்றைக்கு தேங்கியிருக்கின்றன. அவைகளுக்கு யார் கொடுக்கப் போகிறார்கள். ஆபீஸர்கள் கிடையாது, நிர்வாக அதிகாரி கிடையாது. தலைவர் கிடையாது. ஊராட்சி நிர்வாகங்களே இன்றைக்கு ஸ்தம்பித்து இருக்கின்றன. உதாரணமாகச் சொன்னால் நாகப்பட்டிணம் நகரத்தில் மின்சாரக் கட்டணம் கட்டாமல் அங்கே உள்ள நகராட்சி அலுவலகத்திற்கு மின் துண்டிப்புச் செய்து இருப்பதாக சொல்கிறார்கள். இது எவ்வளவு கொடுமை என்பதை நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நேற்றைய தினம் நம்முடைய அருமை நண்பர் திரு. விஸ்வநாதன் அவர்கள் பேசும்போது மிக மிக வருத்தத்தோடு அதே சயமத்தில் ஆவேசமாக நல்ல சில வார்த்தைகளை முதலில் சொன்னார்கள். நான் கூட ரசித்துக் கேட்டுக் கொண்டு இருந்தேன் மத்திய அரசு எல்லா வரிகளையும் போடுகிறார்கள். 3 ஆயிரம் கோடிக்கு வரி போடுகிறார்கள் நமக்கு 100 கோடி ரூபாய் கொடுக்கிறார்கள் என்றும் 19 வரிக்கு நமக்கு அதிகாரம் இருக்கிறதுஎன்றும் அந்த 19 வரிகளும் கூட மலட்டு தட்டி போன வரி என்று எல்லாம் சொன்னார்கள். அண்மையில் கூட மத்திய அரசு மேற்கு வங்கத்திற்கு 80 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. தமிழகத்திற்கு ஒரு கோடி ரூபாய் கூட தரவில்லை. இது என்ன அநியாயம். எங்களைக் கேட்டால் நாங்கள் சொல்வோம் இந்த மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அதிகமான அதிகாரம் கொடுக்க வேண்டும் என்பதோடு விரைவாக அதை செயற்படுத்த வேண்டும். விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை வேண்டும், எல்லா மாவட்டங்களும் சமத்துவமாகப் பாவிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்காக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 14 கட்சிகள் ஒன்று கூடிப் போராடுகிறார்களே அவர்களோடு நீங்கள் சேருகிறீர்களா ? ஏன் நீங்கள் சேரவில்லை. அம்மா கோபித்துக் கொள்வர்ாகள் என்பதற்காக நீங்கள் சேர மட்டேன் என்கிறீர்கள். அப்பொழுது பட்டை நாமம்தானே கிடைக்கும், வேறென்ன கிடைக்கும் ? எனவே, மேற்கு வங்காளத்திற்கு ரூ. 80 கோடி எப்படிக் கொடுத்

[திரு. என். பழனிவேல்] [1984 மார்ச் 10

தார்கள் என்று இங்கே சொல்வதில் பொருள் இல்லை. இதற்காக மக்களைத் திரட்டி, போராட வேண்டும். மத்திய சர்க்காருக்கு எதிராக மக்களை நீங்கள் திரட்ட வேண்டும். அதைச் செய்யாமல் வெறும் சத்துணவுத் திட்டத்தின் மூலமே வண்டியை ஓட்டி விடலாம் என்றால் எத்தனை ஆண்டுக் காலத்திற்கு வண்டியை நீங்கள் ஓட்டுவீர்கள் என்பது காலம் போகப் போகத்தான் தெரியும்.

ஆதி திராவிட மக்களுக்காக 122 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறீர்கள். இந்த 122 கோடி ரூபாயில் அவர்களுக்கு வீட்டு மனைகள், புதிதாக வீடுகளெல்லாம் கட்டிக் கொடுக்கப் போவதாக எல்லாம் சொல்லுகிறீர்கள். இன்றைக்குத் தமிழ் நாட்டிலுள்ள ஆதி திராவிட மக்கள் குடியிருப்பதற்கு வீடில்லாமல், கிட்டத்தட்ட 20 இலட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. இவர்களுக்கு நீங்கள் என்றைக்கு வீடு கட்டிக் கொடுக்கப் போகிறீர்கள் என்பது தான் என் கேள்வி. உங்களால் முடியுமா ? 40,000 வீடுகள் கட்டப்படும் என்று சொல்கிறீர்களே, அதில் ஆதி திராவிட மக்களுக்கு எத்தனை வீடுகள் என்பது தெரியவில்லை. அடுத்த ஆண்டில்தான் அது தெரியும்.

வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசாங்கத்திடம் 128 கோடி ரூபாய் கேட்கிறீர்கள். ஆனால் அம்மா அவர்கள் 15 கோடி ரூபாய் தான் கொடுத்திருக்கிறார்கள். நீங்களாக 37 கோடி ரூபாய் ஒதுக்குவதாகச் சொல்கிறீர்கள். இந்த 52 கோடி ரூபாயை வைத்துக் கொண்டு கதையை முடிக்கப் போகிறீர்கள், அவ்வளவு தான். அதற்கு மேற்கொண்டு உங்களால் ஒதுக்க முடியாது. உங்களுக்கு மனமிருந்தாலும் நிதி இல்லை. அம்மையாரோடும் பேச மாட்டீர்கள் ; மத்திய அரசாங்கத்தையும் தட்டிக் கேட்க மாட்டீர்கள். தட்டிக் கேட்டால் பகை வந்து விடும் என்று நினைக்கிறீர்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில், கிராமப் பகுதிகளில் 11,159 கிராமக் கூட்டுறவுக் கடைகள் பெரும் அளவில் செயல்பட்டு வருகின்றன என்று சொல்கிறீர்கள். எட்டு மாவட்டங்களில் இச் சங்கங்கள் காய்கறி வியாபாரம் நடத்துகின்றன என்றும் சொல்கிறீர்கள். இந்த 11,159 கூட்டுறவுக் கடைகள் சிறப்பாகச் செயல்படுகின்றன என்று சொல்வீர்களானால், எப்படி அவை செயல்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். இருபது கிலோ அரிசி போடுகிறதா ? பாமாயில் கொடுக்கிறதா ? சீனி போடுகிறதா ? இன்னும், மற்ற தேவையான அத்தியாவசியப் பொருட்களை ஒவ்வொரு வாரமும் கொடுக்கிறதா ? இல்லை மாதத்திற்கு ஒரு கார்டுக்கு இரண்டு கிலோ அரிசி கொடுக்கிறது. இதுதான் சிறப்பான முறையா ? இரண்டு கிலோ அரிசியும் கொஞ்சம் மண்ணெண்ணெயும் கொடுக்கிறதே. இதுதான் சிறப்



1984 மார்ச் 10]. [திரு. என். பழனிவேல்]

பான வியாபாரமா ? காய்கறி வியாபாரம் நடத்துகின்ற கடைகளைப் போய்ப் பார்த்தால் தெரியும். கூட்டுறவுக் கடைக்காரர்கள் நேராக மார்க்கெட்டிற்குப் போகிறார்கள். அங்கே தக்காளி கிலோ ஆறு ரூபாய் என்று சொன்னாலும் வாங்கிக் கொண்டு வந்து ஆறரை ரூபாய்க்கு விற்கிறார்கள். இதுதான் காய்கறி வியாபாரத்தைச் சிறப்பாக நடத்துகின்ற முறையா என்று கேட்கிறேன். இதைச் செய்வதற்குக் கூட்டுறவுக் கடைகள் தேவையில்லை ; யார் வேண்டுமென்றாலும் நேரடியாகவே மார்க்கெட்டிற்குப் போய் வாங்கிக் கொண்டு வந்து விடுவார்கள். எனவே, மலிவு விலையில் தருகிறோம் என்று சொல்லி மக்களை ஏமாற்றும் வேலை தான் நடக்கிறது.

சிறு தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் 6,621 பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுவதற்காக, 10,988 விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், இவற்றில் 2,079 இனங்களுக்கு கடன் கொடுத்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். விண்ணப்பங்கள் வந்தது 10,988, ஆனால் கடன் கொடுத்தது 2,079, அப்படியென்றால் சிறு தொழில்களை உருவாக்குவதற்கு உதவி செய்யும் இலட்சணம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்றால் எப்படிக் கொடுக்கப் போகிறீர்கள்? இரண்டு நாட்களுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரவர்கள் நண்பர் சிவப்பிரகாசம் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னார்கள், 1982 ஆம் ஆண்டு வரையில், படித்து விட்டு வேலை வேண்டுமென்று வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து இருப்பவர்கள் எத்தனை பேர் என்ற கேள்விக்கு 14 இலட்சத்து 15 பேர் என்றும், எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைத்தது என்றால் 72,578 பேர்களுக்கு என்றும் கூறப்பட்டது. வேலையில்லாமல் வேலைவாய்ப்பகங்களில் பதிந்திருப்பவர்கள் 1982 ஆம் ஆண்டுக்கு முன்பு, கிட்டத்தட்ட 14 இலட்சம் பேர், ஆனால்வேலை கிடைத்திருப்பது சுமார் 72,000 பேர்களுக்குத்தான். இவ்வாறு இருந்தால் மற்றவர்களுக்கு எப்பொழுது வேலை கொடுக்கப் போகிறீர்கள்?

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லும்பொழுது என்ன வேலை என்றால், பாம்பு கடிக்கு மருந்து தடவும் வேலை 3 இதுகுறித்து பத்திரிகைகளில்கூட விளம்பரம் வந்தது. அதுவும் பத்திரிகைகளில் தான் விளம்பரமாக வந்ததே தவிர, எங்கள் ஊரிலே பாம்பு கடிக்கு மருந்து தடவுபவர்களைத் தேடிப்

பார்த்தால் காணோம். என்னுடையபேரப்பிள்ளை இரண்டு மாதங்களுக்கு முன்பு பாம்பு கடித்துச் செத்துப் போனான். அவனைப் பாம்பு கடித்தபொழுது, பாம்பு கடிக்கு மருந்து தடவுகின்றவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்தபொழுது அத்தகைய நபரைத் தெரியவில்லை. ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும் ஒரு ஆள் என்று போட்டிருக்கிறீர்கள். அவன் எங்கேயாவது ஒரு பக்கம் இருப்பான். ஏனென்றால் உங்களிடத்திலே 100 ரூபாய் சம்பளத்தை வாங்கிக்கொண்டு அதை மட்டும் நம்பி அவர்களால் வாழ்க்கையை நடத்த முடியுமா என்றால் முடியாது. ஆகவே 100 ரூபாயை வாங்கிக்கொண்டு அவன் வேறு வேலையைப் பார்த்துக்கொண்டு போய் இருப்பான். இது அவன் தப்பல்ல. நீங்கள் செய்யக்கூடிய தப்புத்தான். ஆகவே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லக்கூடிய கதை மக்களை ஏமாற்றக்கூடிய கதை. உண்மையிலேயே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கக்கூடிய இலட்சணம் இதுவல்ல.

(முற்பகல் 10-40)

அடுத்து இப்போது சத்துணவு கொடுக்கிறீர்கள். சத்துணவுத் திட்டத்தை நீங்கள் கொண்டுவந்தபோது, அதைச் சட்டமன்றத்திலே நிறைவேற்றியபோது நாங்கள் எல்லாம் அதை எதிர்க்கவில்லை. நீங்கள் வேண்டுமானால் மேடைகளில், சத்துணவு போடவேண்டாம் என்று சொல்கிறார்கள் இவர்கள் என்று சொல்லலாம். ஆனால் நாங்கள் எதிர்க்கவில்லை. இன்னும் போடவேண்டும் என்றுதான் சொல்கிறோம். இப்போது 40 பைசா ஒரு குழந்தைக்கு என்று போடுகிறீர்கள். அந்த 40 பைசாவால் என்ன செய்ய முடியும்? ஒரு வாழைப்பழத்தின் விலை இன்று 80 காசு. ஆகவே சத்துணவு போடுகிறோம் என்று மக்களை ஏமாற்றக் கூடாது. ஆகவே இதற்காக அதிகமாகப் பணம் ஒதுக்கி பெரிய ஆட்களுக்கெல்லாம் சோறு போடவேண்டும். ஏனென்றால் சென்ற ஆண்டு வறட்சி, இந்த ஆண்டு கடுமையான வெள்ளம் ஏற்பட்டிருக்கின்றது. அதனால் பெரும்பாலான மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் எல்லோருக்கும் சோறு போடுவதுதான் சிறந்ததாக இருக்கும்.

அடுத்து கடந்த டிசம்பர் மாதத்திலே இருந்து நான்கு மாத காலமாக விடாமல் மழை பெய்திருக்கின்றது. என்னுடைய தொகுதியில் ஐ. ஆர். 80 நெல் நட்டு கிட்டத்தட்ட 50 ஆயிரம் ஏக்கர் நிலம் பாழாகி இருக்கின்றது. பெருத்த நாசம் ஏற்பட்டு பல பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சோளம் கோழி சாப்பிடுவதற்குக் கூட கிடைக்கவில்லை. அவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. ஆக கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் அளவுக்கு என்னுடைய தொகுதியிலே நஷ்டம்



ஏற்பட்டிருக்கின்றது. அதுபற்றி கலெக்டர் அம்மாவிடத்திலே டீ.டீ.சி. மீட்டிங்கிலே கேட்டேன். அதாவது சர்க்காருக்குக் கொடுக்கப்பட்ட வெள்ள அறிக்கையில் மதுரை மாவட்டம் பற்றி இல்லையே என்று நான் கேட்டேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் நாங்கள் அப்போதைக்கப்போது செய்திகளைக் கொடுக்கிறோம்; ஆனால் சர்க்கார் உங்களுக்குக் கொடுக்கவில்லை என்றால் நான் என்ன செய்வது என்று சொல்கிறார்கள்.

எனவே என்னுடைய தொகுதியில் மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் சர்க்காருடைய கொள்கை எப்படி இருக்கின்றது என்றால் வெள்ளம் வந்தால்தான் நஷ்டம் என்று நினைக்கிறார்கள். ஆனால் நான்கு மாதமாக மழை பெய்த காரணத்தால் குடிசைகளிலே வாழ்கின்ற மக்கள் எல்லாம் குடிக்கக் கஞ்சிகூட இல்லாத அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஏன் நிவாரணம் தரவில்லை என்று கேட்டால் வெள்ளம் வரவில்லை; அதனால்தான் தரவில்லை என்ற ஒரே காரணம்தான் சொல்லப்படுகின்றது. ஆனால் வெள்ளம் வராவிட்டாலும் கூட தொடர்ந்து பெய்கின்ற மழை காரணமாக மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. நேற்று கூட எனக்கு போன் வந்தது. என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய உடையகுளம் என்ற ஒரு குளம் உடைந்துவிட்டது என்றும் யாரும் இன்னும் எந்த நிவாரண வேலையையும் ஆரம்பிக்கவில்லை என்றும் சொன்னார்கள். அந்த வேலைகளை எல்லாம் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் இரண்டு பாலங்கள் இருக்கின்றன. அதாவது தாமரைக்குளம், மாணூர்சாலை பகுதியில் இரண்டு பாலங்களில் இம்மாதிரியான மழைக் காலங்களில்பெருத்த பாதிப்பு ஏற்பட்டு 10, 15 நாட்களுக்கு வெளியே வரமுடியாத நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே அந்த இரண்டு பாலங்களையும் இந்த ஆண்டிலேயாவது கட்டிக் கொடுப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுச்கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 1984–85 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் முதலிலே என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 மார்ச் 10

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) ; பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கேட்பதற்கு நேரம் இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து அமரவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒன்று எனவே அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) : இப்போது அனுமதிப்பதற்கு இல்லை. பிறகு கேட்டுக்கொள்ளுங்கள். ஏனென்றால் அடுத்த மாண்புமிகு உறுப்பினர் அழைக்கப்பட்டு பேசிக்கொண்டிருக்கிறார். நேரத்தை வீணாக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : இந்த நிதிநிலை அறிக்கையினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பிக்கின்றபோது நாட்டிலே இருக்கின்ற அனைத்து நிலைமைகளையும் படம் பிடித்துக் காட்டி எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை அளிக்கப்படுகின்றது என்பதை எல்லாம் எடுத்துச் சொல்லி நிதிநிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் பேசுகின்றபோது கேலியாகவும், கிண்டலாகவும் பேசினார்கள். சில பேர் எரிச்சலோடு பேசினார்கள். சில பேர் தங்களுடைய ஏக்கத்தை எடுத்துக் கூறி பேசினார்கள். நான் எடுத்துக் கூற விரும்புவது எல்லாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றையதினம் இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை அருள்கூர்ந்து நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாட்டிலே இருக்கிற நிலைமைகள் என்ன ? கடந்த 3 ஆண்டுக்காலமாக வறட்சி நம்மை வாட்டிக் கொண்டிருக்கிறது. ஏறக்குறைய 6 வாரங்களாக வெள்ளத்தாலே பாதிக்கப்பட்ட மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே வறட்சியினுடைய விளைவாக ஏற்பட்டிருக்கிற நிலைமைகள், மறுபக்கத்திலே வெள்ளத்தினுடைய கொடுமைகள். இயற்கையினுடைய சீற்றம் நம்மை ஒரு புறத்திலே அழித்துக் கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் இன்றையதினம் நாட்டினுடைய பொருளாதார நிலைமை என்ன என்பதை எண்ணிப்பார்த்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பேசுவார்களானால் அதிலே உண்மை இருக்கிறது, நியாயம் இருக்கிறது என்று ஏற்றுக் கொள்ள முடியும் நாட்டிலே கறுப்புப் பணம் ஏறக்குறைய ரூ. 50,000



1984 மார்ச் 10] [திரு. கே. சௌந்திரராசன்]

கோடி மிகச் சரளமாக விடப்பட்டிருக்கிறது. கறுப்புப் பணம் ஒரு புறத்திலே மிரட்டுகின்ற நேரத்தில், கள்ளச் சந்தைகள் பெருகிவிட்ட நேரத்தில், மத்திய அரசு தன்னுடைய நடவடிக்கைகள் மூலமாகவும், நோட்டு அடிப்பதன் மூலமாகவும், நாட்டிலே விலைவாசி உயர்வைத் தானாக ஏற்படுத்துகின்ற சூழ்நிலையில், அதனுடைய விளைவாக தமிழகத்தினுடைய நிலை பாதிப்புக்கு உள்ளாகும் சூழ்நிலையில், அதனுடைய விளைவாக பாதிப்புகள் ஏதேனும் இந்த நிதிநிலை அறிக்கையில் உருவாகிறதா என்பதை அருள்கூர்ந்து நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இதை நான் சொல்கின்றபொழுது மத்திய அரசு எடுக்கின்ற ஒருநடவடிக்கையின் மூலம் மாநில அரசுக்குஎந்த அளவுகடுமையாகப் பாதிப்பு ஏற்படுகிறது என்பதை அறிந்து, அந்த அளவு அந்தப் பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த அரசு செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து பேசுவார்களானால் நிச்சயமாக அதிலே உண்மை இருக்க முடியும், நியாயம் இருக்க முடியும். ஒரு புறத்திலே மத்திய சர்க்கார் அப்படிப்பட்டச் சூழ்நிலையில் செல்கிறபொழுது மாநில அரசுகள் அவர்களிடத்திலே பிச்சைக்காரர்களைப் போல் திருவோடுகளை ஏந்தி இருக்கிற சூழ்நிலைகள் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கின்றன என்பதும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அறியாதது அல்ல அப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் இன்றையதினம் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை சூழ்நிலைக்கு ஏற்ப, சட்டியிலே இருப்பதை எடுத்துப் பரிமாறி இருக்கிறார்கள் என்பதை இங்கே நான் எடுத்துக் கூறாமல் இருக்க முடியாது. காரணம், அந்தச் சட்டிக்குப் பல ஓட்டைகளை மத்திய சர்க்கார் உருவாக்கியிருக்கிறது. கறுப்புப் பணத்தின்மூலம் கள்ள மார்க்கெட்காரர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது பொருளாதாரத்தை நிரந்தரமாகச் சுரண்டிக் கொண்டே இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் இந்த நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே, இருப்பதை வைத்து எந்த அளவிற்குத் திறமையோடு அதைத் தயாரித்திருக்கிறார்கள் என்பதைத்தான் நாம் இதிலே பார்க்கவேண்டும். அவர்களிடத்திலே அதிகாரங்கள் இல்லை. மாநில சர்க்காருக்கு அதிகாரங்கள் கிடையாது. இருக்கிற அதிகாரங்களில் 19 துறைகளிலேதான் வரிகளைப் போட முடியும். அதிலே கூட இரண்டு துறைகளிலேதான் வரிகள் சரியாக போடுகின்ற அளவுக்கு நிலைமையிருக்கிறதே தவிர, மற்றவை எல்லாம் பயனற்ற வரிகள் என்றிருக்கிற சூழ்நிலையில் அதை வைத்துக்கொண்டு, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து அதன் மூலம் இன்றையதினம் நாட்டை நடத்துவது என்பது எந்த அளவுக்கு மிகப் பெரிய காரியம் என்பதும் அதற்குத் தடையாக இருக்கிற சக்திகள் எவை, எவை என்பதும், அந்தச் சக்தியைத் தகர்ப்பதற்கு அத்தனை பேர்களும் போர்க்குரல் எழுப்பவேண்டுமென்று எல்லாம் எடுத்துக் கூறினால் அதிலே நியாயம் இருக்க

[திரு. கே. சௌந்திரராசன்] [1984 மார்ச் 10

முடியும். அதை விட்டு விட்டு, நம்முடைய இரண்டாவது எதிர்க் கட்சியாக இருக்கிற தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் நம்முடைய நிதியமைச்சர் நாவலரைப் பார்த்து கிண்டலும் கேலியும பேசுவார்களானால் நிச்சயமாக அவர்கள் கூறுவது ஏதோ தமிழகத்திலே இருக்கிற மக்களைத் திசை திருப்புவதற்கு வேண்டுமானால் பயன்படும் தவிர, நாட்டிலே இருக்கிற யதார்த்த நிலைமையை உணர்த்துவதற்கு அப்படிப்பட்ட பேச்சுக்கள் பயன்படுமா என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் நம்முடையநிதிநிலை அறிக்கையிலே இருக்கிற சூழ்நிலையை வைத்துக்கொண்டு, இருக்கிற நிதி ஆதாரங்களை வைத்துக் கொண்டு எந்த அளவுக்கு இருக்கிற மக்களுக்குத் தொல்லை இல்லாமல், துயரம் இல்லாமல், எதைச் செய்ய முடியுமோ அதைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் சில பேர் சொன்னார்கள், எனக்கு முன்னாலே பேசிய மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் பேசுகின்றபொழுது கூட சொன்னார், சத்துணவுத் திட்டம் போதுமா என்று. இந்த அவையிலே, சத்துணவுத் திட்டமே ஏதோ சர்வரோக நிவாரணியாக இருப்பதைப்போல காட்டுகின்றீர்களே என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். நான் அவரிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், சத்துணவுத் திட்டம் வளர்ச்சித் திட்டமாக இல்லாமல் இருக்கலாம், அல்லது வறுமையைப்போக்குகின்ற திட்டமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அந்தத் திட்டம் இருக்கின்ற பசியைப் போக்குகின்ற திட்டமா, இல்லையா, வறுமையால் வாடுகின்றவர்களுக்கு உணவு வழங்குகின்ற திட்டமா இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. தமிழகத்திலே இருக்கின்ற மக்களில் ஏறக்குறைய 57 சதவீதத்திற்கு மேல் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றனர். அன்றாடம் சோற்றுக்கே அழுகின்றபொழுது, அத்தகைய குழந்தைகளுக்கு உணவு அளிப்பது என்பது எந்த வகையிலே குற்றம் என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் அந்த நோக்கத்தோடு பேசியிருப்பார்களானால் அதைமிகுந்த வருத்தத்தோடு கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10.50]

மத்திய சர்க்காரை நோக்கி பல்லாண்டு காலமாகதமிழகம் பல குரல்களை எழுப்பிக் கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது சேது சமுத்திரத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்பதற்கும், சேலத்திலே இரும்பு ஆலையை உருவாக்க வேண்டும் என்பதற்கும் எழுச்சி நாள் கொண்டாடினார்கள். அப்படிப்பட்ட திட்டங்கள் வேண்டுமென்று கேட்ட நேரத்திலே இன்றைக்கு சேலத்திலே ஒரு இரும்பு உருக்காலையை உருவாக்கி இருக்கிறார்கள். யானை வேண்டுமென்று கேட்டால் யானை பொம்மையை வாங்கிக்



1984 மார்ச் 10] [திரு. கே. சௌந்திரராசன்]

கொடுப்பதைப்போல மத்திய அரசு தமிழகத்திலே இருக்கிறவர்களை கேலிக்கூத்தாக கருதிக்கொண்டு, கேட்கிற திட்டங்களில் இருக்கிற நியாயத்தை எண்ணிப்பார்க்காமல் தமிழக மக்களை இவ்வளவு மோசமாக நடத்துவார்களானால், தமிழக மக்கள் அதற்காக போர்க் குரல் எழுப்புகிற காலம் வெகு தூரத்தில் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்மையில் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையில் மின்சாரத்திலே எந்த அளவிற்கு விளையாடி இருக்கிறார்கள்? ரெயில்வே பட்ஜெட்டிலே எப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது? பொது விநியோக முறையை எந்த அளவிற்குப் பாழ்படுத்தி இருக்கிறார்கள்? இவைப்களை எல்லாம் எண்ணிப்பார்க்கிறபோது, தமிழகத்திலே இருக்கிற நிதிநிலையைப் பார்க்கிறபோது நாம் ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டும். மத்திய அரசால் உருவாக்கப்படுகிற நடைமுறையாலும் அவர்கள் எடுக்கிற அந்த கொள்கையாலும் விளைகின்ற விளைவுகள் தமிழகத்தினுடைய நிதிநிலையை பாதிக்காதா என்பதை அருள்கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்றையதினம் தமிழகத்தில் வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் மத்தியிலே சர்க்கார் என்று ஒன்று இருக்கிறது என்பதை மறந்துவிடுகிறார்கள். இந்தியாவின் கடை கோடியிலே இருப்பதால் இந்த மாநிலத்தைக் கவனிக்க வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறது என்பதை அவர்கள் உணர மறுக்கிறார்கள். அண்மையில் வெள்ளத்தால் தமிழகம் பாதிக்கப் பட்டபோது சேதங்களைச் சீரமைப்பதற்கு 128 கோடி ரூபாய் தேவை என்று கேட்கிற போது ஏதோ ஒருஐந்துகோடி ரூபாயைத் தந்தார்கள். அதற்கு பின்னாலே 10 கோடி தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் இதில் ஒரு வேடிக்கை. தமிழகத்திலே இருக்கிற அரசு யதார்த்தமான நிலைமைகளை உணர்ந்து 128 கோடி தேவை என்று கேட்டால் 67 கோடிக்கு அங்கே இருக்கிறவர்கள் அனுமதித்து— அதுவும் அனுமதித்து இருக்கிறார்களே தவிர எந்தத் தொகையையும் தரவில்லை. அவர்கள் தந்திருக்கிற தொகை 15 கோடி என்று சொன்னால் இதைவிட வெட்கக் கேடான விவகாரம் வேறு என்ன இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நான் எடுத்துக்கூற விருப்புவதெல்லாம், மத்திய அரசு இவற்றை உணர்ந்தால் தவிர மாநிலங்கள் சுயமாக, வலுவாக இருக்க முடியுமா என்றால், நிச்சயமாக இருக்க முடியாது. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதி அறிக்கையில் ஆரம்பத்தில் சொல்லி இருக்கிறார்கள். இவைகளை மனதிலே கொண்டு இங்கே இருக்கிற யதார்த்தமான நிலைமைகளை உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியிலே, தஞ்சையிலே, புதுக்கோட்டையிலே, தென்னாற்காட்டிலே வெள்ளத்தினால் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே என்ன நிலைமை என்று கேட்டால் அங்கே இருக்கிற கோரையாறு, குடமுருட்டி, உய்யக்கொண்டான் போன்ற ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதற்குக் காரணம் திண்டுக்கல் பகுதியில் மழை பெய்தாலும், மதுரைப் பகுதியில் மழை பெய்தாலும் மழை நீர் எல்லாம் கோரையாற்றிலே தான் வருகிறது. அப்படி வருகிறபோது நீரைத் தேக்குவதற்கு செங்கிப்பட்டிக்குப்பக்கத்திலே நீர்த்தேக்கம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற திட்டம் பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. அப்படி கோரையாற்று நீர் தேக்கப்பட, செங்கிப்பட்டி பக்கத்திலே ஒரு அணை உருவாக்கப்படுமானால் நிச்சயமாக ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட அந்த வெள்ளத்தை தடுத்திருக்க முடியும். ஓரளவிற்கு அந்தத் தண்ணீர் நல்ல காரியத்திற்கு, விளைச்சலுக்கு பயன்பட்டிருக்கக்கூடும். அந்த அளவிற்கு இருக்கிற திட்டங்களை எல்லாம் இன்றையதினம் செயல்படுத்த முடியாத நிலை இருக்கிறது. அதற்காக கேட்கிறபோது, நிதியாதாரம் போதவில்லை என்று சொன்னால், இப்படிப்பட்ட நல்ல ஆக்கபூர்வமான திட்டங்களுக்காவது மத்திய அரசு நிதி ஒதுக்குகிறதா? அந்தத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளுகிறதா என்று பார்த்தால் ஒதுக்குவதில்லை. எப்படி எப்படி மாநில அரசுகளுக்கு நெருக்கடிகளை உருவாக்குவது : எப்படி மாநில அரசை திறமையற்ற அரசாக உருவாக்குவது என்பதிலே திட்டம் போடுவதற்குதான் டெல்லியிலே அமர்ந்திருக்கிறார்களே தவிர, அவர்கள் மாநில அரசு வலுவாக இயங்குவதன் மூலமாக மத்திய அரசு திறமையான அரசாக, வலுவான அரசாக இயங்க முடியும் என்பதை மறந்துவிடுகிறார்கள். இன்றையதினம் டெல்லியிலே இருக்கிறவர்கள், ஆதிக்க உணர்வு படைத்தவர்கள் மாநிலங்களை எல்லாம் ஏதோ பிச்சைக்காரர்களாகக் கருதுகிறார்கள். இந்த நிலை என்றைக்கு மாறுகின்றதோ அப்போதுதான் மாநிலங்கள் சுயேச்சையாக, சுயமரியாதையோடு செயல்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அவ்வகையிலே இங்கே இருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அகில இந்திய கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடைய குரல்களை டெல்லியிலே எழுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வைக்கத்திலே பெரியார் நினைவுக் கட்டிடத் தொகுப்பு ஒன்று அமைக்கப்படுவதாகக் கூறி இருக்கிறார்கள். அதை நான உளமாற பாராட்டுவதற்கும், வரவேற்பதற்கும் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் தந்தை பெரியார் அவர்கள் இந்த நாட்டிலே தோன்றியதன் காரணமாகத்தான் ஏழை எளிய மக்கள், உழைக்கும் மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்கு முன்னுக்கு வர முடிந்து இருக்கிறது. வருணாஸ்ரம தர்மத்தின் அடிப்படையிலும், சனாதன தர்மத்தின்





அடிப்படையிலும் அமுக்கி வைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் ஓரளவுக்கு இன்றைக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களின வளர்ச்சிக்காகப் பாடுபட்ட தலைவருக்கு வைக்கத்தில் ஒரு கட்டிடத்தை உருவாக்கும் ஒரு திட்டம் இந்த அரசால் கொண்டுவரப்படுகிறது என்று சொன்னால் அதை வரவேற்கவேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும். அப்படிப்பட்ட கட்டிடத்தைக் கட்டுவதற்குத் திர்மானித்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே டெல்லியில் பாரதியார் சிலை அமைக்கும் திட்டத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றையதிலம் பார்க்கிறோம், சத்துணவுத் திட்டத்தின் மூலம் 1982-83ஆம் ஆண்டில் 2.63 இலட்சம் குழந்தைகளும், 1983-84ஆம் ஆண்டில் 3.8 இலட்சம் இளைஞர்களும் மாணவர்களும் புதிதாக பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தத் திட்டத்தைப் பாராட்டுவதை விட்டுவிட்டு, இதிலே குறைகளைச் சொல்வார்களேயானால், அவர்களை நிச்சயமாக நான் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தொழிற் கல்வியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பின்னாலேதான் பல்வேறு பல்கலைக் கழகங்கள், பல்வேறு பாலிடெக்னிக்குகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன, இதையெல்லாம் பாராட்டுவதை விட்டுவிட்டு, எதிர்க்கட்சியில் உள்ள திரு. துரைமுருகன் போன்றவர்கள் இங்கே கிண்டலும், கேலியுமாகப் பேசுவதால், இப்படிப்பட்ட கல்விக்கூடங்கள் அமைப்பதை அவர்கள் எதிர்க்கிறார்களா என்பது என்னுடைய கேள்வி. இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றுவதற்காக உளங்கனிந்த மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று காலையில் கூட ஒரு பிரச்சினை கேள்வி நேரத்தின்போது வந்தது. சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் வழங்குவதற்கான திட்டம் பற்றி கேட்கப்பட்டது. (குறுக்கீடு.)

**திரு. துரைமுருகன்** : மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிற் கல்வியை வளர்ப்பதற்கு பலவேறு நடவடிககைகளை எடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். பாலிடெக்னிக்குகளையும் இன்ஜினீரிங் கல்லூரிகளையும் அரசாங்கத் தரப்பிலே திறக்காமல் தனியார் துறையில் துவக்கும் மர்மம் என்ன ? கல்வி முறையை மாற்றப் போகிறோம் என்று சொல்கிறார்கள். பாதி நேரம் படிப்பு. பாதி நேரம் தொழில் என்று சொல்கிறார்கள். அப்படியானால் மீண்டும் குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டுவர உத்தேசம் உண்டா ? அங்கத்தினர் அதுபற்றி ஏதும் அறிவாரா ?

**திரு. கே. சௌந்திரராசன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இப்பொழுது அரசு கொண்டுவந்திருக்கும் திட்டத்தைப் பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும். குலக்கல்வித் திட்டத்திற்கும், இதற்கும் எந்த அளவிற்கு மாறுபாடு, வேறுபாடு இருக்கிறது என்பதையும் திரு. துரைமுருகன் அறிவார். ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்கிறார் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாற்றுத் தலைவர் அவர்களே, குலக்கல்வித் திட்டம் என்பது தந்தை பார்த்த தொழிலையே மகன் பார்ப்பது என்பதாகும். ஆனால், புரட்சித் தலைவர் கொண்டு வந்திருக்கும் திட்டம் வாரத்திலே நான்கு நாட்கள் அவர்கள் பள்ளியிலும் மற்ற இரண்டு நாட்கள் அவர்கள் பாடத்திட்டத்தின் கீழ் எந்தத் தொழிலை எடுத்திருக்கிறார்களோ அந்தத் தொழில்களில் ஏதாவது ஒன்றையோ பக்கத்திலே இருக்கும் தொழிற்சாலைகளுக்குச் சென்று கற்றுக்கொள்வது. ஆகவே, தந்தை செய்கிற தொழிலை மகன் பார்ப்பது என்பது அல்ல.

**திரு. கே. சௌந்திரராசன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் சொல்வது மாண்புமிகு இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் வருணாசிரம தர்மத்தின் அடிப்படையில் கொண்டு வந்த குலக்கல்வித் திட்டமாகும். அதையெல்லாம் எதிர்த்து மும்முனைப் போராட்டம் நடத்திய பாரம்பரியத்தில் வந்தவர்கள் நாம். ஆகவே, திசை திருப்ப வேண்டாம். குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று கருத வேண்டாம். சமுதாயத்தின் அடித்தட்டத்தில் உள்ள மக்கள் படிக்க வேண்டும். கல்வி கற்க வேண்டும், தொழில் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறோம். அரசாங்கம் பாலிடெக்னிக் ஆரம்பித்தாலும், தனியார் பாலிடெக்னிக் ஆரம்பித்தாலும் அதிலே படிக்கப்போவது தமிழ்நாட்டு மக்கள்தான். வேறு யாரும் வந்துவிடப் போவது இல்லை. ஏழை எளிய மக்கள் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இதைச் செய்து இருக்கிறோம். அந்த வாய்ப்பு கிடைத்துவிடக் கூடாது என்று துரைமுருகன் அவர்கள் கருதுகிறார்களா என்று தெரியவில்லை. புதிதாக இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவாகிற போது தமிழகத்தில் இருப்பவர்கள்தான் படிப்பார்கள், வெளியே இருப்பவர்கள் யாரும் வந்துவிடமுடியாது என்பதை துரைமுருகன் போன்றவர்கள் கவனத்தில் வைத்துப் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

**திரு. துரைமுருகன் :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (டாக்டர் கே. சமரசம்) ; இதில் பாயின்ட் ஆப் ஆர்டருக்கு இடமில்லை, உட்காருங்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**



**திரு. துரைமுருகன்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதிலிருந்து நான் மறுத்துக் கூறுகிறேன் என்று நினைக்கக்கூடாது. தொழிற் கல்வி பெருக வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து கிடையாது. (மணியடிக்கப் பெற்றது) அவர் என்னுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னதால் நான் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது.

**திரு. கே. சௌந்திரராசன் :** துணைத் தலைவரவர்களே, அவர் பேசிய சில விவரங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய வகையிலே தான் அவர் பெயரைக் குறிப்பிட்டேனே தவிர வேறு காரணங்களுக்காக அல்ல. (குறுக்கீடு) துரைமுருகன் அவர்கள் அவைக்குள் வந்தவுடனே எனக்குத் தெரியும், பத்திரிகையில் இன்றைக்கு அவருடைய பெயர் வரவேண்டும் என்பதற்காக ஏதாவது சொல்வார் என்று. பத்திரிகையில் தன்னுடைய பெயர் வருவதற்கு இப்படிப்பட்ட விவகாரங்கள் செய்வதில் அவர் பழக்கப்பட்டு விட்டார். அவர் சில பிரச்சினைகளை எழுப்பியதால் அவருடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னேன்.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவரவர்களே, கேள்விகள் கேட்கவோ அல்லது பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் அல்லது பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் கேட்கவோ இந்த மன்றத்தில் உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. அது மன்றத்தினுடைய மரபு. சில நேரங்களில் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு என்னை விட அதிகமான விவரங்கள் தெரியும் என நினைத்து நான் கேட்கிறேன். அதற்காகப் பத்திரிகையில் பெயர் வருவதற்காக துரைமுருகன் அவைக்குள் நுழைந்தவுடன் ஏதாவது பேசுவார், கேட்பார் என்று சொல்வது முறையல்ல. நான் அவைக்குள் வருகிறேன். உடனே, துரைமுருகன் பெயரைச் சொன்னால்தான் தன்னுடைய பெயர் பத்திரிகையில் வரும் என்பதற்காக என் பெயரைச் சொல்கிறார்கள் ; ஆக பத்திரிகையில் பெயர் வர வேண்டுமென்று விரும்புகிறவர்கள் நீங்கள் தான், நான் அல்ல. உங்களுடைய விளம்பரத்திற்காக என்னுடைய பெயரைக் குறிப்பிடுகிறீர்கள்.

**திரு. மி. வின்சென்ட் :** துணைத் தலைவரவர்களே, ஒரு உறுப்பினரின் பெயரைச் சொன்னால்தான் எங்கள் பெயர் பத்திரிகையில் வரும் என்று சொல்வது எங்களுக்கு அவமானமாக இருக்கிறது. அதை அனுமதிக்கக் கூடாது. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே அவமானப்படுவதற்கு ஒன்றும் இல்லை ; அவைக்குள் நடந்திருக்கிறது. இதற்கு மான நஷ்ட வழக்குப் போட முடியாது.

[1984 மார்ச் 10

**திரு. கே. சௌந்திரராசன் :** துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை நான் பாராட்டுகின்ற அதே நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். திருச்சி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த நான் திருச்சி நகராட்சி மன்றம் எந்த அளவுக்கு பணிகளைச் செய்துகொண்டிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திருச்சி நகராட்சி மன்றத்தின் நிதிநிலை பற்றாக்குறையினால் பல்வேறு வளர்ச்சிப் பணிகளைக்கூடச் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. புதியதாக பாதைகள் அமைக்க முடியாவிட்டாலும் இருக்கின்ற பாதைகளைக்கூட சீர் செய்ய முடியவில்லை. சாக்கடைப் பணிகள் சரிவர செய்யப்படவில்லை : சுத்தமாக வைத்துக்கொள்ள வசதி இல்லை. இதை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு, திருச்சி நகராட்சி மன்றத்தின் நிதிநிலையை சீர் செய்யவும், அவசியமாகச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யவும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய இந்த நிதிநிலை அறிக்கையில் இடமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்குக் காலையிலே என்னுடைய கேள்வி ஒன்று வந்திருந்தது. அதிலே கூடக் குறிப்பிட்டிருந்தேன். இன்றைக்குத் திருச்சியில் பல்வேறு இடங்களில் ஜாதிப் பெயரால் தெருக்கள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட ஜாதியார் பெயர் இருந்தாலும், உதாரணத்திற்காகச் சொல்கிறேன், சுப்பிரமணிய முதலியார் என்று இருக்கும். அது கூட இல்லாமல் முதலியார் என்ற அளவுக்கு ஜாதியின் பெயரால் தெருக்கள் இருக்கின்றன. அந்தப் பெயர்களை மாற்ற வேண்டும். கடந்த நான்கு ஆண்டுகளாக நாங்கள் பல்வேறு நிலைகளில் அவைகளைப் பற்றிப் பேசி வந்திருக்கிறோம். ஆனால் இன்று வரை பரிகாரம் கிடைக்கவில்லை. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் ஒரு வேளை மேல் மட்டத்தில் இருக்கிறார்களோ, அல்லது உயர்ந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று கருதிக்கொண்டிருக்கிறார்களோ, எனக்குத் தெரியவில்லை. அந்தப் பெயர்களை நீக்குவதில் இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை. அவைகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து திருச்சியிலே இருக்கின்ற குடிசைப் பகுதிகளிலே இன்றைய தினம் சுகாதாரம் கெட்டு கழிவு நீர் அகற்றப்பட முடியாமல் இருக்கிறது. நல்ல குடிநீர் வழங்க முடியாத நிலை இருக்கிறது. அவைகளையெல்லாம் சீர் செய்து தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



திருச்சியைப் பொறுத்தவரைக்கும் நெசவாளர்கள் நிறைந்த பகுதி. நெசவாளர் சங்கங்களிலிருந்து தயாரிக்கப்படும் ஆடைகள் இங்கே சென்னையிலுள்ள கோ-ஆப்டெக்ஸ்க்கு அனுப்பப்பட்டிருக்கிறது. திருச்சி உறையூரிலுள்ள நெசவாளர் சங்கத்திற்கு, சென்னையிலே இருக்கின்ற கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏறக்குறைய 17 இலட்சம் ரூபாய் தர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பணம் வராத காரணத்தால், அவர்கள் கூலி கொடுக்கமுடியாத நிலை தொடர்ந்து இருக்கிறது. அவைகளை மாற்றுவதற்குரிய வகையில், நடவடிக்கைகளை விரைவில் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் பெய்த மழையின் காரணமாக, வெள்ளத்தின் காரணமாக, குறைந்தது 30 வீடுகள், ஒரு ஆண்டிற்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகள் வீழ்ந்து தரைமட்டமாக இருக்கிறது. அவைகள் எல்லாம் நெசவாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள். சாதாரண வெள்ளம், ஒரு அடித் தண்ணீர் வந்தவுடனே அந்த வீடுகள் இடிந்து வீழ்ந்து தரை மட்டமாக இருக்கிறது. அந்த வீடுகள் தரை மட்டத்திலே அஸ்திவாரம் இல்லாமல் கட்டப்பட்டிருக்கிறது. நல்ல வேளையாக பகலிலேயே வீழ்ந்த காரணத்தால், யாரும் பாதிக்கப்படவில்லை. இவைகளையெல்லாம் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி தமிழகத்தின் மையப் பகுதியாக இருக்கிறது. அங்கே ஒரு போக்குவரத்துக் கழகத்தை அமைக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். கடந்த ஆண்டு கூடச் சொன்னேன். சோழன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து உருவாக்க வேண்டுமென்று சொன்னேன். அவைகள் எல்லாம் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்று பார்க்கும் போது, நான் அதைக் கவனிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே வேலை செய்கின்றவர்கள் அந்த சோழன் நிறுவனத்திலே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆனால் பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் புதிதாக பல இடங்களில் உருவாக்கப்பட்டிருக்கிறதே தவிர, திருச்சியிலே அதைத் தள்ளிவைத்து விட்டார்கள் என்று அந்த மக்கள் எண்ணுகிறார்கள். அவைகளை எல்லாம் போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டு, மத்திய சர்க்கார் ஒரு பினாமி நிலச் சட்டத்தைக் கூட இன்னும் ஏற்றுக் கொள்ளாமலிருப்பது மிக மிக வருந்தத் தக்கது, கண்டிக்கத் தக்கது என்று கூறி இந்த நிதிநிலை அறிக்கையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு வரவேற்கிறேன்.

* திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், 66 பக்கங்களைக் கொண்டதாக இருந்தாலும், ஏழை எளிய மக்களை முழுமையாக வாழ வைக்கும் ஒரு உன்னதமான நிதிநிலை அறிக்கையாக இல்லை என்பதை முதலிலேயே கூற ஆசைப்படுகிறேன்.

இந்த ஆண்டு மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையிலே பற்றாக்குறை சுமார் 2,000 கோடி. அது இந்திய மக்களைப் பாதிக்கக் கூடிய பட்ஜெட் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 167 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட்டாகவும் 57 கோடி ரூபாய்க்கு புதிய வரி போடப்பட்ட ஒரு பட்ஜெட்டாகவும் உள்ளது. அதிலே குறிப்பாக டீசல், பெட்ரோல் போன்றவற்றிற்கும் பருத்தி நூலுக்கும் வரி போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வலுவான மத்திய அரசு, வளமான மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்பதில் எங்களுடைய கட்சிக்கு முழுமையான உடன்பாடு உள்ளது. அதிலே மாறுபட்ட கருத்தில்லை. உணவு உற்பத்தியைப் பொறுத்த வரை, இந்த ஆண்டு 50 இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தியும், ஏனைய தானியங்கள் உற்பத்தி 19 இலட்சம் மெட்ரிக் டன் என்று இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-10)

1982-83 ஆம் ஆண்டு கடைசி வரையிலும் கடுமையான வறட்சி இருந்ததை நாம் பார்க்கிறோம். அதே சமயத்தில் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கடுமையான மழையின் காரணமாக, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் ஏனைய மாவட்டங்களில் கடுமையான வெள்ளச் சேதம் ஏற்பட்டது. கடந்த பல நாட்களுக்கு முன்பாக அதாவது இன்று வரையிலும், நெல்லை, மதுரை, ராமநாதபுரம் போன்ற தென் மாவட்டங்களில் கடுமையான வெள்ளச் சேதம் ஏற்பட்டு அதனால் பல லட்சக்கணக்கான ஏக்கர் நெல் விளையும் பூமிகளும், வானம் பார்த்த மானாவாரிப் பூமிகளும் இன்றைக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் இந்தச் சமயத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விவசாயப் பொருட்களைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே விவசாய உற்பத்திப் பொருள்களாகிய நெல், கரும்பு, பருத்தி போன்றவைகளுக்கு நியாயமான விலை இல்லாமல் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றத்தின் காரணமாக விவசாயிகளும், அவர்களைச் சுற்றி



இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்களும் இந்தச் சமயத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். மேலும் விவசாயிகள் பயன்படுத்தும் பொருள்களாகிய யூரியா, டீசல், பூச்சி மருந்து போன்றவைகள் இன்றைக்குக் கடுமையான விலை ஏற்றத்தில் இருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் குறிப்பாக விவசாயத்திற்கு மின்சாரம் இரவில் முழுமையான அளவிலே இருந்தாலும் கூட, பகலிலே மின்சாரம் வினியோகம் இல்லாமல் இருப்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. மேலும் இந்த விவசாயிகள் வறட்சியின் காரணமாகவும், கூட்டுறவுக் கடன மற்றும் ஏனைய கடன்கள் காரணமாகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றபோது நாம் போட்டு இருக்கக்கூடிய இந்த உணவு உற்பத்தித் திட்டங்கள் எவ்வாறு சாத்தியமாக அமையும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து நீர்ப்பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பரம்பிக்குளம்-ஆளியாறு விரிவாக்கத் திட்டம் பெரியார்-வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் திட்டம் போன்றவைகள் இங்கே அறிவிக்கப்பட்டு இருந்தாலும் கூட, 1974 ஆம் ஆண்டோடு முடிவு அடைந்த காவிரிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், 10 ஆண்டுக்காலம் அதிகமாகியும் இது சம்பந்தமாக இந்த அறிக்கையிலே ஒரு வார்த்தை கூட சுட்டிக் காட்டப்படவில்லை என்பதை நான் இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் கோவை, பெரியார் போன்ற மாவட்டங்கள்—இன்னும் பல்வேறு மாவட்டங்களில் கடுமையாக வெள்ளம் மழை ஏற்பட்டு இருந்தாலும், அந்த மாவட்டங்கள்—வறட்சியாகவே இருக்கின்ற சூழ்நிலை இயற்கையாகவே இருந்து கொண்டிருக்கிறது. எனவே அந்த மாவட்டங்களினுடைய வறட்சியைப் போக்குவதற்கு மத்திய அரசோடும் கேரள அரசோடும் பேச்சு வார்த்தை நடத்தி, பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்பட்ட ரூ. 50 கோடி பொருட் செலவில் கீழ் பவானி வாய்க்காலிலே கரைகளைப் போட்டு கசிவு நீரைத் தடுத்து, அதன் மூலம் பெரியார் மாவட்டத்திற்கு பாசன வசதி அளிக்கும் திட்டம் இருந்தது. அந்தத் திட்டம் சம்பந்தமாகவும் இதிலே எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[திரு தி. கா. நல்லப்பன்] [1984 மார்ச் 10

கடலூர் குளச்சல் ஆகிய துறைமுகங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற திட்டங்கள் போடப்பட்டுள்ளன. சேது சமுத்திரத் திட்டத்தை செயலுக்குக் கொண்டு வர எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கரூர்-திண்டுக்கல் அகல ரயில் பாதைத் திட்டம் செயல்படுத்தத் தொடர்ந்து முயற்சி செய்து, அந்தத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கடலோரச் சாலைகளை முறையாக திட்டமிட்டு சுமார் 600 மைல் அளவுள்ள கடற்கரைச் சாலைகளை செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கல்வியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே உள்ள கல்வி, பட்டப் படிப்பாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய கல்வி, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு பயன் இல்லாத கல்வியாக இருக்கிறது என்ற அடிப்படையில், அதனை மாற்றி, இன்றைய தினம், தொழில் கல்வியாகக் கொண்டு வருவதற்கு ஒரு நல்ல திட்டத்தை அரசு கொண்டிருக்கிறது. இருந்தாலும் இன்றையதினம் கொண்டு வரக் கூடிய இந்தத் தொழில் கல்வி பல்வேறு மாவட்டங்களில் தனியார்களுக்கு இந்தத் தொழில் கல்வியை கொடுத்து, அந்தக் கல்வியில் சேரக் கூடிய மாணவர்கள், விண்ணப்பம் அனுப்புகின்றபோது, நீ எத்தனை மதிப்பெண்கள் பெற்றிருக்கிறாய் என்று கேட்பதற்கு மாறாக, நீ எவ்வளவு பணம் வைத்திருக்கிறாய் என்று கேட்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏற்கெனவே இருக்கும் பல்வேறு தனியார் ஸ்தாபனங்கள் கூட — குறிப்பாக சக்தி ஷுகர்ஸ், கோவையிலே இருக்கக் கூடிய சில தொழிற் கல்லூரி இவைகளும் இன்னும் சில தனியார் நிறுவனங்கள் எல்லாம் தகுதிகளின் அடிப்படையில் மாணவர்களைச் சேர்க்கிறார்கள். தனியார் நிறுவனங்களிலேயே ஒரே மாதிரியான நிலைமை இல்லாமல் இரண்டு பிரிவு உண்டு. ஒருபுறத்திலே இந்த தொழிற் கல்வி மாணவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற அக்கறையோடு இருப்பவர்கள், அவர்கள் தகுதிகளின் அடிப்படையிலே எடுக்கிறார்கள். இன்னொரு பக்கத்திலே அதை லாப நோக்கத்தோடு, வேறு மாதிரியாகப் பயன்படுத்த வேண்டும் என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள். இப்படி இந்தத்தொழில் கல்வியின் இட ஒதுக்கீடு மாற்றப்பட்டிருக்கிறது.

இன்றைய தினம் தமிழக அரசைப் பொறுத்த வரையில், புதிதாகத் தொழில் கல்வி நிலையத்தை ஆரம்பிப்பதற்குப்போதுமான நிதிநிலை இல்லாவிட்டாலும், வரக் கூடிய காலத்திலாவது



1984 மார்ச் 10] [திரு. தி. கா. நல்லப்பன்[

தொழில் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தஅரசு முழுமையாக முயற்சி எடுத்து ஆரம்பிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, வறட்சி ஏற்பட்ட போது பத்து கோடி ரூபாய்க்கும், வெள்ளம் ஏற்பட்டபோது 2 கோடி ரூபாய்க்கும் நாம் கைத்தறி துணிகளை கோவாப்டெக்ஸ் மூலமாக, ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாங்கினோம். ஆனால் அந்த கோவாப்டெக்ஸ் நிறுவனங்கள் இன்று வரையில் வாங்கிய கைத்தறி துணிகளுக்கு முறையாகப் பணம் அனுப்பப்படாமல், அந்தத் தொழில் பாதிக்கப் படக்கூடிய நிலையில் இருக்கிறது. நம்முடைய திட்டத்தின் அடிப்படையே, கூட்டுறவுத் துறை மூலமாக நெசவுத் தொழிலை ஊக்குவிப்பதுதான் என்றாலும் பல கோடி ரூபாய்க்கு மேலே இன்றையதினம் கைத்தறித் துணிகள் விற்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்ற நிலை இருக்கிறது. இதற்கு ஒரு புறத்திலே வறட்சியும், மறு புறத்திலே வெள்ளமும் ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை காரணமாக இருக்கலாம். ஆனாலும், வாங்கப்பட்ட துணிகளுக்கு ஆங்காங்கு ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையாகப்பணம் போய்ச் சேராத காரணத்தால்தான் இன்றையதினம் கைத்தறித் துணிகள் மிகப் பெரும் அளவில் தேக்கமான சூழ்நிலையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தகவலுக்காக ஒரு செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன். பிரதம சங்கங்களில் தேக்கம் இருப்பதை மனத்திலே கொண்டு 7 ஆம் தேதியிலிருந்து 13 ஆம் தேதி வரைக்கும், ஒரு வாரம், ஏறக்குறைய 1,550 பிரதமச் சங்கங்களுக்கும் 20 சதவீதம் ரிபேட் வைத்து விற்பனை செய்யலாம் என தமிழ்நாடு முழுவதிலுமுள்ள அத்தனை பிரதம சங்கங்களுக்கும் அறிவுறுத்தியிருக்கிறோம் என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தேங்கிக் கிடக்கின்ற அந்தக் கைத்தறி துணிகளை மேலும் விற்பனை செய்வதற்குத் தற்போது தனியாக ரிபேட் கொடுத்து ஊக்குவிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே கைத்தறித் துணிகளின் தேக்கம் அதிகமாக இருக்கிறது. இந்த நிலையில் பருத்தி நூலுக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய 3 சதவீத வரியை உயர்த்தி, ஒரு சதவீதம் அதிகமாக்கி வரி போட்டிருக்கிறார்கள். அதைத் தயவு செய்து பரிசீலனை செய்து, அதற்கு உயர்த்தப்பட்ட அந்த வரியை வாபஸ் வாங்க வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. தி. கா. நல்லப்பன்] [1984 மார்ச் 10

அத்தோடு அந்தக் கைத்தறித் துணிகள் ஏற்கெனவே தேங்கிக் கிடக்கின்ற நிலையில் இருப்பதால், அவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய வகையில், மைய அரசோடு போராடி அல்லது நேரிடையாகப் பேசி, அந்தத் துணிகளை வெளி நாடுகளுக்கு அனுப்பி, அதற்கு ஒரு நிரந்தரமான வழி காண வேண்டும். அவர்களை வாழ வைக்க வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்பைப் பொறுத்த வரையில், நாம் அதற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, புதிய வேலை வாய்ப்புகளுக்குண்டான சாத்தியக் கூறுகளை, இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தாலும், நேற்றைய முன் தினம் இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு கேள்விக்கு பதில் சொல்கிறபோது, 14 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள், வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருக்கிறார்கள். அந்த 14 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களில், 5 லட்சம் பேர்கள் பெண்கள் என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். நாம் கடந்த 1980-81 லேயிருந்து வேலையற்றவர்களின் எண்ணிக்கையை குறைத்திருக்கிறேமோ? அது சம்பந்தமாகத் தமிழக அரசிடம் ஏதாவது புள்ளி விவரம் உள்ளதா? ஒரு புறத்திலே தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகவும், வேலையற்றவர்களுக்குக் கடன் கொடுப்பதும் ஏனைய சலுகைகள் ஆகியவற்றின் மூலமாகவும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தாலும் மறுபுறத்திலே வேலையில்லாது இருக்கின்ற 14 லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வேலை கொடுத்து எப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முயற்சி செய்கிறோம் என்பதை நாம் பரிசீலிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு பக்கத்திலே புதிதாக தொழில்களை துவங்குவதாகக் கூறுகிறோம். பஞ்சாலையாக இருந்தாலும் சரி, ஏனைய தொழிற்சாலையாக இருந்தாலும் சரி இருக்கிற ஆலைகள் மூடப்படுகிற ஒரு அபாயம் இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. அதைப் போக்கக் கூடிய முறையிலே ஆங்காங்கே ஏற்படுகின்ற சிறு சிறு பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து அந்தத் தொழில்கள் தொடர்ந்து நடப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

ஆதி திராவிடர்களைப் பொறுத்தவரையில் இந்த அறிக்கையிலே பல்வேறு திட்டங்களைப் பல்வேறு துறைகளின் கீழ் வேலை வாய்ப்பு மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்குத் திட்டங்களைத் தீட்டியிருந்தாலும் குறிப்பாக நான் கேட்டுக் கொள்வது கடந்த 20, 30, 40 ஆண்டுக்காலமாக பல்வேறு இடங்களில் அவர்கள் குடியிருக்கிற இடங்களை இன்னமும் வீட்டு மனைப்பட்டா



1984 மார்ச் 10] [திரு. தி. கா. நல்லப்பன்]

செய்து கொடுக்காத சூழ்நிலை தான் இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பகுதியிலே உள்ள சின்னவீரசங்கிலி ஊராட்சிப்பகுதியில் உள்ள பச்சாகவுண்டன்பாளையம் என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே உள்ள ஆதி திராவிடர்களுக்கு 1975 ஆம் ஆண்டுக்கு முன்னாலே அவர்கள் குடியிருப்பதற்கு இடத்தை ஒதுக்கினார்கள் 1975 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை அந்த ஆதி திராவிட மக்களுக்குப் பட்டா கொடுக்கப்படவில்லை. 1980 ஆம் ஆண்டு வரையில் பட்டா கிடைக்காத சூழ்நிலையில் நானும் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன், ஆனால் இதுவரையிலும்கூட அந்த மக்களுக்கு பட்டா கிடைக்காத சூழ்நிலைதான் இருக்கிறது. நாம் அவர்களுக்குப் பல்வேறு துறைகளிலே சலுகைகளைச் செய்து கொண்டிருந்தாலும் ஏற்னெவே அவர்கள் குடி இருக்கிற இடங்களிலே அவர்களுக்கு முறையாக வீட்டு மனைப் பட்டா கொடுப்பதற்கு ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாக எடுத்து செயல்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முதியோர்களுக்கு உதவித் தொகை 1,99,639 பேர்கள் பெற்றுப் பயன் அடைந்திருக்கிறார்கள் என்று இந்த அறிக்கையிலே கூறப்பட்டு இருக்கிறது. ஒருவர் இறந்தால் அடுத்தவருக்கு கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறதே தவிர விண்ணப்பிக்கக்கூடிய முதியோர்களுக்கு எல்லாம் கிடைக்கும்நிலை இல்லை. அதைப் பெறுவதற்கான முழுமையான தகுதி இருந்தும் கூட கிடைக்காத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதியோர் தொகை கேட்டு விண்ணப்பித்து இருக்கக்கூடிய தகுதியுடைய அத்தனை பேர்களுக்கும் அந்தத் தொகை கிடைக்கக்கூடிய அளவுக்கு நிதிநிலை அறிக்கையிலே அல்லது சமூக நலத் துறையிலே இருந்து கொடுக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றையதினம் இந்த அவையிலேயே பேசுகின்றபோது கூறப்பட்டதாவது. ஏனைய குடும்பங்களுக்கு வாரத்திற்கு 2 கிலோ அரிசி கொடுக்கிறோம். ஆனால் வாழ வழியற்றவர்களுக்கு வாழ முடியாதவர்களுக்கு ஒரு வேளை உணவு என்று அளித்து அவர்களுக்கு அரைக் கிலோ அரிசி அளிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை மாற்றி ஒரு வாரத்திற்கு 2 கிலோ அரிசியாவது கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பால் பெருக்குத் திட்டத்தைப் பொறுத்த வரையிலும் பல்வேறு இடங்களிலே ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்

[திரு. தி. சா. நல்லப்பன்] [1984 மார்ச் 10

பட்டும் அவர்கள் 100 லிட்டர் அளவுக்கோ அல்லது 150 லிட்டர் அளவுக்கோ உற்பத்தி செய்யக்கூடிய இடங்கள் இருந்தும் அவர்களுக்கு அந்தர் சங்கங்களை அமைப்பதற்காக அதிகாரிகள் வந்து பார்த்து வழிவகைச் செய்யாமல் வருடக் கணக்கிலே காலம் தாழ்த்திக்கொண்டு இருக்கிறார்கள். விலைவாசியைப் பொறுத்தவரையில் சாதாரண. தொழிலாளர்கள் நடுத்தர மக்கள் வாங்கி உண்ணமுடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே கூடுமான வரை அவர்களுக்கு உணவுப் பங்கீட்டு முறையின் அடிப்படையிலே ரேஷன் கடைகளிலே மாதம் 20 கிலோ அரிசியாவது போடவேண்டுமென்ற நிலைமை இருந்தாலும்கூட மாதத்திற்கு 10 கிலோ அரிசியாவது போடவேண்டுமென்ற நிலையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூடப்படுகிற தொழிற்சாலைகள் அனைத்தும் திறக்கப்படவும் புதிய தொழிற்சாலைகளை அரசே ஆரம்பிக்கவும் கைத்தறித் தொழில், விவசாயத் தொழில் பாதுகாக்கப்படவும் அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. கோபாலன்** : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை பேரவையில் அளிக்கின்ற நேரத்திலே நமது மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் பொது மக்களின் குறைகளைத் தீர்ப்பதிலும், ஏழை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதிலும், பல்வேறு துறையில் உற்பத்தியை மேம்படுத்துவதிலும் இந்த அரசு தனது பொறுப்புக்களை பாராட்டத்தக்க வகையிலே ஆற்றியிருக்கின்றது என்றும் அதே நேரத்தில் மாநிலம் முழுவதிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி வந்திருக்கின்றது, என்றும் குறிப்பிட்டு இருந்தார்கள்.

எவையெல்லாம் அடிப்படையானத் தேவைகளோ அவற்றையெல்லாம் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்குகின்ற அரசு ஆற்றி வந்திருக்கின்றது என்பதை எல்லாம் கண்கூடாகப் பார்த்து வந்துள்ளோம். நாடெல்லாம் நாவார போற்றுவதைக் கேட்டு வந்துள்ளோம். ஏடெல்லாம் எடுத்தியம்பி புகழ்வதை செவிகுளிர கேட்டு வருகின்றோம். அந்த வகையிலே இந்த நிதிநிலை அறிக்கையானது நிறைவளிக்கும் அறிக்கையாகும். நெஞ்சினிக்கும் என்பதை தொடக்கத்தில் சொல்லி பாராட்ட விரும்புகிறேன்.



1984 மார்ச் 10] [திரு. ஆர். டி. கோபாலன்]

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு பழனிவேல் அவர்கள் இந்த அறிக்கையை கடுமையாக விமர்சித்துப் பேசினார்கள். குறிப்பாக நான் சொல்லவேண்டும் என்றால் மதுரை மாவட்டத்திலே, பழனித் தொகுதியில் தான் அதிகமான நல்ல காரியங்களை எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் நடத்தியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். இருந்தாலும்கூட அவர் விமர்சிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர் விமர்சித்து இருக்கிறார். அவர் நன்றி கூறுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவருக்கு நன்றி கூற மனம் இல்லை என்று நான் கருதுகிறேன். நிச்சயமாக அடுத்து அதற்காக ஒரு பாராட்டை அவர் தெரிவிப்பார் என்று நான் நம்பிக்கையோடு இருக்கிறேன்.

நமது மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் தாய்க் குலத்தின் பால் எவ்வளவு பாசமும் அன்பும் வைத்திருப்பவர் என்பதற்கு எடுத்துக்காட்டு அண்மையில் தொடங்கப்பட்டுள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகமாகும். மகளிர் முன்னேற்றத்திற்காக இதுவரை நமது மாநிலத்தில் இதுபோன்று எவரும் செய்யாத ஒன்றை மகளிருக்கென்றே, அவர்களின் ஏற்றத்திற்கு என்றே தனியாக மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்கியிருப்பது வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். சொன்னதைச் செய்பவர் இந்தச் சுடர் முகத்தினர். நினைத்ததை முடித்துக்காட்டுபவர் இந்த நிலவு முகத்தினர், அன்னவர் தான் நம் புரட்சித் தலைவரே. அத்தகைய ஒரு பல்கலைக் கழகத்திற்குப் பெயர் இடுவதிலும் புரட்சியைச் செய்துள்ளார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். ஆம், சாதி, மதம், பால் அனைத்தையும் கடந்து அன்பே தொண்டு என்று அகிலமெல்லாம் போற்றும் வகையில் அரிய தொண்டாற்றி வரும் மூதாட்டியாம் அன்னை தெரசா அவர்களின் பெயரில் இப்பல்கலைக் கழகத்தை அமைத்திருப்பது அற்புதம், அற்புதம். தொண்டுக்கே வாழ்பவரை அதிலும் தாய்க்குலத்தை மதிக்கத் தெரிந்தவர்கள் தமிழர்கள் என்பதை இதன் மூலம் நிரூபித்துக் காட்டியவர் நமது முத்தான முதல்வர். இந்த வகையில் அவர்கள் சாதாரண மனிதர் அல்லர் அவர்கள். அவர் ஒரு 'சூப்பர் மேன் மாமனிதர்' ஆவார் என்று சொல்வதில் நான் மிகவும் பெருமை அடைகிறேன்.

கடந்த நான்கு ஆண்டுக் காலமாக தமிழகத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியாலும் வெள்ளப் பெருக்காலும் மாநில அரசின் பொருளாதார நிலை வெகுவாக பாதிக்கப்பட்ட போதிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பாதுகாப்பு தேவைப்பட்ட மக்களுக்கும் போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகளும் நிவாரண நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதை நான் பாராட்டுகிறேன் என்று சொல்வதை விட இந்த நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள் என்று சொல்வது பொருத்தமாகும். இருக்கின்ற

[திரு. ஆர். டி. கோபாலன்] [1984 மார்ச் 10

இக்கட்டான பொருளாதார நெருக்கடியிலும் புரட்சித் தலைவர் அரசு மக்களின் இன்றியமையாத தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது என்பதை யாரும் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்

(முற்பகல் 11-30)

இந்தியத் துணைக்கண்டத்திலே தேர்தல் அறிக்கையிலேயே சொன்னவற்றை நிறைவேற்றிய ஒரே அரசு இதய தெய்வம் புரட்சித் தலைவரின் அரசுதான் என்பதை பெருமையோடு சொல்லுகிறேன்.

அதோடு மட்டும் அல்லாமல் தமிழகத்திலேயே இருக்கிற சாதாரணக் குடிமகன் முதல் நோபல் பரிசு பெற்று உலகப்புகழ் பெற்ற அன்னை தெரசா அவர்கள் வரை போற்றியுள்ள சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம், முதியோருக்கும், விதவையர்க்கும், உடல் ஊனமுற்றோருக்கும் உதவித் தொகை வழங்கும் திட்டம் ஆகியவைகளெல்லாம் மாபெரும் திட்டங்களாகும். தேர்தல் அறிக்கையிலே இல்லாத திட்டங்களையெல்லாம்கூட நிறைவேற்றியிருக்கும் அரசு இதய தெய்வம், புரட்சித் தலைவர் அரசு என்று மக்கள் பாராட்டுகிறார்கள். மக்களிடையே ஏற்பட்டிருக்கின்ற அந்த நன்றிப் பெருக்குத்தான், ஒவ்வொரு தேர்தலிலேயும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அசைக்க முடியாத ஒரு சக்தியாகத் தமிழகத்தில் ஆக்கியிருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் கேட்கிறேன். ஜனதா அரசு ஆட்சியிலே இருந்தபோது தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதுண்டா? திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியில் இருந்தபோது தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதுண்டா? முப்பது ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சியில் தேர்தல் வாக்குறுதிகள் முழுவதையும் நிறைவேற்றியிருக்கிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை. அந்தப் பெருமைகள் எல்லாம் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவரின் அரசுக்கு மட்டும்தான் உண்டு.

மக்களுக்கு இன்றியமையாத திட்டங்களை நிறைவேற்றும்போது மாநில அரசின் நிதி நிலையில் பற்றாக்குறை ஏற்படுகிறது. இந்தப் பற்றாக்குறை தவிர்க்கப்பட வேண்டுமானால் மைய அரசு பண வீக்கத்தையும், விலைவாசியையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கட்டுப்படுத்தி ஆகவேண்டும்.

மாநிலத் திட்டங்களுக்கு மைய அரசு தற்போது வழங்கி வருகிற இருபது சதவீத உதவித் தொகையைக் கணிசமாக உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 10] [திரு. ஆர். டி. கோபாலன்]

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு ரிக்கார்டு கிராப் என்று மைய அரசு பெருமைப்படுகிறது. அதே நேரத்தில் விலைவாசியைக் கட்டுப்படுத்தவும் இல்லை. தமிழகத்தில் விவசாயிகளுக்குக் கட்டுபடியான விலை கொடுக்கப்படவும் இல்லை.

தமிழகத்தில் உணவுத் தேவையைச் சமாளிப்பதற்காக ஒரு இலட்சம் டன் வேண்டுமென்று நாம் கேட்டால் 35,000 டன் உணவு தானியங்களைக் கொடுக்கிறது. நிலக்கரி இரண்டரை இலட்சம் டன் கேட்டால் ஒன்றரை இலட்சம் டன் நிலக்கரியைத்தான் கொடுக்கிறது. மைய அரசின் இந்த மனப்போக்கு மாறியாக வேண்டும். இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையிலும் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களைப் பொதுப் பங்கீடு முறையில், மலிவு விலையில் இந்த அரசு விநியோகம் செய்து வருகின்றது.

அதேபோன்று, ஆண்டு ஒன்றுக்கு பல கோடி ரூபாய்க்கு மின்சார இழப்பு ஏற்பட்டாலும், குறைந்த விலையில் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கி வருகிறது.

வரலாற்றிலேயே இடம் பெற இருக்கின்ற கிருஷ்ணா நதித் திட்டம் சென்னைப் பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க இருக்கிறது.

இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றும் நோக்கத்தோடுதான் இந்த அரசு சாதாரண மக்களை எந்த வகையிலும் பாதிக்காத வகையில், வணிகர்களுக்கும், அதிக சுமையில்லாத அளவில் வரி போட்டு இருக்கிறது. அத்துடன், வணிகர்கள் பயன் பெறுகின்ற அளவுக்கு வரிச் சலுகையும் அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பெருமையோடு இந்த நேரத்திலே கூறிக் கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன்.

என்னுடைய கம்பம் தொகுதியிலே, கோம்பையிலிருந்து ராமக்கல்மெட்டு மலைச்சாலை வழியாகச் செல்லும் பாதையில் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளை இன்னும் துரிதப்படுத்தி முடித்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த நான்கைந்து நாட்களாகப் பெருமழை பெய்ததன் காரணமாக, என்னுடைய கம்பம் தொகுதியில், இராயப்பன்பட்டியும், நாராயணத் தேவன் பட்டியும், கம்பம் நகரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த இடங்களில் தக்க நிவாரணங்களை உடனடியாக அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாற்றிலிருந்து பதினெட்டாம் கால்வாய்த் திட்டத்தை தொடங்கினால் பல்லாயிரக்கணக்கான ஏழை விவசாயிகள் பயன் பெறுவார்கள். எனவே, இந்த அரசு 18 ஆம் கால்வாய்த் திட்டத்தினை துவக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், குற்றாலத்திற்கு அடுத்தபடியாக, சுருளி நீர் வீழ்ச்சிதான் பிரசித்தி பெற்றதாக விளங்குகின்றது. எனவே, அதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்கித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உத்தமபாளையம் தாலுக்காவை தொழில் துறையில் பின் தங்கிய தாலுக்காவாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைக் கூறி அமர்கிறேன்.

**திரு. ஏ. சாகுல் ஹமீது :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய யூனியன் முஸ்லீம் கட்சியின் சார்பாக பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே, வெள்ளத்தின் காரணமாக குறிப்பாக நெல்லை மாவட்டம், மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் அதிகமான அளவிற்கு வெள்ளம் ஏற்பட்டு, அதன் காரணமாக அங்கே மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியாகிய கடையநல்லூர் பகுதி கைத்தறி நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதியாகும். அந்தக் கைத்தறி நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதியிலே ஏற்பட்ட பெருத்த மழை காரணமாக அவர்கள் தொழில் புரிகின்ற தறிக்குழி எல்லாம் தண்ணீர் தேங்கி அவர்கள் தொழில் புரிய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. கடந்த ஒரு வார காலமாக அவர்கள் தொழிலில் ஈடுபடவில்லை. அப்படி தொழில் கூட புரிய முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களையும், உணவுப்பொருள்களையும் வழங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மேலும் வெள்ளம் காரணமாக அவர்களால் தொழில் புரிய முடியாத நிலைமை இருப்பதால் தறிக்குழிகளிலே எல்லாம் சிமெண்ட் தொட்டி இறக்கி அதற்கு நிரந்தரமான ஒரு பரிகாரத்தைக் காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இது சம்பந்தமாக நான் ஒரு மனுவைக் கூட கொடுத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து பாசனத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் செய்யப்படவேண்டிய எத்தனையோ திட்டங்கள் குறித்து நாங்கள் பலமுறை மனு கொடுத்தும் அவை எல்லாம் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கின்றன என்பதை நான் மிகவும் வருத்தத்தோடும், வேதனையோடும் தெரிவித்துக் கொள்கிறேன். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 18 தொகுதிகள் இருக்கின்றன. அவற்றிலே 17 தொகுதிகளில் ஆளும் கட்சியும், அவர்களுடைய கூட்டணியும்தான் இருக்கின்றன. ஒரே ஒரு தொகுதியில் மட்டும் தான் எதிர்க்கட்சிகாரனாகிய நான் இருக்கிறேன். அப்படி ஒரே எதிர்க்கட்சித் தொகுதியாகிய என்னுடைய தொகுதியில் செய்ய வேண்டிய காரியங்கள் பற்றி பல முறை சொல்லியும் கூட அந்த வேலைகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கின்றன என்பதை வேதனையோடும், வருத்தத்தோடும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்திலே கடந்த 8 மாத காலங்களில் நாம் வறட்சியைச் சந்தித்திருக்கிறோம். இப்போது வெள்ளச் சேதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே ஆண்டவனுடைய கோபப் பார்வை இந்த அரசின் மீது விழுந்துவிட்டதோ என்ற ஐயப்பாடு ஏற்படுகின்றது. எங்கே அதர்ம ஆட்சி நடக்கின்றதோ அங்கே ஆண்டவன் சோதனை ஏற்படும் அது தான் ஆண்டவனின் நீதி என்று நாங்கள் நம்புகிறோம். ஆகவே என்னுடைய தொகுதியில் பல காரியங்கள் செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு இங்கே பல்வேறு பிரச்சினைகள் பற்றிப் பேசி இருக்கிறார்கள். ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா கொடுக்கப்பட்டிருப்பதாக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி எத்தனையோ விளம்பரங்களிலும், பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றது. ஆனால் கடையநல்லூர் தொகுதியினைப் பொறுத்தவரையில் இலத்தூர் பஞ்சாயத்து யூனியன் சித்ராபுரம் என்ற பகுதியில் வாழும் அரிசன தாழ்த்தப்பட்ட மக்கள் கடந்த 3 ஆண்டுக் காலமாக வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டும் என்று மனுச் செய்து வருகிறார்கள். அதுபற்றிக் கவனிக்கப்படாமல் அவர்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடையநல்லூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த ஊர் மேல் அழகியன் என்ற பகுதியிலே வாழ்கின்ற அரிசன மக்களும் வீட்டு மனைப்பட்டா கேட்டு பல்வேறு மனுக்களைக் கொடுத்தும், அதுவும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1984 மார்ச் 10

அடுத்து கடையநல்லூர் தொகுதியிலே வாழ்கின்ற மக்களுக்காக நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்துத் தரும்படி இந்த அரசுக்கு நான் நினைவுறுத்துகிறேன்.

தென்காசிப் பகுதியில் மூன்றுவாய்க்கால் என்ற பகுதியில் அரிசன மக்கள் இரண்டாயிரம் பேர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஒரு கூட்டுறவு பால் சொசைட்டி வேண்டும் என்று மனுசெய்தார்கள். அவர்களுக்கு அந்தக் கூட்டுறவு பால் சொசைட்டி இதுவரையில் வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பல்வேறு பிரச்சினைகள், - அரிசன சமுதாய மக்களின் பிரச்சினைகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டே வருகின்றன. சென்னையிலே கூட அவர்களுடைய விடுதியிலே சரியான வசதிகள் செய்து தரப்படாத காரணத்தினால் அவர்கள் எல்லாம் உண்ணாவிரதம் நடத்திக் காட்ட வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் காண்கிறோம். ஆகவே இந்த அரசு அரிசன சமுதாய மக்களுக்குப் புறம்பாக நடந்து கொண்டார்கள் என்று குற்றச்சாட்டு கூறவேண்டிய நிலைமை - இருக்கின்றது.

அடுத்து இப்போது நகராட்சி மற்றும் பஞ்சாயத்துத் தேர்தல்கள் பற்றி அறிவிப்பு வந்திருக்கின்றது. அது நடக்குமா நடக்காதா என்பதை நாம் அறிவோம். நகராட்சித் தேர்தலைப் பொறுத்தவரையில் எங்களுடைய சிறுபான்மைச் சமுதாய மக்கள் மூன்று, நான்கு முனிசிபாலிட்டிகளில்தான் வரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. பஞ்சாயத்துத் தலைவர்கள் என்ற அளவிலே, பார்த்தால் கூட கிட்டத்தட்ட 25 பேர்தான் வரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு மைனாரிட்டி சமுதாயம் நகராட்சித் தலைவராகவோ ஊராட்சி மன்றத் தலைவராகவோ எந்தப் பகுதியிலும் வர முடியாத அளவுக்கு இந்த அரசு அந்தச் சமுதாய மக்களுக்கு பெரிய ஒரு பாதகத்தை உருவாக்கி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முஸ்லீம் என்று எடுத்துக்கொண்டு பார்த்தால் உங்கள் மந்திரியில் கூட எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே நீங்கள் விரைவிலே தேர்தலை நடத்தினால் அவர்களுக்கும் கூட நகராட்சி, ஊராட்சித் தேர்தல்களின் மூலம் வருவதற்குரிய வாய்ப்பு கிடைக்கும் என்று கற்பனை பண்ணிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் அவர்களுடைய கற்பனைகளை எல்லாம் உடைத்து தூளாக்குகின்ற நிலைமையை ஆய்வுசெய்து ஏற்படுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஊராட்சி மன்றத் தேர்தலிலும், நகராட்சி மன்றத் தேர்தலிலும் - வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.



1984 மார்ச் 10] [திரு. ஏ. சாகுல் ஹமீது

(முற்பகல் 11-40)

அது மட்டுமல்ல. இன்றைக்கு ஹஜ் யாத்ரிகர்களுக்கு ஒரு ஹஜ் இல்லம் கட்டித் தரப்படும் என்று பல்வேறு வாக்குறுதிகள் தரப்பட்டு, அதற்காக $8\frac{1}{2}$ கிரவுண்டு இடமும் அரசு வழங்கியது. ஆனால், அரசு வழங்கியதற்குப் பிறகு இந்து மதத்தைச் சேர்ந்தவர் கோர்ட்டிலே ரிட் மனு கொடுத்தார். அந்த ரிட் மனு விசாரிக்கப்பட்டு தள்ளப்பட்டது. அதற்குப் பிறகு மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்படுகிறது. அப்பீல் செய்யப்பட்ட நேரத்திலே அரசு அந்த வழக்கை வாபஸ் வாங்குகிறது. நீங்கள் விளம்பரம் செய்கிறீர்களே, இந்த மைனாரிட்டி மக்களுக்கு இந்த அரசு சலுகை அளிக்கிறது என்று. விளம்பரத்திலேதான் இந்த அரசு சொல்கிறதே தவிர, ஹஜ் யாத்ரீகர்களுக்கு அந்தக் கட்டிடம் வழங்கப்படவில்லையென்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. அரசினுடைய துறையிலே பணியாற்றுகின்ற இஸ்லாமிய சகோதரர்கள், அதிகாரிகள், தங்களுடைய மார்க்கக் கடமையாகிய 'ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காகச் செல்கின்ற பொழுது, அவர்களிடம் ரூ. 30,000-க்கு பான்ட் எழுதியவை என்று சொல்கிறீர்கள். என்ன நியாயம்? அவர்கள் தங்களுடைய மார்க்கக் கடமையை நிறைவேற்றுவதற்கு விடுமுறை பெற்றுக்கொண்டு, அரசினுடைய அனுமதி பெற்றுக்கொண்டு செல்கின்ற நேரத்திலே ரூ. 30,000-க்கு பான்ட் எழுதி வாங்க வேண்டியது அவசியம் என்று இருப்பது அறிந்து நான் வருத்தபபடுகிறேன்.

அது மட்டுமல்ல, இன்று அரசுத் துறையிலே எத்தனையோ அதிகாரிகளுடைய புரமோஷன்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் வெளியே சொல்ல முடியவில்லை. அப்படிச் சொன்னால் எங்கே தங்கள் மீது நடவடிக்கை எடுத்து விடுவார்களோ என்று அவர்கள் தங்களுடைய பதவி உயர்வை இழந்து மனம் வெதும்பி இருக்கிறார்கள். உங்களிடம் புள்ளி விவரத்தைத் தருகிறார்கள் என்றாலும் பெயரைச் சொல்ல மறுக்கிறார்கள். காரணம் பழி வாங்கப்படுவோம் என்று அஞ்சுகிறார்கள். அதே மாதிரி வேலை வாய்ப்புத் துறையை எடுத்துக் கொண்டால் அப்படித்தான். நீங்கள் மெடிக்கல் காலேஜை எடுத்துக் கொண்டாலும் பொறியியல் கல்லூரியை எடுத்துக் கொண்டாலும் உரிய சதவீதம் கொடுக்கப்படவில்லை. பேரறிஞர் அண்ணா காலத்திலே வழங்கிய அந்தச் சலுகை கூட நம்முடைய அ. இ. அ. தி. மு. க. ஆட்சியிலே இல்லையென்று சொல்கிறபொழுது இந்தச் சமுதாயத்திற்கு நாங்கள் அதைச் செய்தோம் இதைச் செய்தோம் என்று விளம்பரப்படுத்துகிறீர்களே தவிர, நீங்கள் அவற்றையெல்லாம்

செய்தீர்களா ? ஆனால் நீங்கள் சொல்லலாம், உலகமக்களுக்கு ரூ. 250 தருகிறோம் என்று. ரூ. 250 தருவதை பெரிய சாதனை என்று குறிப்பிட்டால் இன்றைக்கு அதன் காரணமாக மற்ற உரிமைகள் எல்லாம், சலுகைகள் எல்லாம் இந்தச் சமுதாயத்திற்குப் புறக்கணிக்கப்பட்டு வருவது நியாயமா என்று இந்த நேரத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ கே. அவர்கள் தன்னுடைய தொகுதியிலே 110 பேர்களுக்கு வழங்கியதாகச் சொன்னார்கள். வரவேற்கிறேன். ஆனால், அவருடைய தொகுதியில் 110 பேர்களுக்குப் பட்டா வழங்கினால் போதுமா? இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற மைனாரிட்டி மக்களுக்கு நீங்கள் வழங்கவேண்டாமா ? தன்னுடைய தொகுதியை அவர் தக்க வைத்துக்கொள்ள வேண்டும். தன்னுடைய தொகுதிக்கு அதைச் செய்கிறார்கள், அது சரி தான். ஆனால் தமிழகத்திலே இருக்கிற எத்தனை பேர்களுக்கு நீங்கள் சலுகை அளித்து விட்டீர்கள் ? எத்தனை பேர்களுக்கு நீங்கள் பட்டா கொடுத்து விட்டீர்கள்? என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. டாக்டர் அஜ்மல்கான் பெயரில் ஒரு வழக்கு வந்து அதை விசாரிக்க திரு. திரவியம் கமிஷன் போட்டு அது விசாரணையை முடித்து, அந்த விசாரணையை அப்படியே அமுக்கி விட்டீர்களே ஏன்? அந்த விசாரணை அறிக்கை இந்த மக்கள் மன்றத்திலே, அவையிலே வைக்கப்படவில்லை. அந்த விசாரணையின் தீர்ப்பு இந்த அரசுக்குப் பாதகமாக இருக்கும் என்ற காரணத்தாலே தான் நீங்கள் அந்த திரவியம் கமிஷன் ரிப்போர்ட்டை அழுத்தி விட்டீர்களா ? இது நியாயமா ? நாங்கள் அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று சொல்கிறீர்களே, இது நியாயமா? என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. கடந்த 5 ஆண்டுகளாகத் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்ட இந்தச் சமுதாயப் பிரச்சினைகளைச் சிந்திக்காமல் நாங்கள் ஷேக் தம்பி பாவலருக்கு நினைவுக் கூடம் கட்டப் போகிறோம், எட்டயபுரத்திலே சீறாப்புராணம் பாடிய உமறுப் புலவருக்கு நினைவு மண்டபம் எழுப்புகிறோம் என்று சொல்கிறீர்கள். விளம்பரப்படுத்துகிறீர்கள். திருச்செந்தூர் தேர்தலிலே எத்தனை விளம்பரம் போட்டீர்கள். ஹஜ் யாத்திரீகர்களுக்கு கட்டிடம் கட்டி விட்டதாக, எட்டயபுரத்திலே உமறுப் புலவருக்கு நினைவு கட்டிடம் எழுப்பி விட்டதாக, கோட்டாறிலே ஷேக் தம்பி பாவலருக்கு நினைவு மண்டபம்



எழுப்பி விட்டதாக எல்லாம் விளம்பரத்தின் மூலம் நீங்கள் இந்தச் சமுதாயத்தை ஏமாற்றி விடலாம் என்று நினைக்கிறீர்களா ? நிச்சயமாக ஏமாறப் போவது அ. இ. அ. தி. மு.க. அரசு என்பதை நான் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

உங்கள் சாதனைகளை நீங்கள் விளம்பரப்படுத்தினாலும், மக்கள் நினைவிலே வைத்திருக்கிறார்கள். நெஞ்சிலே வைத்திருக்கிறார்கள், நேரம் வருகின்ற போது நிச்சயம் நிரூபித்துக் காட்டுவார்கள் என்று இந்த அரசுக்குச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, நம்முடைய புளியங்குடியிலே கலவரம் நடந்தது, இராமநாதபுரத்திலே கலவரம் நடந்தது, மதுரை பக்கத்திலே சொக்கநாதன் பட்டியிலே கலவரம் நடந்தது. இன்றைக்கு புளியங்குடி, முத்துப் பேட்டை, காயல்பட்டினம் போன்ற இடங்களிலே எல்லாம் இந்தச் சமுதாயம் எந்த அளவுக்குக் காவல் துறையினரால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் நான் பல்வேறு சமயங்களிலே இங்கே சுட்டிக் காட்டி இருக்கிறேன். ஆனால், மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு திரு. காளிமுத்து அவர்கள் நேற்று நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில், இந்த எம். ஜி. ஆர். அரசு இஸ்லாமியர்களுக்கு அரணாக, பாதுகாப்பாக இருக்கிறது என்று கூறினார்கள். எப்படி நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்பதை சமுதாயத்தினர் உணர்ந்திருக்கின்றனர். இன்றைக்குப் புளியங்குடியிலே எத்தனை பொய் கேஸ்கள், வழககுகள் போட்டிருக்கிறார்கள். இன்றைக்குக் கோர்ட்டிலே எத்தனை வழக்குகளைத் தொடுத்தார்கள் ? அந்த வ க்குகள் பொய் என்று கோர்ட்டே தீர்ப்பளித்திருக்கிறது. அதே போன்று அரிசன சமுதாயத்தினரையும் முஸ்லீம் சமுதாயத்தினரையும் சேர்த்து வழக்கு போட்டார்கள். அந்த வழக்கில் கூட கோர்ட் பொய் என்று தீர்ப்பளித்திருக்கிறது. காவல் துறை அதிகாரிகள் போட்ட வழக்குகள் பொய் வழக்குகள் என்று கோர்ட்டே தீர்ப்பளித்திருக்கிறது. ஆக, இந்தச் சமுதாயததிற்கு அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று சொல்கிறீர்களே, உண்மையிலே, அவர்களுடைய உரிமைகளை மறுக்கிறீர்கள், அவர்களுடைய குரலை நசுக்குகிறீர்கள். இந்தச் சட்டமன்றத்தில் நான் ஏதோ ஒருவன் உட்கார்ந்து கொண்டு ஏதோ சமுதாயம் என்று நான் ஒருவன் பேசிக் கொண்டே இருக்கிறேன் என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்றால் நான் மட்டும் அல்ல சமுதாயம்.

தமிழகத்திலே இருக்கிற ஒட்டு மொத்தமான இந்த சமுதாயம் நிச்சயமாக விடிவினை பெற்றுத்தான் தீரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். போன சட்டமன்

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1984 மார்ச் 10

றத்திலே குண்டா சட்டம் கொண்டு வந்தீர்கள். இந்தக் கறுப்புச் சட்டம் கொண்டு வந்ததின் காரணமாக மற்றவர்கள் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றும், குற்றவாளிகள் மட்டும் தான் பாதிக்கப்படுவார்கள் என்றும் அப்போது சொன்னீர்கள். அந்த வகையிலே வாக்குறுதி கொடுத்தீர்கள். ஆனால் என்ன நடந்தது ? இராமநாதபுரம் மாவட்டத்தில் தன்னிச்சையாக இஸ்லாமிய மதத்திற்கு மாறினார்கள் என்பதற்காக மூன்று பேர்களை குண்டா ஆக்ட்டிலே கைது செய்தீர்கள். அந்த மக்களுடைய பல்வேறு ஊர்களுக்கும் சென்று போலீசை வைத்து கொடுமைப் படுத்தினீர்கள். அதையெல்லாம் நாங்கள் ஐந்து கட்சி உறுப்பினர்கள் சென்று பார்த்து இந்த அரசிற்கு அறிக்கை அனுப்பி இருக்கிறோம்.. அந்த அறிக்கையிலே மற்ற சக கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கே எந்தச்சம்பவமும் நடைபெறவில்லை. எந்தச் சமுதாயங்களுக்கிடையேயும் சண்டை சச்சரவு இல்லை. போலீஸ் தான் கொடுமைப்படுத்துயது என்று தெளிவாக ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இந்தச் சமுதாயத்தை குண்டா ஆக்ட்டின் மூலம் அல்லது பாதுகாப்புச் சட்டத்தின் மூலம், அல்லது போலீஸ் மூலம் அடக்கி விடலாம் என்று நினைத்தால் அது நடக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குப்பல்வேறு பிரச்சினைகளில் இந்த அரசு இஸ்லாமியர்களைப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறது. போன சட்டமன்றக் கூட்டத்திலும் இதை நான் சொன்னேன். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு காவல் துறையில் உயர் மட்ட அதிகாரிகள் பதவி எத்தனை பேர்களுக்கு கொடுத்திருக்கிறீர்கள் ? மாவட்டங்களில் எத்தனை பேர்களுக்கு கலெக்டர் பதவி இந்தச் சமுதாயத்தினருக்கு கொடுத்திருக்கிறீர்கள் ? ஒரு கலெக்டர் கூட இல்லை. ஆனால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? போலீஸ் துறையிலே திரு. டி.டி.பி. அப்துல்லா அவர்களை மட்டும் போட்டு விட்டால் அந்த இலாக்காவிலே இந்தச் சமுதாயத்தினர் அத்தனை பேருக்கும் கொடுத்து விட்டதாக நினைக்கிறீர்களா ? இந்த அமைச்சரவையில் சகோதரர் யூசுப் அவர்களை சேர்த்து விட்டதால் இந்தச் சமுதாயத்தினர் அத்தனை பேருக்கும் கொடுத்து விட்டதாக நினைக்கிறீர்களா ? அல்லது உயர் மட்டத்திலே ஒரு முஸ்லீம் அதிகாரியை வைத்துக் கொண்டு அந்த அதிகாரியின் காரணமாக இந்தச் சமுதாயம் எல்லா நன்மைகளையும் பெற்று விட்டது என்று நினைக்கிறீர்களா ? நான் கேட்டுக் கொள்வது, இந்தச் சமுதாயத்தினருக்கு நீதி வழங்குங்கள். நியாயத்திற்குப் புறம்பாக சலுகை அளிக்க வேண்டாம். அதிகமான சலுகையும் அளிக்க வேண்டாம். நியாயமான சலுகை அளியுங்கள்.. அவர்களில் படித்தவர்கள் தகுதி உள்ளவர்கள் இல்லையா ? அவர்களை புறக்கணித்து விட்டு மற்றவர்களுக்கு பதவி உயர்வு தருவது நியாயம் தானா ? இதெல்லாம் உங்களை தேர்தல் நேரத்தில் பாதிக்காதா என்பதை சிந்தித்து பார்க்க கடமைப் பட்டிருக்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



[1984 மார்ச் 10 (திரு. ஏ. சாகுல் ஹமீது)

இன்றைக்குச் சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்குக்குறைந்து போயிருக்கிறது என்பதை நான் பல சமயங்களில் இங்கே சொல்லி இருக்கிறேன். இந்தச் சமுதாயத்தினருடைய உரிமைகளையும், கோரிக்கைகளையும் நீங்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் எத்தனையோ நல்ல திட்டங்களை நான் மாவட்ட அதிகாரிகளுக்கு சொல்லி இருக்கிறேன். இந்த மன்றத்திலேயே கூட அவைகளை நான் எடுத்துத் தெரிவித்து இருக்கிறேன். அவைகள் அத்தனையும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. மூர்த்தி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய நிதிநிலை அறிக்கை விவாதத்தில் இந்தியக் குடியரசு கட்சியின் சார்பாக பேச அனுமதி தந்தமைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டுதோறும் இந்த நிதிநிலை அறிக்கையின் மீது கொள்கைப் பிரச்னை எழுப்புகிற நேரத்திலே இந்த அரசு மத்திய, மாநில உறவுகளை வலியுறுத்தாமல் இருந்ததில்லை. அதன் அடிப்படையிலே மத்திய மாநில உறவுகளை வலியுறுத்தி மாநிலங்களுக்கு அதிக அதிகாரமும், மத்திய அரசின் மூலம் கிடைக்கக்கூடிய அதிகாரத்தை வலிவாகப் பெற்று மாநிலத்திலே ஒரு தன்னிறைவு ஆட்சி ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசு காட்டுகிற அக்கரையை இன்றைக்கு மத்திய அரசு உணர்ந்திருக்கிறது. அதன் அடிப்படையிலே தான் இதற்குண்டான கொள்கை வரையறைகளை வரைந்தறிய இதற்கு ஒரு குழு அமைந்திருப்பதை இந்த நாடே வரவேற்றுக் கொண்டிருக்கிறது. இந்திய குடியரசு கட்சியைப் பொறுத்தவரையில் மத்திய, மாநில உறவுகளிலே ஏற்பட்டிருக்கிற ஒரு சில மாறுதல்களை, மாநிலங்கள் கட்டாயம் பெற்றாகவேண்டிய சில உரிமைகளை எடுத்துரைப்பது எனது கடமையென்று கருதுகிறேன். மாநிலங்களைப் பாதிக்கக்கூடிய, அதனுடைய வளர்ச்சிக்கு தடையாக இருக்கக்கூடிய எந்தப் பிரிவையும் சட்டத்திருத்தத்தின் மூலம் கொண்டு வந்து, இந்த மாநிலத்தினுடைய தன்னிறைவு ஆட்சிக்கு வழி வகுக்கிற அளவிற்கு, மத்திய அரசு அதனை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். மாநிலங்களுக்கு சுயாட்சி தருவதன் மூலமாக மாநிலங்களில் இருக்கிற ஏழை, எளிய மக்களுடைய நல் வாழ்விற்கும், தொழில் வளர்ச்சிக்கும் மிகவும் உறுதுணையாக இருக்கிற சட்ட திருத்தங்களை இந்த மாநில அரசு முன்மொழிய வேண்டும். அதற்காக இந்தச் சட்டமன்றத்திலே கூட ஒரு விவாதத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்

திலே கேட்டுக்கொள்கிறேன். எந்தெந்தப் பிரிவுகளுக்கு எந்
தெந்த உரிமைகளுக்கு நாம் திருத்தத்தைத் தருகிறோம்
என்பதைக் கூட இந்த அவையின் மூலம் விவாதித்து மத்திய
அரசுக்கு அனுப்பவேண்டும் என்று இந்த நேரத்தில் நான்
வேண்டுகோளை வைக்கிறேன்.

(முற்பகல் 11-50)

அதே நேரத்தில் ஒரு வலுவான மைய அரசு வேண்டும்
என்பதை நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். மாநிலங்
களுக்கு மாநிலம் கொள்கை ரீதியில், கலாச்சார ரீதியில் மாறு
பட்டிருக்கும் நேரத்தில் மாநிலங்கள் அதிக அதிகாரம் பெற்று
விளங்குகிற நேரத்தில் மத்தியில் நிலையான, உறுதியான அரசு
அமைக்க அந்தச் சட்டம் வழி வகை செய்கின்ற வகையிலும்
மாநில அரசு பரிந்துரைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

பொதுவாகவே, 10,15 ஆண்டுகாலமாக இந்திய அரசியல்
சட்டத்திலே திருத்தம் கொண்டு வரவேண்டும், திருத்தவேண்டும்
அந்தச் சட்டத்தை மாற்றவேண்டும், என்று சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் அந்தச் சட்டத்தையே
கிழித்தெறியவேண்டும், கொளுத்தவேண்டும், அது உதவாக்
கரைச் சட்டம் என்று கூட சொல்கிறார்கள். பல பேர்
அதற்காக போராட்டங்களை நடத்திக்கொண்டு இருக்
கிறார்கள். ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். சில
இயக்கங்கள் அதைத் தன்னுடைய கொள்கையாகவே வைத்துக்
கொண்டு இருக்கின்றன. இந்திய நாட்டைப் பொறுத்த
வரையில், ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது.

எவ்வளவுதான் சிறப்பான சட்டத்தை இந்திய சர்க்கார்
கையிலே வைத்து இருந்தாலும், எவ்வளவு சிறப்புமிக்க கொள்
கைகளை அதன் உள்ளே அடக்கி வைத்திருந்தாலும், அதைக்
கையாளுகின்ற மனப்பக்குவத்தின் அடிப்படையிலேதான் அந்த
சட்டத்தினுடைய தன்மைகள் அமைந்து விடுகின்றனவே தவிர சட்டம்
இருக்கிறது என்பதாலேயே பிரச்னைகள் அந்தச் சட்டத்தின்
மூலம் தீர்ந்துவிடுகிற நிலைமையிலே இந்திய நாட்டிலே நம்
மாலே காணமுடியவில்லை. இந்தச் சட்டத்தை உருவாக்கி,
இந்தச் சட்டத்தைப் பாராளுமன்றத்திலே அளித்து, அந்தச்
சட்டத்திலே இருக்கின்ற நுணுக்கமான கருத்துக்களை எடுத்
துரைத்து, இந்திய நாட்டிற்கு அறிவுரை சொல்லும் அளவிலே
அந்தச் சட்டத்தின் தந்தையாக விளங்கிய டாக்டர் அம்பேத்
கார் அவர்கள் அந்தச் சட்டத்தைப் பாராளுமன்றத்திலே
அளிக்கிறபோது சொன்னார்கள்.

"However good a Constitution may be it is certainly tend to be a bad lot to those who happen to be a bad lot. However bad a constitution may be it is certainly tend to be a good lot to those who happen to be a good lot."





இந்தச் சட்டம் எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும், சிறந்த பிரிவுகளை உள்ளடக்கி இருந்தாலும், அல்லது வலு விழந்த பிரிவுகளை வைத்துள்ளதாக இருந்தாலும், இது நன்மையான முறையில் செயல்படுவதோ அல்லது சிறப்பான முறையில் செயல்படுவதோ அல்லது இந்த நாட்டுக்கு கேடு விளைவிக்கும் முறையில் மாறுவதோ அது இந்தச் சட்டத்தைக் கையாளுகின்ற ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற, ஆட்சிப் பொறுப்பிலே இருந்து இந்த நாட்டு மக்களுடைய கருத்தை நோக்குகின்ற அந்த ஆட்சியின் மனப்போக்கைப் பொறுத்துத் தான் இந்தச் சட்டத்தின் நன்மை தீமை அமைகின்றது. இந்த நாட்டை ஆளுகின்ற மைய அரசை ஆளுகின்ற அந்த நிர்வாகி களுக்கு ஆட்சியாளர்களுக்கு அவர் இப்படிப்பட்ட எச்சரிக் கையை விடுத்தார். இந்தச் சட்டத்தைப் உளப்பூர்வமாக நிறைவேற்றி ஏழை மக்களுக்கு நல்வாழ்வு தருகின்ற வகையில் உங்களுடைய எண்ணங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள் என்றும் சொன்னார்.

கடைசியாகக் கூட அவர்கள் வாழ்ந்த காலத்தில் இந்தச் சட்டம் தாறுமாறான விளைவுகளை ஏற்படுத்திய நேரத்தில் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த நாடு முன்னேற்றம் அடைவதற்காக, இந்த நாட்டினுடைய பல்வேறு கலாச்சாரம் ஒன்று சேர்ந்து, ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை உரு வாக்குவதற்காக அமைக்கப்பட்ட சட்டம் ஒரு மிகப்பெரிய நாட்டிற்கு வழிகாட்டியாக இருக்கும் சட்டம் கோயிலாக அமையுமென்று எண்ணி இந்தச் சட்டத்தை நான் ஒப்படைத் தேன். ஆனால், அந்த ஆட்சிக்குள் இன்றைக்கு சாத்தானும் கோட்டானும் நுழைந்து விட்டது என்று அன்றைய ஆட்சி யாளர்களைப் பார்த்து அவர்கள் குறைபட்டுச் சொன்னார்கள். இந்தச் சட்டத்தைக் கிழித்தெறிவதற்கு வாய்ப்புக் கிடைக்கு மானால் நானே அந்தச் சட்டத்தை முதலில் கிழித்து எறிவேன் என்று சொன்னார்கள். இந்த நாட்டிலே இருக்கின்ற மக்க ளுக்கு நன்மையோ தீமையோ, அல்லது ஏழை எளிய மக்க ளுடைய பொருளாதார சமுதாய மாறுபாட்டிற்கு வழிவகை செய்வதோ இந்தச் சட்டத்தின் மூலமாகத்தான் செயலாற்ற முடியும். அதற்கு இந்தச் சட்டத்தில் எந்தவிதத்திலும் தடையில்லை. ஆனால் ஆட்சியாளர்களின் மனநிலை தான் இதிலே ஓட்டைகளைக் கண்டுபிடிப்பதாக இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் மத்திய மாநில உறவுகளை நிர்ணயிக்கின்ற விதத்தில் மாநிலங் களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் வலுவான ஒரு மைய அரசு வேண்டுமென்ற கோரிக் கையை இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன்.

[திரு. ஜி. மூர்த்தி] ]1984 மார்ச் 10

இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் வகையில் அடித்தள மக்களுக்கு வாழ வகை செய்யும் வகையில் இந்த அரசு தன்னுடைய சிந்தனையை செலுத்தியிருக்கிறது. அடித்தளத்திலே வாழுகின்ற மக்களுக்கு, நிலமற்ற விவசாயிகளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில்இந்த அரசு தன்னுடைய சிந்தனையைச்செலுத்தி இருப்பதை இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அந்த அடிப்படையிலேதான் கிராமப் பொருளாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும், கிராமத்திலுள்ள ஏழை எளிய மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற வகையில் நாம் நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். நிலங்களைப் பிரித்தாகவேண்டும். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டி கொண்டு வரப்பட்ட சட்டங்களை அமுல்படுத்தி அவற்றின் மூலம் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை உண்மையான நிலமற்ற விவசாயிகளுக்கு பிரித்துக் கொடுக்கும் வகையிலே இந்த அரசு தன்னுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும், அப்படிப்பட்ட, நிலமல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கின்ற நேரத்தில் ஏழை கூலி விவசாயிகளுக்கு அந்த நிலம் போய்ச் சேருகின்ற வகையில் வழிவகைகளை வகுத்தாக வேண்டும்.

அப்படி கையகப்படுத்தப்பட்ட நிலங்களை எந்த மக்களுக்கு உண்மையாக அந்த நிலம் போய்ச் சேரவேண்டுமோ அந்த மக்களுக்குப் போய்ச் சேருகின்ற வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த வகையிலே கையகப்படுத்தும் ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல இடங்களிலே 2சி புறம்போக்கு நிலம் இருக்கிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலே கூட 2சி புறம்போக்கு நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும்தான் ஒதுக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் இன்றைக்கு மத்திய, மாநில அரசுகள் இதிலே போதுமான கவனம் செலுத்தவில்லை. இனிமேலாவது அவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக, தமிழ்நாட்டிலே மூலை முடுக்குகளில் இருக்கிற, கிராமப்புறங்களில் இருக்கிற 2சி புறம்போக்கு நிலங்களைக் கண்டறிந்து, அந்த கையகப்படுத்தி, நிலமற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்க வேண்டும். பல்வேறு மாநிலங்களில் இப்படி 2சி புறம்போக்கு நிலங்களை கையகப்படுத்தியிருக்கிறார்கள். கர்நாடக மாநிலத்தில் கூட ஒரு தீர்மானத்தை இதற்காக நிறைவேற்றியிருக்கிறார்கள்.



1984 மார்ச் 10] [திரு. ஜி. மூர்த்தி]

நீண்ட நெடுங்காலமாகவே, 2சி புறம்போக்கு நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதவர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள் அந்தக் காலத்திலிருந்தே மணியக்காரர், கணக்கர் போன்றவர்கள் 2சி புறம்போக்கு நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாத மற்ற ஜாதிக்காரர்களுக்கு பட்டா வழங்க ஏற்பாடு செய்துகொடுத்திருக்கிறார்கள். அது சட்டப்படி செல்லுபடியாகாது. அதை தெளிவாக ஆராய்ந்து கண்டறிய ஆள் இல்லாத காரணத்தால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த நிலம் எங்கே இருக்கிறது என்று தெரியாத காரணத்தால், மற்ற ஜாதிக்காரர்களுக்கு அந்த நிலப் போயிருக்கிறது. இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் தேவையை உணர்ந்திருக்கிற நம்முடைய அரசு அந்த 2சி புறம்போக்கு நிலங்களை எல்லாம் கையகப்படுத்தி, தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதவர்கள் அந்த நிலங்களில் இருந்தால் அவர்களை சட்டம் போட்டு வெளியேற்றி, கையகப்படுத்திய நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பெருமழை பெய்து, பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது நம்முடைய தமிழ் நாட்டில். ஏழை எளிய விவசாயிகள், சிறு விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கடன்கள், நிலவரி போன்றவைகளை ஒத்திவைத்தும், சிலருக்கு தள்ளுபடி செய்தும் இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகளுக்கு அது ஒரு மாமருந்தாக இருந்தாலும் இன்னும் பல இடங்களில் கடனாளியாக இருக்கிற ஏழை எளிய விவசாயிகளின் குறைந்த கடன் தொகைகளைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 5,000 ரூபாய் 10,000 ரூபாய் அளவுக்கான கடனையாவது நம்முடைய அரசு முழுமையாக ரத்து செய்துஅவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இன்றைக்குக் கூட்டுறவு அமைப்புகள் மூலம் மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. ஏழை எளிய மக்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் வந்த பிறகு நல்ல பல முன்னேற்றங்களை, பல மாற்றங்களைக் கண்டு கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறமக்களின்வாழ்க்கையை பொறுத்தவரையில் இது ஒரு முக்கியமான திட்டம். எனவே அரசாங்கம் இரண்டு, மூன்று ரெவின்யூ வில்லேஜ்களை ஒன்றாக இணைத்து, அங்கே அரசாங்கமே கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, அதிலே தாழ்த்தப்பட்ட மக்களை, ஏழை எளிய மக்களை சேர்த்து கூட்டுறவு அமைப்பின் கீழ் வரமுடியாமல் இருக்கிற அந்த மக்களை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர வேண்டும். அந்த மக்கள் கூட்டுறவுச் சங்கத்தில் சேருவதற்கு செலுத்த வேண்டிய பணத்தை அரசாங்கம் மானியமாக வழங்க வேண்டும்.

எல்லா மக்களும் கூட்டுறவு அமைப்பின் நன்மைகளை அனுபவிக்க நான் ஏற்கெனவே சொன்னதுப்போல 2, 3 ரெவின்யூ வில்லேஜ்களை ஒன்றாகச் சேர்த்து, கூட்டுறவு சங்கத்தை ஏற்படுத்தி, ஏழை எளிய மக்கள் செலுத்த வேண்டிய தொகையை அரசாங்கமே சப்சிடியாகக் கொடுத்து, எல்லா மக்களையும் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் வீட்டு வசதி இருக்கிறது. அதைப்போன்று மாவட்டத் தலைமையிடங்களிலும் இருக்கிறது. இந்தத் திட்டத்தை நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லி, அமைச்சர் அவர்கள் அதற்கு ஒப்புதல் அளித்து, இன்றைக்கு நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் வீடு கட்டும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கேயிருக்கின்ற கூலி விவசாயிகள், சாதாரண வேலை செய்கின்ற சிப்பந்திகள் எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்கின்ற வகையில் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, இந்த அரசு தன்னுடைய பணிகளை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கிராமங்களில் வீடு கட்ட 4,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதில் ஆயிரம ரூபாய் மானியமாக கொடுக்கப்படுகிறது. இந்தக் கடன் தொகை 7, 8 மாதங்களாக பணம் இல்லாத காரணத்தால் வழங்கப்படாமல் நிறுத்தி வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த நிலையை மாற்றி, இந்த நிதிநிலை அறிக்கையில் அதிகமான பணத்தை ஒதுக்கி, ஏற்கெனவே நிறுத்தி வைத்திருக்கிற வீடுகளுக்கும், புதிதாக கட்டுகின்ற வீடுகளுக்கும் தாராளமாக கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புற மக்களுக்கு இது ஒரு நல்ல திட்டம், முக்கியமான திட்டம் என்பதால் இந்த அரசு இந்த பணியிலே தன்னை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக்காக நாம் பல கோடி ரூபாயை செலவு செய்து வந்தாலும் இன்றைக்குக்கூட பல இடங்களில் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் இல்லை. என்னுடைய தொகுதியிலே கூட மேல்பட்டு என்ற இடத்தில் இருக்கிற உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் இல்லை. பொதுமக்களிடமிருந்து பெற்றப் பணத்தில் கட்டிடம் கட்டப்பட்டது. அது பூர்த்தியாகாமல் பாதியில் நிற்கிறது. காற்று, மழையினால் இருப்பதும் சேதமாகிக்கொண்டிருக்கிறது.



எனவே, நம்முடைய அரசு உடனடியாக தேவையான பணத்தை ஒதுக்கி, மேல்பட்டிலிருக்கிற அந்த உயர்நிலைப் பள்ளிக்கு நல்ல கட்டிடத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

இன்றைக்கு அரசு புதிதாக ஒரு ஆணையை பிறப்பித்திருக்கிறது. அதாவது 90 விழுக்காடு மாணவர்கள் பள்ளிக்கு வருகை தந்தால்தான் அவர்களை பரீட்சை எழுத அனுமதிப்போம் என்று ஆணைப் பிறபித்திருக்கிறார்கள்.

(நண்பகல் 12-00)

நான் இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது, 90 சதவீதம் என்பது பொதுவான அடிப்படையிலே இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, முன்பு இருந்ததைப் போல 75 சதவீதம், அவர்கள் பள்ளிக்கு, கல்லூரிக்கு சென்றாலே அவர்களுக்குத் தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரம் அல்ல, 75 சதவீதம் வந்தாலே அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 90 லிருந்து 75 சதவீதத்திற்கு பரிந்துரை செய்து, அதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களுக்காக பல இடங்களில் நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்று வரை நில ஆர்ஜிதக் செய் கிறார்கள். 5, 10 ஆண்டு நில ஆர்ஜிதக் கணக்கைட் பார்த்தால் நில ஆர்ஜிதம 10, 15 சதவீதம் கூட வருவதில்லை. இதில் அரசின் தயக்கம் என்று சொல்லவில்லை, அல்லது அதிகாரி களுடைய தயக்கம் என்றுகூட சொல்லத் தயாராகயில்லை. ஆனால் நாம வைத்திருக்கிற நில ஆர்ஜிதம் கொள்கையினால் நிலங்களை நாம் கையகப்படுத்த முடியவில்லை. நாம் வைத் திருக்கிற நில ஆர்ஜிதக் கொள்கைப்படி, தனியார் நிலச் சொந்தக்காரர்கள், கோர்ட்டிற்குச் சென்று தடை வாங்குகிறார் கள். அவர்கள் தடை வாங்கமுடியாத அளவிற்கு நில ஆர்ஜிதச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும. ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு, ஹவுசிங் போர்டுகளுக்காக நில ஆர்ஜிதம் செய்வது போல நிலங்களை ஆர்ஜிதம் செய்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கும ஒழுங்காகக் கிடைக்கும் வகையில் கொள்கைகளைப் பின்னற்ற வேண்டும்.

தாட்கோ மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதே போல கிராமப் புறங்களிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வீட்டுவசதி அளிக்கவேண்டும். ஸ்லம் கிளியரன்ஸ் போர்டுகள் தாலுக்கா

வாரியாக இல்லாவிட்டாலும், குறைந்தபட்சம் ஒரு மாவட்ட வாரியாக குடிசைமாற்று வாரியத்தின் பணிகளை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக சென்னையிலே மட்டும் இன்று குடிசைகள் இருக்கின்றன என்று யாரும் எண்ணவேண்டாம். கிராமப்புறங்களிலே இருக்கின்ற குடிசைப்களைப் பற்றியும் கவலைப்பட்டாக வேண்டும். குடிசை வாழ் மக்களுக்கு நிவாரணம் தருகிற விதத்திலே அந்தக் குடிசை மாற்று வாரியத்தை மாவட்ட அளவில் விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடன் உதவி கூட்டுறவு அமைப்பிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கடனுதவி அளித்து, மூலதனத்தினை அரசே கொடுத்து, தொழில் துவங்குவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லெதர் டெக்னலாஜியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் திறமைசாலிகள். அவர்கள் பல்வேறு மாவட்டங்களிலே இருக்கிறார்கள். அவர்கள் தனியாக தொழில் தொடங்க, அரசே மூல தனம் கொடுத்து அவர்களை பங்குதாரர்களாகச் சேர்த்து அந்த மக்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்பிலே கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக அவர்களுக்கு இன்டெர்வியூ வருகிறது. பெயர் பதவி அடிப்படையிலே சீனியாரிட்டி என்ற முறையில் ஆண்டுகளைக் கணக்கிட்டு, அந்த அடிப்படையிலே இன்டர்வியூக்களை அனுப்புகிறார்கள். இந்த அரசைக் கேட்டுக் கொள்வது—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இதிலே முன்னுரிமை தரவேண்டும். 1970, 1976, 1980 ஆம் ஆண்டு படித்துவிட்டு, எல்லோருக்கும் வருகிற நேரத்தில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வருகிறது. அவர்களுக்கு 3, 4 ஆண்டுக்கு விதிவிலக்கு அளித்து, எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் அந்த ரிசர்வேஷன் முறையைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

பிரதமருடைய 20-அம்சத் திட்டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. தீண்டாமையை மறைமுகமாகவோ, நேரடியாகவோ, செய்கை மூலமாகவோ பின்பற்றினால் கூட, அவர்களை விசாரணையின்றி உள்ளே தள்ளவேண்டுமென்று 20 அம்சத் திட்டத்திலே இருக்கிறது. இந்த 20 அம்சத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு பாராட்டுகிறவர்களை கேட்டுக் கொள்கிறேன். மறைமுகமாகவோ, செய்கை மூலமாகவோ அசைவு மூலமாகவோ தீண்டாமையை பின்பற்றுபவர்களை உள்ளே தள்ள வேண்டுமென்றால், அந்த முறையின்படி பார்த்தால், இந்தியாவில் உள்ளவர்களில் பாதி பேர்கள் சிறைக்குள்ளே இருக்கும்படியான நிலைமை தான் இருக்கும்.



ஆளுநர் உரையில் சிறப்பான ஒரு கருத்தை எடுத்துரைத்தார்கள். மாவட்டங்களைப் பிரிக்கின்ற நேரத்தில், டாக்டர் அம்பேத்கார் பெயரை விட்டுவிட்டார்கள். ஆனால் பிறகு தமிழக முதல்வர் அவர்கள் தெளிவாக விளக்கினார்கள். இந்த அரசு தமிழகத்தில், தாழ்த்தப்பட்ட சமுதாயத் தலைவர்களுடைய உணர்வுகளை எல்லாம் பிரதிபலிக்கின்ற வகையிலே 150 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழன் அயோத்திதாஸ் பண்டிதன் என்பவர் மிகச் சிறந்த சேவை செய்த சீர்திருத்தவாதி. இந்தியா முழுவதும், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல, அகில இந்திய காங்கிரஸ் கட்சியிலே ஒரு தமிழன் தலைவனாக வரமுடியாத நிலையிருந்தபோது, காமராஜர் அவர்கள் தலைவராக வந்தபோது பாராட்டினார்கள் அண்ணா அவர்கள். அதற்கு முன்பாகவே ராவ் பகதூர் சிவராஜ் என்பவர் அகில இந்திய குடியரசுக் கட்சித் தலைவராக வந்தார். அவர்கள் தலைவராக வந்தபோது அனைவராலும் பாராட்டப் பெற்றார். எனவே, இவர்களைப் போல மிகச் சிறந்த சமூக சீர்திருத்தவாதிகள் எல்லாம் அன்றைக்கு இருந்திருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய பெயரையும் புகழையும் காப்பாற்றும் வகையில் நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1984-85ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கான வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ''ஐயப்படா அது அகத்தது உணர்வானைத் தெய்வத்தோ டொப்பக் கொளல்'' என்ற வள்ளுவன் வாய்மொழிக்கொப்ப எங்களது தானைத் தலைவர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் மக்களுடைய நலனை உணர்ந்து நல்ல முறையில் பணியாற்றி, இந்த தமிழக மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக அல்லும் பகலும் பாடுபட்டு வருவதை, நான் நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தவுடன் ஒரு கவிஞர் Y ars do not age him, N ither m n hs nor ays wear out our l der என்று பேரறிஞர் அண்ணாவைப் பாராட்டிக் கூறினார்கள். அதேபோன்று நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தங்களுடைய பணிக்காலத்திலே தமிழகத்தினுடைய வாழ்க்கைத்தரம் உயர நல்ல பல பணிகளை ஆற்றி வருகிறார் என்பதைக் காட்டுகின்ற வகையில் காட்சி தருகின்றது இந்த நிதி நிலை அறிக்கை. பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்: ''விவாதங்கள் நடைபெறும்பொழுது வெப்பம் அதிகமாக இராமல் ஒளி மிகுந்திருக்க வேண்டும்'' என்று சொல்வார்கள். ஆனால்

[திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்] [1984 மார்ச் 10

இங்கே பேசிய எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் இந்தச் சிறப்பான நிதி நிலை அறிக்கையில் இருக்கின்ற நல்ல பல திட்டங்களை பாராட்ட மனம் இல்லாவிட்டாலும், அவர்கள் ஒளியை அதிகமாகத் தருவதற்குப் பதிலாக அதிகமான வெப்பதினை உண்டாக்கி இருக்கின்ற ஒரு நிலைமையை நாம் பார்க்கிறோம்.

தமிழகத்திலே வறட்சி அதிகமாக தாக்கியபோது டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் துயர் துடைப்புப் பணிகளிலே போர்க் கால நடவடிக்கையாக அதிலே ஈடுபட்டு நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தப் பணிகளுக்காக கிட்டத்தட்ட 115 கோடி ரூபாய் மாநில அரசு செலவிட்டு இருப்பதும் இதிலே குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லுவார்கள். அண்ணாவின் வாரிசாகக் கூறிக்கொண்டிருப்பவர்கள் இந்த நல்ல திட்டங்களை இந்த வறட்சித் துயர் துடைப்பு பணிகளுக்காக எடுத்த நடவடிக்கைகளை பாராட்ட மனம் இல்லை என்றாலும் குறை சொல்லியே பழக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நடந்தது போல குறைகள் நடக்கவில்லையே; அப்படி நடந்தால்தான் ஒருவேளை பாராட்டுவார்கள் போல் தெரிகிறது.

வறட்சிக் கொடுமையால் தமிழகம் வாடிக் கொண்டிருந்த போது அதிலிருந்து விடுபட்ட தமிழகம் மீண்டும் கடும் மழையினால், தஞ்சை திருச்சி, புதுக்கோட்டை, ராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் கடுமையாக பாதித்திருக்கிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று, வெள்ள நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெற, அந்தப் பகுதியிலுள்ள அந்த மக்களுக்கு உதவி செய்ய சிறப்பான நடவடிக்கைகளை தமிழக முதல்வர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இதைத்தான் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை 3—1—1984 அன்று பாராட்டி எழுதியிருக்கிறது.

Quick relief. It is to be appreciated that the Tamil Nadu Government had taken up flood relief work on a war footing by deputing Revenue Minister Thiru S. D. Somasundaram and other top officials to supervise these works In fact several road breaches were closed without loss of time, restoring Verticular traffic in many inaccessible places.

என்று அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். தென் மாவட்டங்களில் மீண்டும் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் கண்டறியவும் உடனடியாக நிவாரண நடவடிக்கைகளை எடுக்கவும் எங்களுடைய தானைத் தலைவர்

1984 மார்ச் 10] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்]

டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் நேரில் சென்றிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு உடனடி நிவாரண வேலைகளில் அவர்கள் முனைந்திருக்கிறார்கள்.

நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே, ''வலிவான இந்தியாவும் வளமான மாநிலங்களும்'' அமைய வேண்டும் என்று நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தை சொல்லியிருக்கிறார்கள். இதை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தியா ஒன்று என்று கூறிக்கொண்டிருந்தாலும் இந்தியாவில் மாநில அரசுகள் ஏறக்குறைய ஊராட்சி மன்றங்களாகத்தான் மாற்றக்கூடிய நிலையை இருக்கிறது. மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் பல குறைக்கப்பட்டு, இருக்கின்ற அதிகாரங்கள் போதுமானதாக இல்லை, கூடுதல் அதிகாரங்கள் வேண்டுமென மாநிலங்கள் போராடிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இருக்கின்ற அதிகாரங்களையும் பறிக்கக்கூடிய முறையில் மத்திய அரசு நடவடிக்கைகளை எடுத்து வருவது கண்டிக்கத் தக்கது. இதுபோன்ற நிலை இல்லாமல், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தந்து மாநிலங்கள் நல்ல பல பணிகளை ஆற்ற மத்திய அரசு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்து, நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்கள், நம்முடைய தமிழக அரசு கல்விக்காக என்ன பணிகளை ஆற்றியிருக்கிறது என்றெல்லாம் மெத்தவும் குறைபட்டுக் கொண்டார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் நம்முடைய தானைத் தலைவர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே தான், அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசனார் பல்கலைக் கழகம், மற்றும் தெரசா மகளிர் பல்கலைக் கழகம் என்பது போன்று பல பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டு, அதன் மூலமாக கல்வி அறிவை பரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூறி, அதற்காக தமிழக அரசை நான் மனதார பாராட்டுகிறேன்.

கல்வியின் அனைத்து நிலைகளிலும் அந்தந்த இடத்திற்கேற்றாற்போல், குறிப்பிட்ட பணிப் பயிற்சி அளிக்கக்கூடிய வகையில் தற்போதைய கல்வி முறையை மாற்றியமைப்பதில்- job oriented education என்று சொல்லக்கூடிய வகையில் மாற்றியமைப்பதில் அரசு கவனம் செலுத்தி வருவதைப் பாராட்டுகிறேன்.

[திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்] [1984 மார்ச் 10

அடுத்து தொழில் துறையில் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக தமிழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். பல சலுகைகளைத் தந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் மத்திய அரசினுடைய ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால், லைசன்ஸ் போன்றவைகள் வழங்குவதில் அவர்கள் பாரபட்சம் காட்டுகிற நிலை இருப்பதன் காரணத்தால், தமிழகம் தொழில் துறையில் வளர வேண்டிய அளவிற்கு வளர முடியாத நிலை இருக்கிறது.

இந்த மாநிலத்தில், முன்பு காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது அமைச்சராக இருந்த திரு. ரோச் விக்டோரியா என்பவர் இந்தச் சட்டமன்றத்தில் ஒரு முறை கூறியிருக்கிறார்கள்.

The Madras Government is, however, helpless, in the matter for the Government of India in the commerce and industries Department are dictating the policy as to what should be done or what should not be done in the State of Madras. We are tied to the apron strings of the Central Government.

என்று கிட்டத்தட்ட 1956-57-லே இருந்த நிலைமையைக் குறிப்பிட்டார்கள். அன்றைக்கு நிலவி வந்த சூழ்நிலையே இன்றும் இருப்பதன் காரணமாகத்தான் சிறிய மற்றும் பெரிய தொழில்கள் வளர வேண்டிய அளவுக்கு தமிழகத்தில் வளராத நிலை இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வேண்டும் என்று போராடி, மேலும் பல அதிகாரங்களைப் பெற்று, நமது மாநிலத்தில் தொழில் வளர்ச்சியும், மற்ற நலப்பணிகளும் பெருகக் கூடிய அளவிற்கு, நம்முடைய தமிழக அரசு முனைப்பாக செய்ய வேண்டும் என்று நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலேயும், நகரங்களிலேயும் உள்ள நிலமற்ற வேளாண்மை தொழிலாளர்களுக்கு ஜனதா வேட்டி சேலைகள் வழங்கப்படுகின்றன. அதைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் அதே போன்று நலிந்த நிலையில் உள்ள, துணிகளை உற்பத்தி செய்கிற ஏழை எளிய நெசவாளர்களுக்கும், அவர்களை நிலமற்ற விவசாயிகளாகவே கருதி, அந்த வேட்டி சேலைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே விரும்பி, வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏக இந்தியா என்று குறிப்பிடுகிற மத்திய அரசு, கோதுமைக்கு விலையை அதிகமாக நிர்ணயம் செய்கிறார்கள். ஆனால் அதே அளவுக்கு நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்கிறார்களா என்றால்



1984 மார்ச் 10] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்[

நிச்சயமாக இல்லை. நெல்லை, தென்னகத்தை சேர்ந்தவர்கள் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட நெல்லுக்கு மத்திய அரசு நியாயமான விலை கொடுப்பதில்லை. ஆகவே, நெல்லுக்கும் கோதுமையைப் போல் நியாயமான விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று நமது அரசு மத்திய அரசை வற்புறுத்தி, பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும் என்று விவசாயிகளின் சார்பில் நான் அரசை விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பெற்ற கென்னடி அவர்கள் தன்னுடைய முதல் உரையை ஆற்றியபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

The prospect would not be easy. All this will not be finished in the first hundred days, nor will it be finished in the first thousand days nor in the life of the administration nor even perhaps in out life time on this planet. But let us begin . . . .

என்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடி அவர்கள் கூறியிருக்கிறார்கள். நல்ல காரியங்களை ஆற்றுவதற்கான தொடக்கத்தையாவது நாம் செய்ய வேண்டும் என்று அவர்களுடைய உரையிலே கூறினார்கள்.

அதுபோன்றுதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், பொறுப்பு ஏற்றவுடன் நல்ல பல பணிகள் தமிழ்நாட்டிலே உருவாக, நல்ல தொடக்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்று, முனைந்திருந்தார்கள். அதிலே குறிப்பாக தன்னிறைவுத் திட்டத்தைச் சொல்லலாம். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கிராமங்களும் நகரங்களிலுள்ள அவசியமான வசதிகளைப் பெற பெரிதும் உதவியுள்ளது. கிராமங்களிலுள்ள ஏழை எளிய மக்கள் அதற்காக இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கிராமங்களில் பள்ளிக் கூடங்களுக்கு நல்ல கட்டிடங்கள், குடிநீர் திட்டங்கள், ரோடு வசதிகள், குழந்தைகள் காப்பகங்கள் போன்ற பல பணிகள் செய்யப் பெற்றன. அத்தோடு மட்டுமல்லாமல், இந்த தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நிரந்தரமாக சொத்துக்கள் சேர்த்து வைக்கக்கூடிய வழி வகைகளையும் செய்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்ட இந்த தன்னிறைவுத் திட்டத்தின் சிறப்பான வெற்றியை அறிந்து அகில இந்தியாவிலுள்ள மக்களும் மற்ற மாநில மக்களும் பயன பெறக்கூடிய அளவிற்கு இந்த திட்டத்தினை மற்ற மாநிலங்களுக்கும் விஸ்தரிக்கக்கூடிய அளவிற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிகிறேன்.

[திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்] [1984 மார்ச் 10

அதோடு மட்டுமல்லாமல் இங்கே பேசிய எதிர்க் கட்சி நண்பர்கள் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி குறை படுத்திப் பேசினார்கள். இந்தத் திட்டத்தின் நல்ல பலன்களை, விளைவு களை அவர்கள் உணர்ந்திருந்தாலும் அரசியல் காழ்ப்புணர்ச்சி யின் காரணமாக இந்தத் திட்டத்தைப் பாராட்ட அவர்களுக்கு மனம் இல்லை. இந்தத் திட்டத்தின் மூலம் மேலும் கிராமப் புறங்களிலேயும் நகரப்புறங்களிலேயும் இருக்கிற ஏழைக் குழந்தைகள் நல்ல உடல் நலத்தோடு கல்வியறிவினைப் பெற்று வருகிறார்கள். இந்தத் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தி லேதான் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் 10 வயதிலிருந்து 15 வயதிற்குட்பட்ட மாவணர்களுக்கும் இந்தத் திட்டத்தை நீட்டித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஏழைக் குழந்தைகள் சிறு வயதிலேயே நல்ல உணவைப் பெற்று வளர்ந்தால் தான் நல்ல கல்வியறிவையும் அதோடு உடல் வலிமை யையும், மன வலிமையையும் பெற முடியும் என்பதை உணர்ந்து நம்முடைய முதல்வர் அவர்கள் 15 வயது வரையிலுள்ள அந்த மாணவர்களுக்கு எல்லாம் இந்தத் திட்டத்தை விரிவு படுத்தி இருக்கிறார்கள். இத்திட்டத்தினால் கூடுதலானவர்கள் கல்வி அறிவு பெறுவதற்கான வாய்ப்பளிக்கப்பட்டு இந்தியாவில் தமிழக மக்கள்தான் கல்வி அறிவு பெற்றவர்களில் முதனிலை பெறக் கூடிய வாய்ப்பினை டாக்டர் புரட்சித் தலைவர் செய்து தந்துள்ளார்கள், அதற்காக நான் ஏழை மக்களின் சார்பாக பாராட்டுக்களையும் நன்றியறிதலையும தெரிவித்துக் கொள் கிறேன்.

குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலைத் திட்டத்தை தமிழ கத்திலே ஆரம்பித்திருக்கிறார்கள். நம்முடைய எண்ண மெல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஒரு நடவடிக்கையைத் தொடங்கி, அதன் மூலமாக வருங் காலத்திலே வேலையின்மையைக் குறைப்பதுதான், அந்த வகையிலே அரசு எடுத்து இருக்கிற அனைத்து நடவடிக்கைகளையும் நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக வேலை வாய்ப்பைப் பெருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை வர வேற்கிறேன். அந்தத் திட்டத்தின் மூலமாக நிதி கோரப்படுகிற போது வங்கிகளில் முறையாக தேவையான நிதியுதவிகளை வழங்காமல் தயக்கம் ஏற்படுத்தி, இந்தத் திட்டத்தின் வெற் றிக்கே பாதகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் நிலையான நிதியுதவி வழங்கக் கூடிய முறையிலே அரசு கண்காணிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 10] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்]

நிலமற்ற கிராமப் புறத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதற்காக கிட்டத்தட்ட 44 கோடி ரூபாயில் ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டி ஏழைகள் வாழ்வதற்கு நல்ல வழிவகைகளைச் செய்திருப்பதற்காக நான் அதையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து அரசு ஊழியர்களின் நீண்ட காலக் கோரிக்கை யான, ஓய்வு பெறும் போது பத்தாயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தின் மீது நடவடிக்கை எடுத்து அந்தத் திட்டத்தை கொண்டுவந்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். அந்தச் செயலைச் செய்திருப்பதற்காக நான் நன்றியுணர்வோடு பாராட்டுகிறேன்.

செங்கற்பட்டு மாவட்டம் பெரிய மாவட்டமாக இருந்தும் தமிழகத்திலே அனைத்து மாவட்டங்களும பிரிக்கபயட்டிருந்தாலும் — இன்னும் பிரிக்கப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எங்களுடைய செங்கற்பட்டு மாவட் டத்தை இரண்டாகப் பிரித்து ஒரு மாவட்டத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சீபுரத்தைத் தலைமையிடமாக்கி இம்மாவட்டத்திற்கு திராவிடப் பேரியக்கம் வளருவதற்காகப் பாடுபட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய பெயரை வைத்தால் நலமாக இருக்கும் என்ற யோசனையை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சீபுரம், செங்கற்பட்டு ஆகிய பகுதிகளில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு ஈட்டுப் படிகள் (எச். ஆர். ஏ.வும், சீ.சீ.ஏ. வும்) வழங்கப்பட டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆவன செய்து கொடுத்துதவ வேண்டுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதி மக்களின் கோரிக்கைகள் சிலவற்றை அரசின் பரிசீலனைக்கும் நடவடிக்கைகளுக்கும் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

காஞ்சிபுரம் வட்டத்தில் உள்ள தாமல் ஆர்ப்பாக்கம் மாகரல் பொன்னேரி, நத்தப்பேட்டை, தென்னேரி போன்ற பெரிய ஏரிகள் ஆழப்படுத்தப்படுவதற்கும், இவ்வேரிகளின் வரவுக் கால்வாய்கள், மதகுகள் செப்பனிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

[திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்] [1984 மார்ச் 10

காஞ்சீபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகில் வேகவதி ஆற்றின் மீது ஒரு மேமபாலமும், பாலாற்றின் மீது ஒரு மேம்பாலமும் அமைத்துத் தர வேண்டுகிறேன். அதே போன்று திருப்பருத்திகுன்றம அருகில் வேகவதி ஆற்றின் மீது ஒரு மேம்பாலமும், முசாவாக்கம் அருகில் வேகவதி ஆற்றின் மீது ஒரு மேம்பாலமும் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

வேகவதி—பாலாறுகள் இணைக்க வேண்டுமென பலகால மாக பொது மக்கள் வேண்டி வருகின்றனர். இவ்விரு ஆறுகளை இணைப்பதன் மூலம் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயனடைந்து உணவு உற்பத்தி பெருக வாய்ப்புள்ளது. எனவே, தமிழக அரசு இவ்வாறுகளை இணைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

காஞ்சீபுரத்திலே தனியாக ஒரு போக்குவரத்துக் கழகத்தை ஆரம்பித்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காஞ்சீபுரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களால் ஆரம்பிக்கப் பட்ட ஒன்றிரண்டு தொழிற்சாலைகளும் எந்தவிதமான முன் னேற்றமும் இல்லாமல் ஒட்டு மொத்தமாகப் புறக்கணிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. காஞ்சீபுரம வட்டத்தைப் பின்தங்கிய பகுதியாக அறிவித்து அரசின் சார்பில் ஏதேனும் தொழில்கள் ஆரம்பித்து அந்தப் பகுதியிலே வாழ்கிற ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சீபுரத்திலே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் உள்ள கல்லூரிகளில் மாலை நேரக் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன. அரசு ஊழியர்கள் தங்களுடைய கல்வித் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. காஞ்சீபுரத்திலே உள்ள பச்சையப்பன் கல்லூரியிலே மாலை நேரக் கல்லூரி ஆரம் பித்தால் அங்கே இருக்கின்ற அரசு ஊழியர்கள் தங்களுடைய குவாலிபிகேஷன்களை வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக் கும். ஆகவே அதற்கான ஏற்பாட்டை நம்முடைய அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலேயும் முதல் நிலை குற்றவியல் நீதி மன்றம் இருக்கிறது. ஆனால் செங்கற் பட்டு மாவட்டத் தலைநகரான காஞ்சீபுரத்திலே முதனிலை குற்றவியல் நீதிமன்றம் இல்லை, இந்தக் கோரிக்கையை நம் முடைய அரசு பரிசீலித்து ஆவன செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 10] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்]

இறுதியாக,

'பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல்'.

என்ற திருவள்ளுவரின் குறளுக்கேற்ப பாராட்டத்தக்க நல்ல பல பணிகளை செய்து வருகிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்குத் தமிழக மக்கள் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறார் கள் என்று கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1984—85 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையை நான் பல தடவை படித்துப் பார்த்தேன். கடந்த பெரு மழையின் விளை வாக தஞ்சை மாவட்டம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப் பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்பட்டு இருக்கின்ற இழப்பு மீண்டும் பழைய நிலையை தஞ்சை மாவட்டம் அடைய இன்னும் 5 ஆண்டுகள் பிடிக்கலாம். அப்படிப்பட்ட ஒரு மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு வறட்சி யின் காரணமாக குறுவை பாதிக்கப்பட்ட நிலை. மீண்டும் மழையின் காரணமாக சம்பா பாதிக்கப்பட்ட நிலை. அதற்குப் பிறகு அறுவடை செய்ய வேண்டிய தாலடி விளைச்சல் முழுமை யாக பாதிக்கப்பட்டுள்ள நிலை. அதற்கு பிறகு விதைக்கப்பட்ட உளுந்து அடியோடு நாசமாகி விட்ட நிலை, அதற்குப்பிறகு ஊன்றப் பட்ட பருத்தி முழுமையாக சேதம் அடைந்துள்ளது. இப்படி தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகளுடைய நிலைமை மிகவும் கடுமையான நிலையில் இருக்கின்ற இந்த நேரத்தில் இந்த சட்டமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிதி நிலை அறிக்கையில் விவசாயிகளுக்குத் தேவையான முழுமையான நிவாரண உதவி வழங்கப்படுவது குறித்து எந்த அறிவிப்பும் இதில் இல்லாதது உள்ளபடியே வருந்தத்தக்கது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

என்னுடைய தொகுதியைப் பொருத்த மட்டில் இந்த மழை வெள்ளத்தின் காரணமாக 7 பேர் இறந்து போய் இருக்கிறார்கள். இந்த 7 குடும்பங்களுக்கும் இது வரை எந்தவித நிதி உதவியும் வழங்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

24—12—1983 அன்று திருவிடைமருதூரைச் சேர்ந்த திருச்சேறை கிராமத்தின் அருகில்உள்ள கங்காதர நல்லூர் புதுத் தெருவைச் சேர்ந்த இராஜா என்பவர் மகன் சிற்றரசு என்பவர் மழையின் காரணமாக சுவர் இடிந்து விழுந்து இறந்து இருக்கிறார்.

[திரு. செ. இராமலிங்கம்] [1984 மார்ச் 10

அதே போல் 12—1—1984 அன்று திருப்பனந்தல் ஒன்றியம் மாவத்திருப்பு கிராமத்தில் உள்ள ரெங்கநாதன் என்பவருடைய பேரக் குழந்தை இறந்து போய் இருக்கிறது. அதே வீட்டில் 3 பேர் சுவர் இடிந்து விழுந்ததன் காரணமாக ஏறத்தாழ ஒரு மாத காலம் மருத்துவ மனையில் இருந்து சிகிச்சைப் பெற்று வந்து இருக்கிறார்கள். அந்த குடும்பத்திற்குப் இதுவரை எந்தவிதமான நிவாரண உதவியும் வழங்கவில்லை.

அதேபோல் திருப்பனந்தால் ஒன்றியம் சிதம்பரநாதபுரம் வாண்டையார் இருப்பு, மதகுசாலை கிராமத்தில் மழையின் காரணமாக வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட காலராவுக்கு 5 பேர் இறந்து இருக்கிறார்கள். அந்த 5 பேரும் குடல் அழற்சி நோயினால் இறந்தார்கள் என்று சுகாதாரத் துறையைச் சேர்ந்தவர்கள் சொல்லி அந்த குடும்பத்திற்கும் இன்று வரை எந்தவிதமான உதவியும் வழங்கப்படவில்லை. எனவே, இப்படிப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்த மழையினால் ஏற்பட்ட விவசாய சேதத்திற்கும் எந்தவிதமான நிவாரண உதவியும் அறிவிக்கவில்லை, அதேபோன்று வீடுகளை இழந்த ஏழை எளியவர்களுக்கு குறிப்பாக ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பாரபட்சமான முறையில் நிவாரணத் தொகை பலயிடங்களில் வழங்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் திருமங்கைச் சேரி, முழையூர் ஆகிய கிராமங்களில் குடியிருக்கின்ற நிலம் அவர்களுக்கு சொந்தம் என்ற காரணத்தை வைத்து அவர்கள் நிலவுடைமையாளர்கள் என்று குறிப்பிட்டு அவர்கள் நிலவுடைமையாளர்கள் என்ற காரணத்தால் இந்த நிவாரண உதவி வழங்க அவர்களுக்கு 'தகுதி இல்லை என்று சொல்லி பலருக்கு மறுத்து இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக திருத்துறைப்பூண்டி வட்டம் சங்கந்தி கிராமம் அதில் இடிந்த வீடுகள், இடியாத வீடுகள், மாடி வீடுகள் அத்தனை பேருக்கும கிராமம் முழுவதற்கும் நிவாரண உதவி வழங்கி இருக்கிறார்கள். நான் அதை தவறு என்று சொல்லவில்லை. ஏதோ காரணத்தினால் ஓட்டு வீட்டுக்காரர்களும் இந்த மழையினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஒரே மாவட்டத்தில் இப்படி பாரபட்சமான ஒரு அணுகு முறை தேவைதானா என்பதைத் தான் நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.



1984 மார்ச் 10] [திரு. வச. இராமலிங்கம்]

அதேபோல் நெடும்பலம் கிராமத்தில் இருக்கின்ற மொத்த வீடுகளின் எண்ணிக்கை 480. ஆனால் அங்கே வெள்ள நிவாரண உதவித் தொகை வாங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை 600. இதில் எந்த அளவிற்கு ஒழுங்கீனங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமாய் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒழுங்கீனமான முறையால் இராயநல்லூர், சீர்க்கனூர், நெடும்பலம, இடையூர் சங்கந்தி, அம்மலூர் போன்ற இப்படிப்பட்ட இடங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக அவர்களுக்கு நிவாரண உதவி வழங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் திருத்துறைப் பூண்டி தாலுக்காவில் எல்லோருக்கும் சகட்டுமேனிக்குக் கொடுத்ததாகச் சொன்னார்கள். இப்படித் தவறாகச் சொல்லக் கூடாது. பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் கொடுத்தார்களே தவிர பாதிக்கப்படாதவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்சொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இப்பமத் தஞ்சை மாவட்டத்தில் அவர்கள் பாதிக்கப் பட்டிருந்தாலும் சரி, பாதிக்கப்படாமல் இருந்தாலும் சரி, ஓட்டு வட்டுக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் என்னுடைய தொகுதியில் கூரை வீட்டுக்காரர்களுக்கூட கொடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை என்பதைச் சுட்டிக்காட்ட விருமபுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் பலகிராமங்களில் ஏறத்தாழ மூன்று வார காலத்திற்கு உள்ளேயே மக்கள் செல்ல முடியாத நிலையில் மிகவும் கொடுமையான அளவிற்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. கொண்டசமுத்திரம், ஆரலூர், கண்ணாரக்குடி, ஆலவெளி, கீழ மணக்குடி, வேளூர், அழகேசபுரம், சருப்பூர், பந்தநல்லூர், திருமங்கைச்சேரி, முழையூர், வன்னிக்குடி, செம்மங்குடி, கதிராமங்கலம், கொடியாளம், கொளுத்தியூர், கீழ சூரிய மூலை, கூத்தனூர், பரவனூர், வேட்டமங்கலம், விளத்தொட்டி ஆகிய கிராமங்களில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் அழிந்திருக்கின்றன; ஆயிரக்கணக்கான வீடுகள் அடியோடு இடிந்து நாசமாகி விட்டன. பத்து பேர்களுக்கு மேல் உயிரிழந்து இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு முறையான நிவாரண உதவி வழங்கப்படவில்லை. உடனடியாக அவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. இராமலிங்கம்] [1984 மார்ச் 10

புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற வீட்டு வசதி இலாக்கா அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ் ஆர். இராதா அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்து குறிப்பிட்டார்கள். மழையால் பாதிக்கப்பட்ட ஏழை எளியவர்களுக்கெல்லாம் நாங்கள் வீடு கட்டுவதற்கு— ஓட்டு வீட்டுக்காரர்களுக்குக்கூட— நாங்கள் உடனடியாகக் கடன் கொடுக்கப் போகிறோம் என்று தெரிவித்தார்கள். அது பத்திரிகைகளிலேயெல்லாம கூட வந்தது. ஆனால் அதுபற்றி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அப்படிப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு எந்தவிதமான தொகையும் ஒதுக்கப் படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகப்பெரிய அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நிவாரண உதவிகளைக் கொடுக்க வேண்டும். அவர்கள் சாகுபடி செய்த குத்தகை நிலங்களுக்கெல்லாம் குத்தகை பாக்கியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டு, அதற்கான அரசு ஆணையை உடனடியாகப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கெல்லாம் ஏக்கர் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் இரண்டாயிரம் ரூபாய் வீதம் நஷ்டஈடு வழங்க வேண்டும். அடுத்த குறுவை சாகுபடிக்கு வேண்டிய விதை, உரம், பூச்சிக் கொல்லி மருந்து ஆகியவற்றை இலவசமாக அவர்களுக்கு வழங்க வேண்டும். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபாய் அளிக்கப்பட வேண்டும். கூட்டுறவுக் கடன் பாக்கிகளை அடியோடு ரத்து செய்ய வேண்டும். முந்தைய கிஸ்தி பாக்கிகளை அடியோடு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கிராமப்புற கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் மூலம் இரண்டு தவணை, ஒரு தவணை என்று வாங்கிக் கட்டப்பட்ட வீடுகளெல்லாம் அடியோடு இந்த மழையின் காரணமாக இடிந்து, சேதமாகியிருக்கிறது. அப்படிப்பட்ட ஏழை எளியவர்கள் வாங்கிய கடனை அடியோடு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், பல்வேறு இடங்களில் தனியார் பாலிடெக்னிக்குகள் தொடங்குவதற்கு அரசு சம்மதம் தெரிவித்திருக்கிறது. அதில், சாதி அமைப்புகளின் பெயரால் இன்றைக்குப் பல்வேறு



1984 மார்ச் 10] [திரு. செ. இராமலிங்கம்]

கல்வி நிறுவனங்களை ஆரம்பிக்க அரசே ஊக்குவிக்கிறது என்றால் அது எந்தவகையில் நியாயம்? பெரியாரின் கொள் கைகளைப் பின்பற்றுபவர்கள் என்பதை அது எடுத்துக் காட்டு கிறதா? தந்தை பெரியார் அவர்களின் வழியில் நடப்பதாகச் சொல்லிக்கொண்டு, சாதியின் பெயரால் பாலிடெக்னிக்கு களையும், கல்வி நிறுவனங்களையும் தொடங்குவதற்கு அரசே ஊக்கம் அளிக்கலாமா என்பதைத்தான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இளைஞர்களின் எதிர்காலம் மிகப்பெரிய கேள்விக்குரியதாக ஆகி இருக்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு முறையாக வழிமுறைகள் இங்கே சொல்லப் படவில்லை. ஆகவே இப்படிப்பட்ட ஒரு வரவு-செலவுத் திட்டத்தை இந்த நேரத்தில் நான் எப்படி வரவேற்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அமுதம் அங்காடி களில் ஏராளமான ஊழல்கள் நடந்திருக்கின்றன. செரு கடம்பூர் அங்காடியில் ரூ. 12 ஆயிரம் வரை கையாடல் செய் திருக்கிறார்கள். இன்றுவரை அவர் மீது எந்தவிதமான நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கீழ்க்காட்டூர் அமுதம அங்காடியில் உள்ள ஊழியர் அங்கே பொது மக்களுக்கு விரோதமாக, இருக்கின்ற பொருட்களை எல்லாம் கள்ள மார்க்கெட்டிலே விற்றுக் கொண்டிருக்கிறார். அவர்மீது பொது மக்கள் பலமுறை புகார் செய்தும் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மழை பெய்ததால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இருக் கின்ற அமுதம் அங்காடிகளில் அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் முழுமையான அளவில் இல்லாத நிலைமை இருக் கின்றது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் தண்டந் தோட்டம், சன்னாபுரம், வில்லியரம்பல், செம்பியவரம்பல், புத்தகரம், மாங்குடி, அம்மங்குடி, ஆலவெளி, நெய்க்குப்பை, கோனுலாம்பள்ளம், உள்ளூர் செட்டிமண்டபம், 53 காத்த நூரார், விளங்குடி ஆகிய இடங்களில் உள்ள அமுதம் அங்காடி களில் அரிசி, மண்ணெண்ணை ஆகியவை கிடைக்காத அவல நிலை இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. செ. இராமலிங்கம்] [1984 மார்ச் 10

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில்
தூக்காச்சிப் பாலம் அரசலாற்றின் குறுக்கே கட்டப்பட வேண்டிய
பாலம் பற்றி கடந்த நான்காண்டுக் காலமாக நானும் பல
வழிகளில் எல்லாம் வற்புறுத்தி வந்திருக்கிறேன்.
அதற்கு ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து தொகை
ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்றது. அதற்கான
சம்மதத்தை மட்டும் இந்த அரசு தரவேண்டிய
நிலைமை இருக்கின்றது. அதற்காக பல முறை அரசிற்கு
நினைவூட்டுக் கடிதம் எழுதியும் அந்தச் சம்மதத்தை அரசு
வழங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே
உடனடியாக அந்தச் சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

"கோவனூர், கொத்தங்குடி கிராமங்களுக்குத் திருமலைராஜன்
ஆற்றில் ஒரு பாலம் அமைக்கவேண்டும். திருப்புவனம், திருவிச
நல்லூர் கிராமங்களுக்கிடையில் காவிரி, வீரசோழன் ஆறு
களின் குறுக்கே பாலம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். 67 சாத்தனூர், நரசிங்கம்பேட்டை கிராமங்
களுக்கு வீரசோழன் ஆற்றிலே ஒரு பாலக் கட்டவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். மஞ்சமல்லி ஊராட்சியில்
உள்ள சிந்தாமணி கிராமத்திற்கு மூருட்டி ஆற்றில் ஒரு பாலம்
கட்டித்தரவேண்டும்.

தற்போது மத்திய அரசு தமிழகத்தில் வேளாண்மைக்
கல்லூரி துவங்க அனுமதி அளித்திருக்கின்றது. ஆடுதுறையைப்
பொறுத்த வரையில் அங்கே மண்பரிசோதனை நிலையம்
இருக்கின்றது பூச்சிக்கொல்லி ஆராய்ச்சி நிலையம் இருக்
கின்றது ; வாழை ஆராய்ச்சி நிலையம் இருக்கின்றது. இப்படிப்
பட்ட ஆராய்ச்சி நிலையங்கள் ஆடுதுறையில் இருப்பதன்
காரணத்தால் இந்த வேளாண்மைக் கல்லூரியை அங்கே
துவங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அண்மையில் பெய்த பெருமழை காரணமாக என்னு
டைய தொகுதியில் உள்ள ஆரம்பப் பள்ளிகள் அதாவது தண்டந்
தோட்டம் செம்மங்குடி, விளத்தொட்டி, விசுவநாதபுரம்
ஆகிய இடங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிகள் இடிந்து
போன நிலைமையில் இருக்கின்றன. அந்த இடிந்து
போய் இருக்கின்ற பள்ளிகளை மீண்டும் செப்பனிட்டுத்
தர முடியாத நிலைமை இருக்கின்றது. அதனை
தனியார்கள் செய்ய முடியாத நிலைமை இருக்கின்றது.
ஆகவே அப்படிப்பட்ட பள்ளிகளை எல்லாம் அரசே ஏற்றுக்
கொண்டு அவற்றைச் செப்பனிட வேண்டும் என்று இந்த
நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 10] [திரு. செ. இராமலிங்கம்]

திருவிடைமருதூர் ஒன்றியம் செம்மங்குடியில் உள்ள ஒரு ஆரம்பப் பள்ளியினை நிர்வகித்து வருகின்ற தனியார் அதனை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று அரசுக்கு எழுதி இரண்டாண்டுக் காலம் ஆகின்றது. இதுவரை அந்தப் பள்ளி எடுத்துக்கொள்ளப்படவில்லை. தனியார்களாலும் அந்தப் பள்ளிக்கூடக் கட்டிடங்களைச் செப்பனிட முடியவில்லை. இந்த நிலைமையில் அங்கே இருக்கின்ற மாணவர்கள் எல்லாம் எந்த நேரத்தில் அந்தக் கட்டிடம் இடிந்து விழும் என்று அஞ்சிக் கொண்டிருக்கின்ற நிலைமையில் அந்தப் பள்ளிக்கூடம் இருக்கின்றது. ஆகவே உடனடியாக அந்த செம்மங்குடி பள்ளியை அரசே மேற்கொண்டு அந்தக் கட்டிடங்களைச் செப்பனிட்டுத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் திருவிடைமருதூர் ஒன்றியத்தில் முதல்கட்டளை கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புக்காக நில ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமாக அரசுக்கு ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்திலே ரிட் பெட்டிஷன் போடப்பட்டு நீண்டகாலமாக அங்கே தாமதம் ஆகிக் கொண்டிருக்கின்றது. அதன் எண், டபிள்யூ.பி. நம்பர் 2891 ஆஃப் 81. எனவே அந்த பெட்டிஷனை உடனடியாக டிஸ்போஸ் செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரிட் பெட்டிஷனை ஜட்ஜ்தானே டிஸ்போஸ் செய்ய வேண்டும். அரசு எப்படி டிஸ்போஸ் செய்ய முடியும் ?

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 4 ஆண்டுகாலமாக உயர்நீதிமன்றத்தில் தேங்கி இருக்கிறது. எனவே அரசு அதை துரிதப்படுத்தினால் விரைவில் டிஸ்போஸ் ஆகும் என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இலவசமாக வேட்டிப் புடவைகள் வழங்கும் திட்டத்தை நீங்கள் விளம்பரம் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அந்த விளம்பரம் இன்றைய தினம் சிறு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை மிகப்பெரிய அளவில் பாதிக்க வைத்துள்ளது. இன்றைக்குத் திருநாகேசுவரம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய மானியத் தொகை சப்சிடி அரியர்ஸ் ஏராளமாகத் தேங்சிக் கிடக்கிறது. அதே போன்று ஸ்ரீநாதசாமி இன்டஸ்ட்ரீயல் வீவர்ஸ் கோவாபரேடிவ் சொசைட்

[திரு. செ. இராமலிங்கம்] [1984 மார்ச் 10

டிக்கு வரவேண்டிய மானியத்தொகை வரவில்லை. இலவச வேட்டி, புடவை வழங்குகின்ற திட்டத்தின்கீழ் ஏராளமான வேட்டி, புடவைகள் அந்தச் சங்கத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சங்கங்களுக்குச் சேர்க்க வேண்டிய பாக்கித் தொகையைச் சேர்க்காததன் காரணமாக, ஸ்ரீ நாகநாதசாமி இன்டஸ்ட்ரியல் வீவர்ஸ் கோ-வாபரேடிவ் சொசைட்டியில் 100 தறிகள் இருந்தது. 60 தறிகளாக குறைந்து, இன்றைய தினம் 40 ஆக மாறியிருக்கிற நிலைமையிருக்கிறது. இப்படியே போனால் அப்படிப்பட்ட சிறு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்பட வேண்டியிருக்கிறது. எனவே, அவற்றை எல்லாம் கவனத்திற் கொண்டு உடனடியாக இந்தச் சங்கங்களுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகையை அரசு செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையில் பெய்த பெரு மழையின் காரணமாக என்னுடைய தொகுதியில் திருப்புவனம், ஆடுதுறை, கோவிந்தபுரம், திருமங்கைச்சேரி போன்ற பகுதிகளில் வசிக்கக்கூடிய நெசவாளர் பெருமக்கள் பெரும் அளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, என்னுடைய தொகுதியில் எப்படி எந்த நிவாரணத் தொகையும் அளிக்கப்படவில்லையோ அதைப் போல் நெசவாளர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படாமல் பராபட்சமான அணுகுமுறை மேற்கொள்ளப்படுகிறதோ என கருதுகிறேன். எனவே, மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கும் நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1984-85ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துக்களை கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகின்றேன். மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிற இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி கடந்த இரண்டு நாட்களாகப் பல்வேறு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் இதை ஒரு சினிமா நோட்டீஸ் என்றும் முழு பூசனிக்காயை சோற்றிலே மறைக்கிறார்கள் என்றும் இது தேர்தல் கால பட்ஜெட் என்றும் நையாண்டி செய்து பேசினார்கள். அதுவும் ஜனதா கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒன்றுமே இல்லையென்று சொல்லி, பேசிவிட்டு வெளியே கூடச் சென்றுவிட்டார். ஆனால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் என்ன, என்ன அதிகாரங்கள் இருக்கின்றன என்பதை நன்றாக உணர்ந்தவர்கள். மத்திய அரசுக்குள்ள அதிகாரங்கள் நிதி ஆதாரங்கள், அதே நேரத்தில் மாநில அரசுக்குள்ள அதிகாரங்கள்



1984 மார்ச் 10] [திரு. எம். சின்னசாமி]

நிதி ஆதாரங்கள் பற்றியெல்லாம் மாமன்ற உறுப்பினர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். நேற்றைய தினம் ஆளுங்கட்சி சார்பிலே பேசிய அருமை உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் மத்திய அரசைப் பற்றியும் மாநில அரசைப் பற்றியும் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை மிகப் பொருத்தமாக எடுத்துக் காட்டினார்கள். கார்த்திகேயனும் கலெக்டர். கந்தசாமியும் கலெக்டர், கார்த்திகேயன் ஜில்லா கலெக்டர், கந்தசாமி பில் கலெக்டர். இவ்வாறே மத்திய அரசு ஜில்லா கலெக்டர் போலவும் மாநில அரசு பில் கலெக்டர் போலவும் இருப்பதாகச் சொல்லி, இருக்கிற அதிகாரங்களை வைத்து, நிதி ஆதாரங்களை வைத்து, எந்த அளவுக்கு சிறப்பான வரவு-செலவுத் திட்டத்தை அளிக்க முடியுமோ, அந்த அளவுக்குத் தமிழக அரசு நிதி அமைச்சர் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். இந்த வரவுசெலவுத் திட்டத்திலே இருக்கிற சிறப்பு அம்சமே சமூகத்திலே இருக்கிற சகல தரப்பு மக்களும் திருப்தி படுகின்ற அளவிலே இந்தத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுதான். தேர்தல் காலத்திலே மக்களைச் சந்திக்கின்ற பொழுது ஒரு அரசியல் கட்சி என்ன, என்ன வாக்குறுதிகளைச் சொல்கின்றதோ அவற்றை எல்லாம் குறிப்பிட்ட 5 ஆண்டுக் காலத்திலே படிப்படியாகச் செய்வதுதான் மக்கள் நலனிலே அக்கறை கொண்டிருக்கிற ஒரு அரசு— வெல்பேர் ஸ்டேட் என்று சொல்கின்ற ஒரு அரசு—தன் மக்களைச் சந்திக்கின்ற பொழுது, சொல்லியதை தன்னுடைய ஆட்சிக் காலத்தில் செய்ய வேண்டுமென்பதை இன்றைக்கு இந்தியாவிலேயே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு—புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அரசு—படிப்படியாகச் செய்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12-40)

தேர்தல் காலத்திலே சொன்னது மட்டுமல்லாமல் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடாத அம்சங்களையும் இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் சத்துணவுத் திட்டம் தேர்தல் நேரத்தில் சொல்லப்படவில்லை. இன்றைக்கு நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறுநிலச் சொந்தக்காரர்கள் எல்லாம் பயனடைகிற வகையில் பாதுகாப்புத் திட்டம் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதெல்லாம் தேர்தல் காலத்திலே சொல்லப்படவில்லை. வரிபோட்டு விட்டால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த அரசு வரி மேல் வரி போட்டு விட்டது என்று ஏசப்பட்ட எதிர்ப்புகளை தெரிவிக்கிறார்கள். வரிபோடாவிட்டால் இந்த அரசு திவாலாகிவிட்டது, கஜானா காலி என்றெல்லாம் நையாண்டி செய்கிறார்கள். முன்னாலே போனால் கடிக்கும் குதிரை பின்னாலே போனால் உதைக்கும் என்பதைப்போல இது இருக்கிறது. இன்றைக்கு தமிழக அரசு பல்வேறு சோதனைகளுக்கிடையே, இருக்கிற நிதி

யாதாரத்தை வைத்து இந்த வரவு-செலவுத் திட்டத்தை சிறப்பாக செய்திருப்பதை மனசாட்சியுடன் எதிர்க்கட்சிக்காரர்கள் பாராட்டுவதை விட்டு நையாண்டி செய்வது எந்தவகையிலே நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். ஏழை, நடுத்தர மக்கள் வாழ்வு மேம்பாடு அடைய, அவர்கள் நல்வாழ்வு பெறவேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு இந்த அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டு ஆண்டுகளாக கடுமையான வறட்சி ஏற்பட்டிருந்தும் கூட மக்கள் குடிதண்ணீருக்காக கஷ்டப்படக் கூடாது என்பதற்காக, கிராமத்திலே 10 வீடுகள் இருந்தால், 'அந்த பத்து வீடுகளில் இருப்பவர்களுக்கும் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு தனியாக குடிதண்ணீர் குழாய் போட்டிருக்கிறது. ஏறத்தாழ 100 கோடிக்கு மேலே குடிதண்ணீர் வசதிக்காக செலவு செய்திருக்கிறது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். குடிதண்ணீருக்காக இந்தியாவிலே இருக்கிற எந்த மாநிலமும் செய்யாத மாபெரும் திட்டத்தை தமிழக அரசு செய்திருக்கிறது. நான் ஆந்திரா மாநிலத்திற்கு சென்று நிலைமைகளைப் பார்த்தேன். அங்கே ஏழு, எட்டு ஊர்களுக்குக் கூட தண்ணீர் வசதி இல்லாத நிலைமை இருக்கிறது. இந்தியாவில் தமிழகம் ஒன்று தான் குடிதண்ணீர் துறையிலும். போக்குவரத்துத் துறையிலும் தன்னிறைவு பெற்றிருக்கிறது என்று சொன்னால், அது பொது மக்களுக்காக எந்தெந்தத் திட்டங்கள் தேவை என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்து செய்கிறார் என்ற காரணத்தினால் தான்; முதல்வர் அவர்கள் இன்றைக்கு மக்கள் எல்லோரும் பாராட்டுகிற வகையிலே இந்த அரசை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல சத்துணவுத் திட்டத்தைப் பற்றி இங்கே நையாண்டி செய்து பேசினார்கள். இங்கே கிட்டத்தட்ட 70 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்திலே பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். வருகிற செப்டம்பர் 15ஆம் தேதியிலிருந்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளிலிருந்து 15 வயதிற்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்படுகிறது. ஆனால் இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசினுடைய உதவியைக் கேட்டால் அவர்கள் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு இவ்வளவு பெரிய நிதி நெருக்கடிக்கு இடையிலும் இந்தத் திட்டத்தை கைவிடாமல், சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதிலே மிகச் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தச் சத்துணவுத் திட்டம் கல்வி இலாக்கா, சமூகநலத் துறை, உள்ளாட்சித் துறை ஆகிய மூன்று துறைகளில் செயல்பட்டு வருகிறது. சத்துணவுத் திட்டத்தை ஒரே துறையின் கீழ் கொண்டு வந்தால் இந்தத் துறை மேலும் சிறப்பாக செயல்படுவதற்கு வசதியாக இருக்கும் என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல உழவர்கள், நிலம் இல்லாதவர்கள், சிறுநிலச் சொந்தக்காரர்கள், இவர்களுக்கெல்லாம் இன்றைக்கு அமைப்புகள் இல்லை. என்.ஜி.ஓ.-க்கள் அமைப்புகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய உரிமைகளை அந்த அமைப்பின் மூலம் கேட்டுப் பெறுகிறார்கள். ஆனால் கிராமத்திலே இருக்கிற சிறு விவசாயிகள், சிறு நிலச்சொந்தக்காரர்கள், தங்களுக்கு அமைப்பில்லாத காரணத்தால் உரிமை கேட்க முடியாத நிலைமை இருப்பதை உணர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்கள் அவர்களுக்காக ஒரு திட்டத்தை இன்றையதினம் துவக்கி இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தொழிலாளர் நலத்துறையில் தங்களை உறுப்பினர்களாக பதிவு செய்து கொண்டால், அவர்கள் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு தருவதற்காக 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையில் தொழில் செய்கிற போது இறந்துவிட்டால் கொடுப்பதற்கு வசதி இந்த பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது பாராட்டிற்குரியது. இதைக்கூட ஒரு துறையிடம் ஒப்படைக்காமல் இதற்காக ஒரு வாரியத்தை உருவாக்கி கிராமப்புற பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அல்லது உழவர் மேம்பாட்டுக் கழகம் என்று ஒரு வாரியத்தை உருவாக்கினால் நிச்சயமாக நல்லமுறையில் செயல்பட வசதியாக இருக்கும். அதே நேரத்தில் எல்லா உழவர்களையும் இந்த வாரியத்திலே உறுப்பினர்களாக ஆக்கி அவர்களுக்கு பாதுகாப்பு தருவதற்கு வசதியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, சபையில் கோரம் இருப்பதாகத் தெரியவில்லையே?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) : கோரம் இருக்கிறது.

திரு. எம். சின்னசாமி : தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரையில் இந்த மாநிலத்தில் மத்திய அரசின் முதலீடு மிகமிகக் குறைவாக இருக்கிறது. இருந்தாலும், சிறு தொழில் வளர்ச்சியில் இந்த அரசு அதிக அக்கறை காட்டுவதால், சிறு தொழில் வளர்ச்சி அதிக முன்னேற்றத்தில் இருக்கிறது. தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், மத்திய அரசு வைத்துள்ள கொள்கை தவறான கொள்கையாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஜீரோ இன்டஸ்டிரி டிஸ்டிரிக்ட்டிலேதான் புதிதாகத் தொழில்களை ஆரம்பிக்கவேண்டும் என்று மைய அரசு சொல்கிறது. உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் சிறிய மாவட்டங்கள் இருப்பதால் அங்கே இத்தகைய நிலைமைகள் இருக்கின்றன. அதன் காரணமாக அங்கே தொழில் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. ஆனால்

[திரு. எம். சின்னசாமி] [1984 மார்ச் 10

தமிழகத்தைப் பொறுத்தவரையில். அந்த வசதி வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன. ஆகவே, பெரிய மாவட்டங்கள் இருக்கும் இடங்களில் தொழில்களை ஆரம்பிக்க மத்திய அரசு முன்வரவேண்டும். தொழில்களை அங்கே விரிவடைக்க மைய அரசு முன்வரவேண்டும் என்று நம்முடைய அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் என்.ஜி.ஓ.க்களுக்கு 10,000 ரூபாய் ஓய்வுபெறும்போது அளிக்கும் திட்டம் அறிவிக்கப்பட் பட்டுள்ளது. இதுபற்றி பலபேர் தவறாகப் பேசுகிறார்கள். ஒரு அரசு ஊழியர் 3,000 ரூபாய் செலுத்தினால் போதும். அது வட்டியோடு சேர்த்து, அரசுசெலுத்தும் தொகையுமாகச் சேர்த்து, அவர் ஓய்வுபெறுகிறபோது 10,000 ரூபாய் பெறலாம். அதைப் போலவே புதிதாக வேலைக்குச் சேர்ந்தவர்கள் ஓய்வுபெறும் போது 30,000 ரூபாய் வரையில் பெறும் வாய்ப்பு இருக்கிறது. 3,000 ரூபாய் செலுத்தியவர், 30,000 ரூபாய் பெறும் வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால்தான், போராட்டம் நடத்துகின்ற என்.ஜி.ஓ. தலைவர்கள் கூட இதைப் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இந்தத் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் / மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் என் னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்தத் திட்டம் எல்லோராலும் பாராட்டப்படுகிற திட்டமாக இருக்கிறது என்பதால் என்னுடைய பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே தொழில்கல்வி திட்டத்தை அரசு கொண்டு வர் இருப்பதைப் பராட்டுகிறேன். வெறும் பி.ஏ., எம்.ஏ. படித்துவிட்டு வேலைக்காக அலைவதைவிட, தொழில் ஒன்றை யும் கூடவே கற்றுக்கொண்டால், வேலைக்குப் போக வாய்ப்பு கிடைக்குமே என்பதால் அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இதன் காரணமாக அவர்கள் படித்து முடித்தபின் சொந்தமாக ஒரு தொழிலை வைத்துக்கொள்ள முடியும். இந்த அருமையான யோசனையை முதன்முதலாக நடைமுறைக்குக் கொண்டு வரும் மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம் தான் என்பதை நான் அறிந்து பெருமைப்படுகிறேன். அதற்காக என் பாராட்டுக்களையும் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோ-ஆப்டெக்ஸில் துணிகள் தேங்கியிருப்பதால் பல்வேறு சங்கங்கள் நடைபெறமுடியாமல் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் இந்த மாதம் 7ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரையில் அவர்கள் 20 சத விதம் தள்ளுபடி செய்து விற்றுக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார் கள். அதற்காக நான் அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள் கிறேன். வட மாநிலங்களில் இப்படிப்பட்ட கூட்டுறவுச்



1984 மார்ச் 10] [திரு. எம். சின்னசாமி]

சங்கங்களுக்கு தனியார் துறையில் இருந்தாலும் ஊக்கம் அளிக்கின்ற வகையில் நன்றாக நடத்தப்படுகின்ற சங்கங்களுக்கு 50 சதவீதம் மானியம் கொடுப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்ட நடைமுறைகளை நம்முடைய மாநிலத்திற்கும் கொண்டுவரவேண்டுமென்ற முயற்சியில் அரசு ஈடுபடவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய கரூர் தொகுதியில் நொய்யலாறு திட்டத்திற்கு ஆய்வுகள் செய்யப்பட்டு அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள லாம் என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதை இந்த ஆண்டே எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

அதைப்போன்று கரூர் நகரிலே அமராவதி ஆற்றில் ஒரு பாலம் இருக்கிறது. அது சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னால், வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டது. அது இன்றைக்கு போக்குவரத்துக்கு தகுதியானது அல்ல என்று பொறியியல் வல்லுநர்கள் அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள். அதை உடனடியாகச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது ஒரு தேர்தல் கால பட்ஜெட் அல்ல. தேர்தல் காலத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் என்ன வாக்குறுதிகளை கொடுத்தார்களோ, அந்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்று கின்ற பட்ஜெட் இது என்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

* திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் மாற்றுத் தலை வரவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கை மீது நான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலிலே நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் பற்றியும், இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற வெள்ள அபாயகரமான நிலைமைகள் பற்றியும் தெரிவித்திருக்கி றார்கள். இந்த வெள்ளப்பாதிப்பு பற்றி பேசுவதற்காகத்தான் நான் இன்றைக்கு ஊரிலிருந்து வந்திருக்கிறேன். திடீர் திடீ ரென்று இம்மாதிரியான வெள்ள அபாயம் வருகிறது. பல இடங்களில் மழை பெய்து வெள்ளம் வருகிறது. சில இடங் களில் எங்கோ பெய்த மழையினால் வெள்ள அபாயம் வருகிறது.

இன்றைக்கு வைகை அணையிலிருந்து ஒரேநேரத்தில் 65,000 கியுசெக்ஸ் தண்ணீரை திறந்துவிட்டதன் மூலமாகத்தான், நிலக் கோட்டையில் அதிகமாக மழை பெய்யாமல் இருந்தாலும் கூட,

அந்த வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. வைகை அணையினுடைய கொள்ளளவு 71 அடி. 71 அடி கொள்ளளவுள்ள வைகை அணையில் 69 அடி வரையில் தண்ணீரை நிறுத்தி வைத்திருந்தார்கள். இந்த 69 அடி தண்ணீர் இருக்கும்போது, மறுபடியும் திடீரெனறு 2,3 மணி நேரம் 'கேச்மென்ட் ஏரியா'வில் பெருத்த மழை பெய்ததால் தண்ணீர் பெருகி வந்ததுமட்டுமல்லாமல்வைகை அணைத் தண்ணீரையும் திறந்துவிட்டதால் அதற்கு கீழே உள்ள பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. 69 அடி வரை தண்ணீரை நிறுத்தி வைத்ததற்குப் பதிலாக 2, 3 அடி தண்ணீர் வீணானாலும் பரவாயில்லை, 66 அடி வரையில் மட்டும் தண்ணீரை வைத்திருக்க பொதுப்பணித் துறையினர் ஏற்பாடு செய்திருந்தால் இன்றைக்கு இவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்காது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அங்கே இருந்து இப்படி பெருவெள்ளம் வந்ததை 1979 ஆம் ஆண்டு நிலக்கோட்டை பார்த்திருக்கிறது. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பார்த்திருக்கிறது. இனறைக்கு 1984 ஆம் ஆண்டும் பார்த்திருக்கிறது. இது பத்திரிகைகளில் வராமல் இருக்கிற காரணத்தால் அங்கே வெள்ளம் வரவில்லை என்று அமைச்சர்களும், அதிகாரிகளும் எண்ணக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கே ஒரு திறமையான பெண் கலெக்டர் இருக்கிற காரணத்தால், அவர்கள் உடனடியாக ஆர். டி. ஓ., தாசில்தார், பி. டி. ஓ., போலீஸ் அதிகாரிகள் அத்தனை பேர்களுக்கும் தகவல் கொடுத்து, இரவோடு இரவாக நீங்கள் இந்த ஊரைவிட்டு வெளியேறுங்கள் என்று சொல்லி அங்கிருந்த மக்களை எல்லாம் வெளியேற்றிவிட்டார்கள். அப்போது இரவு இரண்டு மணி. அதற்குப் பின்னாலே பகல் நேரத்தில் வெள்ளம் வந்ததால் உயிர்ச்சேதம் இல்லை; ஆனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. நெல், கம்பு, சோளம், வாழை, தென்னை, கடலை போன்ற பயிர்கள் வைக்கப்பட்டிருந்த கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கருக்குமேல் நிலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. மண் அடித்து, அந்தப் பயிர்கள் எல்லாம் தண்ணீரில் மூழ்கிவிட்டன. நேற்றையதினம் இதை எல்லாம் ஆர். டி. ஓ., தாசில்தார், கமிஷனர், போலீஸ் அதிகாரிகள் ஆகியோருடன் நானும் நேரில் சென்று பார்த்து வந்திருக்கிறேன். இப்படிப்பட்ட நேரங்களில் என்ன செய்ய வேண்டுமென்று நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்த வரையில் வத்தலக்குண்டு யூனியனில் அக்கரைப்பட்டில் 1979 ஆம் ஆண்டு 104 வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டன. அந்த 104 வீடுகளையும் கட்ட இப்போதுதான் அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து, கட்டடம் கட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு தொழி



லாளர் நல அமைச்சர் அவர்களிடம் ஹவுசிங் போர்டு இருக்கும்போது அவர்களிடம் பலமுறை சொல்லி 3,720 ரூபாய் வீதம் சாங்ஷன் செய்தார்கள். 3,200 ரூபாய் அப்போது கொடுத்தார்கள். மீதி 520 ரூபாய் பிடித்தம் செய்திருக்கிறார்கள். இன்று வரையில் அந்தப் பணம் கொடுக்கப்படவில்லை. அந்த வீடுகளுக்கு சிமென்ட்டும் கொடுக்கப்படவில்லை. செங்கல் வைத்து, மண் சுவர் எழுப்பியிருக்கிறார்கள். சிமென்ட் வைத்து இன்னும் பூசவில்லை. அதனால் கட்டப்பட்ட அந்தக் கட்டிடமும் காற்று, மழையினால் கொஞ்சம் கொஞ்சமாக விழுந்துகொண்டிருக்கிறது.

அதைப்போன்று நிலக்கோட்டைக்குப் பக்கத்தில் நடக்கோட்டை கிராமம் இருக்கிறது. அந்தப் பகுதியில் இந்த வெள்ளத்தினால் நூற்றுக் கணக்கான வீடுகள் அடித்துச் செல்லப்பட்டு, வீடிழந்த அந்த மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலக்கோட்டை யூனியனில் மல்லயப்பட்டி, சித்தர்கல்நத்தம் பறையப்பட்டி, சக்கிலியப்பட்டி, கோடிய கவுண்டன்பட்டி, எஸ். வாடிப்பட்டி, குன்னிச்செட்டிபட்டி இப்படி 5, 6 ஊர்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஊருக்கும் பக்கத்தில் 1000 மீட்டர், 500 மீட்டர் அளவுக்காவது தடுப்புச் சுவர் கட்டியிருந்தால் இந்த அபாயம் ஏற்பட்டிருக்காது. இனிமேலாவது அப்படி தடுப்புச் சுவர் கட்டினால்தான் அங்கே ஒரு நிரந்தரமான பரிகாரம் காணலாம். எத்தனையோ முறை இதை எடுத்துச் சொல்லியும் இதிலே அக்கரை காட்டாமல் இருந்து விட்டார்கள். அதனால் இன்றைக்கு ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். அவர்களுடைய நிலங்கலை சீர் செய்ய வேண்டும். அவர்களுக்கு மேடான இடத்தில் வீட்டுமனை கொடுக்க வேண்டும். இதை எல்லாம் ஒரு போர்க்கால நடவடிக்கையாக எடுக்க வேண்டும். நடவடிக்கையாக அடுத்து சீரிய முறையில் சிறப்பான வகையில் செய்து கொடுக்கவேண்டும். மண் அடித்து பாதிக்கப்பட்டிருக்கிற இடத்தில் இருக்கிற மண்ணை புல்டோசர் வைத்து அப்புறப்படுத்தி, தடுப்புச் சுவர் கட்டிக் கொடுத்தால்தான் அந்தப் பகுதி மக்களுக்கு நாம் நிரந்தரமான நிவாரணம் அளிக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதுரை, இராமநாதபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் சோழவந்தான் 10 ஆண்டுகளாக வருடா வருடம் ஒரு தீவாக இருக்கிறது. அந்தத் தீவைச் சுற்றி தண்ணீர் சூழ்ந்து விட்டது. அதற்கு என்ன காரணம்? ஒப்பற்ற தலைவர் காமராஜ் அவர்கள்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [9984 மார்ச் 10

காலத்திலே கட்டப்பட்ட பாலம் அது. அந்தப் பாலம் தாழ்ந்து இருக்கிறது. அந்தப் பாலம் தாழ்ந்து இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பாலத்திலே நிறைய வெள்ளத்தினால், அடித்து வரப்பட்ட மரங்களும், செடிகளும் அடைத்துக்கொண்டு வருகின்றது. அப்படி அத்தனையும் அடைத்துக்கொண்ட காரணத்தினாலே சோழவந்தான் பகுதியிலுள்ள நிலங்களுக்கு பாதிப்பு, சுற்றியுள்ள கிராமங்களுக்கு பாதிப்பு, சுற்றியுள்ள சிறு சிறு வீடுகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளன. இதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பார்த்திருந்தாரேயானால் அந்தப் பாலத்தை உடனடியாக கட்ட வேண்டுமென்று சொல்லியிருப்பார்கள். மதுரையில் இரண்டு பாலங்களைக் கட்டுவதைப்போல இந்தத் தென்கரைப் பாலத்தையும் உயரமாகக் கட்டி, மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இன்றைக்கு அதிகாரிகள் கணக்குகளை எடுக்கிறார்கள். மண்ணால் கட்டப்பட்ட சுவர்களில் இடுப்பளவிற்குத் தண்ணீர் இருக்கிறது. இரண்டு நாட்களில் தண்ணீர் வடிந்துவிடும். அது எனக்கு நன்றாகத் தெரியும். பாம்பின் கால் பாம்பு அறியும் என்று சொல்வதைப் போல எனக்கு நன்றாகத் தெரியும். மண் சுவற்றில் தண்ணீர் ஏறி இருந்தால் அது ஊறிப்போய், பத்து நாட்களிலோ, அல்லது ஒரு மாதத்திலோ, அல்லது ஒரு வாரத்திலோ இடிந்து வீழ்ந்துவிடும். இதையெல்லாம் கணக்கில் எடுக்கவில்லை. அதிகாரிகள் நல்ல முறையில்தான் செய்கிறார்கள். இருந்தாலும் கூட, ஒரு மூலையிலே இடிந்து வீழ்ந்தால், ரூ. 50 என்றும், 4 சுவர்கள் முழுக்க இடிந்து வீழ்ந்தால் ரூ. 200 என்றும் கொடுக்கிறார்கள். இது என்ன நியாயம்? காங்கிரஸ் காலத்தில் குறைவாகக் கொடுத்தது. இப்போது நீங்கள் ரூ. 200 கொடுத்தால் கூட, அன்றைக்கு ரூ. 2-னுடைய மதிப்பு இன்றைக்கு ரூ. 20-க்கு வந்துவிட்டது. ஆகவே ரூ. 200 ஆகக் கொடுத்தாலும் கூட, ஒரு மூலை இடிந்து வீழ்ந்தாலும் ரூ. 200 கொடுக்க வேண்டுமென்று வைக்க வேண்டும். அப்படி இல்லாமல் ஒரு மூலை இடிந்து வீழ்ந்தால் ரூ. 50 என்றும், 4 பக்கத்து சுவர்கள் இடிந்து முழுவதும் வீழ்ந்தால் ரூ. 200 என்றும் சொல்வது சாலச் சிறந்ததல்ல. அந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி சோழவந்தானாக இருந்தாலும் சரி, மதுரையாக இருந்தாலும் சரி, இராமநாதபுரமாக இருந்தாலும் சரி, எல்லா பகுதி மக்களுக்கும் உடனடியாக நிவாரணம் கொடுக்கப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல், அந்த விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு நஷ்ட ஈடாக ரூ. 1,000 கொடுத்தால்தான் அவர்களுடைய வாழ்வுக்கு வழி வகுப்பவர்கள் ஆவீர்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்திலே ஏதாவது உருப்படியாக நாம் பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பித்துள்ளோம். அந்தத் தொழிற்சாலை மூலமாக இன்றைக்கு



1984 மார்ச் 10] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தோம் என்ற நிலைமை இல்லாமல் இருப்பதைப் பார்த்து வேதனைப் படுகிறேன், வருத்தப்படுகிறேன்.

காங்கிரஸ் ஆட்சியிலே ரூ. 168 கோடியில் திருச்சியிலே ஒரு பாய்லர் தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். நம்முடைய தலைவர் காமராஜ் அவர்கள் நிபுணர் குழுவை அனுப்பினார்கள். அந்தக் குழு போய் பார்த்துவிட்டு, இதற்கு சரியான இடம் இல்லை, தண்ணீர் இல்லை என்று சொல்லி வந்துவிட்டார்கள். மீண்டும் குழுவைச் சார்ந்தவர்களுடன் நம்முடைய தலைவர் காமராஜ் அவர்கள் சென்று திருச்சி பக்கத்திலே திருவெறும்பூரில் இடம் இருக்கிறது என்று சொன்னார்கள். தண்ணீர் வேண்டுமா என்று கேட்டு, கல்லணையைக் காட்டினார்கள். இரயில்வே ஸ்டேஷனும் இருக்கிறது. நேஷனல் Highways இருக்கிறது. எனவே இதை நீங்கள் எடுத்து வேலை செய்யுங்கள் என்று சொல்லி பிரமாண்டமான பாய்லர் தொழிற்சாலையை உருவாக்கி கிட்டத்தட்ட 10,000 குடும்பங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையில் வேலைவாய்ப்பு கொடுத்தார்கள். அங்கே உற்பத்தி ஆகின்ற பாய்லர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து, சீனா, ஜப்பான், மலேசியா போன்ற நாடுகளிலிருந்து ஆர்டர்கள் ரூ. 300, 400 கோடிக்குக் கிடைத்தன. இன்று அங்கு உற்பத்தித்திறன் அதிகரித்துள்ளது. ஆனால் நம்முடைய பட்ஜெட்டிலே 1980—81-லே மதுரையில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் ஏற்படுத்தவேண்டுமென்ற ஒரு திட்டம் போட்டோம். அதை

(பிற்பகல் 1—00)

நான் பாராட்டுகிறேன். அதற்காக இடமும் பார்வையிடப்பட்டது. அதிகாரிகள் போய்ப் பார்த்தார்கள். நாங்கள் எல்லாம் சென்று சில இடங்களைக் காட்டினோம். பிறகு திண்டுக்கல்லை அடுத்த ஆத்தூர் தொகுதியிலே அந்த இடத்தைப் பார்த்து அமைப்பதாகச் சொன்னார்கள். அங்கே அந்த இடத்தைப் பார்த்து ஆயிரம் ஏக்கர் நிலத்தை எடுப்பதாகச் சொல்லி, அந்த அதிகாரிகளைப் போட்டு 2 ஆண்டுக் காலம் அவர்களுக்கு சம்பளம் கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு அங்கே தண்ணீர் இல்லை என்று சொல்லி, வேறு இடத்திற்கு மாற்றுவதாகச் சொல்லுகிறார்கள். நான் வேறு இடத்திற்கு மாற்றவேண்டாம் என்று சொல்லவில்லை. அங்கே போய் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு நாம் பணத்தையும் செலவு செய்து, அதிகாரிகளையும் நியமித்து, அந்த வேலையும் முடிவு பெறாமல், அங்கே இங்கே என்று இடத்தை மாற்றிக்கொண்டே இருப்போமானால், எப்படி மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும். எப்படி மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க முடியும் என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1984 மார்ச் 10

அதற்கு அடுத்து இந்த என்.ஆர்.இ.பி. திட்டம். இரண்டாவது 5 ஆண்டுத்திட்டத்திலே காங்கிரஸ் ஆட்சியின்போது— ஏன் என்றால் அப்போது நான் சட்டமன்றத்திலே இருந்தேன் — வெறும் 152 கோடி; 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 291 கோடி. இவ்வளவுதான் அன்றைக்கு ஒதுக்கி, அதற்குத் திட்டம் போட்டு, பிரமாதமான அணைகளைக் கட்டி, பெரிய பெரிய தொழிற்சாலைகளை எல்லாம் ஆரம்பித்தார்கள். அதுபோல் நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், மக்கள் பிரதிநிதி என்ற முறையில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இவ்வளவு பணம் போடுகிறோம். கிட்டத்தட்ட இந்த ஆண்டுக்கு மட்டும் 979 கோடி என்று நினைக்கிறேன், இந்த பட்ஜெட்டிலே 979 கோடி இந்த ஆண்டுக்கு மட்டும் போட்டிருக்கிறார்கள். அதல்லாமல் மத்திய அரசிலேயிருந்து 700 கோடி வரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அதல்லாமல் இன்னும் ஒரு 100 கோடி ரூபாய் நமக்குக் கொடுக்க இருக்கிறார்கள். இப்படி இத்தனை கோடி ரூபாய் செலவு செய்யும் நாம் 10 ஆயிரம் பேர்களுக்காவது வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடிய நிலைமையை நாம் உருவாக்கித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

இன்றைக்கு என்.ஆர்.இ.பி. திட்டம் மூலமாக வேலை கொடுக்கிறோமோ—ஒரு ஊரிலேயிருந்து இன்னொரு ஊருக்கு ரோடு போடுகிறோம், வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புக்கொடுக்கிறோம்—அப்படி இத்தனை லட்சப் பேர்களுக்கு வேலை கொடுத்து இருக்கிறோம் என்று இந்த அறிக்கையிலே நீங்கள் சொல்லியிருந்தால், அது ஒரு நல்ல வரவேற்கக்கூடிய, சமுதாயத்திற்கு ஒரு நல்ல வளர்ச்சி பெறக்கூடிய அரசாங்கத்திற்கு, மக்களைப் பாதுகாக்கக்கூடிய அரசாங்கத்திற்கு நல்லதாக இருக்கும்; நீங்கள் அப்படிச் செய்யவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்களை இன்றைக்கு நாம் ஒதுக்கி, மாநிலம் முழுவதும் தன்னிறைவு வேலைகளைச் செய்தோம். ஆனால் ஒரு ரோடு பலமுறை நான் சொல்லியிருக்கிறேன்— தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக என் தொகுதியிலே ஒரே ஒரு ரோடு 13 லட்சம் செலவு செய்து போடப்பட்டது. 13 பாலங்கள் கட்டப்பட்டன. இன்றைக்குப் பெய்த மழையிலே அடித்துக்கொண்டு போய்விட்டது. இப்போது வெறும் கற்கள் மட்டும்தான் இருக்கின்றன. அதனால் மக்கள் நடக்கமுடியவில்லை, சைக்கிள் போகமுடியவில்லை, வண்டிகள் போகமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தன்



1984 மார்ச் 10] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

னிறைவுத் திட்டத்தின் மூலமாக இப்படி கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி பல வேலைகள் செய்தோம். இருந்தாலும் இவைகளைப் பராமரிப்பதற்காக, பழுதடைந்த ரோடுகளைச் செப்பனிடுவதற்காக தனியாக பணம் ஒதுக்கி, மராமத்து வேலைகளைச் செய்ய முன்வருவோமானால், நிச்சயமாக மோசமான நிலைமையிலே இருக்கிற வேலைகளை எல்லாம் பழுது பார்ப்பதற்கு முடியும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

அடுத்து தரிசு நிலங்களைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நம் நாட்டில் லட்சக்கணக்கான ஏக்கர்கள் தரிசாகக் கிடக்கிறது. எந்தவிதமானப் பயனும் இல்லாமல் உள்ள நிலங்களை எல்லாம் அதற்கென்று தனியாக பணத்தை ஒதுக்கி, ராட்சசக் கிணறுகளைப் போடவேண்டும். அப்படி போட்டு, அதில் 10 ஹார்ஸ் பவர், 15 ஹார்ஸ் பவர் என்று பம்புகளைப் போட்டு நாம் விவசாயிகளுக்குத் தேவையான நீர்ப்பாசன வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு அவர்களிடமிருந்து பெட்டர்மென்ட் டேக்ஸ் போன்று பணம் வசூலித்துக்கொள்ளலாம். அப்படிச் செய்து இன்றைக்கு தரிசாக இருக்கின்ற நிலங்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்க தனியாக ஒரு திட்டம் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று. பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் தொழில் நடத்தக் கடன் கொடுக்கிறோம் என்றிருக்கின்றது. அவர்களுக்கு என்று எத்தனையோ திட்டங்கள் போட்டிருக்கிறோம். இன்றைக்கு பால் மாடுகளை வாங்குவதற்குக் கடன் வழங்குகிறார்கள். அரிசன மக்கள் எருமை மாடுகளை, பால் மாடுகளை வாங்க பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கிக் கொடுத்து இருப்பதற்கு நான் பாராட்டுகிறேன். அப்படி பாராட்டினாலும் கூட, இந்தப் பணம் தொழிலுக்காக கொடுக்கப்பட்டு இருப்பதாக இந்த வரவு-செலவுத் திட்டத்திலே போடப்பட்டிருப்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்களை வாழ வைக்க வேண்டும் என்பதற்கான திட்டங்களைப் போடவேண்டும். இன்றைக்கு ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மாணவர்களும், மாணவியர்களும் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். வேலையில்லாமல் இருக்கும் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் படித்துவிட்டு இருக்கும் பட்டதாரிகளுக்கும் வேலையில்லை என்றால், நாளைக்கு 10 ஆண்டு 15 ஆண்டு என்று வேலையில்லை என்றால், அவர்கள் எல்லாம் நக்சலைட்டுக்களாக மாறி, பல கொலைகள் செய்வதற்கும், கொள்ளைகள் அடிப்பதற்கும்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] ]1984 மார்ச் 10

வாய்ப்பிருக்கிறது. எனவே இதன் காரணமாக நீங்கள் அவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்புக் கொடுக்சக்கூடிய முறையிலே இந்த வரவு செலவுத் திட்டத்திலே வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நமது நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கை மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைக் கூறி, இந்த நிதிநிலை அறிக்கையினை வரவேற்று எனது உரையை ஆற்றுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் இந்தியாவிலே புதுமையாக எந்த மாநிலமும் செய்யாத அளவுக்கு, என்.ஜி.ஓக்கள் ஓய்வு பெறும்போது, அவர்களுக்கு 10,000 ஓய்வு ஊதியம் வழங்கப் போவதாக சொல்லப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கது. நான் பாராட்டுகிறேன். அதைப்போன்று, நிலம் அற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், சிறு உழவர்களுக்கும், உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில், 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை ஓய்வு ஊதியம வழங்கப் படுவதாக சொல்லியிருக்கிறார்கள். வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

மாவட்டங்களைத் தனியாகப் பிரிப்பதற்குச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவன். பெரிய கடல் போன்று இருந்த திருச்சி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, புதுக்கோட்டை மாவட்டம் கொண்டு வரப்பட்டது. மற்ற மாவட்டங்களை விட, புதுக்கோட்டை மாவட்டம் தற்போது மிகவும் முன்னேற்றம் அடைந்து வளர்ச்சியுற்றிருக்கிறது. நான் அதற்காக நன்றி சொல்கிறேன்.

நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், நமது அண்டை மாநிலமான ஆந்திராவினுடைய முதலமைச்சர் என்.டி.ஆர். அவர்களுடைய நெருங்கிய நண்பர் என்ற முறையிலேயும், மற்ற அணுகு முறைகளினாலும் கிருஷ்ணா நதிநீர் திட்டத்தை சென்னைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பூர்வாங்கப் பணிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வரவேற்கிறேன். அதே நேரத்தில் இதற்கு முந்தைய அரசு கூட பல திட்டங்களைப் போட்டது. ஆனால் ஏதுவுமே செயல்படுத்தப்படவில்லை. உதாரணமாக வீராணம் திட்டம். அதிலே 27 கோடி ரூபாயை நாசமாக ஆக்கிவிட்டுச் சென்றார்கள். ஆனால்



1984 மார்ச் 10] [திரு. பெ. திருமாறன்]

அதுபோன்று இல்லாமல், கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தை விரைவிலே முடிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்ட அரசு புரட்சித் தலைவருடைய அரசு.

கடந்த 2 ஆண்டுக் காலமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க, ஏறக்குறைய 100 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கி, எல்லா கிராம மக்களுக்கும் குடி தண்ணீர் கிடைக்க வழி வகை செய்தது. ஒவ்வொரு சிற்றூர்களுக்கும் கை பம்புகள் போட்டும், போர் பம்புகள் போட்டும், ஓவர் ஹெட் டேங்க் அமைத்தும், குடிநீர் பிரச்சினையே இல்லாத அளவுக்கு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வறட்சியையும் சமாளித்தார்கள். இப்போது மழையினால் ஏற்பட்டிருக்கும் பெரு வெள்ளத்தையும் சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதே போன்று இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு கடுமையான மழை பெய்து, தஞ்சை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி ஏற்கெனவே கடுமையான மழையால் பாதிக்கப்பட்டிருந்த மக்களை மேலும் காலம் தவறி மழைபெய்து, தவிக்க விட்டிருக்கிறது. இந்த நேரத்தில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், அங்கெல்லாம் சென்று அங்கே பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி, பல நிவாரணத் திட்டங்களையும் செயல்படுத்த, அரசு அலுவலர்களை முடுக்கி விட்டதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு ஹெலிகாப்டர் மூலமாக உணவு வழங்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் நெல்லை மாவட்டம், மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு ஹெலிகாப்டர் மூலமாக நேரிடையாகச் சென்று, அங்கே 50க்கும் மேற்பட்டவர்கள் இறந்திருப்பதால் அவர்களுடைய குடும்பங்களுக்கு ஆறுதல் கூறியும், உதவிகளை அளித்தும், தேவையான நிவாரணப் பணிகளை நேரிடையாக மேற்கொண்டார்கள்.

இந்த அரசு கிராமப் புறங்களுக்கு எந்த வகையிலே என்னென்ன திட்டங்களைச் செயல் படுத்தியிருக்கிறது என்று கேட்டார்கள். இந்த அரசு நன்னிறைவு திட்டம், சத்துணவுத் திட்டம் என்று பல திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்.

(பிற்பகல் 1.10)

அதே நேரத்தில், என்னுடைய அருமை அக்காள் பொன்னம்மாள் அவர்கள், தன்னிறைவுத் திட்டத்தால் கட்டப்பெற்ற, போடப் பெற்ற ரோடுகள் தண்ணீரிலே அடித்துக் கொண்டு போய் விட்டதாகச் சொன்னார்கள். காமராசர் காலத்திலே போட்ட பாலத்தில் செடிகளும், மரங்களும் வளர்ந்து, அடைந்து

D2A 334-16

விட்ட காரணத்தினால் தண்ணீர் மேலே போய், பல பகுதிகளை பாதித்தது. அப்போது பெய்த இயற்கையான மழையிலேயே அப்போதிருந்திருக்கக் கூடிய என்ஜினீயர்கள் யாரும் அதை திரும்பக் கட்டியிருக்க முடியும். ஆனால் இப்போது பெய்திருக்கிற மழை வரலாறு காணாத மழை. இனிமேல் தான், இருக்கக் கூடிய நிலைமைகளைப் பார்த்து, தற்போது இருக்கக் கூடிய என்ஜினீயர்கள், எந்த அளவுக்கு அந்தப் பாலத்தை திருத்திக் கட்ட முடியுமோ, அந்த அளவுக்குக் கட்ட திட்டத்தைப் போடலாம். இப்போது பெய்திருக்கிற இந்த மழை 100 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்திருக்கக் கூடிய பெரியவர்கள் கூட பார்த்திருக்க மாட்டார்கள். குறைவு என்று சொல்கிற திருமதி பொன்னம்மாள் அக்காள் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். திரு. காம ராஜர் அவர்களைப் பாராட்டுவதை நான் வரவேற்கிறேன். இந்தக் காலத்திலே அந்த அளவுக்கு மழை பெய்து கொண்டிருக் கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தஞ்சை. மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களிலே சுற்றுப் பயணம் செய்து அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார் கள். ஆனால் தி.மு.க. தோழர்களும் கம்யூனிஸ்டு தோழர் களும் நடந்த மாதத்திலே நடைப் பயணம் செய்தார்கள். நான் சொல்லிக் கொள்கிறேன். நடந்த மாதத்திலே நீங்கள் திருத்துறைப் பூண்டியிலே மதுக்கப்போட்டையிலே தஞ்சா வூரிலே நடைப் பயணம் செய்திருந்தால் உங்கள் தொண்டர் களோடு போகிற போது மக்களுக்கு முடிந்த அளவுக்கு சிறு சிறு உதவிகளையாவது செய்திருக்க முடியும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் மாவட்டச் செயலாளர் என்று கருதுகிறேன். அவர்களும் அவர்களுடைய கூட்டணியைச் சேர்ந்தவர்களும் அந்தத் தோழர்களை அழைத்துக் கொண்டு, நெல்லை, மதுரை, இராமநாதபுரம் பகுதிகளுக்குச் சென்றால் உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யலாம். இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுக்கு எல்லாம் நன்மைகள் செய்யக் கூடிய முறையிலே சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். கிராமத்திலே ஒரு உதாரணம் சொல் வார்கள், ஒரு பழமொழியே உண்டு கணவன் இறந்து விட்டால் மனைவி ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிற போது இரண்டு பெண்கள் துக்கம் விசாரிக்க வருவார்கள். எதிரே இருக்கிற பந்தலிலே உள்ள பாகற்காய்களைப் பார்த்து விட்டு, ஒரு அம்மாள் "பந்தலிலே பாகற்காய், பந்தலிலே பாகற்காய்" என்று சொல் வாளாம். இன்னொரு பெண் போகையிலே பார்த்துக்கலாம், போகையிலே பார்த்துக்கலாம் என்று சொல்வாளாம். கணவனை இழந்த மனைவி விதைக்கல்லவா வைத்திருக்கிறேன், விதைக் கல்லவா வைத்திருக்கிறேன் என்று ஒப்பாரி வைப்பார்களாம். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அங்கே இறந்



தவர்களின் குடும்பங்களுக்கு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங் களுக்கு நன்மையைச்செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் நடைப் பயணம் அந்தப் பகுதியிலே செய்ய வேண்டும். இந்த ஆட்சியை மாற்றும் என்று நம்பி நடை பயணம் செய் தவர்கள் இனிமேலாவது அப்படி அங்கே நடைப் பயணம் செய்து மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஆலங்குடி, கரம்பக்குடி, அறந் தாங்கி போன்ற பகுதிகள் மிகவும் மழையால் பாதிக்கப்பட்டிருக் கின்றன. அதன் காரணத்தினால் தன்னிறைவுத் திட்ட வேலை களும் சில பாலங்களும் உடைபட்டு இருந்தாலும் அதைச் செப்ப னிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெரு மழையால் பாதிக்கப் பட்ட அந்தப் பகுதிகளுக்கு மட்டும் மறு தன்னிறைவுத் திட்டம் கொண்டு வந்து பாதிக்கப்பட்ட ரோடுகளையும், பாலங்களையும் செப்பனிட வேண்டும்.

அடுத்து. புதுக்கோட்டையிலே பேரறிஞர் அண்ணா அவர் களால் உருவாக்கப்பட்ட விவசாயப் பண்ணை இருக்கிறது. வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கப்படும் என்று அறி விப்பு வந்திருக்கிற இந்த நேரத்திலே அண்ணா அவர்கள் பெய ரால் உள்ள குடுமியான்மலை பண்ணையில் அண்ணா அவர்களின் நினைவுச் சின்னமாக அந்தப் பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய ஆலங்குடி, கரம்பக்குடி பகுதிகள் எப்போதும் வறண்ட பகுதிகள் தான். இப்போது பெய்த பெரு மழை யால் தான் அங்கே தண்ணீர் கிணறுகளில் வந்திருக்கிறது. ஆகவே அங்கேயுள்ள ரோடுகளைச் செப்பனிட்டுக் கொடுத்து மக்களுக்கு பயன்படுகிற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைக் கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஜே. எஸ். இராசு : மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. திருமாறன் அவர்கள் பேசியபோது 20 கோடி ரூபாய்களை வீராணம் திட்டத்திற்காக நாசப்படுத்தி னார்கள் என்று கூறினார்கள். அந்தத் திட்டம் முறையான திட்டமா என்பதை ஆராய்வதற்காக ஒரு குழு 1976 ஆம் ஆண்டிலே கவர்னர் ஆட்சியின் போது போடப்பட்டு அந்தத் திட்டம் நல்ல திட்டம் என்றும் நிறைவேற்றலாம் என்றும் அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. (குறுக்கீடு)

திரு. பெ. திருமாறன் : மாற்றுத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) : அந்தத் திட்டத்தைப் பற்றி அவருடைய கருத்தைச் சொல் கிறார், உங்களுடைய கருத்தை நீங்கள் சொல்கிறீர்கள். ல்ரவணிக் கச்சேரிக்கு இது நேரமல்ல.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாற்றுத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தில் போடப்பட்ட ரோடுகள் மழையால் சேதமடைந்து இருக்கின்றன அதைச் சரி செய்வதற்கு பணம் ஒதுக்க வேண்டுமென்றுதான் சொன்னேன். வேறுவித மாகச் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் நினைத்துக் கொள்ள வேண்டாம்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அளித்து இருக்கக்கூடிய இந்த வரவு-செலவுத் திட்டத்தில் புதிதாக தொழிற்சாலைகள் த்மிழகத்தில் தொடங்குவதற்காக ஏதாவது அறிவித்து இருக்கிறார்களா என்றால் எதுவும் இல்லை. அதே போல் இங்கே ஆக்க பூர்வமான திட்டங்களுக்கான ஏதாவது ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டால் அப்படிப்பட்ட திட்டங்கள் எதையும் இந்த அறிக்கையில் எங்களால் காணமுடியவில்லை. மாறாக இன்றைக்கு தமிழ கத்தில் இருக்கக்கூடிய அ.இ.அ.தி.மு.க. அரசினுடைய தொழில் கொள்கையை பொறுத்தமட்டில் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய பெரும் முதலாளிகள் ஏற்கனவே தமிழகத்தில் ஓடிக்கொண்டு இருக்கிற பல்வேறு ஆலைகளை மூடிவிட்டு நம்முடைய மத்திய, மாநில அரசுகள் வழங்கக்கூடிய நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு பிற்பட்ட மாவட்டங்கள் என்று அறிவிக்கக்கூடிய ஓசூர் போன்ற மாவட்டங்களுக்குச் சென்று பல்வேறு தொழில்களை தொடங்கக்கூடிய காட்சியை நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். ஒரு சென்னை அம்பத்தூரில் இருக்கக்கூடிய கிருஷ்ணா பாடி ஒர்க்ஸ் என்று சொல்லக்கூடிய நிறுவனத்தினுடைய சொந்தக்காரர் அங்கு இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு இன்றைக்கு அதே தொழிற்சாலையை ஓசூரில் தொடங்கி அங்கே நித்த கூலிகளாக பணி புரியக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.



அதேபோல் மதுரையில் உள்ள சிங்கர் மிஷன் உற்பத்தி செய்யக்கூடிய அந்த ஆலையின் முதலாளியும் இதேபோன்ற ஒரு காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஒரு தவறான தொழில் கொள்கையை தவிர்ப் பதற்கு நம்முடைய தமிழக அரசு தக்க நடவடிக்கை எடுத்து அப்படிப்பட்ட தவறான போக்கை தடுத்து நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலையை ஒருவர் மூடுவதற்கு உரிமை இருக்கிறது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப் பளித்து இருக்கிறது. 90 நாட்கள் முன் அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்று இருந்த சட்டமும் சுப்ரீம் கோர்ட்டால் அடிப்பட்டுப் போய்விட்டது. எனவே ஒரு தொழிற்சாலையை மூடிவிடுவார்களானால் எப்படியாவது அவர்களைக் கூப்பிட்டு பேசி தீர்ப்பதற்கான முயற்சியை செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது. தொழில்அதி பர்கள் தங்கள் தொழிற்சாலைகளை மூடிவிடலாம் என்று தீர்ப்பு வந்து இருக்கிறது. சமீபத்தில் கூட எக்ஸ்.எல்.ஓ. அறிக் கையில் என்று சொல்வார்கள், அதிலும் இந்த உரிமையை அவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில் மூடி விட்டால் அவர்களைக் கூப்பிட்டுப் பேசுவோம். இங்கே கிருஷ்ணா-பாடி தொழிற்சாலை மூடப்பட்டு இருப்பது இங்கே நீங்கள் சொல்வது மாதிரி ஆயிரம் தொழிலாளர்கள் அங்கு இல்லை. அதை எல்லாம் வரும் 16 ஆம் தேதி பேசினால் அதற்கு விரிவாகத் தெளிவாக பதில் சொல்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையின் மூலமாக மாண்புமிகு அமைச் சரிடமிருந்து நான் எதிர்பார்ப்பது எல்லாம் எப்படி இங்கே இருக்கக்கூடிய தொழி நிறுவனத்தை மூடிவிட்டு நம்முடைய மாநிலத்திலேயே வேறு ஒரு இடத்தில் தமிழக அரசு கொடுக்கக் கூடிய நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு புதிய தொழில் தொடங்குவதற்கு நீங்கள் அனுமதி கொடுப்பது சரிதானா ! அப்படிப்பட்ட தொழில் கொள்கை சரிதானா என்பது தான் என்னுடைய கேள்வி. ஆகவே அப்படிப்பட்ட நிலை நீக்கப் பட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

அதுமட்டும் அல்ல. இன்றைக்கு நம்முடைய ஆட்சியாளர்கள் மிகப் பெரிய திட்டமாக வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப் போம் என்று இங்கே அறிவித்து இருக்கிறார்கள். இதே திட் டத்தைச் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் கூறி அதற்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த 15 கோடி

ரூபாய் மூலமாக இத்தனை பேருக்கு தமிழகத்தில் வேலை கொடுத்து இருக்கிறோம் என்று இந்த அறிக்கையில் குறிப்பிட்டுக் காட்டியிருந்தால் எங்களைப் போன்ற மன்ற உறுப்பினர்கள் பரவாயில்லை, இங்கே அறிவித்து இருக்கின்ற திட்டத்தை நிறை வேற்றியிருக்கிறார்கள் என்று நாங்கள் ஒத்துக் கொள்ள முடியும். அப்படிப்பட்ட நிலைமையை இந்த அறிக்கையில் குறிப்பிட வில்லை.

அதுமட்டும் அல்லாமல் இன்றைக்கு நீங்கள் சொல்கிறீர்கள் நாங்கள் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்போம் என்று. இதைப் போல் தான் கடந்த காலங்களில் நம்முடைய தமிழ கத்தினுடைய கைத்தறித்துறை அமைச்சராக இருந்த மாண்பு மிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் நாங்கள் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் குடும்பத்திற்கு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்போம் என்று அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தை யாவது நிறைவேற்றியிருக்கிறதா இந்த அரசு என்று கேட்டால் அதுவும் இல்லை. இப்படி உங்கள் அறிவிப்புகள் வாய்ச் சவடாலாக உள்ளனவே தவிர, பேப்பர்களிலே விளம்பரங்களாக உள்ளனவே தவிர உண்மையில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான திட்டங்களாக எந்தவிதமான திட்டத்தையும் நீங்கள் நடைமுறைப்படுத்தவில்லை என்பதைத்தான் கூற விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த நம்முடைய நிதி யமைச்சரவர்கள் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக இருந்து, தமிழகம் அமைதிப் பூங்காவாக இருப்பதாகக் குறிப் பிட்டிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் சிறைச் சாலைகளில் செத்தவர்கள், விசார ணைக் கைதிகளாக அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் செத்தவர்கள் எத்தனை பேர்? இவர்கள் போக, நெல்லை மாவட்டத்தில் ஓரே வாரத்தில் என்னுடைய தொகுதியிலேயும், அருமைத் தலைவர் திரு. அழகர்சாமி அவர்களின் தொகுதி யிலும் மூன்று கொலைகள் நடந்து கொள்ளையும் நடந் திருக்கிறது. விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பிறிதோர்பட்டி என்ற கிராமத்திலே ஒரு வீட்டிலே மூன்று பேர் கொலை செய்யப்பட்டு, இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இதுவரை கொலைகாரர்களைப் பிடிக்கவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எங்களைப் போன்ற சாமான்யர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்றுகூடக் கேட்கவில்லை. நான் ஒன்றை மெத்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, ஏன் இந்தியத் துணைக் கண்டத்திலேயே இல்லாத அளவிற்கு, முதன் முதலாக, காவல் நிலையத்திலேயே ஒரு போலீஸ்காரர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். நெல்லை மாவட்டத்தில் உள்ள தாழையூத்து காவல் நிலையத்தில் பணியில் இருந்த போலீஸ்காரர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அது சம்பந்தமாக வழக்கு போடப்பட்டது. நீதி மன்றம் என்ன தீர்ப்பு அளித்தது என்றால், அதற்குப் போதுமான சாட்சியம் இல்லை என்று அந்த வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார். விடுதலை பெற்று விட்டார்கள். நாங்கள் மிகப் பெரிய பாதுகாப்பைக் கொடுத்துக்கொண் டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே, வங்கத்து சட்டமன்றத்தைப் பாருங்கள் என்று சொல்லிக்கொண்டிருக் கிறீர்களே, அங்கே இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றதா? சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய தமிழகக் காவல் துறைக்கு அமைச்சராக இருப்பவர் மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள். அவர்கள்தான் காவல்துறையைத் தன்னு டைய கைகளிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் களுடைய ஆட்சியில் எங்களைப் போன்ற சாமான்யர்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்கவில்லை. ஆனால், காவல் துறையிலே பணியாற்றுகின்ற போலீஸ்காருக்குக்கூட உங்களால் பாதுகாப்பு கொடுக்க முடியவில்லை என்றால் எப்படி நீங்கள் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு அமைதியைக் காக்கப் போகிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள போலீஸ் கொள்கைகளைப் பொறுத்த வரையில், மிகவும் படுகேவலமாக இருக்கிறது. குண்டாந் தடிச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்றால் அது யாருக்கு எதிராக? நாட்டிலே உழைக்கின்ற விவசாயி க்ளுக்கு எதிராகவும், தொழிலாளர்களுக்கு எதிராகவும், ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடக் கூடியவர்களுக்கு எதிராகவும்தான் அவர்களை அடக்குவதற்காகத்தான் இப் படிப்பட்ட சட்டங்களை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

ஆதிதிராவிடர் நலத் துறையைப் பொறுத்தவரையில் நீங்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். நான்கூட ஒரு கேள்வி கேட்டேன். ஆதிதிராவிடர் மக்கள் சிறுதொழில்கள் தொடங்குவதற்கு எத்தனை விண்ணப்பங்கள் பெறப்பட்டன என்றும் எத்தனை பேர்களுக்கு கடன் கொடுத்தீர்கள் என்றும் கேட்டேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள், பெட்டிக்கடை வைக்கவும், பல்பொடி விற்கவும் கடன் கொடுத்தி ருப்பதாகச் சொன்னார்கள்.

[திரு. மு. அப்பாதுரை] [1984 மார்ச் 10

இவ்வளவு ரூபாயில் வீடு கட்டயிருப்பதாகச் சொல்கிறார்கள்.
என்னுடைய தொகுதியில் 1980 ஆம் ஆண்டிலிருந்து, இந்த ஆட்சி
வந்ததற்குப் பிறகு, இப்படிப்பட்ட இலவச வீடுகள் கட்டப்
பட்டிருக்கின்றனவா என்றால் இல்லை.

கிராமீயக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 1970 ஆம் ஆண்
டிலே பத்து ரூபாய் அட்வான்ஸ் கட்டி, சந்தாதாரர்களாக ஆகி
யும் இதுவரையில் பணம் கிடைக்காமல் இருப்பது 800 பேர்
என்னுடைய தொகுதியிலே இருக்கிறார்கள். இதுபற்றி வளர்ச்சி
மன்றக் கூட்டத்திலேயும் கேட்டோம். அங்கேயுள்ள ஆணை
யாளரைக்கூடக் கேட்டேன். அதற்கு எந்தவிதமான நிதியும்
ஒதுக்கவில்லை, பொறுத்திருங்கள் என்று சொல்கிறார்கள்.
இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.

தீப்பெட்டித் தொழில், தோல் பதனிடுதல் போன்றவை தென்
மாவட்டங்களில் பிரதான தொழில்களாகும். அப்படிப்பட்ட
தொழில்கள் இன்றைக்கு நிர்மூலமாக்கப்பட்டிருக்கின்றன. எங்
களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று நீங்கள் சொல்லலாம்.
இந்திய அரசாங்கத்தின் தவறான தொழில் கொள்கையின் காரண
மாக, இன்றைக்கு பன்னாட்டு மூலதனமாக, சென்னையிலுள்ள
விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலை இருக்கிறது. அந்த ஒரே
யொரு விம்கோ நிறுவனத்தை எதிர்த்து சிறு தொழில் தீப்
பெட்டி உரிமையாளர்கள் போட்டியிட முடியவில்லை. இந்தியா
விலே ஒன்பது நிறுவனங்களை அவர்களே வைத்துக் கொள்வ
தற்கு அனுமதித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொள்கை
களின் காரணமாக தென் மாவட்டங்களில் கிராமத் தொழில்
வளம் நசிந்து கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் நீக்கு
வதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஏதாவது திட்டங்
களைக் குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால் இல்லை.

கைத்தறியைப் பொறுத்தவரையில், இலவச வேட்டி,
சேலை வழங்குவதாகக் கூறிக்கொண்டிருக்கிறீர்கள். அவை
களையெல்லாம் உங்களுக்கு வேண்டியவர்களுக்கு அல்லது ஆளும்
கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ள தொகுதிகளிலே உள்ள
வர்களுக்கு நீங்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். என்னுடைய
தொகுதியில் உள்ளதைப்பற்றி நான் ஆணையாளரிடத்தில்
கூடக் கேட்டேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி
1952 ஆம் ஆண்டிலிருந்து தாழ்த்தப்பட்ட ரிசர்வ் தொகுதி.

அங்கே எத்தனை வேஷ்டி, சேலைகள் வழங்கப்பட்டன என்று
ட்டால் கிட்டத்தட்ட 4000 தான் என்று இரண்டு யூனியன்
களிலே இருந்து கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அள
விற்கு மிகப்பெரிய மோசடி நடந்திருக்கின்றது. யாருக்குக்



1984 மார்ச் 10] [திரு. மு. அப்பாதுரை]

கொடுத்திருக்கிறீர்கள்? யார் யார் கறவை மாடுகள் எல்லாம்
வாங்கி இருக்கிறார்கள் என்ற கணக்கை எல்லாம் போட்டு பட்டி
யல் எடுத்து அவர்களுக்கு மட்டும்தான் கொடுத்திருக்கிறீர்கள்.

மேலும் அவை எல்லாம் எந்தெந்த கைத்தறிச் சங்கங்களி
ருந்து வாங்கப்பட்டனவோ அந்தச் சங்கங்களுக்கு அந்த
துணிகளுக்கான பணம் இதுவரையில் கொடுக்கப்படவில்லை.
அருப்புக்கோட்டை, பாலதண்டாயுதம், சிவகிரி, புளியங்குடி
போன்ற இடங்களில் இருக்கின்ற அப்படிப்பட்ட நூற்றுக்
கணக்கான சங்கங்களுக்கு நீங்கள் வாங்கிய அந்த வேட்டிக்கும்,
சேலைக்குமான பணத்தைக் கொடுக்கவில்லை. அதை உட
னடியாகக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கி
றேன்.

அடுத்து இங்கே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். எங்
களுடைய புரட்சித் தலைவர் ஆட்சியில் அரசு ஊழியர்களுக்கு
10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது என்று சொன்னார்கள்.
5 ஆயிரம் என்று அறிவித்துவிட்டு பின்னர் அதைப் 10 ஆயிரம்
என்று சொல்கிறீர்கள். ஆனால் அந்த 5 ஆயிரம் ரூபாய் கூட,
அரசுப் பணியாளர்கள் நோய்வாய்ப்பட்டு அவர்கள் தகுதியற்ற
வர்கள் என்று சான்றிதழ் கொடுக்கப்பட்டு விட்டால் அல்லது
பணியில் அவர்கள் இருக்கின்ற காலங்களில் இறந்துவிட்டால் அல்
லது இனிமேல் அவர்களால் வேலை செய்ய முடியாது என்ற
வகையில் கம்பல்சரி ரிட்டையர்மென்டிலே சென்றுவிட்டால் அவர்
களுக்கெல்லாம் கொடுக்கப்படுவதில்லை என்ற அளவிலே அதாவது
அவர்களுக்கெல்லகம் பொருந்தாது என்ற வகையிலே செய்யப்பட்
டிருக்கின்றது. ஆகவே அந்த நிலைமையை மாற்றி அவர்களுக்கும்
பொருந்துகின்ற வகையிலே செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் இன்றைக்கு மிகப்பெரிய
வெள்ளச்சேதம் ஏற்பட்டிருக்கின்றது. இப்போது பெய்கின்ற
மழையின் காரணமாக வெள்ளம் வருகின்றது என்பது ஒரு
புறம் இருந்தாலும் கடந்த 3 மாத காலமாக தொடர்ந்து
அங்கே மழை பெய்கின்ற காரணத்தால் வெள்ளாமை மிகவும்
பாதிக்கப்பட்டிருக்கின்றது. பருத்தி, கம்பு, சோளம், மல்லி
போன்ற அனைத்து தானியங்களையும் எடுக்க முடியாத சூழ்
நிலை ஏற்பட்டு இருக்கின்றது. அந்த விவசாயிகளைப் பொறுத்த
வரையில் அரசாங்கம் கொடுத்த கூட்டுறவுக் கடன்
களையும், நிலவரியையும் ரத்து செய்ய வேண்டும். அவர்களுக்கு
எல்லாம் மானியமாக ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்
டும்.

[திரு. மு. அப்பாதுரை] [1984 மார்ச் 10

அடுத்து என்னுடைய தொகுதியில் தன்னிறைவுத் திட்டத்தில் கட்டப்பட்ட பாலம் இடிந்துவிட்டது என்று சொல்லி இதே மன்றத்திலே குறிப்பிட்டுக் காட்டினோம். எங்கள் பகுதியிலே ஒரு பழமொழி சொல்வார்கள். 'அதாவது செத்த ஆடு கால் பணம், சுமைகூலி முக்கால்பணம் என்று சொல்வார்கள். அதைப் போன்று அரசாங்கம் அந்தப் பாலம் கட்டுவதற்காக செல வழித்தது 95 ஆயிரம் ரூபாய். சென்ற ஆண்டு மழை வந்த போது ஏற்பட்ட பாதிப்பால் அதைப் பழுது பார்ப்பதற்காகச் செலவிடபபட்டது 30 ஆயிரம் ரூபாய். இந்த ஆண்டு அரிப்பு எடுத்ததன் காரணத்தால் செலவு செய்யப்பட்டது 30 ஆயிரம் ரூபாய். ஆக 60 ஆயிரம் ரூபாய் அந்தப் பாலத்தைச் செபப னிடுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமல்ல. என்னுடைய தொகுதியில் சோளபுரம், குத்தாநத்தம் சாலையில் பாலம் கட்டுவதற்காக 1974-லே திட் டம் தீட்டப்பட்டு ஏறத்தாழ 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் படவேண்டும் என்று கேட்கப்பட்டும் பல்வேறு காலங்களில் அது நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. எனவே வரக்கூடிய காலத்திலே யாவது, இந்த நிதியாண்டிலேயாவது அதைக் கட்டிக் கொடுக்கப் படுகின்ற ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கி றேன்.

அடுத்து அச்சுக்குளத்தின் குறுக்கே, காட்டாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து எங்களுடைய மாவட்டத்தில் சங்கரன்கோயில், கோவில் பட்டி, ஒட்டப்பிடாரம் ஆகியவை பாசனவசதி பெறவேண்டும் என்றால் பச்சையாறு திட்டம் என்று சொல்லக்கூடிய, வீணாகச் செல்கின்ற தண்ணீரைத் திருப்பி விடுகின்ற திட்டத்தைச் செயல் படுத்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து நெல்லை மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கை யாக இருந்து வருகின்ற கொடுமுடியாறுத் திட்டத்தை நிறை வேற்ற வேண்டும். அதுபற்றி மாண்புமிகு துணைச்சபாநாயகர் அவர்களுக்கும் தெரியும். (மணியடிக்கப்பெற்றது.)

அடுத்து சேர்மாதேவியிலிருந்து செல்லும் பாதையில் பத்தமடை என்ற ஊர் இருக்கின்றது. அங்கே பாய் முடை கின்ற தொழிலாளர்களுக்குத் தேவையான மூலப் பொருள் களை வழங்க மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்கள் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கி றேன்.



1984 மார்ச் 10]

திரு. இரா. சா. முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக் டர் நாவலர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைக் கூறலாம் என்று நான் முற்படுகிறேன்.

நம்முடைய நிதிநிலை அறிக்கையில் உடல் ஊனமுற்றவர் களுக்காக அரசின் சார்பிலே குழுக்களை அமைத்து அவர்களுக்கு நன்மை செய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து கின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே அவர்களுக்காக ஒரு குழுவினையே அமைக்கின்ற அரசாக இன் றையதினம் இந்த அரசு விளங்குகின்றது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலை வர் அவர்கள் தான் இதுபோன்ற திட்டத்தை, அதாவது உடல் ஊனமுற்றவர்களுக்கான திட்டத்தை, அரசின் மூலமாக ஒரு குழுவினை அமைக்கின்ற நல்ல திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் கொண்டு வந்திருப்பதால் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சா. முனிரத்தினம் அவர்கள் 12-3-84 திங்கட்கிழமை அன்று தொடர்ந்து பேசலாம்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 12-3-84 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

119. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான முப்பத்தி நான்காவது ஆண்டறிக்கை (ஆங்கி லம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் I/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

136227
600 008.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### *In Madras City.*

1. Account Test Institute, Egmore Madras-600 008.
2. The City Book Company, Madras-600 004.
3. Higginbothams (Private) Ltd., Madras-2.
4. P. Varadachary & Co., Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-600 005.
6. The Universal Book House, Moore Market, Madras-600 003.
7. C. Sitaraman and Company, Madras-600 014.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-600 005.
9. C. Venkatesan Chetty and Company. No. 8-C Pycrofts Road Madras-600 005.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madars-600 001.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-600 001.
12. New Century Book House (Private) Limited, Madras-600 002.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-600 008.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1. A. Venkatasubban and Company, Vellore (North Arcot District)-632 001
2. Bharathamatha Book Depot, Thanjavur.
3. P. V. Nathan and Company, Kumbakonam (Thanjavur District).
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8. B. Aruldass, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Book Sellers, No. 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. Mercury Book Company, No. 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jaganatham Book House, P.B. No. 327, No. 35, Nandhi Koil Street, Tiruchirappalli-2.
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin Book Sellers, Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar and Sons, Salem-636 001.
15. Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem-636 001.
16. Meenakshi Pathippagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari District.
19. Baby Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21. Kumaran Book Depot, Book Sellers, Erode-1.
22. Vela Book Company, No. 4, Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, No. 6-A, Raja Street, Coimbatore-1.
24. Ajantha Book Centre, Salem-1.
25. Sri Vidhya Book Shop, No. 63. Tennure High Road, Tiruchirappalli-2.
26. Sri Rama Vilas Book Shop, No. 90. Amman Sannathi, Madurai-1.
27. Sarvothaya Ilakkiya Pannai, No. 32/1, West Velli Street, Madurai-1.
28. Vijaya Book House No. 93, Cherry Road, Salem-636 001.

### IN OTHER STATES.

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House. Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications. Hyderabad.
5. Puthaghalayam. Pondicherry.
6. Prabhu Book Service, Gurgaon. Haryana.
7. K. P. Bagchi and Company, No. 286 B.B, Ganguli Street, Calcutta-12.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.